வழக்குச்சொல் விளக்க அகராதி

பாவலரேறு ச.பாலசுந்தரம்

தாமரை வெளியீட்டகம்

வழக்குச்சொல் விளக்க அகராதி

ஆசிரியர்

பாவலரேறு ச. பாலசுந்தரம்

(தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரையாசிரியர்)

தாமரை வெளியீட்டகம்

367, மேலவீதி, தஞ்சாவூர் 613 009.

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	:	வழக்குச்சொல் விளக்க அகராதி
நூல் ஆசிரியர்	:	**பாவலரேறு ச.பாலசுந்தரம்**
மொழி	:	தமிழ்
பொருள்	:	சொல்லாய்வு இலக்கணம்
நூல் வெளியீடு	:	ஆசிரியன் சொந்த வெளியீடு தாமரை வெளியீட்டகம்
பதிப்பு ஆண்டு	:	முதற்பதிப்பு - டிசம்பர் 2004
தாள்	:	T.N.P.L.13.7 Kg.
பக்கங்கள்		168 பக்கங்கள்
நூலின் அளவு		1 × 8 டெம்மி
எழுத்தின் அளவு		11 புள்ளி
விலை		ரூ.65/-
கணினியாக்கம்		திருவள்ளுவர் ஆப்செட் பிரிண்டர்ஸ் 141, ஜே.டி. காம்ப்ளக்ஸ், ஈசுவரி நகர், தஞ்சாவூர் - 7. போன் : 04362 242764 செல் : 98424 91204

முகவுரை

பிரபஞ்சம் என்னும் ஐம்பெரும் பூதங்களின் கலப்பாலும் பரிணாமத்தாலும் விளங்கும் உலகத்தின்கண் தோன்றி வளர்ந்து மறையும் உயிர்ப்பொருள்கள் பல. அவற்றுள் மக்களினத்தை மட்டும் தனியே பிரித்து அவர்களை உயர்திணை என்றும், ஏனைய உயிர்ப்பொருள் உயிரில் பொருள் யாவற்றையும் அஃறிணை என்றும் பாகுபாடு செய்துள்ளனர் தமிழ் மொழியிலக்கண நூலார். இவ்அறிவியல் நோக்கு உலகில் வேறு எம்மொழி நூல்களிலும் காணப்படாத ஒன்றாகும். இனி, பிறமொழியாளர் விரும்பினும் ஆக்கிக்கொள்ள இயலாதது.

மக்களை உயர்திணை என்று தமிழ் நூலார் வகுத்தமைக்குக் காரணம் மக்கள் உடல்நிலையினும் மனநிலையினும் பிற உயிரினங்களிலிருந்து மிகவும் வேறுபட்டுள்ளமையேயாம். மக்கள் உடல்நிலையில் ஓர் ஆடவனும் பெண்டும் திருமண வாயிலாக ஒன்றுபட்டு இல்லறம் நிகழ்த்துவதும். உடலுறவில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வகுத்துக்கொண்டு மக்களை உரிமையொடு பெற்று வளர்த்துச் சந்ததியை விளைவிப்பதும் சமுதாயமாகக் கூடி வாழ்வதும் அரசமைப்பையும் ஆன்றோர் அவைகளையும் வகுத்து அறநிலைகளைப் பேணி வருவதும் உணவைப் பக்குவப்படுத்தி உண்பதும் ஈதலும் ஏற்றலும் இருப்பிடங்களை அமைத்து ஊர்களை வகுத்து வாழ்வதும் நீராடல் விளையாடல் போராடல் முதலியவற்றைப் புரிதலும், உடையாலும் அணிகலன்களாலும் நாகரிகத்தை வளர்த்துக் கொண்டு வருதலும் இவை போல்வன பிறவுமாம்.

மனநிலையில் முக்கால உணர்வையும் நன்மை தீமைகளை உணரும் அறிவையும் மறுமை வாழ்வு பற்றிய கற்பனையும் அறிவியற் சிந்தனையால் அரும்பெரும் பொருள்களைப் படைத்தலும் கலைகளைப் படைத்தலும் இவை போல்வனவற்றை ஆக்கம் செய்துகொண்டு வாழ்வதாகும். இவை யாவற்றினும் மேலாக என்றைக்கும் நிலைபேறுடையதாக நாடொறும் வளர்வதாக உடலாலும் உளத்தாலும் படைத்துக்கொண்ட பொருள்மொழி என்னும் செல்வமாகும். அதனால் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு நாள்தொறும் வளர்ந்துவரும் நிலைமையாகும். பிறவிலங்கு பறவை முதலிய உயிரினங்களிலிருந்து மக்களினம் சிறந்து வாழ்வதற்கு அடிப்படை மொழியாகும்.

மொழி என்பது மக்களுடைய கருத்துக்களின் புற வடிவமாகும் அருவுருவப்பொருள். அது மக்களின் அறிவையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது. மக்கள் நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையாராயின் மொழி அவர்களை உய்விக்கும் உயர்த்தும் புல்லறிவும் தீயொழுக்கமும் உடையராயின் அவர்களைத் தாழ்வுறச் செய்து கேடு பயக்கும்.

அம்முறைமையான் மொழி மக்களின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் கருவியாக அமைந்துள்ளது. அதனால் சான்றோர்கள் மொழியைத் தெய்வமாகக் கொண்டு போற்றி வருகின்றனர். தெய்வங்களுக்கு வடிவம் கற்பித்துக் கொண்டமை போலவே ஒலிவுருவாகிய மொழிக்கும் வரிவடிவத்தைப் படைத்துக் கல்விச் செல்வத்தை வளர்த்து வருகின்றனர். மொழியை வரிவடிவம் செய்துகொண்ட ஆக்கமே விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுள் தலையாயதும் ஒப்பற்றதுமாகும்.

அம்முறையில் மொழி பேச்சு மொழி, எழுத்து மொழி என இருநிலையில் அமைந்துள்ளது. இவற்றுள் சிறப்புடையது எழுத்துமொழி. பேச்சுமொழி நேருக்குநேர் நிகழ்வது நிகழ்காலத்திற்குரியது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டபின் மறைந்துவிடுவது. எழுத்துமொழி தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடத்திற்கும் உரியது. நிகழ்காலம், எதிர்காலம் என்னும் இரண்டு காலங்களுக்கும் உரியது நிலைபேறானது.

பேச்சுமொழி வாய் ஓசையின் வலிவு மெலிவு ஏற்றம் இறக்கம் உடம்பின் மெய்ப்பாடு சூழ்நிலைகளுடன் வெளிப்படுவதாகலின் சொல் வடிவும் - தொடர்களும் எப்படி வேண்டுமாயினும் அமையும். சொல் வடிவங்கள் சிதையினும் திரியினும் குறையினும் சூழ்நிலைகளால் பொருளை உணர்த்திவிடும். எழுத்து மொழி கண்ணால் உணர்வதாகலின் வடிவு சிதையினும் ஒலி வேறுபடினும் தொடர்நிலை பிறழினும் பொருள் திரியும் வேறுபடும். அதனான் சான்றோர்கள் எழுத்துமொழியின் ஒழுங்கினைப் பேணும் முறையில் மொழியிலக்கணத்தை மிகவும் விழிப்போடு அமைத்துள்ளனர். கற்றறிபுலவோர் காத்து வருகின்றனர்.

ஒருவர் தம் கருத்துக்களைப் பிறர்க்கு உணர்த்த முற்படுமிடத்து அக்கருத்துக்கள் தனிமொழியாகவோ தொகை மொழியாகவோ தொடர் மொழியாகவோ வெளிப்படும். பேச்சு வழக்கில் சொற்கள் மருவினும் சிதையினும் பலமுறை கேட்டுப் பழகிய காரணத்தால் பொருளைப் பிறழ்வின்றி உணரவியலும்.

பேச்சுவழக்கில் உலகம் ஒலகம் என்றும் இலை, எல என்றும், தலை தலெ என்றும், விழி முழி என்றும், முகம் முகரை என்றும், வயிறு வவுறு என்றும், பழம் பளம் என்றும், கிழவி கெய்வி என்றும், கல்யாணம் கண்ணாளம் என்றும கிருட்டினன் கிட்டு என்றும், கிருட்டிணசாமி - கிச்சாமி என்றும், மகாலிங்கம் மாலி என்றும் விசுவநாதன் விச்சு என்றும், திருவாரூர் திருவாளூர் என்றும, கும்பகோணம் கும்மானம் என்றும், தேவர்கண்டநல்லூர் தேண்டூர் எனவும், மகர்நோன்புச்சாவடி மானம்பூச்சாவடி என்றும், சிற்றுக்குருவி சிட்டுக்குருவி என்றும், ஆண்பிள்ளை

ஆம்பள என்றும், பெண்பிள்ளை பொம்பள என்றும் பெயர்ச்சொற்கள் பலவாறு திரிந்து வழங்குதலைக் காணலாம்.

அவ்வாறு வினைச்சொற்களின் போகிறாள் - போறாள் என்றும், வருகிறாள் - வர்ரான் என்றும, காண்கின்றான் - கான்றான் காங்கான் என்றும், போயிற்று - போச்சு என்றும் வந்தாயிற்று வந்தாச்சி என்றும, அகப்பட்டுக்கொண்டான், ஆப்ட்டுகிட்டான் என்றும் வழங்குதலைக் காணலாம். பொருளை உணர்த்திவிடும்.

எழுத்து வழக்கில் கண்ணன் - கன்னன் பொருள் வேறுபடும். அவ்வாற ஒலி , ஒளி, ஒழி, தலை, தளை, தழை, கனி-கணி கனை-கணை, கரை - கறை என்பவை ஒலி வேறுபாட்டால் பொருள் வேறுபடும். அவ்வாறே கடி-காடி, கொடி - கோடி, அணை - ஆணை, தண்டு தாண்டு, குடை கூடை, கொடை கோடை என்பவை குறில் நெடில் மாற்றத்தாற் பொருள் வேறுபடும். சிலர் வழக்கில் அம்மான்சேய் - அம்மாஞ்சி எனவும் அம்மான்காரர் - அம்மங்கா மாற்றுப்பெண் மாட்டுப்பொண் என்றும் வழங்குதலைக் காணலாம்.

சில சிதைவுகளை மரபு பற்றி ஏற்கலாம் என்பர் இலக்கண நூலார் அவற்றை மரூஉ என்பர். மரபு என்பதன் திரிபே மரூஉ என்பது. அவை தஞசாவூர் தஞ்சை என்றும், ஆற்றூர் ஆறை என்றும், ஆதன் தந்தை ஆந்தை என்றும், பூதன் தந்தை பூந்தை என்றும், சோழன் நாடு - சோணாடு என்றும், பெருமகன் - பெருமான் பெம்மான் என்றும், தெங்கங்காய் தேங்காய் என்றும், பனை அட்டு - பனாட்டு என்றும் நாழியுரி - நாடூரி என்றாற் போல்வன.

பேச்சு வழக்கில் சிதைந்து வழங்கும் சொற்களை இலக்கிய வழக்கில் தவிர்த்தல் வேண்டுமென்பார். எனினும் நாடக இலக்கியங்களில் பாத்திரங்களுக்கு ஏற்பச் சொற்களை மேற்கொள்ளலாம் என்பர்.

இலக்கணத்தில் மதிப்புடைய கல்வியாளர் பெரும்பாலும் செஞ்சொற்களையே கையாளுவர். எனினும் பேச்சு வழக்கில் சிதைந்து வழங்கும் சொற்களின் செம்மையான வடிவத்தை அறியாத நிலையில் அப்படியே கையாண்டு வருகின்றனர். அங்ஙனம் சிதைந்த வடிவங்களையும், திரிந்த சொற்களையும் வட்டார வழக்கு எனக்கொண்டு எழுதி வருகின்றனர். அம்முறையில் வழக்குச்சொல் அகராதி நூல்கள் சில இயற்றப்பட்டுள்ளன.

உயர்ந்த இலக்கியத் தரமும் காரணமும் அமைந்த சொற்கள் பல வடிவு திரிந்து கருத்துணர்த்துகின்றன. அவற்றை கருத்தடிப்படையில் *ஆராய்கின்றபோது அவற்றின் செம்மையானவடிவம்* பெரும்பான்மையும் புலனாயின. அவற்றை மாணவர்களும், எழுத்தாளர்களும் புரிந்து கொள்ளும்

முறையில் நூலாக வெளியிட முற்பட்டேன். 1997இல் நிகண்டுகளில் உள்ள ஒரு சொல் பல் பொருள், பல சொல் ஒருபொருள் சொற்களைத் தொகுத்துப் பொருள் விளக்கம் எழுதி மொட்டும் மலரும் என்னும் தலைப்பில் மூன்று பகுதியாக வெளியிட்டேன். மூன்றாம் தொகுதியில் இருநூற்றிற்கு மேற்பட்ட வழக்குச் சொற்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளேன். மூன்று தொகுதிகளிலும் ஏறத்தாழ 2500 சொற்களுக்கு விளக்கம் எழுதியுள்ளேன். அவற்றைத் தவிர்த்து இவ்வகராதியில் சொற்களின் செம்மையான வடிவத்தை காரணத்துடன் எழுதியுள்ளேன். மேலும் எழுத வேண்டிய சொற்கள் பல உள.

இந்நூலை நன்கு நோக்கி ஓர் அணிந்துரை எழுதி வழங்குமாறு பேராசிரியர் சொல்லாய்வறிஞர் திரு.ப.அருளியவர்களை வேண்டினேன். "மொட்டும் மலரும்" மூன்று தொகுதிகளையும் ஆழ்ந்து நோக்கி அணிந்துரை வழங்கிய முறையில் ஒரு மதிப்புரை போல இவ்வணிந்துரையை வழங்கியுள்ளார்கள். சொல்லாய்வுத் துறையில் ஆழங்காற்பட்ட அவர்கட்கு என் உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவியுள்ள அன்பர் திருவள்ளுவர் ஆப்செட் அச்சக உரிமையாளர் திரு.தங்கையன் அவர்கட்கு என் அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் இவ்வளவில் வெளிவர அருள்புரிந்துள்ள இறைவனை வணங்குகின்றேன். தமிழன்னையின் திருவடிகளைப் போற்றுகின்றேன். வாழ்க தமிழ்!

பாவலரேறு ச.பாலசுந்தரம்

முன்னணியுரை

ப.அருளி - ஆய்வறிஞர்
தூய தமிழ் - சொல்லாக்க அகர முதலிகள் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -5.

இனிய தூய செந்தமிழ்ப் பெருவள்ளல் "பால சுந்தரனார்" என்னும் "இளவழக எம்மான்" தோய்ந்தாய்ந்து தொகுத்தளித்துள்ள இவ் "வழக்குச் சொல் விளக்க அகராதி" என் நோக்குக்கு உட்படுத்தப் பெற்றது; அணிந்துரைப் பேறும் அளிக்கப் பெற்றுள்ளது!

தஞ்சாவூர் மண்ணில் தோன்றிய தங்கத் திருநகையராம் - இத் தமிழாய்வுச் செம்மலின் வாழ்வே, தமிழ் வாழ்வாக அமைந்திலங்கியியல்வது தமிழாக்க நெஞ்சும் தமிழுயர்வு உள்ளும் உள்ளமும் தமிழ் மலர்ச்சிக்கென்றே தொடர்ந்துழைக்கும் தாளாண்மையும் தமிழ்மானங் கருதியுயிர்க்கும் தமிழ் மனமும் வாய்ந்தது - எம் தந்தை நிகர்த்திலங்கும் தனித்திற ஆய்வு ஆழி பாலசுந்தரப் பெருமகனார் - தம் வாழ்ந்த நாள்களெல்லாம் தொடர்ந்து கண்ட, கல்விக் காலங்களிலெல்லாம் படர்ந்து அறிவாலுண்ட அரும்பெரும் உண்மையுணர்வுகளிற் சிலவற்றை வாய்காலிட்டுள்ள சீரிய செம்படைப்புகளில் ஒன்றே, இவ் வழக்குச்சொல் அகராதி

எளிய கல்வியாளர்க்கும் - பொதுப்பட்ட எழுத்தறிவு மட்டுமே கற்ற மக்களுக்கும் - நுண்மாண் நுழைபுல வல்லறிவர்க்கும் ஒருசேரத் துலக்கமளிக்கவல்ல அமைப்பு முறையில் இதனை வகுத்துத் தொகுத்தளித்துள்ளமை, இதன் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகும்!

இலக்கிய இலக்கணச் சொற்களுக்குப் பொருளுந் தெளிவுங் காணவும் காட்டவும் ஆழ்ந்த கல்வியுழைப்பு தேவை வழக்குச் சொற்களுக்குரிய வாய்மைப் பொருள் காணவோ இம் முற்குறித்துரைத்த கல்வியுழைப்போடு - உலகியலீடுபாடும், வாழ்வியல் தோய்வும், ஆய்வுத் துருவல் தொடர் நோக்கும், பொறுமையும் தேவைகளாகுவன!

ஆழ்ந்த கூரிய கல்வியறிவான் மட்டுமே - இதனை உருப்படியாகச் செய்தல் இயலவே இயலாது! அஃகியகன்ற அறிவு என்பது - பரந்துபட்ட உலகியலறிவான் அகற்சியுற்று - நூற்கல்வி ஆராய்ச்சி அறிவான் நுணுக்கத்தோய்வுற்று நேரியதேறும் நுழைபுலமாகும்!

இச்செம்பெரும்புலம் பருத்த எம் அருந்திறத் தமிழ்க்கடல், இதனை அருளுள்ளத்தோடும் தூய அறிவுணர்வோடும் படைத்துள்ளமையை நூல் நெடுகலும் ஆழ்ந்து நன்கு களித்துவந்தேன்!

சற்றேறக் குறைய முப்பானாண்டுக் காலம் இத்துறையுள் மூழ்கித் தொடர்ந்து தோயும் ஒரு வேரியல் ஓர்மையாய்வாளன் என்னும் முறையில் - இவ்வகை ஆக்கங்களில் எப்போதும் எனக்குத் தனித்த ஒரு வயா என்னும் வேட்கைப் பெருக்கவுணர்வு மிகமிக மிகுதி! இதில் - இவ்வகையில் என் நெஞ்சின் அகக்கருக்கூறு ஆழ்ந்து அமுங்கி ஆர நனைந்தது.

காண்டிகை கண்ட கை - தம் தாள் கொண்டு இதனுள் தாண்டவம் தாண்டுகின்றது! அசைவுகளில் அழகும் அணிமையும் ஆழ்ந்த பயிற்சியும் இசைந்தியங்குகின்றன.

* அக்கம் பக்கம் என்பது அகம் பக்கம் என்பதன் எதுகைப் பிறழ்ச்சியால் நேர்ந்தது. * "அருகு அமைவில்" என்பதையே 'அருகமைவில்' என்றாகச் சேர்த்து ஒலித்து, அருகாமையில் என்றவாறு அருக்கியொலிக்கப் பெறுகின்றது.

"தப்புளி"யே 'தப்பிலி' என்றவாறு வடிவந் தப்பிப் பிழையூற்றுத் தோற்றந் தந்தவாறு புரண்டு நிற்கின்றது. * பெருத்த எலியே பெருத்தெலியாகித் தகரசகரத் திரிபால் பெருச்செலியாகி அதன் பருப்பத் தோற்றல் காரணமாக ஒலிப்பேற்றிலும் நீடல் கொண்டு பெருச்சாலியாக (பெருச்சாளி) ஓடுகின்றது. (இப்பெருத்த எலியே தோற்ற ஒப்புமை வகையில் சிறிய பன்றிக்குட்டி வடிவிலிருக்கின்றமையால் ஊர்ப்புறச் சிறார் சிறுமியரிடையே "பன்னிக்குட்டி" என்றவாறான வழக்கு இன்றும் உள்ளது. தெலுங்குமொழியார், இதனைப் பன்னிக்கொக்கு என்கின்றனர். (குள் : (சிறுமைக் கருத்துவேர்) குள் + கு > குட்டு> குக்கு = சிறிய குட்டி. குககு >கொக்கு). ஆங்கிலேயர் இப்பன்றிக் குட்டியையே "BANDICOOT" என்றவாறு ஒலித்து வழங்கி அகராதிப் பதிவாகவும் ஆவணப்படுத்தியுள்ளனர். (18ஆம் நூற்றாண்டு)

* கழிமலமே கொச்சையுற்றுக் (கசிமாலம்) கசுமாலமாகித் திருந்தாச் சொல்லராம் கடுஞ்சினத்தர் வாய்வழியே கழறப் பெறுகின்றது. * "ஊத்தைவாய்" என்பதன் ஊற்றுவாய், ஊற்றைவாய் என்பதாகும். கூழ்க் காயாகிப் பயன்குலைந்த காயே. கூகை என்றவாறு அலறல் பெற்றுள்ளது. நாட்டப் பெறுவதாகிய (நாட்டு > நட்டு) அணியே நட்டு எனத் தொக்கி நகையுடன் ஒட்டுச் சொல்லாக இணைவுற்று நகைநட்டாகிச் சேர்ந்தொளிர்கின்றது.

"வல்" - என்பது வலிமைக் கருத்துக்குரிய வேரின் தண்டுப்பகுதி. அதனினின்று கிளைத்ததுவே (வல்+கு>) வற்கு என்னும் வலிமை குறித்த

வடிவச் சொல். இவ்வரிய ஆட்சிச் சொல்லே "வக்கு" என்றாகி வழக்கில் வந்துள்ளது. வக்கற்றவன் (வக்கத்தவன்) என்பவன் வலிமையற்றுப்போன நோய்ந்தானாகிய நோஞ்சானைக் குறிப்பது * கூழையே கோழையாகக் குழைந்தான்.

* புல்லுதல் என்பது தழுவுதல் கொண்ட புணர்ச்சியைக் குறிக்கும் வினைப்பெயர்!. இப்புல்லு என்பதுவே 'பொல்லு' என்றாகிப் பின் பொல்லி பொலி எனத் திரிபெய்திப் பொலிவேறியது! ஆகவே, அப்புல்லுங்காளையே பொலிகாளையாகியுள்ளது! ["பொலியாட்டைப் போலப் புறப்பட்டாள்" என்றவாறு பரத்தையொருத்தியின் புறப்பாட்டைப் பற்றி "விறலி விடு தூது" வெளுத்துக் கட்டுவதை - ஈண்டு ஒப்புநோக்குக்காகக் கருதிப் பார்க்கலாகும்]

* மண் + கு> என்பதுவே மட்கு என்றாகி அது மேலுந் திரிபெய்தி "மக்கு" என்றவாறு மக்கியுள்ளது. மண்ணோடு மண்ணாக மாற்றமெய்துதலே மட்குதல் ஆகும். " மக்கி மண்ணாகிப் போதல்" என்னும் வழக்குத் தொடர், இதற்கொரு காட்டு ஆகும்.

* மீனாய் மினுக்கியே - 'மேனா மினுக்கி'யானாள். (மீன் என்பது ஈண்டு விண்மீன்). (மேனிமினுக்கி என்பதனினும் தெளிவுநோக்கம் வாய்ந்த முடிவு - இது!)

* முகவட்டே முகவெட்டாகிச் சுற்றிச்சுற்றி வட்டமடிக்கின்றது!

* மாற்றுப் பெண்ணே மாட்டுப் பெண்ணாக மாற்றுருக் கொண்டு முட்டுகின்றாள்! (மணவாட்டுப் பெண் > மணாட்டுப் பெண் என்றாகி அவளே "மாட்டுப் பெண்" என்றவாறு குறுகி நிற்கின்றாள் என்னும் முந்தி நின்ற ஆய்வு முடிவுப்போக்கை - இம்மாற்றுப் பெண் மாற்றியெற்றித் தள்ளித் தலை நிமிர்த்துகின்றாள்!

* முத்து (முத்து + அல் முத்தல்). இம்முதது என்பதுவே மொத்து எனத் திரிந்து, "அம்" ஈறு பிணைந்து மொத்தமாகத் திரண்டுள்ளது. (இம் முத்துவும், 'முற்று' என்னும் நிறைந்து திரண்டு சேர்வுறும் வினைப்பகுதியின் முற்றலால் முற்றிய சொல்லாகும்.)

* அடிமடையிற் கைவைக்கும் வயற்பணியொன்றன் வழக்கே, அடிமடியில் கைவைக்கும் அறவெறுக்கத் தகும் அடிமட்டப் பொருள் வழக்கொடு வழுக்கியுள்ளது. * அரைநிணைப்புப் புத்தியே அரணைப் புத்தியாக முரணி முரண்டடிக்கின்றது. * அப்பு அழுக்கே (அப்புதல் கொண்டுள்ள செறிந்த அழுக்கே) அப்பழுக்காக அப்புதல் வேய்வொடு கப்பிக் கிடக்கின்றது.

* இமைகளை ஒன்றோடு ஒன்றாகக் கூட்டுதலாகிய இமை கூட்டுதலே சற்று நெளிந்தவாறு அழிந்து இமைகொட்டுதலாகி உறங்கிக் கிடக்கின்றது. * போதியதும் போதாததுமான நிலையைக் குறித்தெழுந்த "அரையொட்டு - புரையொட்டு" என்னும் செப்ப வழக்கே அராட்டுப் பிராட்டாகப் புரையொட்டிப் போயிற்று. 'தெறல்' என்னும் வெம்மைக் கருத்துச சொல் அதனைப்போலும் வெஞ்சொற்கொண்டு வசை மொழிதலைக் குறிக்க ஒற்றிரட்டித்துத் தெற்றலாகி, அதுவே றகர டகரத்திரிபால் மேலுந் தெட்டலாகித் திட்டலென்னும் அளவில் திசைந்துள்ளது.

* அகம் கலாய்த்தலே அங்கலாய்த்தலாகி இங்குமங்கும் பொங்கியுலைகின்றது.

* தவசப் (தானியம்) பொருள் கொண்ட அஃகத்தைப் (அஃகம் = தவசம்) பொறுக்குபவனே அக்குப் பொறுக்கியாக ஆங்காங்கும் அலைந்து திரிந்து அல்லலாடுகின்றான்.

* முக்காலும் அழுங்கண்ணோடேயே உலமந்து உழன்றழும் அழுகண்ணியே அழுகுணியாகிப் புலம்பலொடு அமைறுகின்றான்!

* ஆட்டிப் புடைத்தலே (புடைத்தல் : செவ்வையாகத் தாக்குதல்) ஆட்டிப் புடைத்தல் ஆகியுள்ளது. முறிய அடுத்தலே முறியடித்தலாக முறிக்கப் பெற்றுள்ளது.

* நடவு அடுக்கையே நடவடிக்கையாக நடையிடுகின்றது. *இடுக்கு முடுக்கே எடக்கு மடக்காகி மடங்கிக் கிடக்கின்றது. * 'துடி - க்கு' என்பதுவே "துடுக்கு" என்றாகித் துள்ளுகின்றது. எதிர் கழித்தலே எதுக்களித்தலாகப் புறம்பெயர்ந்துள்ளது.!

இன்னும்.... இன்னும்... இவ்வாறான பேராளச் செய்திகளின் வழியே நமக்குத் தெளிவூட்டித் தெருளூட்டி இன்பூட்டி ஏற்றும் இனிய அரிய பயன்பாட்டு அகராதி, இது!... (பேராளம் என்பது பெரிய அளவிலான உப்பு அளம். இது பேரளம் என்பதன் திரிபு. இச்செந்தமிழ்ச் சொல்லே - நம் தமிழிய மொழிகளுள் ஒன்றான பழங்கன்னட மொழியில் பகர ஹகரத் திரிபுப் பெருவழக்கில் ஹேராளமாகித் தமிழுள் மீண்டுங்கலந்து ஏராளம் ஆகியுள்ளது!)

* மயக்கந் தரும் கடுக்காய்ச் சாந்தை உவமமாக்கியே "கடுக்காய் கொடுத்தல்" என்னும் வழக்கு இன்றும் நிலை கொண்டுள்ளது. (டேக்கா கொடுத்துவிட்டு ஓடிப்போய் விட்டான் என்பதனுள்ளும் அதன் முனனொலி விழுங்கப் பெற்ற திரிபுப் பதிவைக் காணலாம் என்பது - ஐயா அவர்களின் துலக்கக் குறிப்பு!

* கைபொத்து வெல்லமே கொப்பத்து வெல்லமாகியது. கொச்சையாக்கப் பெற்றும் சுவையூட்டந் தருகின்றது.

இவ்வகையான குறிப்புகளிடையே ஐயா அவர்களின் உலகியல் - வாழ்வியல் தோய்வு ஆழங்களைக் காணவியல்கின்றது.

* "பகல் + து > பகற்று என்றாகி, அதுவே இன்று பகட்டுகின்றது!" என்பதனுள் அவரின் ஆழ்ந்தகன்ற இலக்கியப் பெரும் புலத்திறமாட்சி வான்கொண்டுள்ள காட்சியே தெரிகின்றது. ("பகல்" என்பதற்கு ஒளிவழிக் கருத்தே ஈண்டு இயற்கையுண்மை முறையுடையதாகும்)

இதனுள் கையாண்ட முறை - கை கண்ட முறை வயப்பட்டதாகவுள்ளது! ஐயா அவர்களின் இக் கைவரிசை அறுபானாட்டைக் கல்விக் களரியில் பற்றிப் பயின்று அயின்றுகொண்ட அடிப்பட்ட திறக் கைவரிசையாகும்!

ஒழுங்கொருமை - ஓர்மை - கூர்மை - சீர்மை - உண்மை - எண்மை - நோட்டம் - நாட்டம் என எல்லாமும் இதனுள் முறைமையுற்றுள!

நறுக்குத் தறித்தாற்போன்று (நறுக்குத் தெறித்தாற்போன்று) சான்று காட்டி நிறுவுந் திறத்தில் கொடி கட்டிப் பறக்கும் ஆற்றல் சான்றவராகிய சான்றோர், இவர்! (கொடிப்படை என்பதன் அடிப்படையிலேயே 'துவசப்படை' தோன்றி அதுவே தூசிப்படையாக (இரு பிறப்பிச் சொல் : Hybrid term) மாறியமைந்து மருட்டியவாறு பறக்கின்றது என்றவாறான அண்ணலின் விளக்கம், ஈண்டு விளக்கத்தக்க கூர்ங் கண்டுபிடிப்பு ஆகும்! (துவசம் என்பது 'துவஜ' என்றவாறு கொடியைக் குறித்து வழங்கும் சமஸ்கிருதச் சொல்லின் தமிழ்மையாக்க வடிவம்)

இத்தொகை நூலைப் படித்து முடிக்கையில் உள்ளமெங்கும் உவப்புந் தென்பும் ஓச்சங் கொண்டன (திண் திண்பு தெண்பு தெம்பு உயிர்ப் போட்டங்களின் ஊட்டமும் ஊற்றமும் உகளின

தம் தமிழ்த்திறப் பேருரத்தால் - அன்பீன்ற அருட்குழவி நெஞ்சால் நம்மை இன்பூட்டி ஏற்றவே - இந்நூற்போர்வையை நம் அறிவுடன்மேற் போர்த்திக் குளிர்ப்பாட்டியுள்ளார், நம் தமிழ்த் திருப்பெருந் சான்றோராகிய பாலசுந்தரத் தோன்றல்... (குளிர்ப்பாட்டுதலே, குளிப்பாட்டுதலாகியது)

தமிழரனைவரும் இவ்வண்ணலை ஏற்றவும் போற்றவும் ஏத்தவும் செய்வதோடு - இதனுள்ளும் இதுபோன்று அரிதின்முயன்று அளித்துளள

இவரின் ஆக்கநூல்களுள்ளும் இழைந்திழைந்து கற்று ஏற்றமும் தேற்றமும் ஊற்றமும் பெறல் வேண்டும் என்பது எம் அவா!

தஞ்சையினின்று புதுச்சேரி நோக்கிப் பேருந்திலேறிச் செல்லும்போதெல்லாம் நண் நஞ்சைநகரத் தெரு முடக்கிலுள்ள ஐயா அவர்கள் வதியும் தமிழ்விளைவு இல்ல வாயிலகம் நோக்கி - என் விழிகள் பற்றார்வத்தொடு பாயுதல் என்பது ஒரு தொடர் வழக்கம்! அவ்வப்பொழுதும் என் விழித்திரைகளிற் படுங் காட்சித் தொடர்ச்சி, இது! "ஐயா அவர்கள் எப்பொழுதும் தம் எதிரிலுள்ள தாள்களிலும் நூல்களிலுமாகக் கவிந்து, கவ்வித் தோய்ந்து கொண்டிருக்கும் கண்கொள்ளாக் கவினார்ந்த கலைக்காட்சி!...

எண்பது என்பதைத் தாண்டியும் போரடுத்த நோக்கோடு ஏறெடுத்த தாளாண்மையொன்று ஈண்டு ஓயாது பாடாற்றிக் கொண்டுள்ளது என்றவாறான உள்ளுக்கத்திற்கான உரவுந்தல் என் மூளைத் திரட்சிச் சோற்றுள் அள்ளூறும்!

பார்க்கப் பார்க்க உயிருணர்வெல்லாம் உவகையூட்டுவிக்கும் ஒலியிலா ஒளிச் சிரிப்பு! ஓங்கிய சீர் உருவம்! நன்றேயெண்ணும் நனி நாகரிகம்! அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையெனும் ஐம் பண்பும் வேய்ந்தியங்கும் பண்பாடு! தமிழையே வாழ்வாகக் கருதியுயிர்க்கும் தனித் தகைமை! தமிழ்க்கெனவே வாழும் தறுகண்மை! இவற்றின் ஒட்டுமொத்த ஒருங்கியக்க உயிர்ப்பே இச்செம்மலின் வாழ்வு!

எம் ஐயா அவர்களை என் நெஞ்சார - உயிரார - உணர்வார ஏத்துகின்றேன்! பணிவார வணங்குகின்றேன்! இவர் செய்யவேண்டியுள்ள பணிகள் இன்னும் பேராளம் உள!

இத்தமிழை மேலும் இவர் துலக்க வேண்டும்! இவர் நலத்துள் தமிழ் நலமும் வளமும் அடங்கியுள! இந்நூலும் இதனை மெய்ப்பிக்கின்றது! எண்பிக்கிறது!

அன்பன்,

ப.அருளி

வழக்குச் சொல் விளக்கம்

அட்டவணை

அக்கம் பக்கம்
அக்கரை
அக்கரைச்சீமை
அக்கியானம்
அக்கு தொக்கு
அக்குப்பொறுக்கி
அகம்பாவம்
அகல் விளக்கு
அகிலம்
அங்கலாய்த்தல்
அங்கிட்டு
அச்சு
அசத்தல்
அசிங்கம்
அஞ்சல்
அட்டகரி
அட்டணைக்கால்
அட்டா துட்டி
அட்டும்
அட்டூழியம்
அடகு
அடாப்பழி
அடாவடி
அடிச்சிப்பிடிச்சி
அடிமடியில் கை வைத்தல்
அடிமுட்டாள்
அடையாளம்
அண்ணாக்கு
அத்தியில் சுரம்
அதட்டல்
அதெந்து
அந்துசு
அநாதி
அப்ப
அப்பழுக்கு
அப்பிராணி
அம்மி - குழவி
அமஞ்சி
அமட்டல்
அமர்தல்
அமலை
அமளி
அமுத்தல் = அமர்த்தல்
அரக்க பரக்க
அரட்டி
அரட்டை
அரணைப்புத்தி
அரம்பன்
அரவணைப்பு
அராட்டுப்பிராட்டு
அரிச்சுக்கட்டி
அரிமனசு
அருகதை
அருகாமை
அரும்பு
அருவி
அல்லாடல்
அல்லு
அல்லோல கல்லோலம்
அலங்க மலங்க
அலட்டிக் கொள்ளல்
அலைக்கழித்தல்
அவசரக்குடுக்கை
அவா
அவுசாரி
அவுசியம்
அழுகுணி
அழுவுணி
அன்றாடம்
அனத்தல்
ஆசுவம்
ஆட்டங்காணல்
ஆட்ட பாட்டம்
ஆட்டம் போடுதல்
ஆட்டிப்படைத்தல்
ஆயர்

ஆயுள்
ஆரியம்
ஆலாப்பறத்தல்
ஆலோலம்
ஆள்மாகாணம்
உலைவைத்தல்
உவப்பு - உவகை
உவாநாள்
உளி
உனக்கும் பெப்பே உன்
அப்பனுக்கும் பெப்பே
ஊசி
ஊசுதல்
ஊட்டி
ஊத்தம்
ஊத்தைவாய்
ஊதாரி
ஊதியம்
ஊமை
ஊர்ப்பட்டது
எக்கச்சக்கம்
எக்குத் தப்பு
எஞ்சுதல் - எச்சம்
எட்டுதல்
எடக்கு மடக்கு
எத்தன்
எதார்த்தம்
எதுக்களித்தல்
எதேச்சை
ஏக்கம்
ஏக்கழுத்தம்
ஏசல்
ஏடாகூடம்
ஏப்பை சாப்பை
ஏமாளி
ஏமாற்றம்
ஏய்த்தல்
ஏர்
ஏரி
ஏளனம்
ஏற்கனவே
ஒக்குமத்து
ஒச்சம்
ஒட்டாரம்
ஒத்தாசை
ஒத்துஊதுதல்
ஒருங்கொத்தல்
ஒருமித்த
ஒற்றைக் காலில் நிற்றல்
ஓச்சல்
ஓடு
ஓரான்
ஓலை
கக்கல்
கசுமாலம்
கஞ்சிகாச்சல்
கட்டளை
கட்டாயம்
கட்டும் - கட்டாது
கடப்புடாதவன்
கடிகை
கடுக்காய் கொடுத்தல்
கண்துடைப்பு
கண்ணுமண்ணுதெரியாமல்
கணிசம்
கப்பிக் குடித்தல்
கயமை
கரடியாக்கத்தல்
கரடிவிடுதல்
கரித்தல்
கரவங்கட்டுதல்
கருங்காலி
கருது
கரைதல்
கலவரம்
கலாம்
கவைக் குதவாது
கவைக்குதவாத பேச்சு
களிப்பு
களிம்பு
களைகட்டிவிட்டது
கன்னாபின்னாவெனப்பேசுதல்

காக்காய் பிடித்தல்
காக்கை வலிப்பு
காசு
காசையாடை
காட்டியும்
காட்டிலும்
காடன்மாடன்
காத்தான் தீத்தான்
காதகன்
காதல்
காது குத்தல்
காதுல பூச்சுற்றல்
காதைக்கடித்தல்
காமம்
கார்
காராட்டுக்காலம்
காலங்காத்தாலே
காலம் பற
காலி
காலிப் பயல்
காலேயம்
காவு கொடுத்தல்
கிசு கிசுத்தல்
கிடத்தல்
கிடாசல்
கில் - கிற்றல்
கிலி
கிழங்கு
கிறுக்கு
கீச்சுக்குரல்
கீந்தல்
குசுகுசுத்தல்
குஞ்சு
குஞ்சும் குழுவானும்
குட்டி
குடர்
குடலை
குத்திக் காட்டல்
குத்து
குதறுதல்
குதியாளம்
குந்தியிருத்தல்
குப்புறுதல்
குப்பை
குருட்டுக் காது
குருடு
குருத்து
குருமுட்டி
குரைத்தல்
குலாமர்
குழையடித்தல்
குளுமாயி
குறியாப்பு
குன்னாளு (குணாலை)
கூகை
கூடமாட
கூத்து - கும்மாளம்
கூமுட்டை
கூர்
கூலி
கெஞ்சல்
கேள்விமுறை
கைகண்டது
கைநீளம்
கைவரிசை காட்டல்
கொக்கி
கொசு
கொஞ்ச நஞ்சம்
கொஞ்சம்
கொஞ்சல்
கொட்டாச்சி
கொட்டாயி
கொட்டை பரப்பல்
கொப்பத்து வெல்லம்
கொப்பரை
கொப்புள்
கொன்னக்கோல்
கோட்டம்
கோரிக்கை
கோழை
சக்கைபோடு போடுதல்
சச்சரவு

சட்டை
சட்டைபண்ணுதல்
சண்டப்பிரசண்டம்
சண்டியர்
சந்தடி சாக்கு
சப்பைக்கட்டு
சம்பளம்
சம்பா
சம்பார்த்தியம்
சம்மணம்
சரடுவிடுதல்
சரமாரி
சலங்கை
சவட்டுதல்
சவுண்டி
சன்னம்
சாக்கு போக்கு
சாட்டுதல்
சாட்டை
சாப்பு
சாமர்த்தியம் - சமத்து
சால்
சிச்சன்
சிதைவு
சிநேகம்
சிப்பம்
சிரிப்பு
சிலுசிலுப்பு
சிவிகை
சிறகு - சிறை
சின்னப்படுதல்
சின்னாபின்னம்
சீப்படுதல்
சீமை
சீவனாத்தி
சுட்டி
சுண்டிவிடுதல்
சுண்டுதல்
சும்மா
சும்மாடு
சூட்டிகை
சூல்
சூளை
செமத்தி
செய்தி
செருமல்
செல்வம்
செலாவணி
செவல
செவிடு
சேக்கை
சேதம்
சேதாரம்
சேமித்தல்
சொள்ளு (ஜொள்ளு)
சோப்பலாங்கி
சோம்பல்
தட்டுப்பாடு
தடவை
தடித்தல்
தண்டனை
தப்பிலி
தபு-தப்புதல்-தப்பித்தல்
தரம்
தலைப்பரட்டை
தவம்
தவித்தல்
தழை
தளிர்
தறுதலை
தனிசு
தாட்டிகம்
தார்
தாராளம்
தாவாங்கட்டை
தாழக் கோல்
தாள்
தாறுமாறு
திக்கு முக்காடல்
திட்ட வட்டம்
திட்டுதல்
திண்ணை

திமில்
திராணி
திருக்குசு
திருந்தல்
திருமுறை
திரை
தில்லு முல்லு
திவலை
தீர்மானம்
துக்குணி
துச்சம்
துஞ்சல்
துட்டு
துடுக்கு
துப்பட்டி
துப்பு
துப்புரவு
துயரம்
துயில்
துருசு
துளிர்
துன்பம்
தூசு
தூண்டல்
தூது
தூம்பு
தூய்மை
தூர்
தூறல்
தெக்கணாமுட்டி
தெகிடுதெத்தம்
தெம்பு
தெவிட்டல்
தெனாவட்டு
தேசம்
தேர்
தேள்
தொக்கு
தொங்குணி
தொட்டில்
தொத்தல்
தொந்தரவு
தொப்புள்
தொப்பை
தொம்பை
தொழுவாடு
தோசி (தோஷி)
நக்குணி
நக்குப்பொறுக்கி
நகை நட்டு
நச்சு பிச்சு
நடவடிக்கை
நடைபைக்கட்டு
நண்டு
நந்தன் - நந்தனார்
நந்திப் போதல்
நப்பாசை
நமுட்டுச் சிரிப்பு
நயம்
நரகல்
நறுக்குத் தெறித்தாற்போல
நறுவிசு
நனவோடை
நனைதல்
நாசம்
நாதாங்கி
நாமஞ்சாத்தல்
நாயனம்
நாயனார்
நிலம் நீச்சு
நிழல்
நீக்குப் போக்கு
நீலிக் கண்ணீர்
நுளம்பு
நெட்டா முட்டி
நெட்டி முறித்தல்
நெடுஞ்சாங்கிடை
நெளிவு சுளிவு
நைச்சியம்
நைதல்
நொண்டி
நோப்பாளம்

நோய் நொடி
பக்கி
பகட்டு
பசப்பல்
பசி
பட்டினி
பட்டு
படியோலை
படுவா
பண்ணாடி
பாக்கி
பாக்கிசாக்கி
பாகற்காய் - பாவக்காய்
பாச்சா (பலிக்காது)
பாசாங்கு
பாடாவதி
பாதை
பார்
பிக்கல் பிடுங்கல்
பிசுபிசுத்தல்
பிசுவுணி
பித்தலாட்டம்
பித்துக்குளி
பிதற்றல் (பேத்தல்)
பில்லன்
பிலாக்கணம்
பிழை
பிழைத்தல்
பினாத்தல்
புருடா
பூசி மெழுகுதல்
பெராக்குப்பார்த்தல்
பெருச்சாளி
பேந்தப்பேந்த விழித்தல்
பேர்வழி
பொட்டை
பொடணி
பொம்மை
பொலிகாளை
போக்கடா
போக்கத்தவன்
போக்கிரி
போடுதல்
போத்துராசா
போதல் (புகுதல்)
போர்
மக்கள்
மக்கு
மகிழ்
மங்கலம்
மங்குதல்
மச்சம்
மட்டு
மட்டை
மடல்
மண்டபம்
மண்டு
மண்டை
மந்தம்
மல்
மலங்கமலங்க விழித்தல்
மலடு
மலிவு
மழுப்பல்
மறுக்கா
மன்னித்தல்
மாங்காமடையன்
மாசு
மாட்டுப்பெண்
மாப்பிள்ளை
மாறாக்கு - மாறாப்பு
மிஞ்சுதல்
மீதம், மீதும், மீதி
முக்கல்
முக்கிக் குளித்தல்
முகவெட்டு
முகாந்தரம்
முச்சலிக்கை
முச்சி
முட்டாக்கு
முட்டை
முடம்

முத்தம்
முத்துக்குளித்தல்
முதிரம்
முறி
முறியடித்தல்
முறுவல்
முன்னம்
முனவல்
மூக்கணாங்கயிறு
மூளி
மூகா
மெலுக்கு
மென்னி
மெனக்கிடுதல் (மெனக்கெடல்)
மேக்கரித்தல்
மேய்தல்
மேலாக்கு
மேனாமினுக்கி
மையம்
மொக்கை
மொகரை
மொத்தம்
மொத்தல்
மொய்
மோசம்
மோசு
மோடி
மோழை
வக்கணை
வக்கு
வசை
வஞ்சம்
வண்டவாளம்
வம்பு
வலித்தல் (வலி)
வலை
வாகை
வாச்சாப்பு
வாசி
வாட்டசாட்டம்
வாட்டி
வாய்த்துடுக்கு
வாய்நீளம்
வார்
வார்த்தை
வாளாவிருத்தல்
வாளி
விசை
விடலை
விடியா மூஞ்சி
விண்ணப்பம்
விதம்
விபூதி
விரட்டு
வில் - விலை
வில்லாதிவில்லன்
விழுக்காடு
வீம்பு
வெக்கை
வெங்கன்
வெஞ்சனம்
வெட்டவெளி
வெட்டவெளிச்சம்
வெட்டு
வெள்ளிடைமலை
வெற்றிலை
வேசறவு
வேசாறல்
வேட்டை
வேய்தல்
வேர்
வேலி
வேலைவெட்டி
வேவுபார்த்தல்
வைதல்
வையகம்

அயல்மொழிச் சொற்கள் அட்டவணை

அக்கரை
அக்கு
அக்குசு
அசல்
அத்தர்
அந்தஸ்து
அப்பட்டம்
அபாண்டம்
அம்பாரம்
அம்பாரி
அமுல்
அரக்கு
அரகஜா
அலக்
அலமாரி
அலாதி
அனாமத்
ஆசாமி
ஆபத்து
ஆயா
ஆஸ்தி
ஆஸ்பத்திரி
ஆஜர்
இசுலாம்
இலாகா
இனாம்
உக்கிராணம்
உண்டியல்
உப்பசம்
உருமால்
ஊஷார்
ஊதா
எகத்தளம்
ஏராளம்
ஏலம்
ஐவேசு
ஒட்டாரம்
கக்கூசு

கச்சா
கச்சிதம்
கச்சேரி
கசர்
கனாதி
கசாப்பு
கஜம்
கஜானா
கடுதாசி
கதர்
கந்தோர்
கப்சா
கம்மான்
கம்மி
கரம்
காரர்
கல்லா
கலாட்டா
கலாய்
கலால்
கவாத்து
காக்கி
காகிதம்
காஜி
காடி
கரண்டு
காதி
காபந்து
காபரா
காயம்
காயலா
கார்பார்
காலி
காவாலி
கித்தான்
கிராக்கி
கிராதி
கிஸ்தி

குட்டு
குண்டா
குஜிலி
குஸ்தி
குஷால்
குஷி
குமாஸ்தா
குரிச்சி
குலாம்
குறுமா
கூஜா
கெட்டி
கெண்டி
கைது
கைலி
கொசுறு
கொப்பரை
கொறடா
கோசரம்
கோஷா
கோட்டா
கோதா
கோந்து
கோவளம்
சக்கிமுக்கி
சட்டிணி
சதாய்த்தல்
சந்தடி
சந்தா
சப்பாத்து
சம்சாயி
சமாளித்தல்
சர்க்கார்
சர்தார்
சர்பத்
சரக்கு
சரகம்
சரத்து
சல்லிசு
சவடால்
சவாரி
சவால்
சன்னது
சன்னல்
சாக்கு
சாக்ணா
சாதா
சாம்பார்
சாம்பிராணி
சாமான்
சாயா
சால்சாப்பு
சால்வை
சாவடி
சாவி
சிக்குதல்
சிட்டா
சிப்பந்தி
சிப்பாய்
சிபார்சு
சிலாவணி
சீட்டு
சீண்டல்
சீமந்து
சீல்
சுங்கம்
சுதாரித்தல்
சுமார்
செலான்
சொகுசு
சொந்தம்
சோக்ரா
சோதா
ஜல்சா
டக்கர்
டகல்பாச்சி
டப்பா, டப்பி
டபேதார்
டாபர்
டால்

டிக்காணா
டீக்கு
டீ கொடுத்தல்
டேரா
டேவணி
டோக்கர்
டோலி
தக்காவி
தகரார்
தஸ்தாவேசு
தண்டா
தண்டோரா
தணிக்கை
தத்தாரி
தபா
தபால்
தம்
தம்பிடி
தமாஷ்
தமுக்கு
தயார்
தர்காஸ்து
தர்கீமா
தர்ணா
தரப்பு
தராசு
தலாயத். தவா
தவில்
தாக்கீது
தாஜா
தாராளம்
தாலுகா
திவால்
திவான்
தினுசு
துக்கடா
துக்கு (தொக்கு)
துட்டு
துப்பட்டா
துருசு
துருப்பு
தொந்தரவு
நக்கல்
நகல்
நகாசு
நங்கூரம்
நபர்
நமுனா
நமுத்தல்
நவாப்
நாசுக்
நாஸ்தா
நாடா
நிகா
நிஜாம்
நிம்மதி
நிரக்கு
பக்கா
பக்ஷிஸ்
பங்கா
பங்காரு
பஜார்
பட்டா
பட்டியல்
பட்டுவாடா
பண்டிகை
பத்தர்
பந்தயம்
பந்தோபஸ்த்
பதில்
பயில்வான்
பர்த்தி
பர்பராட்
பர்வா
பராபரி
பராரி
பலே
பவனி
பவுசு
பளு

பஜாரி
பாக்கி
பாசி
பாட்சா
பாணி
பரத்
பாபத்து
பாரா
பாலம்
பாவட்டா
பிக்காரி
பிகு
பிச்சுவா
பிசாத்து
பிசுநாரி
பிசுவுதல்
பிர்க்கா
பிராது
பில்லி
பினாமி
பீங்கான்
பீடி
பீரங்கி
புகார்
புருடா
பூரா
பே
பேக்கு
பேஜார்
பேஷ்
பேஷ்கார்
பேட்டா
பேட்டி
பேட்டை
பேமானி
பைசல்
பைசா
பொக்குஷம்
பொட்டலம்
போகி
போதை
போனி
போஷாக்கு
மக்கர்
மககூல்
மகஜர்
மகமை
மகால்
மசோதா
மஜா
மஸ்தான்
மஸ்தூர்
மடங்கு
மத்தாப்பு
மலக்கு
மாகாணம்
மாப்பு
மாமூல்
மாலுமி
மிட்டா
மிராசு
முகாசா
முகாம்
முச்சலிக்கா
முசாபரிபங்ளா
முஸ்தீபு
முர்பா
முலாம்
முன்சீப்
மேசை
மேஸ்திரி
மைதா
மைதானம்
மைனா
மோட்டா
மௌசு
ரகம்
ரசீது
ரஜா
ரஸ்தா

ரத்து
ரயத்
ரயத்வாரி
ராஜி (ராசி)
ராஜிநாமா
ராட்டினம்
ரிக்ஷா
ருசு
ரேக்
ரொக்கம்
ரோந்து
ரோஜா
லத்தி
லாடம்
லாயக்கு
லாயம்
லாலா
லாவணி
லுங்கி
லூட்டி
லேவாதேவி
லோட்டா
வக்காலத்து
வகையறா
வசூல்
வஜா
வராண்டா
வாரிசு
வாடகை
வாடிக்கை
வாபஸ்
வாய்தா
விக்கிரயம்
வில்லங்கம்
வேடிக்கை
ஜகா
ஜகாத்
ஜதை
ஜபர்தஸ்த்
ஜம்பம்
ஜமா
ஜமாய்
ஜரிகை
ஜரூர்
ஜல்தி
ஜவ்வாது
ஜவாப்
ஜவாப்தாரி
ஜாகீர்
ஜவுளி
ஜாஸ்தி
ஜாடி
ஜாப்தா
ஜபிதா
ஜாமீன்
ஜாரி
ஜிம்கானா
ஜில்லா
ஜேப்படி
ஜோடனை
ஜோர்
ஸ்கூல்
ஷரா
ஷராப்
ஷோக்கு
ஹுசூர்

□□□

வழக்குச்சொல் விளக்க அகராதி

அக்கம் பக்கம் : பிறர் அறிய வேண்டாத ஒரு செய்தியை ஒருவர்கூறும்போது அக்கம் பக்கம் பார்த்துப்பேசு என்பதும் உன்னைப்பற்றி அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் பார்த்து நடந்துகொள் என்பதும் ஒரு வழக்குத் தொடர். இதன் செம்மையான வடிவம் அகம் + பக்கம் என்பதாகும் உள்ளும் புறமும் என்பது பொருள். அகம் என்பது அடுத்து வரும் பக்கம் என்னும் சொல்லை நோக்கி அக்கம் எனத்திரிந்தது. இது எதுகைப் பிறழ்ச்சியாகும்.

அக்கரை : ஒருவர் ஒரு செயலை முழுமுயற்சியோடும் கருத்தோடும் செய்யுமிடத்து அவர் எதையும் அக்கரையோடு செய்வார் என்பதும் செய்யவேண்டியதொரு பணியை ஒருவர் செய்யாமல் ஒதுங்கும்போது அவருக்கு இதில் அக்கரையில்லை என்றும் கூறுவர் இச்சொல்லின் செம்மையான வடிவம் அக+கரு+ஐ = அக்கரை. அகத்திலே கருக்கொண்டநிலை என்பது பொருள் மனத்தின் முழுமையான ஈடுபாடு அகக்கரை. அது அக்கரை என மருவியதாகும். அக்கறை என வல்லினமாக வரும் சொல்வேறு இது வேறு.

அக்கரைச்சீமை : அயல்நாடு என்னும் பொருளில் வழங்கும் ஒரு தொகைச் சொல். கரை என்பது ஆறு குளம் கடல் இவற்றைச் சுற்றிலும் உள்ள நிலப்பகுதி. கூறுவோர் நின்று கூறுமிடம் இக்கரை. அவர்கட்கு எதிர்ப்புறமாக இருபபது அக்கரை. சீமை என்பது நாடு என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. சீமை என்னும் வடசொற்கு எல்லை என்பது பொருள். நமது நாட்டு எல்லைக்குப் புறம் இருக்கும் நாடுகளை அது குறிப்பால் உணர்த்துகிறது. நுணுகி நோக்கின் சீமை என்பது சேய்மை என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபாக உள்ளமையைக் காணலாம். அக்கரையில் உள்ள சேய்மையான நாடு என்பது பொருள். சேய்மை என்பது ஆகுபெயரிலக்கணத்தால் சேய்மையிலுள்ள நாட்டைக் குறித்து நின்றது.

அக்கியானம் : ஒன்றும் அறியாதவன், தெரியாதவன் நுட்பமான அறிவில்லாதவன் என்னும் பொருளில் வழங்கும் கொங்கு நாட்டு வழக்குச் சொல். அவன் ஒரு அக்கியானம் அவன் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றாற்போலவரும். இதன் செம்மையான வடிவம் அஞ்ஞானம் என்பதாகும. அஞ்ஞானம் = அறியாமை. மற்று இச்சொல் சில வட்டாரங்களில் அக்கியாணம் என்றும் சில பகுதிகளில் முதல் குறைந்து கேனன் – கேனப்பயல் என்றும வழங்குகின்றது.

அக்குதொக்கு : குடும்பமோ நெருக்கமான உறவோ இல்லாத ஒருவரைக் குறித்து வழங்கிவரும் தொடர். அவனுக்கு அக்குதொக்கு யாதுமில்லை எப்படி

வேண்டுமானாலும் திரிவான். அவனுக்கு அக்குமில்லை தொக்குமில்லை பின்னே உழைச்சு சம்பாதிக்கணும் என்னும் பொறுப்பு எப்படி வரும் என்பது வழக்கு. இத்தொடர் அகம் தொடக்கு என்பவற்றின் திரிபாகும். அகம் = மனை - வீடு. அது மனையறத்தை - குடும்பப் பொறுப்பை உணர்த்தி நின்றது. அகம் என்பதன் முதனிலை அக் (அக் + அம்) அம் இடப்பொருள் தரும் விகுதி - தொடக்கு - தொடர்பு. தொடர்பு = சுற்றம், உறவு. தொடக்கு தொக்கு என இடை குறைந்து நின்றது. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர் பற்றிலர் நாணார் பழி என்பது வள்ளுவம். குடும்பப் பொறுப்பும் உறவுச் சூழலும் இல்லாதவர் சமுதாய மதிப்பைக் கருதுவது அருமை என்பது இம்மரபுத் தொடரின் பொருள்.

அக்குப்பொறுக்கி : உழைத்து உணவு தேடாமல் தானியங்களைத் தரையில் மாடுகளை மிதிக்கச் செய்யும் கூலங்களைத் திரட்டுங்களங்களில் ஒதுங்கிக் கிடக்கும் தானிய விதைகளைப் பொறுக்கும் நிலையுடையவர்களைக் குறித்து வழங்கும தொடர். கொங்கு நாட்டு வழக்கு. அக்கு என்பது அஃகம் - தானியம் என்பதன் திரிபு பொறுக்குதல் ஒவ்வொன்றாக எடுத்துச் சேர்த்தல். எனவே அக்குப் பொறுக்கி என்பதன் பொருள் போரடிகளங்களில் ஒதுங்கிச்சிதறும் தானியங்களைப் பொறுக்கும் செயலுடையவர் என்பதாகும்.

அகம்பாவம் : செருக்கு, ஆணவம், திமிர் என்னும் பொருளில் வழங்கப்படும். உள்ளத்தின் தன்மை எனப்பொருள்படும். வடசொல்லும் தமிழ்ச்சொல்லும் கலந்ததொரு தொடர் அகம் = உள்ளம். பாவம் = தன்மை. அகம் என்பது அகங்காரம் எனப்பொருள் தருமிடத்து வடசொல்லாகும். தான் என்னும் செருக்கு என்பது பொருள். வழக்கில் பாவம் என்னும் சொல் குறைந்து அவன் மிகவும் அகம் பிடித்தவன் என்றும் வரும்.

அகல்விளக்கு : அகன்ற வட்டமான சிறிது உட்குழிந்த மண்பாண்டம் (உலோகங்களிலும் செய்யப்படும்) அதன் கண் எண்ணெயிட்டுத் திரியிட்டுக் கொளுத்தப்படும் விளக்கு அகல் விளக்கு எனப்படும். இதற்கு இனமாகக் குத்துவிளக்கு, கொத்துவிளக்கு, சரவிளக்கு எனச் சில வகையுண்டு. குத்து விளக்கு என்பது நீண்ட கால் போன்ற உறுப்புடையது அதனை ஊன்றி அதன்மேல் விளக்கிடுதலின் குத்து விளக்கு எனப்பட்டது. அகல் விளக்கு என்பதற்கு அகன்ற வட்டமான விளக்கு என்பது ஒரு நிலையில் ஒக்குமாயினும் ஊன்றுதற்குரிய கால் இல்லாத விளக்கு என்பது தான் செம்மையான பொருள். கால் அற்ற என்பது அகால் என அமைந்து அகல் என மருவியது என்க. இதறகுத் தகழி என்பதும் ஒரு பெயர் அது தாள் + கழி (காலற்றது) = தகழி என மருவியதாகும்.

அகிலம் : புவி, உலகம், பூமி என்னும் பொருளில் வழங்கும் வடசொல் இது. முழுமையான உலகத்தை உணர்த்தும் எல்லா நாடுகளையும் கடல்களையும் தன்னுள் அடக்கிய நிலையே அகிலம். கிலம் = சிதைவு, குறைவு உடைப்பு

என்னும் பொருள்தரும் வடசொல். அ எதிர்மறை முன்னொட்டு. குறையாத உடையாத (முழுமையான) உலகம் என்பது பொருள். இது சில இடங்களில் எல்லாம் என்னும் பொருளில் நிற்கும். அகில உலகமுட்ட இறைவன் படைப்பு எனவரும். எல்லாம் என்னும் உரிச்சொற்கு எஞ்சாமை முழுமை என்பது பொருளாகும்.

அங்கலாய்த்தல் : உளத்தடுமாற்றத்தால் வருந்துதல் அது காரணமாகப் புலம்பிப் பேசுதல் சிடுசிடுத்தலை உணர்த்தும் வழக்குச் சொல். இதன் செம்மையான வடிவம் அகம் + கலாய்த்தல் - உள்ளத்தில் எழும் கலாம் என்பது பொருள். கலாம் = பூசல் = போர் = கலகம். கலகம் என்பது கலக்கம் என்பதன் திரிபாகும்.

அங்கிட்டு : இடம் என்னும் சொல் அடையுமிடத்தைச் சுட்டுமிடத்து கிட்டு எனவரும். அவர்கிட்டப் பேசிப் பார்ப்போம். எங்கிட்ட இதெல்லாம் செல்லாது. யார்கிட்ட பேசுற என வரும். இனிக் கிட்டு என்பது கொண்டு என்பதன் திரிபாகவும் அவன் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருந்தான், பார்த்துக்கிட்டிரு என வரும்.

அச்சு : பல கோணங்களில் பொருள் தரும் ஒரு மரூமொழி 1. இரு புறமும் உருளை கோத்தற்குரிய வலியமரம் அல்லது இரும்புலக்கை வண்டி அச்சு தேர் அச்சு 2. நெறிப்படுத்தும் அளவை. முறுக்கச்சு, நகை அச்சு முதலியவை 3. ஒன்றற்கு ஆசாக ஒத்திருப்பது. இவன் தந்தையின் அச்சாக இருக்கிறான் எனவரும் இதன் அடிப்படை வடிவம் அகச் + சூல் = அகச்சூல்- அச்சு. சூல் கருக்கொண்டிருக்கும் நிலை.

அசத்தல் : பேச்சுப்போட்டியில் சுந்தரம் நேற்றுப் பேசினான் பாரு எல்லோரையும் அசத்திட்டான். தலைவரே அசந்துபோயி இதுபோலப் பேச்சை நான் கேட்டதேயில்லை என்று பாராட்டினார் என்றாற் போலவரும் வழக்கில் அசத்தல் என்பது அயர்த்தல் என்பதன் திரிபாகும். சகரயகரப்போலியாக வரும் தேசம் தேயம் - என வருதல் போல அயர்த்தல் அசத்தல் என நின்றலை அயர்த்தல் = செயலற்செய்தல் - வேலை செய்து அயர்ந்து போனார் என்பது அசந்துபோனார் எனத்திரிந்து வழங்கும்.

அசிங்கம் : தூய்மையற்றதையும் பொருத்தமில்லாததையும் அருவெறுப்பைத் தருவதையும் குறிக்கும் சொல். இது அசங்கியம் என்னும் வடசொல்லின் திரிபாகும். சங்கித்தல் = கலத்தல், ஒத்தல் அகரம் எதிர்மறை முன்னொட்டு. பொருந்தாமை ஒவ்வாமையைக் குறிக்கும் சொல் இது.

அஞ்சல் : தபால் Postal என்பதற்கு ஈடாக வழங்கும் சொல். அஞ்சல் நிலையம் என்பது வழக்கு. ஒருவர் ஓடி நிற்க அங்கிருந்து ஒருவர் ஓடும்

ஓட்டத்திற்கு அஞ்சல் ஓட்டம் என்பது பெயராக வழங்குகிறது. இதனைத் தமிழ்நெறிப்படி ஆக்கஞ்செய்யின் அம் + செல் = அஞ்செல் - அஞ்சல் எனக் கொள்ள வேண்டும். அம் = இடம் செல் = செல்லுதல். ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் செல்லுதல் என்பது கருத்தாகும்.

அட்டகரி : மிகக்கருப்பாக இருக்கும் ஒருவரையோ ஒரு பொருளையோ சுட்டிக் கூறுமிடத்து 'அட்டகரி' என்பது வழக்கு. கரி = கருமையுடையது. அடுதல் = எரித்தல் - வேக வைத்தல். நன்கு எரித்தெடுக்கப்பட்ட கரி மிகவும் கருமையாயிருத்தல் பற்றி அட்டகரி எனப்பட்டது. மற்று நன்றாக அடைவு கொண்ட (செறிந்த) கரி என்றும் பொருள் கொள்ளலாம்.

அட்டணைக்கால் : ஒரு காலின் மேல் மற்றொரு காலை மேலிட்டு அமர்ந்திருத்தலை அவன் அட்டணைக்காலிட்டு அமர்ந்திருக்கிறான் என்பது வழக்கு. ஒரு காலை மற்றொரு காலின் மேல் மடக்கி இடும்போது அது எட்டு என்னும் வடிவம் போல இருத்தலின் அஷ்டமாக மடித்த கால் அட்டணைக்கால் எனப்பட்டது. அஷ்டம் தமிழில் அட்டமென வரும்.

அட்டாதுட்டி : அடாத செயல்புரியும் துஷ்டன் என்பது பொருள் அடா என்பது துட்டி என்னும் சொல் நோக்கி அட்டா எனத்திரிந்தது அடாத துஷ்டத்தின் தன்மையுடையவன் அட்டாதுட்டி என வந்தது.

அட்டும் : செயின் என்னும் வாய்பாட்டு வினை எச்சப் பொருளில் வழங்கும் ஓர் ஒட்டுச்சொல். தலைவர் பேசட்டும் நீ சும்மாயிரு. பிள்ளைகள் செய்கிற அட்டூழியம் பொறுக்க முடியவில்லை என்றாற் போலவரும் இத்தொடர் அடு + ஊழியம் = பணி வேலை. சமையலுக்குரிய அரிசி, காய்கறி முதலியவற்றை அரிந்தும் வெட்டியும் உரித்தும், முரித்தும், வதக்கல் வேகவைத்தல் முதலிய செயல்களை ஒப்பச் செய்யும் செயல் அட்டூழியம் எனப்பட்டது.

அடகு : பலபொருளொடு சொல் 1.கீரை = நிலத்தில் அடர்ந்து தழைத்தலால் அடர்கு என்பதன் ர கரங்கெட்டு அடகு எனக் கீரையை உணர்த்திற்று. 2.வழக்கில் ஒருபொருளைப் பெற அதற்கு ஈடாகத் தரும் பொருளும் அடகு எனப்படும். நகையை அடகு வைத்துப் பணம் வாங்கினேன் என்ப. அடையத்தருதல் = அடைகு என்பது அடகு எனத்திரிந்து ஆக்கம் பெற்றது.

அடாப்பழி : அடுக்காத பழி என்பது பொருள். பொருந்தும் ஒக்கும் என்னும் பொருள்தரும் அடுக்கும் என்பதன் முதல் நிலை அடு(த்தல்) அது ஆ என்னும் எதிர்மறை விகுதி பெற்று அடா என நின்றது. பழி = குற்றம். இது பழு + இல் = பழில் என்பதன் ஈறுகெட்ட சொல். பழுத்தல் = முற்றல், நிறைதல். அதன் எதிர்மறை குறை. குறை என்பது குற்றம் என்றும தாழ்வு என்றும் பொருள் தரும். அடாத குற்றம் அடாப்பழி என அமைந்தது.

அடாவடி : நெறிமுறையின்றி நடப்பவரைக் குறித்து வழங்கும் சொல். 'அவன் கிடக்கிறான் அடாவடிப்பயல்' என்பது வழக்கு. அடா = அடுக்காத - ஒவ்வாத செயல். சொல் வடு = குற்றம் வடி = குற்றமுடையவன். இ - சொல்லாக்க விகுதி. அடாவடி - ஒவ்வாத குற்றச் செயல் என்பது பொருள். அடா - அடி என்னும் ஆண்பால் பெண்பால் விகுதியாக வரும் சொற்கள் வேறு.

அடிச்சிப்பிடிச்சி : அவன் என்னவோ அடிச்சிப்பிடிச்சிக் காரியத்தைச் சாதித்து விட்டான் என்றாற்போல வரும் வழக்குத்தொடர் இது அடுத்துப் பிடித்தல் என்பதன் திரிபு அடுத்தல் = நெருங்கி நெருங்கி வயப்படுத்தல். பிடித்தல் = பற்றிக்கொள்ளுதல் அணைத்துக் கொள்ளுதல். இனி அடித்துப் புடைத்து என்பதும் அடிச்சிப் பிடிச்சி எனச் சிதைந்து வரும். அது கீழ் மக்களிடம் காரியம் சாதிக்கத் தண்டனை வாயிலாகச் செய்தல். அடித்தல் புடைத்தல் கையாலும் கருவியாலும் ஒறுத்தல்.

அடிமடியில் கை வைத்தல் : ஒருவர்க்குக் காவலாக ஆதாரமாக இருக்கும் ஒரு மூலப்பொருளைப்பற்றிக்கொண்டு உடையவரை அச்சுறுத்தலை உணர்த்தும் ஒரு வழக்குத்தொடர். இதன் செம்மையான வடிவம் அடிமடையிற் கை வைத்தல். நீர்த்தேக்கங்களில் நீரை வெளிப்படுத்த இடையில் ஒன்றும் அடியில் ஒன்றுமாக மடைவாய் அமைப்பர். மேல்மடையைத் திறப்பின் தமக்கு வேண்டிய அளவில் நீர் வெளிப்படும். அடிமடையைத் திறப்பின் நீர் முழுதும் நீங்கிவிடும். நீரைக் காப்பாற்றும் மடை அடிமடை. அதுபோல ஒருவர்க்குக் காப்பாக இருக்கும் பொருள் அடிமடை எனப்படும் கைவைத்தல் அழியச் செய்யல். இது உவம வாயிலாக அமைந்த தொடர். அடிமடை என்பது திரிந்து அடிமடி எனப்பிழைபட்டது.

அடிமுட்டாள் : முட்டாள் தன்மையின் அடி மூலம். அடிக்கரும்பு என்பது போல முட்டாள்களுள் மிக்க முட்டாள் தனம் உடையவன் என்பது கருத்து.

அடையாளம் : அடை + அளம் = அடையாளம். ஒரு பொருளை இது என்று உறுதி செய்வதற்குரிய சின்னம் அல்லது குறி. குறியைக் கொண்டு அப்பொருளை அடைதல், அறிதல். அளம் = அளவு = ஒரு பொருளை இது இன்னது என்று தெரிந்து கொள்ள அமைந்திடுங்குறி அடையாளம் எனப்படும். அந்தக் கூட்டத்தில் கண்ணனை எப்படிக் கண்டுபிடிப்பது என்னும் போது சிகப்புத்துணியால் முண்டாசு கட்டியிருப்பான் என்றோ. ஒரு காலை விந்தி விந்தி நடப்பான் என்றோ. கையில் ஆறுவிரல் இருக்கும் என்றோ. வலது கன்னத்தில் மச்சம் இருக்குமென்றோ இவ்வாறு கூறிய தொன்றை அடைவதற்குத் துணையாகக் கூறுவது அடையாளம் காட்டுதல் . + இது கூட்டல் அடையாளம் × இது பெருக்கல் அடையாளம் என்பதும் அ இது அகர இசை ஆ இது நெட்டெழுத்து என்று காட்டுவதும் இன்னபிறவும் அடையாளமாகும்.

அண்ணாக்கு : அண்ண + நாக்கு = அண்ணம் = வாயினுள் உள்ள மேலிடம். அண்ணத்தின் தொடக்கப்பகுதியில் தொங்கும். நாக்கு - அண்ணாக்கு இதற்கு உண்ணாக்கு (உள் + நாக்கு) என்றும் பெயர்.

அத்திசுரம் (அஸ்திசுரம்) : போலீசைக் கண்டவுடன் திருடனுக்கு அஸ்தியிலே சுரம் நடுங்கிப் போய்விட்டான் என்றாற் போல வரும் அஸ்தி = எலும்பு சுரம் = காய்ச்சல்; உடம்பில் தோல் நரம்பு தசையளவில் வரும் காய்ச்சல் எளிதில் போக்கக்கூடியது எலும்பில் சுரங் கண்டால் பெரிதும் துன்பமாகும்; உயிரிழப்பு ஏற்பட ஏதுவாகும். அதுபோல் அச்சத்தின் கடுமையை உணர்த்த இந்த உவமத் தொடரைப் பயன்படுத்துவர்.

அதட்டல் : சின்னவன் ரொம்பக்குறும்பு செய்கிறான் கொஞ்சம் அதட்டுங்கள். அவனை அதட்டிக் கேட்டால் தான் உண்மையைச் சொல்லுவான் என்றாற்போல வழங்கும் இச்சொல்லின் கருத்துப்பொருள் அச்சுறுத்தல். இது அதிர்த்தல் என்பதன் திரிபாகும் அதிர்த்தல் - அதிட்டல் - அதட்டல் எனவரும். அதிர்தல், அதிர்ச்சி என்பதற்குக் கலங்குதல், நிலைகுலைதல், செயலறுதல் என்பன பொருள். தவறு செய்பவரை அதன் நிலையில் தடுமாறச் செய்தல் அதிர்த்தல். அதிர்தல் தன்வினை அதிர்த்தல் = பிறவினை.

அதப்பு : மரியாதை கெளரவம், செருக்கு என்னும் பொருள் தரும் உருதுச்சொல்.

அதெந்துவே : சோதியே சுடரே .... ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளா யே (திருவாசகம் அருட்பத்து) அதம் – எது + ஏ என்னும் சொற்களின் மரூஉ. அதம் என்னும் வடசொல்லும் எதுவே என்னும் தமிழ்ச்சொல்லுங் கலந்த தொடர் கன்னடத்தில் வழங்கும் சொல். எதற்காக அழிகின்றாய்? (உனக்கழிவில்லை) என்பது பொருள். அதம் (ஹதம்) = அழிவு எந்துவே = எதற்காக. நீ உள்ளம் (அழியாதே) அழிவது எதற்கு என்பது பொருள்.

அதோகதி : நீ இப்படிச் செய்தால் அதோகதி அடைவாய் என்றாற் போலவரும் தொகைச்சொல் ; வடசொல். அதோ என்பது அதோமுகம் என்னும் நரகத்தையும், கதி என்பது அடையும் நிலையையும் குறிக்கும். அதோ முகமென்னும் நரகத்தில் அமிழ்வாய் என்பது பொருள். பெருங்கேடு என்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

அந்துசு : மதிக்கத்தக்க நிலை, அழகு என்னும் பொருளில் வழங்கும் சொல் (1) மதிக்கத்தக்க நிலை என்னும் பொருள் தருமிடத்து இதன் செம்மையான வடிவம் அந்தஸ்து என்பதாகும். (2) அழகு என்னும் பொருள்தருமிடத்து அந்தம் + ஆசு என்பவற்றின் மரூஉவாகும் அந்தம் = நிறைந்த வடிவம் பொருந்தியிருத்தல். வடிவ அளவு பொருந்தியிருத்தல். அது அழகு. கவின்.

அநாதி : (1) சுற்றமும் நட்பும் இல்லாத நிலை. பற்றுக்கோடற்றநிலை. நாதி (ஞாதி = சுற்றம்) அ எதிர்மறை முன்னொட்டு (2) தோற்றமில்லாத நிலை காணமுடியாத நிலை : ஆதி = முதல், தோற்றம் - தொடக்கம் அ எதிர்மறை முன்னொட்டு அந்ஆதி = அநாதி (அனாதி) தோற்றமும் (முடிவும்) இல்லாத பரம்பொருள்.

அப்ப : அப்பப்ப வருவான் -கேட்கிறப்ப கொடு. அ = சுட்டு ப என்பது பொழுது என்பதன் மரூஉ. இது இகரச்சுட்டொடு இப்ப. என்றும் எகரவினாவொடு எப்ப என்றும் வரும்.

அப்பழுக்கு : அவர் அப்பழுக்கில்லாத மனிதர் என்பது வழக்கு. பிறரால் சுட்டப்பெறும் குற்றமில்லாதவர் என்பது பொருள். அழுக்கு இரு வகைப்படும். பொருளோடு உடனுறையும் அழுக்கு. பிறவற்றால் நேரும் அழுக்கு. இயற்கையாக உடம்போடு பிறந்த குற்றங்கள் பசி, தாகம், காமம், கோபம், உடல் அழுக்கு, மலம் முதலியவை. இவை பிறருக்குக் கேடு செய்யாதவை. பிறரால் ஏற்படும் குற்றமாகிய அழுக்கு பொய், களவு, சூது, கொலை, கையூட்டு கொலை முதலியவை. இவை பிறரால் அப்பப்படுபவை. உடம்பைப் பொருத்தவகையில் சேற்றைப் பூசுதல், வண்ணக் குழம்பைப் பூசுதல் முதலியவை. இவற்றை அப்பிய அழுக்கு என்பர். இவர் அப்பழுக்கில்லாதவர் என்றால் பிறரால் சுட்டிக் கூறப்படும் குற்றங்குறைகள் இல்லாதவர் என்பது பொருள்.

அப்பிராணி : உயிரற்ற அஃறிணைப் பொருளைக் குறிக்கும் வடசொல் பிராணன் = உயிர் - பிராணி உயிரையுடையது. அ எதிர்மறை ஒட்டு அப்பிராணி = உயிரற்ற சடப்பொருள். ஒருபாவமும் அறியாத அபாவியாக உள்ளவரைக் குறித்து வழங்கும் சொல். அவன் ஒரு அப்பிராணி என வரும். எக்குற்றமும் இல்லாதவன் குற்றம் புரியத் தெரியாதவன் என்பது பொருள். இதற்கு இணையாக வழங்கும் பிறிதொரு சொல் அப்பாவி பாவம் = செயல் தன்மை (பாவனை) அ எதிர்மறை அபாவம் அபாவத்தன்மையானவன் அபாவி என்பது வழக்கில் பகரம் மிக்கு அப்பாவி. எனச்சிதைந்தது.

அம்மி – குழவி : மிளகாய், தேங்காய், மல்லி முதலியவற்றை மசியச் செய்யும் கருவிகள் அம்மியும் குழவியுமாகும். குழவி பலவற்றிற்குக் கருவியாகும். பொருள்களை அரைத்துக்குழையச் செய்வது குழைவி அது குழவி என ஆக்கம் பெற்றது. கல்வக்குழவி, ஆட்டுக்கல்குழவி எனவரும். சமமான கல்லில் மிளகாய் முதலிய பொருள்களை வைத்துக் குழவியால் அமுக்கி உருட்டிக் குழையச்செய்வார்கள் அங்ஙனம் குழவியால் அமுக்கப்படுதலின் அக்கல் அம்மி எனப்பட்டது. அம்மப்படுங்கருவி அம்மி.

அமஞ்சி : கூலியோ சம்பளமோ பெறாமல் பொதுநலங்கருதித் தனித்தோ பிறருடன் இணைந்தோ வேலை அல்லது பணி செய்பவரை அமஞ்சி

வேலைபார்க்கிறார் என்பது வழக்கு. இஃதொரு தொகைச் சொல்லின் மரூஉ வரலாற்றுச் சிறப்புடையது இது. அமண் + செய்கை என்பவற்றின் மரூஉ வாகும். அமண் என்பது சைனத்துறவியரைக் குறிக்குந் தமிழ்ச்சொல். அமணர் என்ப. சமணத்துறவியர் மலைக்குடைவுகளில் (குகை) தங்கி நோன்பு புரியும் இயல்பினர். ஒரு வேளை ஒரு கைப்பிடியளவே உணவுண்டு தவம்புரிவர். குகைக்குடைவுகளில் சிறிது பள்ளஞ்செய்து அதில்படுத்திருந்து நோன்பியற்றுவார்கள் இளந்துறவிகளுக்குச் சமயநெறிகளையும் அறநெறிகளையும் கற்பிப்பார்கள். அவர்கள் பள்ளிகொண்ட நிலையிலேயே கற்பித்தலால் அக்குடைவரைக்கூடம் பள்ளிக்கூடம் என வழங்கப்பெற்றது. அவ்வழக்குக் காரணமாக ஊருள் ஆசிரியன்மார் இளமாணாக்கர்க்குக் கற்பிக்கும் கூடங்களும் பள்ளிக் கூடம் என வழங்கப் பெறுவனவாயின.

சமண முனிவர்கள் எவ்வகை ஊதியமும் கைம்மாறும் கருதாமல் கற்பித்தல் தமது கடமை என்றெண்ணிக் கற்பிப்பார்கள் அங்ஙனம் கைம்மாறு கருதாது செய்துவரும் செயல் அமண் செயல் எனப்பட்டது. சமணத்து துறவியருள் கலைப்பயிற்சியும் ஓரளவு உடல் வலிமையும் உடையவர்கள் கற்பாறையைக் குடைந்தும் செதுக்கியும் சிற்பங்களையும் குகைக்கோயில்களையும் அமைப்பர். ஓவியங்களைத் தீட்டுவர். இவையெல்லாம் மக்கள் நன்மை ஒன்றே கருதி ஊதியமின்றிச் செய்தலால் அவர் செயல் அமண் செய்கை எனப்பட்டது. அவருள் இளந்துறவியர் சிறுகுளம் கால்வாய்களை வெட்டியும் பெருங்குளங்களுக்குக் கரை எடுத்தும் பொதுப்பணிசெய்வர். சிலர் மூலிகைகளைக் கொண்டு மருந்துகளைச் செய்து பிணியுற்றவர்களுக்குத் தந்து நோய்களைப் போக்குவர். இங்ஙனம் கைம்மாறு கருதாமல் இத்துறவியர் செய்யும் செயல்யாவும் அமண்செய்கை எனப்பட்டன. அமண் செயல் என்னும் இத்தொகைச் சொல் அமண் செய் - அமண்சி - அமஞ்சி என மருவிப் பொதுவாகக் கூலிபெறாமல் செய்யும் பணிக்குப் பெயராக வழங்கலாயிற்று. சென்னையில் உள்ள அமிஞ்சிக்கரை என்னும் பகுதி அங்கு முன் வாழ்ந்த மக்களுள் சிலர் கடல் நீர் உட்புகாமல் கரையை அமைத்தமையால் கூலிபெறாமல் செய்யப் பெற்ற அக்கரை அமஞ்சிக் கரை எனவும் அமிஞ்சிக் கரையெனவும் வழங்கப்பெற்றது. அமஞ்சிக்கரை என்னும் சொற்பொருளும் வரலாறும் தெரியாத சிலர் அமைந்தகரை எனத்திருந்தி வழங்கி வருகின்றனர்.

இனி அம்மாஞ்சி என்னும் ஓர் உறவுப்பெயர் பார்ப்பனரிடையே வழங்கி வருகிறது. அது அம்மான் சேய் (மாமன்கள்) என்பதன் திரிபாகும். அதற்கும் அமிஞ்சி வேலை என்னும் சொல்லுக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை. இவ்வழக்கு இன்றைக்கு அருகிவிட்டது.

அமட்டல் : அதட்டி அச்சுறுத்தல், மயங்க வைத்தல் என்னும் பொருளில் வரும் இச்சொல் அகம் மருட்டல் = என்பவற்றின் மரூஉ வாகும். அகம் = மனம். மருட்டல் = மருளச் செய்தல்.

அமர்தல் : கால்களை மடக்கி ஓர் இருக்கையிலோ சம்மணமிட்டுத் தரையில் உட்கார்ந்திருத்தலைக் குறிக்கும் சொல். இது அமைந்திருத்தல் என்பதன் திரிபாய் அமை என்னும் பகுதியுடன் அர் என்னு விகுதி சேர்ந்து அமர் என ஆக்கம் பெற்றதாகும். இச்சொல் விருப்பம் (அமர்தல் = மேவல் உரிச்சொல்) என்னும் பொருள் தரும் உரிச்சொல்லாக நிற்குமிடத்து உள்ளம் ஒரு பொருளில் மேவி இருத்தல் என்னும் கருத்துடையதாகும். போர் என்னும் பொருளில் அம்முதல் + ஆர்தல் என்பவற்றின் முதனிலைகளாகிய அம் + அர் = அமர் என்னும் முதனிலைகள் இணைந்து ஆக்கம் பெற்றதாகும் அம்முதல் (பகைவரை) அமுக்குதல் (அடக்கி ஒழித்தல்) என்னும் பொருளுடையதாகும். அமர்புரிந்தான் எனவரும் இதனை வடமொழியில் உள்ள சமரம் - சமர் என்னும் சொல்லின் தமிழாக்கம் எனக்கருதுவாரும் உளர். அமரர் என்னும் சொல் தமிழில் *போர்புரிபவர் என்னும் பொருளில் வரும். வடமொழியில் மரணமில்லாதவர்* (அ+மரர்) என்னும் பொருளில் வரும். தேவர்கள் என்னும் பொருள்தருமிடத்து அம்+அர் என்னும் குறையுரிச் சொற்களின் ஆக்கமாகும். அம்=வானம்–ஆகாயம், அர்–ஆர், ஆர்தல்-தங்கியிருத்தல் என்னும் பொருள் தரும் விண்ணுலகில் உள்ளவர் என்பது பொருள். அமரர் தமிழ்ச்சொல் என்பதனை அமரார் என்பது பகைவர் என்னும் பொருளில் வருதலான் அறியலாம்.

அமலை : *ஆரவாரம் என்னும் பொருளில் வழங்கும் இலக்கியச் சொல்.* பெருஞ்சோற்றமலை என்பது விருந்துண்ணும் ஆரவாரம் எனப்பொருள் தரும். ஈண்டு ஆரவாரம் என்பது இன்பத்தால் எழும் ஒலிப்பெருக்கத்தைக் குறிக்கும் இச்சொல் அம் + ஒல் + ஐ என்னும் மூன்று உரியடிகளால் ஆக்கம் பெற்ற ஒரு சொல்லாகும். அம்=இனிமை, ஒல்-(அல்) ஒலி. ஐ=உடையது என்னும் பொருள் தரும் விகுதி. அம்+ஒல்+ஐ= என்பவை அமலை என ஆக்கம் பெற்றது.

அமளி : ஆரவாரம் என்னும் பொருளில் வரும் சொல். இது குமுளி என்னும் சொல்லொடு இணைந்து அமளி குமளி எனவும் வழங்கும். அமர்+இ=அமரி என்பதன் திரிபாகும். அமர் ஆகுபெயரால் போரின் ஆரவாரத்தைக் குறித்து நின்றது. இ கருவிப்பொருள் விகுதி. குமுளி என்பது குமிழி என்பதன் திரிபாகும். குமிழுதல் நுரைத்துப் பொங்குதல் (நீர்க்குமிழி) இனி கும்+ஒலி=குமொலி என்பது குமுளி எனத்திரிந்தது எனினும் ஒக்கும்.

அமுத்தல் (அமர்த்தல்): அவன் ரொம்ப அமுத்தலாத் திரிகிறாற்ன என்றாற் போல வரும். இச்சொல் திரிபுச் சொல்லாகிய அமட்டல் என்பதன் போலி. அமுட்டல் அமுத்தல் எனவரும். பிறர் மயங்குமாறு நடந்து கொள்ளுதல் என்பது கருத்து.

அரக்க பரக்க : இதன் செம்மையான வடிவம் அரைக்கை பறக்க என்பதாகும். *விரைந்து ஓடிவரும் ஒருவரை ஏன் இப்படி அரக்கபரக்க ஓடிவர்ர என்பது*

வழக்கு. அரை என்பது இடுப்பையும் விலாப்புறங்களையும் குறிக்கும். ஓடிவருமிடத்துக் கைகள் சிறிது மடங்கி இறக்கைபோல அசையும். அதனால் 'அரையிலே கை பறக்க' என்பது அரக்கப்பரக்க என மருவி வழங்குகின்றது.

அரட்டி : அச்சம் என்னும் பொருளில் வழங்குச்சொல் அரளுதல் என்னும் சொல்லின் முதனிலையாகிய அரள் என்பது அரண்டல் என வரும். அரண்டு போனான் என்பது வழக்கு. அரள் என்பது மருள் என்பதன் வழக்குத் திரிபு. அது தகர எழுத்துப் பேறும் இகர விகுதியும் பெற்று அரள்+த்+இ=அரட்டி என ஆக்கம் பெற்றதாகும். இனி அரற்றல் என்பது அரற்றி என்று உருப்பெற்று அரட்டி எனத்திரிந்தது என்பாருமுளர்.

அரட்டை : பயனோ தொடர்போ யாதுமின்றிப் பொழுதுபோக்காக வீணாகப் பேசும் பேச்சு, வெறும் பேச்சு என்னும் பொருள்பட வழங்கும் சொல் அரட்டை. அரற்றல் - பொருள் பயவாமற் பேசுதல் - அது அரற்றை என உருப்பெற்று அரட்டை எனத்திரிந்தமைந்தது.

அரணைப்புத்தி : எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரு கருத்தை அடிக்கடி மறந்து அல்லற்படுதலைக் குறித்து வழங்கும் ஒரு கொங்கு நாட்டு வழக்குச்சொல். அரணை என்னும் சிற்றுயிர்க்கும் இதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இதன் சரியான வடிவம் அரைநினைப்புப்புத்தி என்பதாகும். அது மருவி அரநிணைப்புத்தி - அரணைப்புத்தி என வழங்குகின்றது.

அரம்பன் : சிறு குறும்பு செய்பவன். அரம்பு = குறும்பு எல்லை வரையறை கடந்து செயல்புரிபவன். இச்சொல் வரம்பு என்பதன் எதிர்நிலைச் சொல்லாக ஆக்கம் பெற்றது.

அரவணைப்பு : உள்ளத்தாலும் உடம்பாலும் நன்கு தழுவி அன்பு காட்டும் செயலை அரவணைப்பு என்பது வழக்கு. இஃதொரு உவம வழக்கு. பாம்பு தம்முள் அணைத்துக்கொள்ளும் போது ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளும் அதுபோல என்பது கருத்து. இது அரா+அணைப்பு=அரவ+அணைப்பு என அமைந்து அரவணைப்பு என ஆக்கம் பெற்றதாகும். அவன் அவருடை அரவணைப்பில் வாழ்கிறான் என்னுமிடத்துப் பாதுகாப்பு என்னும் பொருள் தரும்.

அராட்டுப் பிராட்டு : போதியதும் போதாதுமான நிலை குறித்து வழங்கும் ஒரு தொடர். திருவாய்மொழி ஈட்டுரையுள் (3-7-3) அறாட்டுப் பிறாட்டு என அமைந்துள்ளது. இவை அரையொட்டு - புரை ஒட்டு என்பவற்றின் திரிபாகும். ஒட்டுதல் பொருந்தியிருத்தல். அரை=பாதி புரை=குறை அரையும் குறையுமாக உள்ளது என்பது கருத்து.

அரிச்சுக்கட்டி : கண்டதை எல்லாம் தனக்கெனச் சேகரிப்பவன் என்பது பொருள். இது அரித்துக்கட்டி என்பதன் திரிபாகும்.

அரிமனசு: ஒன்றனிடத்து முழுமையான ஆர்வமும் பற்றுமில்லாமல் விருப்பமின்றி ஒருவர் செய்யுமிடத்து இவன் அரிமனசுக்காரன் எனல் கொங்குநாட்டு வழக்கு. இதன் சரியான வடிவம் அரைமனசு என்பதாகும்.

அருகதை : தகுதி. யோக்யதை. பொருத்தமின்மை பற்றிய பொருள் தரும் ஒரு வழக்குச்சொல். இதைக்கூற இவனுக்கு என்ன அருகதை இருக்கு என்றாற்போலவரும். இச்சொல் அருகு+கதி என்னும் சொற்கள் இணைந்த மருஉவாகும். அருகு=அண்மை, நெருக்கம், உறவு. கதி=நிலை. அருகு என்பது பொருத்தம் என்னும் பொருளிலும் வரும் யான் இதற்கு அருகனல்லேன் என வரும். அருகு+கதி=என்பவை அருகதை என மருவி வழங்கப்படுகிறது.

அரும்பு : மலர் மொக்கை குறித்து வழங்குஞ்சொல் அரும்+பூ=அரும்பூ - அருமபு என ஆக்கம் பெற்றது. மலராக உருப்பெறாத நிலை என்பது கருத்து அரு + பூ = அரும்பு - இதனின்றும் முளைத்தல் என்னும் பொருளில் அரும்புதல் என்னும் வினைச்சொல் ஆக்கம் பெற்றது.

அருவி : நீர்வீழ்ச்சியைக் குறிக்கும் இலக்கியச் சொல். மலையருவி குற்றால அருவி என வழங்குவர். மலைப்பாறையை அரித்து வழிந்து வீழ்தலான் பெற்ற பெயர் இது. அரி(த்து)+வீழ் என்பவற்றின் ஒரு சொற்புணர்ச்சியால் அரி+வீழ்=அருவீழ் – அருவி என ஆக்கம் பெற்றதாகும். இனி கால்வாய், ஆறு முதலிய வடிவம் பெறாமல் ரூபமின்றி நீர்பரந்து வழிந்து வீழ்தலின் உருவமில்லாதது என்னும் பொருளில் அ+ருவி=அருவி எனல் வல்லுரை விளக்கமாகும்.

அல்லாடல் : அல் என்பது அல்லல் என்பதன் குறைச்சொல். அல்லல் - துன்பம் ஆடல் = ஆள்தல் = மேற்கொள்ளல். துன்பத்தை மேற்கொள்ளல் என்பது பொருள். இது மல்லாடல் என்னும் சொல்லொடு கூடி அல்லாடல் மல்லாடல் என்றும் மல்=போர்=மல்லாடல் போரிடுதலை மேற்கொள்ளுதல். வருந்தியும் முயன்றும் காரியம் செய்தல் என்பது கருத்து.

அல்லு : பக்கம் என்னும் பொருளில் வழங்கும் கொங்குநாட்டுப் புறச்சொல். ஊருக்கு அல்லுல உள்ள கடவு என்பர். இதன் செம்மையான வடிவம் ‘அயல்’ - இது அயலு - அல்லு எனத்திரிந்து அமைந்தது.

அல்லோலம் கல்லோலம் : அல் -அலைத்தல் என்பதன் முதனிலை கல்- கலத்தல் என்பதன் முதனிலை. அலைத்தல்=மாறுபடுதல், கலத்தல் = ஒன்றுபடுதல். ஒன்றற்கு ஒன்று ஒவ்வாமலும் ஒத்தும் எழும் ஆரவாரம் ஓலம்=ஆரவாரம்.

அலங்கமலங்க : இந்தா அந்தா என்று ஆளை அலமலங்கடிக்கிறான் இன்னும் கடனைக் கொடுத்தபாடில்லை என்றாற் போல வரும் வழக்குத்தொடர்.

இதன் சரியானவடிவம் அழுங்க - மழுங்க என்பதாகும். அழுங்கல் = வருந்துதல் மழுங்கல் = தேய்தல் வருந்தித்தேயும் படிச் செய்கிறான் என்பது ழுகரந்திரிந்து லகரங்கெட்டு அலுங்கமலங்க என வழங்குகிறது.

அலட்டிக்கொள்ளல் : பதற்றத்துடன் புலம்பி நடந்து கொள்ளுதலைக் குறித்துவரும் ஒரு வழக்குத்தொடர். இது அலைத்துக் கொள்ளல் என்பதன் திரிபாகும். அலைத்துககொள்ளல் - அலத்திக் கொள்ளல் - அலட்டிக் கொள்ளல் எனமருவியதாகும்.

அலைக்கழித்தல் : இன்றைக்கு நாளைக்கு என்று ஆளை அலக்கழிக்கிறான் என்பது வழக்கு. நிலைகுலையச் செய்தல் என்பது பொருள். இதன் செம்மையான வடிவம் அலைக்க இழைத்தல் என்பதாகும். அலைத்தல் - நிலைகுலைதல் இழைத்தல் = செய்தல் = அலக்கணுறுமாறு செய்தல் என்பது பொருள்.

அவசரக்குடுக்கை : அவசரம் என்னும் வடசொல் தமிழ் வழக்கில் விரைவு என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. விரைவுணர்வு பற்றிச் செயல்படுபவனை அவசரக்காரன் என்பது வழக்கு. குடுக்கை என்பது குடுகுடுப்பை என்னும் சிறு தோல்கருவி. குடுகுடுப்பை விரைந்து செயல்படுவதைப்போல விரைந்து செயல்படுபவனை அவசரக் குடுக்கை என உவம வாயிலாக உணர்த்தும் வழக்கு இது.

அவா : நிலமும் நீரும் மற்ற பொருள்களும் யாவர்க்கும் பொதுவானவை என்னும் எண்ணமின்றி எல்லாவற்றையும் தாமே அடையவும் அதற்கு அறத்தை இழக்கவும் துணியும் எண்ணம் அவா எனப்படும். பேராசை, பெரு வேட்கை உறுமிடத்து உள்ளம் தந்நலத்தாற் சுருங்கிவிடும். அந்நிலையே அவா. இது ஔ + ஆ என்பவற்றின் ஒரு சொல்லாக்கம் ஔ -போலிவகையால் அவ் என்றாய் ஆதல் என்னும் பொருள்தரும் ஆ என்பதனொடு கூடி ஒரு சொல்லாய் அவ் + ஆ = அவா என நின்றது. உள்ளம் தந்நலத்தால் சுருங்குதல் என்பது பொருள் ஔ + இயம் = ஔவியம் - பிறர்செல்வங்கண்டு பொறாத இயல்பு அழுக்காறு. இதன் கண் 'ஔ' பகுதி. பெரும் பதவி, புகழ், செல்வம், நீண்ட ஆயுள், ஆட்சி என்பவற்றைத் தாமே பெற வேண்டும் என்னும் வேட்கையே அவாவாகும்.

அவுசாரி (அவிசாரி) : வரைவில் மகளிரையும் அத்தன்மையுடைய பெண்டிரையும் குறித்து வழங்கும் ஒருவகைச்சொல் இது. வ்யபசாரம் என்னும் வடசொல்லின் திரிபாகும். அயன்மை பூண்டொழுகுதல் என்பது பொருள்.

அவுசியம் : திருக்கோயில் குடமுழக்கினைக் குறித்து வழங்கும் கொங்குநாட்டு வழக்கு இது. அபிஷேகம் என்னும் வடசொல்லின் திரிபாகும். கும்பாபிஷேகம் - கும்பாவுசியம் எனச்சிதைந்து வழங்குகிறது.

அழிச்சாட்டியம் : பிடிவாதமாக இடையூறு புரியும் செயலைக் குறித்து வழங்கும் வழக்குத்தொடர் இது. அழித்து + அட்டியம் என்பவற்றின் தொகை. அழித்து - அழிச்சு எனப் போலி வகையால் திரிந்தது. அட்டியம் சமையல் தொழில். சமைப்பதற்குரிய பொருள்களை காய்கறிகளை அரிதல் வெட்டுதல் அரைத்தல் முதலியவாகச் சிதைப்பர் அவ்வாறு பொருள்களைச் சிதைத்தும் துன்புறுத்தும் செய்யும் செயல் அழிச்சாட்டியம் என வந்தது. அட்டூழியம் காண்க. இனி அட்டியம் என்பதற்குப் பிடிவாதம் என்பது பொருளாகலின் அழிவு செய்யும் பிடிவாதம் எனினும் ஒக்கும்.

அழுகுணி (அழுகணி) : அவன் கிடக்கிறான் அழுகுணிப்பயல் என்பது வழக்கு. திறமும் வீறுமின்றிக் கெஞ்சி அழுது காரியத்தைச் சாதிக்க எண்ணுபவரைக் குறித்து வரும் வழக்கு. இதன் சரியான வடிவம் அழுகண்ணி என்பதாகும்.

அழும்பு : இந்தப்பயல் ரொம்ப அழும்பு செய்கிறான் என்பது வழக்கு இச்சொல் அழிம்பு என்பதன் திரிபாகும். அழிம்பு-அழியச்செய்யும் குணம் - செயல்.

அழுவுணி : முறைகேடான, கரவான செயலைக்குறித்து வரும் வழக்குச் சொல். அவன் அழுவுணி ஆட்டம் ஆடுகிறான். அழுவுணி அடிக்கிறான் என வழங்கும். இதன் செம்மையான வடிவம் அழிவு + உன்னி என்பதாகும். அழிவு = கேடு - உன்னுதல் = நினைதல் வஞ்சித்துக் கேடுபுரிதல் என்பது கருத்து. அழிவுன்னி என்பது அழுவுணி என்றும் அழுகுணி என்றும் சிதைந்து வழங்குகின்றது.

அன்றாடம் : நாள்தொறும் என்னும் பொருளில் வழங்கும் சொல். ஒருநாள் என்பது ஒருபகலும் ஓர் இரவும் கூடியது. பகல் என்பது நாளின் தொடக்கம் இரவு என்பது நாளின் முடிவு எல் = ஒளி என்பது பகலைக் குறிக்கும். அது எல்+து= என்று எனவரும். ஒளியல்லாத இரவு அல் எனப்படும் அல்லும் பகலும் ஓயாமல் பணியாற்றுகிறான் என்ப. அல்+து = அன்று ஒருநாளை முடிப்பது இரவாதலின் அன்று என்பதே நாள் என்னும் பொருளில் வழங்கலாயிற்று. ஆடம் = அடைவு என்பது பொருள். அடைவு ஆடம் என நீண்டு அன்று + ஆடம் = அன்றாடம் என அமைந்தது. வழக்கில் அன்னாடங்காய்ச்சி என்றாற் போலத்திரிந்து வரும்.

அனத்தல் : உடம்புக் காய்ச்சலை உணர்த்தும் வழக்குச்சொல். உடம்பு அனத்தது என்பர். இது அனல் என்னும் பெயரடியாகப் பிறந்ததொரு வினைச்சொல். அனல் + செய்தல் = அனத்தல். அனல்=வெப்பம் காய்ச்சல் என்னும் பொருளில் வந்தது.

ஆக்காட்டிப்பறவை (குருவி) : என்பது கொங்குநாட்டு வழக்கு இது ஆள்காட்டிப்பறவை என்பதன் சிதைவாகும்.

ஆச்சி : ஆயி - ஆய் என்பது தாயைக் குறிக்கும். அச்சி என்பதும் தாயைக் குறிக்கும். ஆய் + அச்சி – ஆய்ச்சி ஆச்சி என மருவிற்று. தாயின் தாய் என்பது பொருள். வழக்கில் அம்மாச்சி என்பர்.

ஆசுவம் : வறுமையுற்று இரத்தலை (பிச்சை எடுத்தல்) அவன் ஆசுவம் பண்றான் என்பது கொங்குநாட்டு வழக்கு. இதுயாசகம் என்னும் வடசொலலின் திரிபாகும்.

ஆட்டங்காணல் : அவன் குடிக்கத் தொடங்கினதுமே குடும்பம் ஆட்டங்கண்டுவிட்டது என்னுமிடத்துத் தளர்ச்சி என்பது பொருள். காவலரைக் கண்டதும் திருடனுக்கு ஆட்டங்கண்டுவிட்டதுஎன்னுமிடத்துநடுக்கம்என்பதுபொருள்.

ஆட்ட பாட்டம் : ஊரில் திருவிழா எங்குபார்த்தாலும் ஆட்டபாட்டமாக்கிடக்குது என்பது வழக்கு. ஆடலும் பாடலும் என்பது பொருள். ஆடுபாடு என்னும் முதனிலைகள் அல்விகுதியொடு கூடுமிடத்து ஆடல்பாடல் எனவும் அம்விகுதியொடு கூடுமிடத்து ஒற்று இரட்டித்து ஆட்டம் பாட்டம் எனவும் வரும்.

ஆட்டம் போடுதல் : ஏதோ காரியஞ்சாதிக்கிறதற்காக அவன் வந்து இங்கே ஆட்டம் போடுகிறான் என்பது ஒரு வழக்கு. பொய்யாக மறைத்துப்பேசுதல். அடிக்கடி வந்து உரையாடலைக் குறிக்கும். ஆட்டம் என்பது பகல்வேடம் என்னும் பொருளுடையது. பகல் வேடக்காரர்கள் நாள்தோறும் வேறுவேறு வேடம் புனைந்து வந்து நன்கொடை பெறப்பாடியாடுவார்கள். அவ்வொப்புமையால் காரியஞ்சாதிக்க அடிக்கடி வந்து நயமாகப் பேசுவதைக் குறித்து வழங்குத்தொடர் இது.

ஆட்டிப் படைத்தல் : ஒருவரை ஒருவர் நிலைகுலையுமாறு வருத்துதலைக் குறித்து வழங்கும் தொடர். இதன் சரியான வடிவம் ஆட்டிப்புடைத்தல். அலைக்கழித்து ஒறுத்தல் என்பது பொருள். புடைத்தல் - கையாலும் கோலாலும் அடித்தல்.

ஆயர் : பலபொருள் ஒருசொல். அமைப்பால் பொருள் வேறுபாடு செய்வது. ஆயர்=இடையர். ஆவினைப் பேணுபவர். ஆ பசு ஆடு எருமை மூன்றையும் குறிக்கும். சிறப்பாகச் சொல்லுமிடத்துப் பசுவைப் பேணுபவரை ஆன் ஆயர் = ஆனாயர் என்க. ஆயர் = குழுவினர் கூட்டத்தர். ஆயம் - கூட்டம். அதன்கண் உறுப்பாக இருப்பவர் ஆயத்தார். அத்துச் சாரியின்றி ஆயர் எனவும் வரும். ஆயர் - ஆய் + அர் - நூல்களை ஆராய்பவர் இது அடையொடு கூடிக் கணக்காயர் எனவரும்.

ஆயுள் : வாழ்நாள். அகவை (வயசு) என்னும் பொருளில் வரும் இச்சொல் உள்ளமைந்த வாழ்வு ஆய + உள் = ஆயுள். வரையறுத்த வாழ்நாள் என்னும்

பொருளில் தமிழ்ச்சொல்லாகும். இதனை ஆயுஷ் - ஆயுசு என்னும் வடசொல்லின் ஆக்கமாகக் கருதினும் ஒக்கும்.

ஆரியம் : கேழ்வரகின் அரிசியைக் குறித்து வழங்கும் கொங்கு வட்டாரச்சொல். இது அரி (அரிசி=உட்பரல்) என்பதனொடு அம்விகுதி சேர்ந்து அரியம் என்றாகிப்பின் ஆரியம் எனத்திரிந்ததாகும்.

ஆலாப் பறத்தல் : ஒரு பொருளைப் பெறப் பெரிதும் முயலுதல் குறித்து வரும். சோறு சோறு என்று பக்கிகள் ஆலாப்பறக்கிறார்கள் எனவரும். ஆலா என்பது கழுகினத்துள் ஒரு பறவையின் பெயர். அதுபோல இரையைத் தேடும் அவாவிற்குரியதாக வந்தது. இனி ஆவலாற் பறத்தல் என்பது வகரங்கெட்டு வந்தது எனினும் ஒக்கும். அவா என்பது ஆவல் என வழக்கில் திரியும்.

ஆள்மாகாணம் : பணியாற்றும் மக்கள் கூட்டத்தைக் குறித்து வரும் வழக்குச் சொல். அவர் பெரியவிழா நடத்தத்திட்டமிட்டிருக்கிறார் என்னுமிடத்து அவருக்கென்ன ஆள்மாகாணம் நிறைய இருக்கு என்பது வழக்கு. இச்சொல் ஆள்மாகணம் என்பதன்திரிபு ஆள் = பணிபுரியும் ஆள். மா= பெரிய கணம் = கூட்டம் ஆட்செய்யும் பெரிய கூட்டம் என்பது பொருள். மாகணம் என்பது மாகாணம் என நீண்டது.

இக்கட்டு : மிகவும் சிக்கலான சூழ்நிலையையும் எதிர்பாராத இடையூற்றையும் குறித்து வழங்கும் வழக்குச் சொல். அவிழ்ப்பதற்கு இயலாத வகையில் கட்டுஇறுகிய நிலை இறுகிய கட்டுசிக்கலாக அமைந்த கட்டு எனப்படும். விடுவிக்க வழி தெரியாத இடையூறு இக்கட்டு எனப்படும். இறுகிய கட்டு இறுக்கட்டு – இக்கட்டு என மருவியதாகும்.

இட்டிது : ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை என்னும் குறட்பாவில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. இதற்குப்பரிமேலழகர் சிறிது எனப்பொருள் வரைந்துள்ளார். இச்சொல்லின் நேர்பொருள் சுருங்கியது குறுகியது என்பதாகும் இதன் முதனிலைச்சொல் இடுக்கு இதற்குத்துணைச் சொல்லாக வருவது இண்டு இடுக்கெல்லாம் தேடிவிட்டேன் மோதிரத்தைக் காணவில்லை என்பது வழக்கு. இடுக்கு என்பது இடுங்குதல் என்னும் வினையின் திரிபாகிய பெயர் இடுங்கியது என்பது வழக்கில் மரூஉவாய் இட்டிது எனவரும் சுருங்கியது என்பது பொருள். குறட்பாவில் இதற்கு எதிர்மறையாகக் கூறப்பட்டுள்ள சொல் அகற்சி. இதற்கு எதிர்ச்சொல் குறுக்கம் - சிறிது என்பதற்கு எதிர்மறை பெரிது எனவே போகாறு அகலாக்கடை ஆக்கம் குறுகியதாயினும் கேட்டில்லை என்பது பொருளாகும். இடுங்குதல் என்பதனடியாகப் பிறந்த பண்புச் சொல் இடுக்கண் - இடுங்குகண் (சுருங்கிய கண்) என்பதன் மரூஉ இதற்கு இனமாகக் கண்களின் மெய்ப்பாட்டு நிலையில் வருவன, புன்கண், வன்கண், கடுங்கண், கொடுங்கண் என்பனவாகும்.

இடக்கு : மாறுபாடு ஒத்துழையாமை என்னும் பொருளில் வழங்கும் சொல். இது இடர் என்பதன் ரகரங்கெட்டு இடர்கு = இடக்கு என அமையும். இடைதல் = வருந்துதல். வழக்கில் எடக்கு எனத்திரிந்தும் வரும்.

இடம் : பலபொருளொரு சொல் 1. ஒரு பொருளை இட்டவழி அதைத்தாங்கும் பொருள் இடம் எனப்படும். அப்பொருள் இயற்கைப் பொருளாகவும் இருக்கும். செயற்கைப் பொருளாகவும் இருக்கும் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் இருக்கும் ஏழாம் வேற்றுமைக்குரிய ஆதாரம் யாவும் இடம் எனப்படும். இடு என்பது பகுதி 2. வலம் - இடம் என்பவற்றுள் வரும் இடம். இடைந்தது வலிவு குறைந்தது என்னும் பொருளில் வரும் வல் - வலம் வலப்பக்கக்கை வலிமையுடையது. இடப்பக்கக்கை அதனினும் வலி குன்றியது. இதற்கு இடுங்கு என்பது பகுதி அது இடை எனவும் இடு எனவும் வரும் இடைதல் சுருங்குதல் சுருங்கியிருத்தலால் இடுப்பு இடை எனப்பட்டது. சிறிய ஊறு - இடையூறு இடு என்பது இடும்பை, இடுக்கண் எனவரும். சுருங்கிய இடை உடம்பின் நடுப்பகுதியாதலின் நடு என்னும் பொருளிலும் வரும். இடுக்கு இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள வெற்றிடம். இடு என்பது அர் என்னும் ஒட்டுடன் கூடி இடர் = துன்பம் என்னும் பொருளில் வரும் இடையூறு என்பது இடக்கு எனவும் வரும். இடக்கு = துன்பச்செயல் - என்னும் பொருள் தரும்.

இடித்துக்காட்டல் : பிறர் அறியாதவாறு மறைவாக உள்ள ஒன்றை ஒருவர் பிறர் அறியும்படி வெளிப்படுத்தலைக் குறித்து வரும் ஒரு வழக்குத் தொடர். இப்ப நியாயம் பேசுகிற உன்னைத் தெரியாதா உன்தம்பி இதைச் செய்யும் போது எங்கே போயிருந்தாய் என்றாற் போலவரும். சுவரில் மறைத்து வைத்துள்ள ஒருபொருளை பிறர்காணுமாறு இடித்துப் பொருளை எடுத்துக்காட்டுதல் போல மறைந்து உள்ள குணத்தை வெளிப்படுத்துவதை இடித்துக காட்டுதல் என்ப. (குதித்துக்காட்டுதல் காண்க)

இத்தச்சோடு : ஒரு பொருளை இவ்வளவு பெரியது என ஒப்பிட்டுக் காட்டுதலை இத்தச்சோடு எனல் கொங்கு வட்டாரவழக்கு. இத்த என்பது சுட்டுச் சொல் சோடு. பெரிது என்னும் பொருள் தரும் உருதுச்சொல் = புளியம் பழத்தில் நீண்டு பெரிதாக உள்ளதைச் சோட்டான் என்பது நாட்டு வழக்கு.

இத்துனூண்டு : மிகச்சிறிய அளவு என்னும் பொருளில் வழங்கும் வழக்குச்சொல் இத்தனை ஒண்டு இரு என்னும் சொற்களின் சிதைந்த வடிவம் இத்தனை = இவ்வளவு ஒண்டுதல் = குறுகி அமைந்திருத்தல் இவ்வளவு சுருக்கமானது என்பது கருத்து. இது இத்தினியோண்டு எனவும் வரும்.

இம்மி : மிகச்சிறிய அளவு இம் என்னும் குறிப்போசைக்கு ஒட்டுதல் என்பது பொருள். அது இமைத்தல் என வரும். இரண்டும் ஒட்டுதலால்

கண்இதழ்களுக்கு இமை என்று பெயர். இமைக்கும் கால அளவு மிகச் சிறதாகலின் இமையளவு என்பது இம்மி என ஆக்கம் பெற்றது.

இமுசு : துன்பம் என்னும் பொருளில் வழங்கு கொங்கு வட்டார வழக்குச்சொல். இந்தப் புள்ளாண்டான் இமுசு பொறுக்கல என்றாற் போலவரும். இது ஹிம்சை என்னும் வடசொல்லின் மரூஉ. பிற வட்டாரங்களில் இம்சை என வழங்கும்.

இமை கொட்டல் : அவன் அந்தக் காட்சியை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்றாற்போல வழங்கும் இத்தொடரின் செம்மையான வடிவம் இமைகூட்டல் (கூட்டல் = ஒன்றுபடுத்தல்) என்பதாகும். இனி, கை கூட்டுதலைக் கொட்டல் என்பவாகலின் அவ்வழக்கு பற்றி நின்றதாகவும் கொள்ளலாம்.

இயந்திரம் : இயங்குங்கருவியைக் குறித்து நிகழும் சொல். இது இயம்-திரம். இயம் = இயக்கம். திரம் - நிலை, தன்மை இயக்கம் என்பது இ + அ + அம் என்பவற்றின் ஆக்கமாகும். இ என்பது பக்கத்தை அ என்பது எழுதலையும் குறிக்கும் பக்கமாகவும் மேலாகவும் சுழலுதல் இயக்கமாகும். மாவரைக்கும் திரிகைக்கு இயந்திரம் என்பது பெயர். இகரத்தை நீக்கி வடமொழியாளர் யந்திரம் என வழங்குவர் இதனை வடசொல் எனக் கருதுவாருமுளர்.

இரணிய நேரம் : காலைச்சந்தி மாலைச்சந்திப் பொழுதுகட்கு இரணிய நேரம் என்று பெயர். இரணியம் = பொன். கதிரவன் புலரும் முன் நிகழும் வானமும் கதிரவன் மறையும் பொழுது நிகழும் வானமும் பொன்னிறமாக இருத்தலின் இரணிய நேரம் எனப்பட்டன. (ஹிரண்யம் = பொன்) திருமால் இரணியனைக்கொன்ற நேரம் என்னும் விளக்கம் தவறாகும்.

இரத்தினச்சுருக்கம் : இரத்தினம் = மாணிக்கமணி. மாணிக்கம் - பச்சை, நீலம் ஆகிய மணிகள் பாறையின் இறுக்கத்தால் செறிவால் விளைவனவாகும். ஒரு தேங்காய் அளவுள்ள கற்பாறை இறுகி இறுகி ஒருகுன்றி மணியளவு அமையின் அது ஒளிவிடும் ரத்தினமாகத் திகழும். நிலக்கரியின் அழுத்தம் வைரமணியாகும். செறியச் செறிய ஒளி கூடும் அங்ஙனம் சுருங்கிய நிலையில் ஒளி மிகுதலால் விரிந்த கருத்துக்களைச் சுருக்கிப் பொருளாழம் அமையப் பேசும் பேச்சுக்கு உவமமாகக் கூறுவர் சான்றோர். அவர் மிக இரத்தினச் சுருக்கமாகப் பேசினார் என்பது வழக்கு. இரத்தினம் என்பது மாணிக்கத்திற்குரிய பெயராயினும் அது பொதுப்பெயராய் ஏனைய மணிகளுக்கும் உரிமையாகி நவரத்தினம் என வழங்கப்படுகிறது. இரத்தம் போல சிவந்த நிறமுடையது என்னும் பொருளில் மாணிக்கமாகிய செம்மணிக்கு இரத்தினம் எனப்பெயரமைந்தது.

இருத்தல் : அமைந்துதங்குதல் குளிர்ச்சி என்னும் பொருள் தரும் ஈர் என்னும் உரியடிஇர் எனக் குறைந்து உகரம் பெற்று அமைந்த சொல். குளிர்ச்சி ஒரு பொருளில் தங்கிக் கிடத்தலின் அமைதல் இருத்தல் எனப்பட்டது. இருப்பு, இருக்கை என க்கை - என்னும் விகுதியொடும் கூடி நிகழும்.

இருமல் : சிறிது வலிமையாகக் கண்டத்தினின்றும் வறட்சி நீர்க் கோப்புக் காரணமாக வெளிப்படும் தொடர்ஒலி. இரும் + ஒல் = இருமல் இச்சொல் ஒல் என்பது குறைந்து ‘இரும்’ என்னும் அளவிலும் வரும். “இருமிடை மிடைந்த சில சொல்” என்பது புறநானூற்றுப் பாடல் அடி. இருமுதல் - இருமல் இது முச்சுகுழலில் வெப்பநீர் படிதலால் எழும் ஒரு நோய். (செருமல் காண்க)

இரைச்சல் : ஒலி எழுப்புதல் ரகரப்புள்ளி எழுத்து சுட்டெழுத்துக் களைச் சார்ந்து ஒலித்தல் குறிப்பொடு வரும். அர் - அரவம். இர் - இரைதல் - இரங்கல். உர் - உருமல் - உரைத்தல் - செருமல், பொருமல், குரைத்தல், கரைதல் முதலாய சொற்களில் ஒலிக்குறிப்பாக ரகரம் நிற்றலைக் காணலாம். லகரப்புள்ளியும் இவ்வாறே ஒலிக்குறிப்பை உணர்த்திவரும். இர் + ச் + ஒல் = இரைச்சல்.

இலவந்திகை : யந்திரமமைந்தவாவி (நீர்க்குளம்)யின் பெயர் இலக்கியச்சொல். இயந்திரத்தால் நீரை நிரப்பும் குளம். வற்றாமலும் மிகாமலும் அளவோடு நீர் நிறைந்திருக்கும் குளம் இல + அந்தி + கை. இல = இன்மை அந்தி (அந்தம்) முடிவு கை தொழிற்பெயர் விகுதி இன்மையும் (வற்றுதல்) அந்தமும் (முடிவு) அற்றது என்பது பொருள். முடிவுறாதது என்பது கருத்து. இது பெரும்பாலும் அரசர்கள் பெருஞ்செல்வர்களின் மாளிகைகளில் அமைக்கப்பட்டிருக்கும்.

இலை : மரங்களில் செடி கொடிகளில் துளிர்விட்டு விரியும் உறுப்பு. இது இயலை என்பதன் மரூஉ இயலுதல் = வளர்தல் - விரிதல் - அகலுதல் என்னும் பொருள் தரும் சொல். (மடல் காண்க)

இளக்காரம் : ஒருவரையோ ஒன்றனையோ இழிவாகக் கருதிப் பேசுதல் நடத்தலைக் குறித்து வழங்கும் வழக்குச் சொல். இது இளித்தல் என்பது காரம் என்னும் வடசொல் விகுதி பெற்று இளக்காரம் என வந்ததாகும். (காரம் = செயல்) காரமின்றி இளப்பம் என்றும் வழங்கும்.

இளவட்டம் : இளம் வயது பையன், பெண்களைக் குறித்து வழங்கும் வழக்குச்சொல். இது இளவடம் என்றும் வழங்கும். இளவடம் என்பது இளம் + வடு + அம் என்பதன் ஆக்கம் வடு = பிஞ்சு இளம் பிஞ்சு வயது என்பது பொருள் இளமை அடுத்திருக்கும் பருவம் என்னும் பொருளில் இளம்+அடு+அம் இளவட்டம் என வந்தது எனினும் ஒக்கும்.

இறகு : பறவைகளின் இருபக்கமுள்ள இறக்கையின் உறுப்பு இரு பக்கமும் கவிழ்ந்து தங்கியிருத்தலின் இறு + கு = இறகு என அமைந்தது. இதைச் சிறகு என்றும் வழங்குவர். சிறகுகள் இறைகொள்வது சிறை சிறுகுகள் பறவையின் இருபுறமாக அமைந்திருத்தலால் சிறை என்பதற்குப் பக்கம் என்பதும் பொருளாகும்.

ஈத்து : எருமை பசு மாடுகள் கன்றீனுதலைக் குறித்து வழங்கும் சொல் ஈனுதல் - ஈதல் = ஈத்து என ஆக்கம் பெற்றது. இக்கன்று எத்தனையாவது ஈத்து என்றும் இது ஈத்துமாடு என்றும் வழங்கும்.

ஈயடிச்சான் காப்பி : ஒருவர் எழுதியதை அப்படியே படி எடுத்தலை வழக்கில் காப்பியடித்தல் என்ப. காப்பி ஆங்கிலச் சொல். எடுத்தல் - அடித்தல் எனத்திரிந்தது தேர்வு எழுதும் ஒரு மாணவன் விடைதெரியாத வழிமுன் வரிசையிலே பக்கத்திலோ எழுதுபவனின் எழுத்தை பிறரறியா மல்கண்டு எழுதும்போது சில இடங்கள் வேறுபடும். அவ்வாறன்றி முழுதும் எழுத்திற்கு எழுத்துச்சரியா அமைந்திருந்தால் அதனை ஈயடிச்சான் காப்பி என்பர். ஈயடிச்சான் என்பது ஈய எடுத்தான் என்பதன் சிதைவு. ஒருவன் எழுதிய விடைத்தாளை அவன் ஈயப்பெற்று அதனைப் பார்த்து எழுதுமிடத்து முழுதும் ஒத்திருக்கும் அதனால் ஆவன் ஈய இவன் பெற்றுப் பார்த்தெழுதினான் என்னும் கருத்தில் ஈயடிச்சான் காப்பி எனக்கூறினர். சாசனஓலை முதலியவை (பத்திரங்கள்) யாவும் ஒன்றைப் பார்த்து அப்படியே எழுதப்படும். காப்பி எடுத்தவனுக்கும் அதன் பொருள் விளக்கம் தெரிய வேண்டுவதில்லை எழுத்திற்கு எழுத்துச் சரியாக எழுதினால் போதும் அது ஈயடிச்சான் காப்பியாகும்.

ஈர்வலி : தலைமயிர்களில் தங்கும் பேன் குஞ்சுகள் ஈர் எனப்படும். ஈரத்தால் உண்டாவது ஈர். அதனை ஒழிப்பதற்குச் சீப்புப்போலமைந்த நீண்ட சீப்புகளைப் பயன்படுத்துவர். அதற்கு ஈர்க்கொல்லி என்பது பெயர். கொங்கு நாட்டு வழக்கில் இது ஈர்வலி என வழங்குகின்றது. ஈர்களை வழிக்கும் கருவி என்பது ழுகரம் லகரமாகத் திரிந்து ஈர்வலி என நின்றது.

ஈவிரக்கம் இல்லாதவன் : வறுமையாளர், ஏழையர், மெலிந்தவர், ஆதரவற்றவர் முதலானோர் படுந்துன்பத்தைப் பார்த்தும் கேட்டும் அவருக்கு ஒன்றை ஈயவோ, அவர் துன்பங்கண்டு வருந்தவோ செய்தாவரைப் பற்றி வழங்கும் தொடர். ஈவு = ஈதல் - ஈகை (தருமச் சிந்தனை) ஈகைபுரியாதவன் ஈதற்குயாது மில்லாத நிலையாயின் பிறர் துன்பங்கண்டு மனம் இரங்குதல் வேண்டும். இரண்டு மில்லாதவன் கொடுமையாளனாவான் இத்தகு கொடியவனைக் குறித்து வழங்குந் தொடர் ஈவிரக்கமில்லாதவன் என்பதாகும்.

உக்கம் : விலாப்புறத்தைக் குறித்து வரும் இலக்கியச் சொல். விலாப் புறங்கள் மார்பினும் சிறிது ஒடுக்கமாக இருந்தலின் ஒடுக்கம் என உருப்பெற்று உக்கம் என ஆக்கம் பெற்றது. மற்று இச்சொல இடையை (இடுப்பு) குறிக்குமிடுத்து உ என்னும் சுட்டு நடுவிடத்தை உணர்த்துவதாலின் உவ்விடம் என்னும் பொருளில் உக்கம் என அமைந்ததாகும்.

உச்சம் : உயர்ந்தது, தலையானது, மேலானது என்னும் பொருள் தரும். இச்சொல் உச்சி என்பது அம்பெற்று உச்சம் என அமைந்தது. உச்சி என்பது உயர்ச்சி என்பதன் திரிபாகும். உயர்ச்சி - நாட்டுப்புற வழக்கில் உசத்தி என வரும். உசத்தியைச் சிலர் ஒசத்தி என்றும் சிலர் ஒஸ்தி என்றும் வழங்குவர்.

உச்சாணி : மிக உயரத்தில் உள்ள நிலை. குருவி உச்சாணிக் கிளையில் உட்கார்ந்திருக்கிறது என்றாற் போல வரும் உச்சியை அணுகியுள்ள இடம் என்பது கருத்து அணி என்பது அண்மை என்னும் பொருளது. அது உச்சி என்பதனோடு இணைந்து உச்ச + அணி = உச்சாணி என அமைந்தது அணி என்பது அண்மை இடம் உணர்த்தலை "இனி அணி என்னும் காலமும் இடனும்" என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தால் அறியலாம்.

உசுப்புதல் : உறக்கத்தினின்று எழுப்புதல் - ஒரு செயலை மேற்கொள்ள விளக்க மூட்டுதல். சினம் மூட்டுதல் எனப் பல பொருளில் வரும் ஒரு சொல் இது உயிர்ப்பு ஊட்டுதல் என்னும் பொருள்பட அமைந்த உயிர்ப்புதல் என்னும் சொல்லின் திரிபாகும். உயிரை உசிர் என்பது பாமரர் வழக்கு அம்முறையில் உயிர்ப்புதல் - உசிப்புதல் - உசுப்புதல் எனத்திரிந்தது.

உட்கார்தல் : அமர்ந்திருத்தலைக் குறித்து வரும் வழக்குச் சொல். இது ஒடுங்கியிருத்தல் என்பதன் மரூஉ வாகும் ஒடுங்கியிரு ஒடுக்கிரு, ஒட்கார் உட்கார் எனத்திரிந்து அமைந்தது. 'இரண்டு கால்களையும் மடக்கி முழங்காலை மேல் நிமிர்த்தி அமர்ந்திருத்தலை உணர்த்தும் இச்சொல் அமர்ந்திருத்தல் என்னும் பொருளில் அமைந்துவிட்டது. (குந்தியிருத்தல் காண்க)

உப்புப் பெறாத பேச்சு : உப்பு என்னும் சொல் சுவை என்னும் பொதுப்பொருளிலும் உவர்ப்பு என்னும் சிறப்புப் பொருளிலும் வரும். ஒருவர் பேசும் பேச்சு சுவையற்றதாகவும் பயனற்றதாகவும் உள்ளமையைக் குறிக்குமிடத்து நீ பேசுவது வெறும் உப்புப் பெறாத பேச்சு என்பர். இனிக் கேட்பதற்கு இனிமையும் பயனும் இல்லாத பேச்சு என்னும் கருத்தினதாயின் உப்பு என்பது உவப்பு என்னும் சுவைப் பெயரின் திரிபாகும் இனிமையற்ற பேச்சு. இதனை வழக்கில் வறட்டுப் பேச்சு என்பர். உப்புப் பெறாத காரியம் என்றுமிடத்து உப்பு பயனை உணர்த்தும்.

உம்மணாமூஞ்சி : கலகலப்பாகப் பேசாமல் முகத்தைச் சுளித்துக் கொண்டிருப்பவரைச் சுட்டிவரும் வழக்குச் சொல். உம் என்னும் குறிப்பொலி

உதடுகளையுடைய வாயைக் குறித்துப்பின் ஆகு பெயர் முறையில் பேசுதலைக் குறிக்கும். அணவுதல் - வாயைத் திறத்தல் - வாயைத் திறத்தல் பேசுதல் - பேசாமல் உம் என்று இரு என்பது வழக்கு. உம் + அணவா = மூஞ்சி என்பது உம்மணாமூஞ்சி என மருவியது. மூஞ்சு - முன் + செயல் - என்பவற்றின் மரூஉ மூஞ்சி. முகஞ்செய் என்பது மூஞ்சி எனமருவிற்றாகக் கருதுவாரும் உளர். மற்று இதனைக் குறிக்கும் உம்மு என்பது ஓரெழுத்து மொழியாய் மூ என நின்று அமைதல் என்னும் பொருளில் வரும் சொல் என்பதனொடு கூடி மூஞ்சி என அமைந்தது எனினும் ஒக்கும்.

உருட்டல் புரட்டல் : உருட்டல் = உருளச் செய்தல். புரட்டல் = புரளச் செய்தல். ஒருவரை ஒருவர் ஏமாற்றி மயக்க எண்ணிச் சொற்களை அளவின்றிப் பேசுதலையும் மாற்றிப் பேசுதலையும் குறித்து வழங்கும் ஒரு தொடர் இது போர்ச்செயல் பற்றி வரும் உவமத்தொடர். ஒரு மறவன் மற்றவனை வலத்தால் உருட்டுதல் புரட்டுதல் செய்து அவனை மயங்கச் செய்து வெல்லுதல். உருட்டல் புரட்டல் எனப்படும். அது சொற்களால் நிகழும் செயலுக்கு ஆகி வந்தது.

உருட்டல் மிரட்டல் : அச்சுறுத்தியும் மருளச்செய்தும் காரியம் சாதிக்க எண்ணுதல். இத்தொடரில் உருட்டல் என்பது உரு என்னும். உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைச் சொல்லாகும். உரு = உட்கு என்னும் பொருளுடையது. உட்கு = அச்சம் = உருட்டல் = அச்சமூட்டல் மிரட்டல் என்பது மருட்டல் என்பதன் திரிபு மருள் = மயக்கம் - மருட்டல் மருளச்செய்தல் = மயங்கச்செய்தல் - கலங்கச் செய்தல்.

உலக்கைக் கொழுந்து : புத்திகூர்மையில்லாதவரைக் குறித்து வழங்கும் ஒருதொகைச்சொல். இதன் செம்மையான வடிவம் உலவைக் கொழுந்து என்பதாகும். உலவை ஒரு பாலை நிலத்து மரவகை. நீர்ப்பசையின்றி இருக்கும். இது குச்சியும் கோலுமாகத் தளிர்க்கும். இலையும் தழையுமின்றிக் கோல்கோலாக வளரும். ஆதலின் இதன் முனை இலைகளின் கொழுந்து போல் இரா. குச்சியாக மொட்டையாக இருக்கும். அதனை உவமித்துப் புத்தியில் தெளிவும் கூர்மையில்லாதவரை உலைவக்கொழுந்து என்றனர் அதன் பொருளறியாமல் உலவையை உலக்கை எனக்கருதி உலக்கைக் கொழுந்து என்கின்றனர்.

உலை வைத்தல் : அவன்மேல் இல்லாதது பொல்லாததை அவன் முதலாளியிடம் கூறி அவன் வேலைக்கு உலை வைத்துவிட்டான் என்றாற் போல வரும் வழக்குத்தொடர். உவமமாக நின்று பொருள் உணர்த்துவது உலை என்பது கொல்லனின் நெருப்புக்குழிக்குப் பெயர் உலையில் இடும்பொருள் உருமாறி அழிந்துவிடும். அதுபோலக் கேடு செய்தலை உலை வைத்தல் என்ப. நெருப்பு வைத்தல் என்பதற்கு ஈடானதொரு சொல்.

உவப்பு – உவகை : இச்சொற்கள் ஆனந்தம் என்னும் பொருளில் வருமிடத்து உவ என்பது உ அ என்னும் மந்திரச் சொற்களாகும். உ என்பது சத்தியையும் அ என்பது சிவத்தையும் குறிக்கும். உ + அ = உவ. இவற்றைக் கணித எண்களின் அடையாளமாக வைத்து மாணிக்கவாசகர் "எட்டினோ டிரண்டறியேனைப் பட்டிமண்டபம் ஏற்றினை" என அணி நயம்படக் கூறுகின்றார். இதன் எதிர்மறை உவ + அல் = உவல். லகரம் ரகரமாக மாறி உவர் என்று வரும். உவர்ப்பு - உவப்பின் நீங்கியது என்பது பொருள் உவகை இலக்கிய வழக்கில் ஓகை எனவும் வரும்.

உவா நாள் : திங்கள் என்னும் நிலா ஒரு நாள் முழுதும் மறைந்து மறுநாள் முதல் ஒவ்வொரு கூறாக வளர்ந்து பதினைந்தாம் நாள் முழுமையாக விளங்கும். மறுநாள் முதல் ஒவ்வொரு கீற்றாகத் தேய்ந்து முடியும். பிறையின் வளர்ச்சியும் தேய்வும் திங்களின் நிலையை விளக்குதலால் அவை திதி (ஸ்திதி = நிலை) எனப்படும். திதிகள் பிரதமை முதல் சதுர்த்த சிவரை (ஒன்று முதல் பதினான்கு வரை) எண்ணப்படும். சதுர்த்தசி முடிந்து பிரதமை தோன்றுவதற்கு இடைப்பட்ட நாட்கள் அமாவாசையும் பூரணையுமாகும். இவற்றை உவா நாட்கள் என்பர். அமாவாசையைக்கார் உவா என்றும் பூரணையை நிறைஉவா என்றும் வழங்குவர். எனவே உவாநாள் என்பது திங்களின் வளர்ச்சி தேய்வுகளுக்கு இடைப்பட்ட நாள் என்பது விளங்கும். உவா என்னும் சொல்லாக்கம். உ + ஆ = உவா என்பதாகும். உகரச்சுட்டு நடுவையும் ஆ என்னும் வினை முதனிலை ஆதலையும் உணர்த்தும் உவா எனின் இடைநிலையாதல் என்பது பொருளாகும். நடுவிடத்தை உப்பக்கம் என்பர். எனவே உவாநாள் என்பது திங்களின் நிலைகளில் இடைநாள் இடைப்பட்ட நாள் என்பது விளங்கும். உவா என்னும் ஆகார ஈற்றுச்சொல் கனா - கனவு, நிலா - நிலவு, விழா - விழவு என உகரம் பெறுதல் போல உவா என்பது உவவு எனவும் வரும். இவ்இரு உவவு நாட்களிலும் பண்டு பள்ளி மாணவர்களுக்கு விடுமுறைகளாகும். அதனான் விடுமுறையை உவா என்பர். உவா என்பது வழக்கில் இரா - இரவு என்பதனை ராவு என முதல்கெடுத்து வழங்குதல் போல உவவு என்பது வாவு என வழங்கும் உவாஅப்பதினான்கு என்பது உம்மைத் தொகை உவாவும் பதனான்கும் என்பது பொருள்.

உளி : 1. மரம் கருங்கல் முதலியவற்றைச் செதுக்குங்கருவி உளி எனப்படும். இது உளை என்பதனடியாக ஆக்கம் பெற்றதாகும். உளைதல் = துன்புறல். உளியால் மரம்கல் ஆகியவற்றைத் துன்புறுத்தல் உளை + இ = உளி என ஆக்கம் பெற்றது. 2. ஏழாம் வேற்றுமை இடப்பொருள் தரும் சொல்லுருபு இதன் முதனிலை உள். உள் = இடம் இவிகுதி - அவ்வுளி இவ்வுளி என வரும்.

உனக்கும் பெப்பே உன் அப்பனுக்கும் பெப்பே : இது ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட வழக்குத் தொடர். ஒருவன் ஒரு பணியாளரிடம்

ஒன்றைப்பற்றிக் கேட்குமிடத்து அவன் உண்மை கூறாமல் கற்பனையாக ஒன்றைக் கூறும்போது நான் தலைவரைக் கேட்கச் சொல்லுகிறேன் என அவன் கூற இவன் உனக்குக் கூறியதேதான் அவருக்கும் என்கிறான். நீ கூப்பிடுவதென்ன உங்கள் அப்பனே வந்து கூப்பிட்டாலும் வரமாட்டேன் என்பது போல வரும் வழக்கு. இதற்கு ஒருகதை உண்டு. ஒருவன் ஒருவரிடம் சிறிது பொருளைக் கடன் வாங்கினான். திருப்பித்தரவில்லை. கடன் கொடுத்தவன் நீதிமன்றத்தில் முறையிட்டான் நீதிபதி அவனை அழைத்துவரச் சொன்னார். அவன் ஒரு வழக்காடுபவனை அணுகி என்ன செய்வது என்று கேட்க நீ ஊமையனைப் போல நடித்தவிடு என்றான். நீதிபதி அவனையழைத்து நீ அவரிடம் வட்டியோடு தருவதாகச் சொல்லி கடன் வாங்கினாயா என்று கேட்டார் இவன் மலங்க மலங்க விழித்து ஊமையனைப் போல பெ பெ பெ என்றான் இவன் ஊமை கடன் கொடுத்தவன் பொய்கூறுகிறான் என்று கூறி வழக்கைத் தள்ளிவிட்டார். மறுநாள் வழக்காடுபவர் வந்து நான் சொன்ன உத்திபலித்துவிட்டது. எனக்குச் சேர வேண்டிய கட்டணத்தைக் கொடு என்றார் இவன் பெ பெ பெ என்றான். வழக்காடுபவன் வெகுண்டு என்னிடமே பெ பெ என்கிறாயா? என்று கேட்கிறான். அதற்கு இவன் உனக்கும் பெப்பே உன் அப்பனுக்கும் பெப்பே என்றான் என்பது அந்தக்கதை.

ஊசி : ஊ என்னும் ஓரெழுத்தொரு மொழி ஊக்குதல் கோத்தல் என்னும் பொருள்தரும். துணி முதலியவற்றை ஒன்றோடொன்றை கோக்கச் செய்தலால் ஊசி எனப்பட்டது. ஊ + செல் = ஊசி என வரும்.

ஊசுதல் : அழுகிப்போதல், சுவை கேடாதல் என்னும் பொருள்பட வரும் சொல். குழம்பு ஊசிப் போச்சு ஓதனம் ஊசு மேல் இனி என் செய்வது (திருவாலவாய்ப்புராணம் 6 - 4) என வரும். இச்சொல் ஊ + சாதல் என்பவற்றின் ஆக்கமாகும். ஊ = ஊன் (சதை) தசை அதன் கேடு சாதல். உணவுப்பண்டங்களின் சத்தாக இருப்பது அவற்றிற்குரிய சுவை அதன் கேடு ஊசுதல் ஊ என்பது ஊன் சத்தினைக் குறிப்பதை உடம்பு ஊசத்துப் போச்சு என்னும் வழக்கால் உணர்க.

ஊட்டி : குரல்வளைக்கழுத்தைக் குறித்து வழங்கும் சொல் உணவு ஊட்டப்படும் இடம். உட்கொள்ளும் இடம் என்பது பொருள்.

ஊத்தம் : திண்மை உறுதி என்னும் பொருளில் வழங்கும் சொல். அவன் ரொம்ப ஊத்தக்காரன் எனவரும். இதன் முதனிலைச்சொல் ஊதல். அது உதித்தல் எனவும் வரும். ஆள் சதை போட்டு ஊதிப் போயிருக்கிறான் ஆள் ரொம்ப உதிச்சுப் போய்விட்டான் என்பன வழக்கு.

ஊத்தை : உடம்பில் வெளிப்படும் அழுக்கு சிறப்பாக பற்களில் படியும் அழுக்கைக் குறித்து வழங்கும் உதித்து வெளிப்படுதலின் அழுக்கு ஊத்தை

எனப்பட்டது. ஊத்தை என்பது ஆகுபெயர் வழியால் வசைச்சொற்களை உணர்த்தி வரும். வசைசொற்களையும் அவையல் கிளவிகளையும் பேசுபவனை ஊத்தை வாயன் என்பது வழக்கு.

ஊத்தைவாய் : பல்லின் அழுக்கு நாவின் அழுக்கு ஊத்தை எனப்படும். இது ஊற்றை என்பதன் போலி. நாவினிடமாகவும் பற்களின் இடுக்கிலும் ஊறும் அழுக்கு ஊறிவருவது ஊற்றை - ஊத்தை. இது எடுத்துககாட்டு உவமமாக பொய்யும் கற்பனையுமாகக் குறையாகப் பேசும் பேச்சினைக் குறித்து வரும் இங்ஙனம் பேசுபவனை ஊத்தை வாயன் என்ப. ஊத்தை வாய் = அழுக்கு வாய்.

ஊதாரி : உதாரம் என்பதன் திரிபாக அமைந்த சொல். உதாரம் = வள்ளன்மை. தமக்கென எதையும் பாதுகாவாமல் வறியோர்க்கு வழங்கும் குணம் உதாரம் எனப்படும். அம்முறையில் பொருளைப் பாதுகாவாமல் வரன்முறையின்றிச் செலவிடுபவனை ஊதாரி என்ப - சிக்கனத்திற்கு எதிர்ப்பதம் ஊதாரி.

ஊதியம் : கூலி, சம்பளம், இலாபம் என்னும் பொருளில் வரும் சொல். ஒருவருக்கு ஆக வேண்டிய பணியைத் தம்மால் மட்டும் செய்ய இயலாமல் மேலும் சிலர் வேண்டியிருக்கும் நிலையில் மற்றவரைத் துணையாகக் கொண்டு அப்பணியைச் செய்வர் அங்ஙனம் துணைபுரிபவருக்கு ஓரளவு பொருள் கொடுப்பர். அங்ஙனம் தம் உழைப்புக் காரணமாகப் பெறும்பொருள் ஊதியம் எனப்படும். ஊதியம் என்பது உதவி + ஈயம் என்பதன் உட்பிணைப்பாக்கம் ஒருவருக்குச் செய்த - செய்யும் உதவிக்காக உதவியைப் பெற்றவர் - பெறுபவர் ஈயும் ஈகை என்பது இச்சொல்லின் பொருளாகும். உதவு + ஈயம் = ஊதியம். ஒரு பொருளை ஒருவன் ஒரு வணிகனிடத்தில் பெறும்போது அப்பொருளை வணிகன் எளிதாகப் பெறச்செய்திருப்பது வணிகன் செய்த உதவி அவ்வுதவிக்காக அவன்பெறும் லாபம் ஊதியமாகின்றது.

ஊமை (மூங்கை) : ஊம் (ஹூம்) என மூக்கால் உயிர்ப்பவர் - முரல்பவர் ஊமை எனப்படுகின்றனர். வாயால் எழுத்தொலிகளைப் பேச இயலாமல் தம் உணர்வுகளை மூக்கொலியால் முரலுதலின் ஊம் + ஐ = ஊமை எனப்பட்டனர். மூக்கால் ஒலி எழுப்பும் ஒரு பறவைக்கு ஊமன் என்பது பெயர். அப்பரடிகள் "மூக்கே நீமுரலாய்" என்பார். மூக்கால் ஒலி எழுப்புதலின் ஊமை மூங்கை எனப்பட்டது. மூங்கை = மூக்கால் ஒலிப்பவர் என்பது பொருள். ஊமைத்தன்மையை பிறிதொருவற்றால் புலப்படுத்தும் சொல் வாயறை என்பதாகும். வாயால் பேசுதலை அற்றவர் என்பது பொருள். வாய் என்பது ஆகு பெயர் அது பேச்சினை உணர்த்தும் அதனால் பேச இயலாத விலங்கு முதலிய உயிர்களை வாயில்லாப் பிராணி என்பர்.

ஊர்ப்பட்டது : மிகுதி ஏராளம் என்னும் பொருளில் வழங்கும் சொல் திருவிழாவிற்கு ஊர்ப்பட்டபேர் வந்திருந்தார்கள் என்றாற் போல வரும் ஊர் என்பது மக்கள் பலரைக் கொண்டிருத்தலின் ஓர் ஊரின் மக்கள் அளவைக் குறிக்க ஊர்ப்பட்ட பேர் என உவம அடிப்படையில் இச்சொல் அமைந்தது. இது உகரம்பெற்று ஊருபட்டபேர் எனவும் வழங்கும்.

எக்கச்சக்கம் : பிழைக்கத் தெரியாத பயல் அவன்கிட்டே எக்கச்சக்கமா மாட்டிக் கொண்டான் என்றாற்போல வரும் வழக்குத் தொடர். மீளவழி தெரியாமல் அகப்பட்டு நிற்கும் நிலையை உணர்த்தும். இதன் செம்மையான வடிவம் இயக்குச் சிக்கல் (இயக்கம் = சிக்கல்) சிக்கல் - அவிழ்க்க இயலாத பிரிக்கஇயலாத நூல் முடிச்சினை உணர்த்தும் சொல் உவமத்தன்மையால் பிறவாறு தப்பிக்க வழிதெரியாமல் மாட்டிக் கொண்ட நிலைகளை உணர்த்தும். இயக்கு - நெறி - வழி முதலியவற்றில் செல்லுதல். சரியான வழியில் செல்லாத நிலையை இயக்குத்தப்பு என்பர். இயக்குத் தவறியமையால் சிக்கிக் கொள்ளுதல். இயக்கச்சிக்கம் அது சிதைந்து எக்கச்சக்கம் என மருவிற்று. தப்பிக்க வழியின்றி அகப்பட்டுக் கொண்ட பிறவற்றைக் குறித்தும் வரும். அவன் எக்கசக்கமான படிப்பாளி எக்கச்சக்கமான பணக்காரன் எனவரும் கருத்தும் ஒன்றேயாகும்.

எக்குத்தப்பு : 1. ஒரு செயலை நெறிமுறையாகச் செய்யாமல் தவறியவிடத்து எக்குத்தப்பாகக் காரியஞ்செய்துவிட்டான். எக்குத்தப்பா நடந்து போச்சு என்பது உலக வழக்கு. இச்சொல்லின் சரியான வடிவம் இயக்குத்தப்பு. ஒரு காரியத்தைக் கொண்டு செலுத்துதலை இயக்குதல் என்ப. இயக்கப்படுவதனால் இயங்குங் கருவிக்கு இயந்திரம் என்பது பெயர். தப்பு - (துபு) பிழை - தவறு. குறை பிழையாக இயக்குதல் இயக்குத்தப்பு எனப்படும். இதன் மரூஉ எக்குத்தப்பு 2. இனி எக்குத் தப்பா பேசி மாட்டிக் கொண்டான் என்னுமிடத்து எக்கு என்பது இலக்கு என்பதன் மரூஉ வாகும். குறிக்கோள் தவறிப் பேசிய பேச்சு இலக்குத் தப்பு - அது மருவி எக்குத்தப்பு என வரும்.

எஞ்சல் (எச்சம்) : ஓர் அளவைக்குள் அடங்காமல் நீங்கி நிற்றல் மிக்கிருத்தல் எகரம் போல முதலை உணர்த்தும் குறிப்பிசை எழும்புதல் என்புதல் எம்புதல் எனவரும் எம்+செயல்=எஞ்சல் என ஆக்கம் பெற்றது. ஒன்றோடு தொடர்புடையதாய் அதற்குள் அடங்காமல் அது தன்னை அவாவுமாறு நிற்றல் எஞ்சி நிற்பதை அவாவி நிற்கும் பொருள் எச்சம் எனப்படும். ஓரோவழி ஏஞ்சி நிற்கும் பொருளும் எச்சம் எனப்படும். குறிப்பெச்சம் இசையெச்சம் என்னுமிடத்து நீங்கி நிற்றலையும் வினை எச்சம் பெயராச்சம் என்புழிக் குறைந்து நிற்றலையும் உணர்த்தும். தக்கார்தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாள் காணப்படும் என்புழி நீங்கி நிற்றலை உணர்த்தும் (மிஞ்சல் - மீதம் காண்க) கொங்கு நாட்டு வழக்கில் இது எச்சு என வழங்கும்.

எட்டுதல் : மேற்சென்று அகப்படுத்தல் கிட்டுதல் அகப்படும் எல்லையில் நிற்றல் என்றும் பொருளில் வரும் ஒருசொல். கைக்கெட்டியது வாய்க்குஎட்டவில்லை, எட்டினமட்டும் பார்த்தேன், ஊரைஎட்டி விட்டான், கிட்டே வராதே எட்டி நில், கிணற்றை எட்டிப்பார்த்தான் என்றாற் போலவரும். இதன் உரிச்சொல் எண் எண்ணுதல் அடுத்தடுத்து ஒன்றை அகப்படுத்தல் கணிதக் குறியீடுகள் எண் எனப்படும். மேற்சேரத் துணையாதலால் ஏணி எனப்பட்டு ஏணி என்பது எல்லை என்னும் பொருளிலும் வரும். இச்சொல் எண்+து=எட்டு என ஆக்கம் பெற்றதாகும். அகம்படும் எல்லை எட்டும் எல்லை அகப்பாடா எல்லை எட்டாநிலை. ஈட்டி எட்டின மட்டும் பாயும். எட்டாக்கனி என்றாற் போலவரும்.

எடக்கு மடக்கு : நடையாட ஊர்திகளைச் செலுத்த இடர்ப்பாடான பாதையைக் குறித்து வரும் அது ரொம்ப எடக்கு மடக்கான பாதை அவ்வழியே செல்ல வேண்டாம் என்றாற்போல வரும். இதன் சரியான வடிவம் இடுக்கு முடுக்கு என்பதாகும்.

எத்தன் : ஏமாற்றுபவன், வஞ்சிப்பவன் ஆசைகாட்டி மோசம் செய்பவன் என்னும் பொருளில் வழங்கும் சொல். எத்து என்பது இதன் முதனிலைச் சொல். அது எவ் + து = (எத்து) என்பதன் ஆக்கமாகும். எவ்வுதல் மேற்செல்லுதல் வரம்புகடத்தல். து=பற்று=வரம்புகடந்து ஒன்றைப்பற்றுதல் எத்துதல் எனப்பட்டது. எத்தலைச் செய்பவன் எத்தன்.

எதார்த்தம் : பட்டாங்கு, உள்ளபடி உண்மை என்னும் பொருளில் வழங்கும் வடசொல் திரிபு. யதா + அர்த்தம் = யதார்த்தம் - எதார்த்தம். யதா என்பது முன்னொட்டு இதன் பொருள் "எதுவோ அதுவேயாக" என்பதாகும். உள்ளபடி என்பது கருத்து. அர்த்தம் = பொருள். அவன் பேசியது எதார்த்தமான பேச்சு என்றாற் போல வரும்.

எதுக்களித்தல் : வாந்தி வருதல்போல ஓக்காளமுறுதல். உண்ட உணவு செரிக்கவில்லை எதுக்களிக்குது என்பது வழக்கு இதன் செம்மையான வடிவம் எதிர்க்கழித்தல். உண்டபொருள் உட்புகுந்து பின், புறமாக எதிர்வருதலின் எதிர்கழித்தல் எனப்பட்டது.

எதேச்சை : எதிர்பாராத, தானாக என்னும் பொருளில் வழங்கும் சொல் எதே + இச்சை = எதேச்சை. எதே என்பதற்கு எதுவோ அது என்பது பொருள் இச்சை = விருப்பம். எதுவோ அதன் விருப்பப்படி என்பது பொருள். நான் சென்னைக்குப் போனபொழுது கண்ணனை எதேச்சையாப் பார்க்க நேர்ந்தது. கோவிலில் எதேச்சையா இது கிடைத்தது என்றாற்போல வரும்.

ஏக்கம் : விரும்பிய ஒன்றைப் பெற இயலாதபோது எய்தும் துயரம் ஏக்கம். இதன் முதனிலைச் சொல் ஏங்கு. அவர் மந்திரிப்பதவிக்காக ஏங்கிக்கிடக்கிறார்.

பசுமாட்டைக் காணாமல் அவன் ஏங்கி நிற்கிறான் எனவரும். ஏங்குதலைப்புரிவது ஏக்கம். இச்சொல் ஏம் + குறை என்பவற்றின் ஈறுகெட்ட ஆக்கமாகும். ஏம் = இன்பம். மகிழ்வு குறை = தாழ்வு குறை என்பதின் இறுதி கெட்டுக் கு என்னுமளவில் இணைந்து ஏங்கு என அமைந்தது. ஏம் என்பது புரை என்பதனொடு கூடி ஈறு கெட்டு ஏம்பு எனவும் வரும் அது தொழிற்பெயர் விகுதி பெற்று ஏம்பல் எனவும் வரும். ஏம்பல் = வருத்தம்.

ஏக்கழுத்தம் : செருக்கு என்னும் பொருள் படவரும். செருக்கால் தலைநிமிர்தல் என்பது இச்சொல் ஏ+கழுத்து+அம் என்பவற்றின் ஆக்கமாகும். ஏ=மேல் எடுத்தல். கழுத்து = தலையைத் தாங்கி நிற்கும் உறுப்பு. அம் = பண்பும் பெயர் விகுதி. கழுத்து மேலெடுத்தலால் தலைநிமிர்தலால் ஏக்கழுத்தம் என அமைந்தது.

ஏசல் : வைதல். வசை கூறல் என்னும் பொருளில் வரும் வினைப் பெயர். இச்சொல் ஏ + செயல் (ஏசல்) ஏ + செய் = (ஏசு) என்பவற்றின் புணர்ப்பாகும். ஏ=அம்பு ஏவப்படுதலால் அம்பிற்கு ஏ என்பது பெயர் அம்பு பாய்ந்துவருவதைப் போல சொற்களால் நெஞ்சைப் புண்படுத்தலின் வசவு-ஏசல் என்பட்டது. உவம அடியாக ஆக்கம் பெற்ற சொல் இது பெயராங்கால் ஏச்சு என அமையும்.

ஏடா கூடம் : குறைத்தும் பழித்தும மறைத்தும் பேசுதலைக் குறித்து வழங்கும் தொடர் அவனைக் கேட்டால் அவன் ஏடா கூடமாகப் பேசுகிறான். இவை இரண்டும் வடசொற்களின் திரிபு. ஏகடம் என்பது ஏடம் எனத்திரிந்து ஏகடம் ஏகடியம் என்பதன் திரிபு ஏகடம் எகடம் எனவும் அகடம் எனவும் திரியும் பழித்தல் என்னல் என்பது இதன் பொருள். இதற்கு இணையாக நகைச்சுவையாகப் பேசுவதற்கு விகடம் என்பது பெயர். இந்த அகடவிகடமெல்லாம் என்னிடம் வேண்டாம் என்பது வழக்கும். கூடம் - மறைவு ரகசியம். எகடியம் என்பது கூடம் என்பதற்கு ஏற்ப ஏடம் என நின்று இணையுமிடத்து ஏடாகூடம் என இணைந்தது.

ஏப்பை சாப்பை : பயனற்றது. வளமில்லாதது. அறிவு மழுங்கியது என்னும் பொருளில் வழங்கும் இணைச்சொல். அவன் ஒன்றும் ஏப்பை சாப்பை இல்லை. அவனை ஏமாற்றி விடலாமென்று நினைக்காதே என்றாற் போலவரும். இச்சொற்கள் இளைப்பு - சாய்ப்பு என்பவற்றின் திரிபுகள் இளைப்பு என்பது எய்ப்பு எனத் திரிந்து ஏப்பு ஏப்பை என நின்றது. சாய்ப் என்பது சப்பை. சாப்பை எனத்திரிந்தது.

ஏமாளி : விரும்பியதைக் காவாமல் பறிகொடுத்து நிற்கும் நிலையினன். இச்செயல் ஏம்-மாள் + இ. ஏம் = இன்பம் விருப்பம் மாள் = மாளுதல். அழிதல். இ வினை முதற்பொருள் விகுதி ஏம் மாண்டநிலையினன் - ஏமாளி.

ஏமாற்றம் (ஏமாற்றல், ஏமாறல்) : *ஏம் = மாற்றம், நம்பிக்கை மாறுபடல்.* ஏமாற்றல் = நம்பிக்கையை மாற்றுதல். ஏமாறல் = நம்பிக்கை பிறழ்தல் - திரிபு படல்.

ஏய்த்தல் : அலைக்கழித்தல், வஞ்சித்தல், பொய்த்தல் என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் எய்த்தல் என்பதன் திரிபாகும். எய்த்தல் = இளைக்கச்செய்தல் மனம் வருந்துமாறு செய்தல் மனம் இளைக்குமாறு செய்தல் வழக்கில் யகரம் சகரமாகி ஏச்சுப்புட்டான் என்றும் மருவி ஏக்கிறான் என்றும் வரும்.

ஏர் : பலபொருளொடு சொல், எழுச்சி, அழகு, நிலம் உழும் கருவி, மிகுதி எனப் பல பொருளில் வரும். ஏ என்பது மேலெழுதல் என்னும் பொருள் தரும். குறிப்பெழுத்து ஏ=அம்பு - ஏவு = செலுத்து - ஏறுதல் மேல் செல்லுதல். இக்குறிப்பமையின் அழகு எழுச்சி எனப்பொருள் தரும். ஏர் என்பதே பகுதியாகும். உழும் கருவி எனப்பொருள் தருமிடத்து அது ஈர் என்பதன் திரிபாகும். ஈர்தல் - பிளத்தல் நிலத்தை - மண்களைப் பிளந்து செல்லுதலின் ஈர் என உருப்பெற்று ஏர் என ஆக்கம் பெற்றது.

ஏரி : நீரால் நிரம்பிய பெரிய குளம் என்னும் பொருளில் வரும். ஈர் என்பது குளிர்ச்சி என்னும் பண்புரிச்சொல். அம் சேர்ந்து ஈரம் என வரும் நகரமெய் ஊர்ந்து நீர் எனவரும். நீரின்றிக் குளிர்ச்சியின்மையின் நீரால் நிரம்பியது. ஏரி - (ஈர் + இ) அது ஏரி என மருவியது இனி ஏரால் உழுதற்கு உதவும் நீரால் நிறைந்தது ஏர்+ஈ=ஏருக்கு (நீரை) ஈவது என அமைந்து ஏரீ - ஏரி என அமைந்தது என்பதும் சிறுபான்மை ஒக்கும்.

ஏளனம் : இகழ்ந்து கூறுதல் என்னும் பொருளில் வழங்கும் சொல். இது எள்+அனம்=என்பவற்றின் திரிபு. ஏள்+அனம் - ஏளமை - ஏள் - எள்ளுதல் எள்ளல் = இகழ்தல் - அது ஏள் என நீண்டது. இகழ்ச்சி - ஏழ்ச்சி என நீளுதல் போல.

ஏற்கனவே : முன்பே முன்னமேயே என்னும் பொருளில் வழங்கும் சொல். உனக்கு ஏற்கனவே சொல்லியுள்ளேன் என்றாற்போல வழங்கும் கொங்குநாட்டு வட்டார வழக்கில் மேக்கனமே என வழங்கும் இதன் செம்மையான வடிவம் மேற்கணமே என்பதாகும். முன்பே, முன்னைப்பொழுதே - முற்காலத்திலேயே என்பது பொருள்.

ஏறுமாறு : ஏறுதல் உயர்தல் மாறு அதற்கு எதிராதல் செயற்பாடு உயர்வுடையதாக அமையுமாறு செய்யாமல் அதற்கு மாறாக அது தாழ்வடையுமாறு கெடுமாறு செய்தல் ஏறுமாறாகச் செய்தல். (தாறுமாறு காண்க)

ஒக்குமத்து : வியாபாரிகள் எல்லோரும் ஒக்குமத்தாப் பேசிக் கொண்டு பண்டங்களின் விலையை ஏற்றிவிட்டார்கள். எல்லாரும் ஒக்குமத்தாப் பேசி வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றாற் போலவரும் இச்சொல் "ஒருங்கமைந்து" என்பதன் திரிபாகும். ஒன்றாகக்கூடி அமைந்து என்பது பொருள் ஒருங்கமைந்து என்பது ஒருக்குமத்து - ஒக்குமத்து என மருவியது. இனி ஒருங்கு மொத்தமாக என்பவற்றின் திரிபு எனினும் ஒக்கு ஒருங்கு மொத்தமாக ஒக்குமத்தாக எனவரும். மொத்தம் = கூடுதல் குவியல் = என்னும் பொருள் தரும்.

ஒச்சம் : ஓசி என்பதன் அடிச்சொல்லாகிய ஒச் என்பது பண்பு விகுதியாகிய அம்பெற்று ஒச்சம் என நின்றது - ஒச்சம்; மாசு குறை குற்றம் என்னும் பொருளில் வழங்கும் பொருள் நன்றாக உள்ளது. ஒன்றும் ஒச்சமில்லை எனவும் அவன் எதற்கும் ஒச்சம் சொல்லுவான் எனவும் வரும். ஓசி = வளைவு - நுடக்கம் செம்மையில்லாதது என்னும் கருத்தில் குற்றம் எனப்பொருள் தந்து நின்றது.

ஒட்டாரம் : பையன் இது வேண்டாம் அது வேண்டாம் என்று ஒட்டாரம் பண்ணுகிறான் என்றாற்போல வரும் பிடிவாதம் என்னும் பொருளில் வரும் வழக்குச்சொல். இது ஒட்டா+அரவம் என்பவற்றின் மரூஉ வாக்கம். ஒட்டுதல் இணங்கிப் போதல், ஒத்துப் போதல் ஒட்டாமை அவற்றின் எதிர்மறை. அரவம் = ஆரவாரம். உரக்கப் பேசுதல் மறுத்துப் பேசுதல் அரவம் மருவி அரம் என நின்று ஒட்டா + அரம் = ஒட்டாரம் என அமைந்தது.

ஒத்தாசை : துணைபுரிதல் என்னும் பொருளில் வழங்கும் வழக்குச்சொல். அவனுக்குக் கொஞ்சம் ஒத்தாசை செய் என்றாற்போல வழங்கும். இது ஒத்தல் இசை என்னும் சொற்களின் உட்பிணைப்பு. ஒத்து + இசைவு = ஒத்திசை ஒத்தாசை எனவரும். இனி ஒத்து + ஆசு என்பவற்றின் பிணைப்பெனினும் பொருந்தும் ஆசு = பற்றுக்கோடு - துணை. ஒத்து ஆசு செய் என்பது ஒத்தாசை செய் என வரும்.

ஒத்து ஊதுதல் : தன் கருத்தின்படிக் கூறாமல் வலிமை வாய்ந்த பிறர் கருத்திற்கிசைந்து பேசுதலை ஒத்தூதல் என்பர். ஒத்து என்பது ஒரு சுருதி நாயனம். அது வங்கியம் வாசிப்பவன் பண்ணளவிற்கேற்ப ஊதப்படும். வங்கியக்காரன் இசைக்கு ஒத்து ஊதுதலின் அது உவம்மாயிற்று. இனி ஒத்து ஓதுதல் என்பது ஒத்தூதுதல் என அமைந்தது எனினும் ஆம்.

ஒப்புக்குச் சப்பாணி : தனக்கு உடன்பாடோ விருப்பமோ இன்றி மற்றொருவர் செயலுக்குத் துணைபுரியும் நடிப்பினை ஒப்புக்குச் சப்பாணி கொட்டுகிறான் என்பர். ஒப்பு = போல. சப்பாணி = கையாற் கொட்டும் தாளம். பாடுபவன் பண்ணிசைக்கேற்ப ஒருவர் தாளமிடும் போதுதான் இலக்கணம் தெரியாதவன் அவனுடன் சேர்ந்து அவன் கொட்டுவது போலக் கொட்டுதல் ஒப்புக்குச் சப்பாணியாகும்.

ஒருங்கொத்தல் : பலர் கூடி வினையாற்றும்போது யாவரும் ஒற்றுமையாக ஒத்து வினையரிதல். ஒருங்கு என்பது ஒற்றுமையையும் ஒத்தல் பொருந்துதலையும் குறிக்கும். முழுமையாக ஒத்தல் என்பது பொருள். ஒருங்கு என்னும் இவ்வினையெச்சச்சொல் இலக்கிய வழக்கில் ஓராங்கு எனவும் வரும். ஒருங்கு என்பது ஓரங்கம் என்பதன் உட்பிணைப்பாகும்.

ஒருமித்த : ஒருங்கொத்தல் என்னும் பொருளில் வரும் இத்தொகைச் சொல்லின் சரியான வடிவம் ஒருங்கமைந்த என்பதாகும். ஒரு குழுவினர் யாவர்க்கும் ஒத்து அமைந்த கருத்து ஒருமித்த கருத்து.

ஒற்றைக்காலில் நிற்றல் : ஒருவர் விடாப்பிடியாக ஒரு காரியத்தைச் செய்வேன் என உறுதியாக நிற்றலை இவ்வாறு கூறுவர் - தவம் செய்பவர் ஒரு காலைப் மடித்து மற்றொரு காலினைத் தொடையில் ஊன்றி நிற்பர் அதைப்போல தவத்தில் முயல்வதைச் சுட்டிவரும் தொடர் இது.

ஓச்சல் : ஓ என்னும் நெட்டெழுத்திசை மேலோங்குதல் பக்கமாக நீங்கல் என்னும் பொருளுடையது. அது ச் என்னும் புள்ளியோடுவருமிடத்து ஓச்சு எனவரும். ஓச்சுதல் - மேலோங்குதல் = கடிதோச்சி மெல்ல எறிக (குறள்) வகரப்புள்ளியொடு வருமிடத்து ஓவு எனவரும். ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை (குறள்) பகரஒற்றொடு வருமிடத்து ஓடச்செய்தல் என்னும் பொருளில்வரும் குருவி ஒப்புதல். இனி இச்சொல் வழக்குமிடத்து ஓய்தல் என்பதன் திரிபாக வரும். ஓச்சல் ஒழித்தல் இல்லாமல் வேலை பார்க்கிறான் என்பது வழக்கு. ஓய்ச்சல் என்பதன் சகர ஒற்றுக்கெட்டு ஓச்சல் என வரும். சிறுபான்மை சோர்வு என்றும பொருளில் வழக்கில் ஆள் ரொம்ப ஓச்சலாக இருக்கிறார் என வரும்.

ஓடு : மண்டை ஓடு. ஓடு வேய்ந்த வீடு. திருஓடு என வரும் ஓடு என்பது ஓடுக்கு என்பதன் முதனிலையாகிய ஒடு என்பதன் நீட்சியாகும். விடு - வீடு - படு = பாடு (செயல்தாள்பம்) என்றாற்போல ஒடு - ஓடு என்றமைந்து - தேங்காய் ஓடு முட்டை ஓடு முதலியனவும் உட்குழிந்து ஒடுங்கியருத்தல் பற்றியமைந்த பெயர்களேயாகும.

ஓரான் : ஒருவன் என்பதன் திரிபு. ஒரு - ஓர் என நீண்டு ஆன் என்னும் விகுதி பெற்றது.

ஓலை : பனை, தென்னை, பாக்கு முதலிய மரங்களின் மட்டையிலிருந்து விரியும் உறுப்பு ஓலை எனப்படும். இவை பிற மரங்களின் இலை தழைகளைப் போலன்றி முற்றியதைக் குறிக்குச்சொல் ஒலியை உடையது என்னும் பொருளில் (ஒல்-ஓல்+ஐ) ஓலை என ஆக்கம் பெற்றது. சொற்களின் வரிவடிவத்தை எழுதப் பயன்பட்ட நிலையில் அவற்றை படிக்கும்போது

படிப்பவர் ஒலி எழுப்புதலால் ஒலிப்பதற்குத் துணைபுரிவது என்னும் கருத்தில் திருமுகத்திற்கு ஓலை எனப்பெயர் அமைந்தது. மகளிர் காதில் அணியும் தோடு பழங்காலத்தில் பனங்குருத்தோலையால் அமைக்கப்பட்டமையின் காதணிக்கு ஓலை என்பது ஒரு பெயர் (ஓல் + அம் = ஓலம். ஓல் + ஐ = ஓலை) முறி காண்க.

கக்கல் : உண்டபொருளை வாயால் வெளிப்படுத்தல். இது கழிக்கல் என் (கழித்தல்) பதன் மரூஉவாகும். இனி வெளிப்படுத்துமிடத்து கக், கக் என ஒலி எழுப்புதலால் கக்கல் எனலாயிற்று என்பது வெள்ளை விளக்கமாகும். ஒப்புமை நயத்தான் சொற்களை வெளிப்படுத்தலையும் கக்கல் என்ப. அவனை உதைத்த உதையில் உண்மையைக் கக்கிவிட்டபின் என்பது வழக்கு.

கசுமாலம் : பெரும்பாலும் மனிதக்கழிவைக் குறித்து வழங்கும் வழக்கு இது கழிமலம் என்பதன் சிதைவாகும். இதனைக் கஸ்மாலம் என்னும் வடசொல்லின் திரிபாகக் கருதுவாருமுளர்.

கஞ்சி காய்ச்சல் : அவனை ஏண்டா இப்படிக் கஞ்சி காச்சுகிறாய் என்றாற்போல வழங்கும். ஒருவன் நகையாட்டால் இளக்காரமாக மீண்டும் மீண்டும் பேசி வருந்தச் செய்தல். இதனை உவம வாயிலாகக் கூறுதலே கஞ்சி காய்ச்சுதல் கஞ்சி என்பது முன்வெந்த சோற்றையே மீண்டும் குழைப்பதற்காக காய்ச்சுதல் ஆதலின் மீண்டும் மீண்டும் வேகவைத்தல் போல வருத்துதல் என்பது கருத்து.

கட்டளை : முன்னரே அளவிட்டு முடித்த ஒன்று கட்டளை எனப்படும். கட்டு + அளை - கட்டுதல் = முடித்தல் - அளை = அளவு. அளவிடப்பட்டது என்பது கருத்து. கட்டளைக்கல், கட்டளைக் கலிப்பா, செங்கற் கட்டளை, அரசாங்கக் கட்டளை என வரும். அளவையால் முடிவு செய்யப்பட்டவையே சட்டம் ஆதலின் சட்டத்தால் இடும் ஆணையும் கட்டளை எனப்பட்டது. முறையாக முடிவு செய்யப்பட்டது, அறக்கட்டளை.

கட்டாயம் : உறுதி என்னும் பொருளில் வழங்கும் சொல் உறுதி என்பது தளர்வின்றிக் கட்டுதல். நழுவாமல் பிணித்தல் பற்றி வரும் சொல். உறுதி செய்தல் கட்டுதல் ஆயம் தொகுதி. தொகுத்து இறுக்கிக் கட்டி உறுதி செய்தல் கட்டுதல் - கட்டாயம் என்பதன் கருத்தாகும். பிறவற்றால் தளராமல் ஒரு செயலை மேற்கொள்ளும் உறுதி கட்டாயம் எனப்பட்டது.

கட்டும் – கட்டாது : இச்சொற்கள் பண்ட வாணிகம் நடைபெறுமிடத்துப் பெரும்பான்மையும் வழங்கும் ஒரு பொருளை வணிகர் சொன்ன விலையினின்று குறைத்துக் கேட்குமிடத்து கட்டாதுங்க என்பார் இவர்

எவ்வளவானால் கட்டும் என்பார். கட்டுதல் என்பது முடிப்பிடுதல் அதாவது முடித்தல், முடிவுறுதல், வணிகர்தாம் கொண்ட விலைக்குக் குறைவாகக் கேட்குமிடத்து முடிவுபெறாது முடியாது எனல் வேண்டும் முடியும் முடியாது என்பவை தர இயலாது தரமாட்டோம் என்னும் பொருள் தரும் ஆதலின் முடியும் முடியாது என்பதற்கீடாக வாணிகத்தில் கட்டும் - கட்டாது என்றும் சொற்களை வழங்கலாயினர்.

கடப்புடாதவன் : அவன் ஒரு கடப்புடாத பயல் என்பது வழக்கு. இதன் பொருள் கடமையை மேற்கொள்ளாதவன் என்பதாகும். கடப்பு + அடாதவன். கடமை கடப்பு என்று நின்றது. அடாதவன் - அடுத்தல் மேற்கொள்ளல் - அடாமை = மேற்கொள்ளாமை.

கடிகை : நேரம்பொழுது காலம் என்னும் பொருளில் வழங்கும் சொல் காலம் என்னும் பொருளில் தமிழ்ச் சொல்லாகும். கடிதல் - நீங்கி நீங்கிச் செல்லுதல் அஃதாவது கலித்துச் செல்லுதல். கலித்துச் செல்லுதலாம் பொழுது காலம் எனப்பட்டது கடிதலால் - கடிகை எனப்பட்டது. கை விகுதி.

கடுக்காய் கொடுத்தல் : ஒருவர் ஒருவரைத் தன் பேச்சால் மயக்கி ஏமாற்றிவிட்டுப் போய்விடுதலைக் குறித்து வழங்கும் வழக்குத் தொடர். குழந்தைகளை உறங்கச் செய்ய உறை மருந்தில் கடுக்காயைச் சேர்த்து உறைத்துக் கொடுப்பர். கடுக்காய்ச் சாந்து மயக்கத்தைத் தரும். அதனை உவமமாக்கி மயக்கி விட்டு செல்லுதலைக் கடுக்கா கொடுத்துட்டு ஓடிப்போய் விட்டான் என வழங்கினர். இச்சொற்பொருள் உண்மை தெரியாத சிலர் உயர்ச்சியை = ஒஸ்தி என வழங்குதல் போல டேக்கா குடுத்துட்டு ஓடிப்போய் விட்டான் என வழங்குவர்.

கண்துடைப்பு : இதுவும் ஓர் உவமக்கருத்துத் தொடர். துயரத்தால் கண்ணீர்விடும் ஒருவரின் துயரத்தை நீக்க முயலாமல் அவரிடம் மிக்க பரிவு உள்ளவர்போல அவர் கண்ணீரைத் துடைத்தல். இது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பல இடையூறுகளைக் களைய முயலாமல் ஒரு நிறுவனம் அவர்கட்குப் பல உதவிகளைச் செய்வது போல நடித்தலைக் குறித்து வழங்கும்.

கண்மண் தெரியாமல் - நடத்தல், ஓட்டுதல் : இதுவும் ஓர் உவமக் கருத்துத் தொடர். நடப்பவர்க்கும் வாகனம் ஓட்டுபவர்க்கும் கண்ணும் - செல்லும் வழியும் நன்றாகத் தெரிதல் வேண்டும். இன்றேல் கேட்டிற்காளாவர். அதுபோல ஒரு செயலை மேற்கொள்பவர்க்கு அச்செயல் பற்றிய தெளிவான பார்வையும் அதனை இயற்றுதற்குரிய நெறிமுறைகளும் தெரிந்திருத்தல் வேண்டும். இன்றேல் தான் கெடுதலோடு பிறர்க்கும் கேடுவினைப்பர். அதனைச் சுட்டி வரும் தொடர்.

கணிசம் : அவர் உதவியாக ஒரு கணிசமான தொகை கொடுத்தார் இந்த வியாபாரத்தில் ஒரு கணிசமான தொகை கிடைத்தது என்பவை வழக்கு. கணித்த அளவுக்கும் நீட்டிய நிலை பற்றிய வழக்கு இதன் சரியான சொல் கணி + எச்சம் - கணிச்சம் - கணிசம் என மருவியது.

கப்பிக்குடித்தல் : உதடுகளால் கௌவிக் குடித்தலை கொங்கு நாட்டு வழக்கில் கப்பிக்குடித்தல் என்பார். கௌவுதல் - கப்புதல் எனத் திரிந்தது.

கயமை : கய்த்தல் தன்மை கய்த்தல். நலம் கெட்டு தீயதாதல். பால் கய்த்துவிட்டது. குழம்பு கய்ச்சிப் போச்சு எனின். பால் நஞ்சாகிவிட்டது. குழம்பு விடமாகிவிட்டது என்பது பொருள் மக்கட் பண்பு நீங்கி விலங்குத்தன்மை எய்தல் கயமை. மக்களே போல்வர் கயவர் என்பது குறள் கய் என்பது அகரச்சாரியை பெற்று கய என்றாகிப்பின் பால் விகுதிகள் பெற்று கயவன், கயவர் என வரும். இன்சுவைக்கு மாறானது கய்ப்புச்சுவை. அறு சுவையுள் ஒன்றாக மேற்கொள்ளுமிடத்துக் கைப்பு என உருமாறி நிற்கும். கய்-காய் என நீண்டு பழமாகாத நிலையை உணர்த்தும். பெருமை எனப்பொருள் தரும் கய என்னும் உரிச்சொல் வேறு கய் என்பது அகரம் பெற்ற கய என்பது வேறு.

கரடியாகக்கத்துதல் : பெருங்குரலோடு இடைவிடாது ஒன்றை வற்புறுத்திப் பேசுதலைச் சுட்டிவரும் வழக்கு. நான் கரடியாக்கத்துறேன். அதைக் காதுல வாங்காமே போறியே என்றாற் போல வரும். இதன் கண் கரடி என்பது கரடிகை என்பதன் குறை விலங்கன்று. கரடிகை - ஒரு தாளக்கருவி - அது பேரொலியாக முழங்கும். கரடிகையாகக்கதறுகிறேன் என்பது கரடியாக்கத்துறேன் எனச் சிதைந்து மருவி வழங்குகின்றது. எண் கிற்குக்கரடி என்று பெயரமைந்த காரணம் அதன்பால் பாதங்கள் மக்களின் விரல்கள் அமைந்தமை போல இருக்கும். ஆதலின் கரம் போன்ற அடியை உடையது என்னும் கருத்தில் கர+அடி=என்பன ஒரு சொல்லாய்க் கரடி என ஆக்கம் பெற்றது.

கரடி விடுதல் : எனக்குத்தெரியாது என்று நினைத்து என்னிடத்திலேயே கரடிவிடுகிறாய் என்பது வழக்கு. பிறருக்கு ஐயந்தோன்றாதவண்ணம் வஞ்சனையாகப் பேசுதலைக் கரடிவிடுதல் என்பர். இதன் செம்மையான வடிவம் கரவடியாடுதல். கரவடி = வஞ்சனை. (கரவு - கரவடி) ஆடல் = பேசுதல் - கரவடியாடுதல் என்பது சிதைந்து மருவிக் கரடிவிடுதல் என அமைந்தது.

கரித்தல் : வெறுப்பும் அழுக்காறு வஞ்சனையும் கொண்டு ஒருவர்க்குப் பழி நேரும்படியேசுதலைக் "கரிச்சுக்கொட்டுறான்" என்பது வழக்கு. கரவுடன் பேசுதல் கரித்தல்.

கரவங் கட்டுதல் : வஞ்சனையை உள்ளடக்கிப் பேசுதல் செயற்படுதலைக் குறித்து வழங்கும் தொடர். கரவு=வஞ்சனை அம்சாரியை. கட்டுதல் -

பிணித்தல் வஞ்சனையைப் பிணைத்துச் செய்யும் செயல் கரவங்கட்டுதல் எனவரும்.

கருங்காலி : பகைவனிடத்தில் உளவு சொல்பவரையும் அறத்திற்கு அஞ்சாமல் தீங்கு செய்பவரையும் குறித்து வரும் ஒருவசைச் சொல். அழுத்தமான வலிமையான கயமைத்தன்மையை ஆள்பவர் என்பது பொருள். கருமை = வலிமை கருங்கைக்கொல்லன் என்பது இலக்கிய வழக்கு. காலி என்பது கயவாளி என்பதன் மரூஉ. கயமைக்குணங்களை ஆள்பவர் என்பது பொருள். கயவாளி என்பது காவாளி என்று முதற்கண் குறுகிப்பின் காலி என மருவிச்சுருங்கியதாகும்.

கருது : சோளக்கருது, வரகுக்கருது, நெல்லுகருது விட்டிருக்கு என்றாற்போல வரும் கருது என்னும் சொல் கதிர் என்பதன் திரிபாகும். (கதிரு - கருது)

கரைதல் : வழக்கில் இச்சொல் வருந்திப் பேசுதலையும், அழுதுகொண்டு பேசுதலையும் குறிக்கும். இலக்கிய வழக்கில் சான்றுடன் மொழிதலைக் குறிக்கும். கரி = சான்று, அழைத்தல் என்னும் பொருளிலும் வரும். காக்கை கரைகிறது எனவரும் கூவிக்கரைதல் என்பது கொக்கரி என எனவரும் சேவல் கொக்கரக்கோ எனக் கூவுகிறது. இதன் செம்மையான வடிவம் கூக்கரைக்கோ என்பதாகும்.

கலவரம் : இது பூசல் என்னும் பொருளிலும் கலவரம் காரணமாக எழும் அச்சத்தைக் குறித்தும் வரும் வழக்குச்சொல். ஊர்ல கலவரம் என்றும் அவன் என்ன ஆகுமோ என்று கலவரப்படுகிறாள் என்றும் வழங்கும். இது கலாம்+வரல் என்னும் இருசொற்களின் தொகை. கலாம் வரல் என்பது கலவரம் என மருவிய வழக்கு - கலாம் என்பது கலகம் எனவும் வரும் கலகம் காரணமாக வரும் அச்சம் கலக்கம் எனப்படும். கலங்குதல் = அச்சத்தாலும் துன்பத்தாலும் நிலைகுலைதல் - நிலை தடுமாறலை (சலனமடைதல்)க் கலகலத்தல் என்ப.

கலாம் : பூசல் இது கலகம் என்றும் வரும் போருக்கு முன் நிகழும் ஆரவாரம். வாயாலும் கருவிகளாலும் எழும் ஆரவாரம் கலாம். வடகம் வடாம் எனத்திரிதல் போலக் கலகம் - கலாம் எனத்திரிந்தது.

கவைக்குதவாது : ஒருவர் செய்யும் செயல் பயன்படாது என்னும் கருத்தில் கூறும் வழக்குச்சொல். வேலியின் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் செல்வதற்கு இடையே இருபிளவாக அமைந்த மரக்கிளையைக் கவைக்காகத்தேரும் பொழுது ஒவ்வொன்றாகப் பார்த்து இது கவைக்கு உதவும் இது கவைக்கு உதவாது எனப் பிரிப்பான். அச்செயல் உவமமாக இது குறிப்பிட்ட காரியத்திற்கு ஆகும். இது ஆகாது என்பதற்கு ஈடாக உவம நோக்கில் இவ்வழக்கு அமைந்ததாகும்.

கவைக்குதவாத பேச்சி : பொருள் நுணுக்கம் இலக்கிய வளமில்லாமல் ஒருவர் பேசும் சொற்பொழிவு இலக்கியத் தரம் வாய்ந்ததன்று என்பதைச் சுட்ட எழுந்த வழக்குத்தொடர். இதன் செம்மையான வடிவம் கவிக்குதவாத பேச்சு என்பதாகும். கவி ஈண்டு இலக்கியத்தைக் குறித்து நின்றது.

களிப்பு : மகிழ்ச்சி என்பதற்கு இணையாக வழங்குஞ்சொல். மதுவை உண்டு அடையும் உணர்விற்குக் களிப்பு என்பது பெயர். கள்ளினால் வரும் இன்பம் இது. தொடக்க காலச்சிறப்புப் பொருளின் நீங்கிப் பொதுவாக இன்ப உணர்வைக் குறித்து வழங்கலாயிற்று. களித்தான் எனின் கள்ளுண்டான் என்பது பொருள். இதன் வேர்ச்சொல் கள். இதனடியாகப் பிறந்த சொற்கள். களிறு, காளை, களை, காளம் முதலியவையாகும். களி என்னும் பெயர்ச்சொல்லின் பொருள் வேறு களி-சேறு-சேறு போலக் குழையப் பொங்கிய உணவு களி எனப்படும். கம்பங்களி - கேழ்வரகுக் களி என வரும்.

களிம்பு : களிபோலச் செய்யப்பெற்ற பூச்சு மருந்து. இச்சொல்களியொப்பு என உறுப்பெற்று களிப்பு என்றாகி அது மகிழ்வை உணர்த்தலின் மெலிந்து களிம்பு என ஆக்கம் பெற்றது.

களை கட்டி விட்டது : ஒரு செயல் தொடங்கிச் சிறப்பாக நிகழும் நிலையை உணர்த்தும் வழக்குத் தொடர். கச்சேரி களைகட்டிவிட்டது. ஆட்டம் களை கட்டிவிட்டது எனவரும். களை என்பது களிப்பினால் வரும் அழகு உள்ளக்கிளர்ச்சி ஒளி நிலைகளைக் குறிக்கும். இதன் செம்மையான வடிவம் களைகிட்டி விட்டது என்பதாகும். கிட்டுதல் குறிக்கொண்ட பொருள் அகப்படுதல்.

கன்னாபின்னாவெனப் பேசுதல் : காது கொடுத்துக் கேட்க முடியல அவன் கன்னாபின்னாவெனப் பேசுகிறான் என்பது வழக்கு. இது கர்ணபின்னம் என்பவற்றின் திரிபு - கர்ணம் = காது பின்னம் = வேறுபாடு சிதைவு காதால் கேட்கத்தகாதவாறு பேசுகிறான் என்பது கருத்து.

காக்காப் பிடித்தல் : அவன் அவனைக் காக்காப் பிடித்துக் காரியஞ் சாதித்துக் கொண்டான் என்றாற் போலவரும். இது கால் கை பிடித்து என்பவற்றின் திரிபாகும். காலைத்தொட்டு வணங்கியும் கையைப்பிடித்துக் கெஞ்சியும் காரியம் சாதித்தல். கால் கைப் பிடித்தல் காக்கைப்பிடித்தல் காக்காப் பிடித்தல் எனத் திரிந்தது.

காக்கா வலிப்பு : கால் கைகளை வெட்டி வெட்டி இழுக்கும் ஒருவகை நரம்பு வலிப்பு நோய். இதுவும் கால் கை வலிப்பு என்பதன் திரிபாகும். கால் கை வலிப்பு - காக்கைவலிப்பு காக்காவலிப்பு எனத் திரிந்தது.

காசு : பொற்காசு - பொன் ஒளிவிடுதலால் காசு எனப்பட்டது. இச்சொல் காய்ச்சு என்பதன் இடைக்குறையாகும். காய்தல் - ஒளிர்தல் காய்ச்சி அச்சிடப்படுதலின் நாணயம் காசு எனப்பட்டது.

காஷையாடை : கஷாய ஆடை என்பதன் மரூஉப் பெயர்.

காட்டியும் : நான் வருங்காட்டியும் இவன் சாப்பிட்டு விட்டான். நான் சாப்பிடங்காட்டியும் இவன் கூப்பிட வந்துட்டான் என வரும் வருவதற்குள் வரும்பொழுதிற்குள் என்பது பொருள். இது காஷ்டையுள் என்பதன் திரிபாகும். காஷ்டை என்னும் வடசொல் சிறிய பொழுது என்று பொருள் நான் வரும் காஷ்டையுள் என்பது வருங்காட்டியும் எனச்சிதைந்து மருவியது.

காட்டிலும் : அவனைக் காட்டிலும் இவன் நல்லவன். இதைக் காட்டிலும் இது பெரிது என வழங்கும் அவன் காட்சியிலும் இவன் காட்சியிலும் என்பது கருத்து காட்சி என்பதற்கு அளவு என்பது பொருள். காட்சி என்பது பார்வை எனவும் பொருள்தருதலின் அவனைப் பார்க்கிலும் இவன் நல்லவன் என்றாற்போலவும் வழங்கும். பார்த்தல் என்பதற்கு காட்சியளவை என்பது பொருள்.

காடன் மாடன் : சிறு தெய்வங்களுள் ஒன்றன் பெயர். சுடுகாட்டில் விளங்கும் தெய்வம் என்னும் பொருளில் வழங்கும். இது சிவபெருமானுக்குரிய பெயர்களுள் ஒன்றாகும். காட்டில் நடமாடுபவன் - காடன் - "கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை" என்பது திருவாசகம் மாடன் மாடு - நந்தி - ஏற்றுக்கொடி ஏற்றூர்த்தி உடைமையின் சிவனுக்கு மாடன் என்பது பெயர்.

காத்தான் தீத்தான் : இந்த வேலைக்கு ஆள் வேண்டுமே என்னும்போது யாராவது ஒருகாத்தான் தீத்தான் வரமாட்டானா பார்ப்போம் என்றாற்போல வழங்கும் பேச்சில் காத்தான் தீத்தான் என்பவை ஒருவர் பெயர் சுட்டி நிற்றலைக் காணலாம். இவற்றுள் காத்தான் என்பது திருமாலுக்கும் தீத்தான் என்பது சிவனுக்கும் உரிய காரணப் பெயர்களாம். காத்தற் கடவுள் = திருமால் = காத்தான் அழித்தற் கடவுள் சிவன் தீத்தான். மேலும் சிவபெருமான் ஒருகையில் தீயினைக் கொண்டிருத்தலாலும் தீத்தான் என அமைந்தது.

காதகன் : கிராதகன் என்னும் வடசொல்லின் திரிபு. கிராதகன் உயிர்களை வேட்டையாடுபவன் அம்முறையில் கொலை முதலிய கொடுஞ்செயல் புரிபவனைக் காதகன் என்றனர். மற்று காதுதல் என்பதற்குக் கொலை செய்தல் என்பது பொருள். இது தமிழ்ச்சொல் அம்முறையிலும் காதகன் என்பது அமையும்.

காதல் : கதுவல் - பற்றுதல் - தலையின் இருபுறமும் பற்றியருந்தலால் செவிக்குக் காது என்பது பெயர். கதுவாய் என்பது இலக்கண வழக்கு

கைம்மாறு கருதாதபற்று காதல். அல் - ஆதல் என்பதன் சுருக்கம் விகுதியளவாய் நின்றது. ஒற்று இரட்டிக்குமிடத்துக் காத்தல் எனவரும். காத்தலின் பகுதி கா. காதலின் பகுதி கது. கதுவுதல் - காதல் என ஆக்கம் பெற்றதாகும். இனிக்காமம் என்பதன் முதனிலையாகிய காம் என்பதன் ஈறுகெட்டுத் தல் என்னும் விகுதி பெற்றதாகக் கருதுவாருமுளர்.

காது குத்துதல் : 1. காது குத்துதல் என்பது காதில் துளையிட்டு கடுக்கன் தோடு முதலிய அணிகளைப் பொருத்துதலைக் குறிக்கும் குறிப்புமொழி. இதனை உவமாகக் கொண்டு ஒருவன் பொய்யை மெய் போல அணி நலத்தோடு கூறும் கூற்றை வெளிப்படுப்பது. வீட்டிற்குள் மறைத்து வைத்துக் கொண்டு ஆள் வெளியூர் சென்றிருப்பதாக என்னிடம் காது குத்துகிறான் என்றாற் போல வரும். 2. சிறுபான்மை காதருகில் வந்து ரகசியமாகக் கூறுதலைக் குறித்தும் வரும். அதற்குக் காதின் கண் ஓதல் என்பது காதில் உகுத்தல் - காது உகுத்தல் - காது குத்தல் என்பது கருத்தாகும்.

காதுல பூச்சுற்றல் (பூ வைத்தல்) : ஒன்றை உள்ளபடிக் கூறாமல் கேட்போன் தயங்குமாறு ஏமாற்றும் முறையில் ஒன்றைக் கூறுவது. நன்கொடை பெற வந்தவர் தருபவர் உவக்குமாறு இந்த விழாவில் உங்களைத் தலைவராக்கி மகிழ ஆசைப்படுகிறோம் என்றாற் போலக்கூறுதல். காதில் பூச்சுற்றல் - அதற்கு அலங்காரம் செய்தல் அது போல அலங்காரமாகப் பேசுதலைப் பூச்சுற்றல் என்றனர். இது காதில் பூவைத்தல் என்றும் காதில் பூ என்றும் வழங்கும்.

காதைக் கடித்தல் : பலருக்கு இடையே கேட்பவனுக்கு மட்டும் கேட்குமாறு காதோரமாக வந்து காதில் உதடுபடுமாறு ஒரு செய்தியைச் சொல்லுதலைக் காதைக் கடித்தல் என்ப. காதருகே வந்து பேசுவது கடித்தலைப் போலக் காட்சிருதலின் இவ்வழக்கு ஏற்பட்டது.

காமம் : காம் - பேரவா = அடங்காத அவா தேம் - இனிமை நாம் = (அச்சம்) என்பவை போன்று மகர ஈறாக நின்று பண்புபெயர் விகுதியாக அம் என்பதனொடு கூடிக் காமம் என ஆக்கம் பெற்றது. காமத்திற்கு உரிய தெய்வம் காமன் காம் அன் = காமன் கா + மன் எனப் பிரிப்பின் அது தேவர் தலைவனாகிய இந்திரனைக் குறிக்கும். இனிக்காம் + மன் என்பதன் மகரமெய் கெட்ட புணர்ச்சி எனினும் ஒக்கும்.

கார் : கருமை என்பதன் உரியடியாகிய கர் என்பது கார் என நீண்டது. கருமை மேகத்திற்கும்பின் மேகம் பெய்யும் மழைக்குமாயிற்று இருமடி ஆகு பெயர். கார் கருமைபுணர்த்தலை எருமையைக் காரான் என்பதனால் அறியலாம்.

காராட்டுக்காலம் : ஆடு மாடு நாய் பூனை முதலிய விலங்குகள் கருக்கொள்ளும் பருவகாலத்தைக் குறித்து வரும் கொங்கு நாட்டு வழக்குச் சொல். ஆண் விலங்குகள் பெண் விலங்குகளைக் கூடிக் கருவூட்டுங்காலம் என்பது கருத்து. கருவூட்டுக் காலம் என்பது சிதைந்து காராட்டுக் காலம் என வழங்குகின்றது.

காலங்காத்தாலே : விடியற்பொழுதில் என்று பொருள் தரும். இதன் செம்மையான வடிவம் காலைக்காலத்திலே. காலை என்பது அம்சாரியை பெற்று காலங்காலத்திலே என்றும் வரும். மற்றும் காலா காலத்தில் *காரியத்தை முடிக்க வேண்டும் என்னும் வழக்கில் காலமாகும் காலத்தில்,* காலமாங்காலத்தில் என்பது காலாகாலத்தில் என அமைந்ததாகும். இனி காலம் + அகாலம் என்பவையும் காலாகாலத்திலே என வரும். அதற்கு ஒத்த நேரம் ஒவ்வாத நேரம் பார்த்துச் செயல் புரிதல் வேண்டுமென்பது பொருள். இது தனித்து 'காத்தாலே' எனவும் வழங்கும். இதற்கு பொழுதோடு நேரத்தில் என்பது பொருள் காலத்தாலே என்பது காத்தாலே என மருவிற்று.

காலம்பற : காலம்பறக்கி நாளைக் காலம்பறவா பேசிக்கொள்ளலாம் என்றாற்போல வழங்கும வழக்கு. காலம் பெற என்பதன் திரிபு. காலம் அமைய காலம் பொருந்த என்பது பொருள். *இனி காலம்பறக்கி வா* பேசிக்கொள்ளலாம் என வருமிடத்துப் பறக்கி என்பது பிறக்க என்பதன் திரிபாகும். காலம் பிறக்க = காலம் உண்டாக, என்பது கருத்து. இதில் காலம் என்பது சூரியனைக் குறிக்கும். கதிர்களாகிய கால்களையுடையமையின் சூரியனுக்குக் காலம் என்பது ஒரு பெயர். பகலும் இரவுமாகிய காலத்தைச் செய்பவனாதலின் காலம் எனப்பட்டது எனினுமாம்.

காலி : ஒழுக்கமற்ற பொல்லாதவனையும், பொருள்கள் நீங்கிய வெற்றிடத்தையும் ஆடுமாடு முதலிய விலங்குகளையும் குறித்து வழங்கும் சொல்.1. பொல்லாதவரைக் குறிக்குமிடத்து இச்சொல் கயவாளி என்பதன் மரூஉவாகும். கயவாளி கயமைத்தன்மையை ஆளுபவன் என்பது பொருள். கயவாளி - என்பது காவாலி என்றும், பின் காலி என்றும் மருவியதாகும். 2.காலிமனை, வீடுகாலி செய்யப்பட்டது. வேலை காலியில்லை என்றாற்போல வரும். காலி என்பது காற்றால் நிரம்பிய இடம் காற்றைத் தவிர வேறுபருப்பொருள் அங்கில்லை என்பது பொருள். கால் = காற்று இ. உடைமைப்பொருள் விகுதி. காற்று அருவமாய் எங்கும் நிறைத்திருக்கும் பூதப்பொருள் பருப்பொருள்கள் காற்றை விலக்கித் தம்மைப்புலப்படுத்திக் கொண்டிருக்கும். காற்று நீங்கி நிற்கும். பொருள் நீங்கின் அவ்விடத்தில் காற்றுத் தங்கி நிற்கும். வெற்றிடம் என்பதொன்றில்லை காற்றுமட்டும் உள்ளது எனின் ஏனைய எப்பொருளும் அங்கில்லை என்பது பொருள். அதனால் பருப்பொருளற்ற வெளியிடத்தைக் காற்றுக் கொண்டுள்ள இடம் என்னும் பொருளில் *சான்றோர்கள்* காலி என்றனர். அது கருத்துப் பொருளாய்

பருப்பொருள் இல்லாத இடத்தைக் குறித்து நின்றது. வேலை காலி இல்லை என்றால் வேலை செய்பவர் காற்றை நீக்கி அவ்விடத்தில் உள்ளனர் அங்குக் காலியில்லை (காற்றில்லை) என்பது பொருள். ஒருவரைப் போகச் சொல்லும் போது சரி நீ இடத்தை காலி செய் என்பர். நீ நீங்கி அங்குக் காற்றை நிரப்பு என்பது பொருள். காலிமனை எனின் பருப்பொருளாகிய வீடு இல்லை நுண்பொருளாகிய காற்று மட்டும் உள்ளது என்பது பொருள். 3.விலங்குகளுக்கு கால்நடை என்பது ஒரு பெயர் மக்கள் நாநடை (பேச்சு) கால்நடை இரண்டும் உடையவர்கள் விலங்குகளுக்குப் பேசும் ஆற்றல் அதாவது மொழி நடையில்லை அதனால் அவற்றைக் கால்நடை என்றனர். அங்ஙனம் கால் மட்டும் உள்ளமை குறித்து ஆடுமாடுகளைக் கால்நடை என்றனர். கன்று காலிகள் என்பது வழக்கு.

காலிப்பயல் : முதற்பொருள் கயவாளிப்பயல் இரண்டாவது கால்நடையைப் போல விலங்குத்தன்மையுடைய பயல் என்பதாகும்.

காலேயம் : பலபொருள் தரும் ஒரு சொல் இது 'கள்'ளிற்குப் பெயராக வருமிடத்து கலயம் என்பதன் தத்திதமாக அமைந்ததாகும். கள் - கலயத்தில் வடிக்கப்படுதலின் கலயத்தில் வடிவது காலேயம் எனப்பட்டது.

காவு கொடுத்தல் : சிறு தெய்வங்களுக்குக் கோழி ஆடு மாடுகளை வெட்டிப் பூசனைபுரிதலைக் காவு கொடுத்தல் என்ப. காட்டு மனிதர்கள் மனிதரையும் காவு கொடுப்பர். காவு என்னும் இச்சொல் வெட்டிப் பிளத்தல் இருகூறாக்குதல் என்னும் பொருளுடையது. கவைத்தல் = பிளத்தல் கவைத்தலைச் செய்வது காவு - காவு கொடுத்த பொருள் உயிர் நீங்கி விடுதலின் காவு கொடுத்தல் என்பது கொலை செய்தல் என்னும் பொருளிலும் வழங்கும். தெய்வத்திற்குத் தரும் நிவேதனம் தமிழில் பலி என வழங்கும். தேவர் பலி, நாகர் பலி என வழங்கும். காவு கொடுத்தல் ஒருவாறு நிவேதனமாகப் படைத்தலேயாதலின் காவு கொடுத்தலைப் பலி கொடுத்தல் என்றும் கூறுவர். ஒப்புமை நயத்தால் பொருளிழப்பையும் பலிகொடுத்தல் என்ப.

கிசுகிசுத்தல் : ஒலி எழுப்பாமல் காற்றோசையளவில் மிக மென்மையாகப் பேசுதல் கிசுகிசுத்தல் எனப்படும். கிஸ் கிஸ் என்பது காற்றோசைக் குறிப்பு அது கிசு கிசு என வரும். இது கிசு மூசு எனவும் வழங்கும். மூசு - மூச்சு என்பதன் மரூஉ. கிசு கிசுத்தல் பெரும்பாலும் மகிழ்ச்சியான கருத்தைப் பற்றி வரும்.

கிடத்தல் : நிலம் படுக்கை முதலிய இடங்களைக் கிட்டிப்படுத்திருத்தலைக் கிடத்தல் என்ப. இச்சொல் கீழ் + அடுத்தல் - கீழடுத்தல் என்னும் இரு சொற்களின் மருவாய் அமைந்த ஒரு சொல்லாக்கம். இதனடியாகப் பிறந்த சொல் கிட்டுதல் = அடைதல். கிட்டுதல் ஒன்றை அடைதலாகலின் - மனைவியொடு படுத்திருத்தலுக்கே உரியது இச்சொல் என்ப. வாள் வேல்

முதலிய கருவிகள் தன்னைக்கிட்டிப் பொருதலின் கேடகத்திற்குக் கிடுகு எனப்பெயர் அமைந்தது. மண்ணைக்கிட்டிக் கிடத்தலாள் புழுவிற்குக் கீடம் என்பது ஒரு பெயர்.

கிடாசல் (கிடாசுதல்) : செறித்தல் எடுத்து வீசுதல் என்னும் பொருளில் வழங்கும் வழக்குச் சொல். ஆணி ஆப்பு முதலியவற்றை மரம், சுவர் முதலியவற்றில் செறியச் செய்தல் கிடாசல். இது கிட்ட (அடைய)ச் செய்தல் என்னும் பொருளில் அமைந்ததாகும். எடுத்து வீசுதல் என்னும் பொருளில் கடாசல் என்பதன் திரிபாகும். கடாசல் - கடாவுதல், கடக்கச் செய்தல் என்பது பொருளாகும். அம்முறையில் இறுதியாக அமைந்த நிலை கடைசி என அமைந்தது. முதல் இடை கடை என்பதன் கண்உள்ள கடை என்பது வேறு கடாசு என்பதன் திரியாகிய கடைசி என்பது வேறு என்க.

கில் – கிற்றல் : கில் - முனைதல் என்னும் பொருள் தரும். ஓர் இடைச் சொல் பெரும்பான்மையும் எதிர்மறைப் பொருளில் வரும். செய்கிலேன் - வருகிலேன் - காண்கிலேன் என்று வரும் உடன்பாட்டில் கிற்றல் என்று வரும். செய்கிற்பன், வருகிற்பன் என வரும். இச்சொற்கள் தனித்து வினையாகவும் வரும். "கிற்பன், இல்லேன் என்றிலன்" என்பது திருவாய்மொழிச் செய்யுள் அடி. "கிற்றவாமனமே" என்பது திருவாசகச் செய்யுளடி. "நெண்டிக் கொண்டேயும் கிலாய்ப்பன்" என்பது சுந்தரர் தேவாரத்தில் வரும் அடி. இடைச்சொல்லாகத் தனியே வருமிடத்து ஐயப்பொருளிலும் வரும் கொள்ளுங்கில், வருங்கில் எனவரும்.

கிலி : அச்சம் என்னும் பொருளில் வரும் வழக்குச்சொல். போலீசுக்காரன் வந்துவிடுவானோ எனத் திருடனுக்குக்கிலி. கொள்ளைக்காரர்கள் நடமாட்டத்தைக் கேட்டு அந்தக் கிராமமே கிலி பிடிச்சுப் போயிருக்கு என்றாற்போல வரும். இதன் மூலச்சொல் கிலம் என்னும் வடசொல். கிலம் - சிதைவு அச்சத்தால் மனம் சிதைதலின் அச்சம் - கிலி எனப்பட்டது.

கிழங்கு : நிலத்தினுள் கீழே முளைகொண்டு விளைதல் கிழங்கு. இது கீழ் + அங்குரித்தல் என்பதன் மரூவாக உருவான சொல். அங்குரம் = மூளை - அங்குரித்தல் முளைத்தல் மண்ணுள் விளைவன இரு திறப்படும். ஒன்று வேராக வேதடித்து விளைவது. மற்றொன்று வேரைப் பற்றிக்கொண்டு விளைவது. சேம்பு, மஞ்சள், கருணைவள்ளி முதலியவை வேறாகவே விளையும். இவையே கிழங்கு எனப்படும். மற்றது நிலக்கடலை முதலியனவாகும். வெங்காயம் முதலியன வேராகவே விளையினும் வேறு பெயர்களால் சுட்டபெறுவனவாயின.

கிறுக்கு : பித்தேறி சித்தங்குலைந்த நிலையை உணர்த்தும் வழக்குச் சொல். கிறக்கம் = மயக்கம், கிறுகிறுப்பு - மயக்கத்தால் சுழல்தல். கிறு என்பது

இவ்விகுதி பெற்றுக் கிறுக்கு என அமைந்தது. கிறுக்கல் தெளிவின்றி முறைகேடாக வரையப்படும் வரிகளைக் கிறுக்கல் என்ப.

கீச்சுக்குரல் : மென்மையாகத் தாழ்வாக அமைந்த குரலொலியைக் கீச்சுக்குரல் என்பர். இது கீழ்ச்சுருதி (கீழ்ச்ஸ்தாயி)க்குரல் என்பதன் திரிபு. சில பறவைகளின் ஒலியைக் கீசுதல் என்பர். கீசு கீசு என்னும் புள்ளரவம் கேட்டிலையோ என்பது திருப்பாவைப் பாடலடி. கிளியின் குரலையும் கீச்சுக்குரல் என்பர். "பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக்கீச் சென்னும் கிளி" என்பது தனிப்பாடலில் வரும் அடி.

கீந்தல் : கிட்டிப்புள் விளையாடும் சிறுவர்கள் குழியில் குறுக்காக வைக்கும் சிறு மரத்துண்டு புள் எனப்படும். (புள் = சிறு குருவி) அதனை நீண்ட கோலால் உந்தித் தள்ளுதல் கீந்தல் எனப்படும். இதன் செம்மையான வடிவம் கீழ்உந்தல், கீழுந்தல் - கீந்தல் என மருவிற்று.

குசுகுசுத்தல் : அங்கே என்ன குசுகுசுன்னு பேச்சு இங்கே வந்து நல்லா கேளுங்க என்றாற் போலவரும். குஸ் குஸ் ஓசைக்குறிப்பு இது பெரும்பாலும் வருத்தமான, இரகசியமான கருத்தைப்பற்றி நிகழும்.

குஞ்சு : சிறியது சிறிய அளவுள்ளது என்னும் பொருளுடைய சொல். இதன் செம்மையான வடிவம் குறுஞ்சீர். குறுமை = சிறுமை. சீர் - பொருள் பறவைகளின் பார்ப்புக்களுக்குப் பொதுப்பெயர் கோழிக் குஞ்சு, காக்கைக்குஞ்சு எனவரும். குறுஞ்சீர், குஞ்சி, குஞ்சு என மருவியது.

குஞ்சும் குழுவானும் : குஞ்சு மேற்கூறப்பட்டது. குழுவான் என்பது குழவியன் என்பதன் திரிபு குழவி. பறவையல்லாதவற்றின் குட்டிகளுக்கு உரிய பெயர். அது குழவன், குழுவான் எனத்திரிந்தது.

குட்டி : சிறு விலங்குகளின் குழவிகளுள் நாய் பூனை முதலியவற்றின் குழவிகள் பிறக்கும்பொழுது கண்ணிமை மூடிக்கொண்டிக்கும். பின்னர் சில நாட்களில் கண் திறக்கும். கண் திறவாத நிலையில் அவற்றிற்குக் குருளை என்று பெயர். குருடு என்பதன் முதனிலை குருள் - அது உடையது என்னும் பொருள் தரும். துவ்விகதி சேர்ந்து குருடு எனவரும். குருடு குருட்டு என இரட்டிக்கும். குருட்டுப்பூனை, குருட்டு - குட்டு எனக்குறைந்து இகரவிகுதி பெற்றுக் குட்டி எனவரும். இனி குள்ளம் குட்டை என்பது குறுகிய சிறிய அளவு என்பது பொருள். அதன் பகுதி 'குள்' என்பது. அது 'த்' எழுத்துப் பேறும் இகர விகுதியும் பெற்று குள் + த் + இ = குட்டி என அமைந்ததெனலும் ஒன்று.

குடர் : வயிற்றின் உறுப்புக்களுள் ஒன்று உள் கூடாக குழலாக இருப்பது என்பது பொருள். கூடு + அர் = கூடர் - குடர் என வரும். லகரம் போலி வகையால் அமைந்து குடல் என வழங்கும்.

குடலை : பூக்களைப் பறித்து வைத்தலுக்குரிய கூடை போன்ற சிறிய கூடு. இது குடைவாக ஓலையில் செய்யப்படுகிறது. ஆகலின் கூடு +ஓலை என்பவை இணைந்து குடலை என்றாயிற்று.

குத்திக் காட்டுதல் : மறைவாக உள்ள ஒரு செய்தியை பிறரறியுமாறு ஒருவர் அவர் மனம் வருந்தும்படிப் பேசுதல் குத்திக்காட்டல் எனப்படும். புறத்தொழுக்கமுள்ளவனாகத் தன் கணவனைக் கருதிய மனைவி அதைப் பற்றிக் கடிந்து பேசும்பொழுது அவன் நான் ஒன்றும் காதல் கடிதம் எழுதவில்லையே என்று கூறுவது போன்று மனைவி சிறுமியாக இருந்தபோது பள்ளியில் உடன் பயின்ற மாணவனுக்குக் கடிதம் எழுதியதாகப் பெற்றோரால் கடிந்து கொள்ளப்பட்டவள் அதனைக் கணவன் இப்பொழுது கூறுவது குத்திக்காட்டல் எனப்படும். சாக்குப்பையில் மூடிக்கட்டப்பட்டிருக்கும் பொருளை இதுவரகு கம்பு, நெல் என்று பிறருக்குக் காட்டக் குத்தூசியில் குத்தித் தானியம் இது என்று காட்டுதல் போல மறைந்துள்ள பொருளை வெளிப்படுத்தல் குத்திக்காட்டுதலாகும். (இடித்துக்காட்டல் காண்க)

குத்து : மூங்கிற்குத்து என்பது வழக்கு. மூங்கிற்குவியல் கூட்டம் என்பது கருத்தாகலின் இது கொத்து என்பது இதன் செம்மையான வடிவம் அது குவி+து=குவித்து - கொத்து என வரும். குவி+து=குத்து எனினும் பொருந்தும்.

குதறுதல் : குத்தி அறுபடச் செய்தல் குதறுதல் என மருவியது. குத்தி+அறுத்தல்=குதறுதல். நாய் கோழியைக் கடித்துக் குதறிவிட்டது எனவரும்.

குதியாளம் : சிறுவர் சிறுமியர் குதித்து ஆடும் விளையாட்டினைக் குறித்து வழங்கும் கொங்கு வட்டார வழக்குச்சொல். நாட்டிய மகளிர் ஆடுமிடத்துத் தாளால் தாளமிட்டு ஆடுவர். அதற்கு குதித்தாளம் என்பது பெயர். அது மருவிக் குதியாளம் என ஆயிற்று.

குந்தியிருத்தல் : உடம்பை வளைத்து முழங்கால் மேல் எழ அமர்தலைக் குந்தியிருத்தல் என்ப. இது குன்றியிருத்தல் என்பதன் திரிபாகும்.

குப்புறுதல் : குப்புறுதல் = குழந்தை குப்புத்துக்கிறது. அவன் குப்புறக் கிடக்கிறான் என்பன வழக்கு. அஃதாவது மார்பு தரையில்பட முதுகு மேற்புறமாகக் கிடத்தல். தெய்வத்தையும், பெரியோரையும் கும்பிடுங்கால் நெடுஞ்சாண் இடையாகக் கும்பிடும்போது மார்பு தரையில் படும்படிக் கைகளைக் கூப்பி நீட்டி விழுந்து கும்பிடுதல் குபபுறுதலாகும்.

குப்பை : தரையில் பலவாறாகச் சிதறிக்கிடக்கும் தூசு, துரும்புகளைக் குப்பை என்பர். அவை கூட்டிக்குவித்து அப்புறப்படுதற்குரியவையாதலின்

குவித்தற்குரியவை என்னும் கருத்தில் குப்பை எனப்பெயர் பெற்று குவிப்பு - குப்பு + ஐ = குப்பை. அம்முறையில் குழுமிய பொருளும் குப்பை எனப்பட்டது. கூடுதல் - கூட்டம் குவிதல் = குப்பை.

குருட்டுக்காது : செவியின் முன்பக்க நடுவில் செவுளை ஒட்டிச் சிறிய அளவில் முக்கோணமாக அமைந்திருக்கும் பகுதியைக் குருட்டுக்காது எனல் வழக்கு. இதன்கண் சிறிய அளவில் அணிபூட்டுதல் மரபு. இதன் செம்மையான வடிவம் குறை ஒட்டுக்காது. காதின் முன் குறிதாக ஒட்டியிருப்பது என்பது பொருள்.

குருடு : கண் காணும் நிலையை இழந்து நிற்றல் - பார்வையின்மையை வழங்கும் சொல். வெள்விழிக் கருவிழி இமைத்தல் செய்ய இருக்கும் பார்வை மட்டும் இருக்காது. அத்தகு கண்களைச் சுட்டும் சொல் இது. (பொட்டை காண்க) இச்சொல் - குரு+உள்+தூ=என்னும் மூன்று உரிச்சொற்களால் உருவாகிய ஒரு சொல்லாக்கம். குரு=ஒளி உள்=உள்ளிடம் தூ = நீக்கம் உள்ளிடத்து ஒளி நீங்கியது - உள்ளொளி போயது என்பது பொருள். குரு+உள் என்பவை குருள் என்றாகிப்பின் தூ என்பது குறுகி விகுதியளவாய் குருள்+து=குருடு என்று ஆக்கம் பெற்றது. குரு என்பதற்கு நேர் பொருள் நிறம்அது ஆகுபெயராய் ஒளியை உணர்த்தி நின்றது. இது பால் காட்டும் விகுதி பெற்றுக் குருடன், குருடி. குருடர், குருடு என வரும்.

குருத்து : மூங்கிற் குருத்து - பனங்குருத்து என்றாற் போல ஒன்றினின்று முளைவிட்டுத் தோன்றும் பொருளைக் குறித்து வரும் சொல். இதன் உரியடி கூர்-கூர்தல்=மிகுதல். ஒன்றினின்று மிக்கு வெளிப்படுதல் குருத்து. அம்முறையில் குரு என்பது தொழிற் பண்பு விகுதி பெறுமிடத்து குரல் என்றாகும் புல்லின் கதிர், நெல்லின் கதிர்களுக்குக் குரல் என்பது பெயர். கண்டத்தினின்றும் வெளிப்படுதலின் ஓசைக்குக் குரல் என்பது பெயர். குரலை வெளிப்படுத்திக்கொண்டே இருத்தலின் சிறிய புட்களுக்குக் குருவி என்பது பெயர். குரு என்பதற்கு நிறம் என்பது ஒரு பொருளாகலின் பண்ணிசைக்கு நிறம் என்று பெயர் அமைந்தது. எழுவகைப் பண்களுள் முதற் பண்ணிற்குக் குரல் என்பது பெயர்.

குருமுட்டி : அறிவு குறைந்தவன் முட்டாள் என்னும் பொருளில் வழங்கும் வழக்குச்சொல் இது. கூர்+முட்டி=என்பவற்றின் சிதைவாக்கம் கூர்+முட்டி=குருமுட்டி. கூர்மை - நுண்மை. நுட்பம் நுட்ப அறிவைக் குறிக்கும் கூர்மழுங்குதலை முட்டு (முட்டுப்பாடு) என்று கூறுவர். அது வழக்கில் மொட்டு - மொட்டை - முட்டி என வழங்கும் விரலை மடக்கிக் குவித்தகை முட்டி எனப்படும். கூர்மை முட்டுப்பட்டவன் என்னும் பொருளில் குருமுட்டி என அமைந்தது. குறுமுட்டி எனல் தவறு அது குறைந்த அளவு முட்டாள் தன்மையுடையவன் என்று பொருள் தரும்.

குரைத்தல் : இடைவிடாது ஒலி எழுப்பிக் கரைதல். நாய் குரைக்கின்றது என்பது வழக்கு. ஒருவர் சினத்தை உள்ளடக்கிக்கொண்டு பேசுதலை வழக்கில் கொக்கரிக்கிறான் என்ப. அது கோபித்துக் கரைதல் என்பதன் சிதைவு. கோபக்கிரித்தல் கொக்கரித்தல் எனவரும்.

அடுத்தடுத்து எதிர்வாதமாகப் பேசுதலை மேக்கரிக்கிறான் என்ப. மேற்கரித்தல் மேக்கிரித்தல் எனவரும்.

குலாமர் : அடிமைப்பட்டவர் அடிமையில் மோகமானவர் என்பது பொருள். இச்சொல் அடிமை எனப்பொருள் தரும். குலாம் என்னும் உருதுச் சொல்லடியாகப் பிறந்த திசைச்சொல். குலாம்+அர்=குலாமர். "கொடுக்க அறியாது இறக்குங்குலாமருக்கென் சொல்வேன்" என்று பட்டினத்தடிகள் பாடலிலும் "குலாமிடற் கேக்கறும் பெருமாளே" எனத் திருப்புகழிலும் இவை வந்துள்ளன.

குழையடித்தல் : ஒருவரை ஒருவர் இதமாகத் தொடர்ந்து பேசி வயப்படுத்தலைக் குறித்து வரும் வழக்குச் சொல். குழை என்பது மரத்தின் தழைகளைக் குறிக்கும். மருள் கொண்டிருப்பவரை மந்திரவாதிகள் வேம்பங்குழையைச் சுழற்றியும் தடவியும் அடித்தும் மந்திரம் சொல்லி மயக்கத்தை நீக்கி வயப்படுத்துவர். அவ்வொப்புமை வகையால் அமைந்த தொடர் குழையடித்தல். ஒருவர் நெஞ்சங் குழையப் பேசுதல் என்பது வெள்ளை விளக்கம்.

குளிப்பாட்டுதல் : ஒருவரை நயமாகவும், புகழ்ச்சியாகவும் பேசித் தன் சொல்லுக்கும் செயலுக்கும் உதவியாக அமையும்படித் தன்வயப்படுத்திக் கொள்ளுதலை குளிப்பாட்டுதல் என்பது வழக்கு. அவன் அவரைக் குளிப்பாட்டித் தன்னிடத்தைப் பிடித்துக்கொண்டான் என்றாற் போல வழங்கும் இத்தொடரின் செம்மையான வடிவம் குளிர்ப்பூட்டுதல் அல்லது குளிர்ப்பாட்டுதல் என்பதாகும். தன்னுடைய நயமான பேச்சினால் ஒருவர் நெஞ்சு குளிரும்படியாகத் தன் கருத்தை ஊட்டுதல் அல்லது பேசுதல். ஆடுதல்=பேசுதல் உரையாடல் என்பது போல ஆடல், ஆட்டுதல் என வரும்.

குளுமாயி : பெண்பாலாருக்கு இட்டு வழங்கும் சேரி வழக்குப்பெயர். மாயன் என்னும் ஆண்பாற் பெயருக்குரிய சொல்லின் ஈறு திரிந்த பெண்பாற்பெயர் மாயி. மகாமாயி - மகமாயி எனவரும். மாரியம்மன் என்னும் தெய்வம் மழைக்குரியதாகும். மாரி=மழை. மாரியம்மனை மகமாயி என்றும் வழங்குவர். மாரி=குளிர். அதனால் குளிர்மாயி என்பது மாரியம்மனின் பெயர். அது வழக்கில் குளிர்மாயி என்பது குளுமாயி எனத் திரிந்ததாகும.

குறியாப்பு : கைம்மாற்றாகத் தானியம் முதலியவற்றைக் கொடுத்து மீண்டும் பெறுதலைக் குறியாப்பு என்பது கொங்கு வட்டார வழக்கு. இதன்

செம்மையான வடிவம் குறியெதிர்ப்பு - எதிர்பார்த்து உதவுதல் என்பது பொருள். இச்சொல் திருக்குறளில் “”வறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரதுடைத்து” என ஆளப்பட்டுள்ளது.

குன்னாளு (குணாலை) : தாளமிட்டுக் கொண்டு உவப்பால் குதித்தாடும் ஆட்டத்தைக் குறித்து வரும் கொங்குநாட்டு வழக்குச் சொல் இது. “குணாலை” என்பதன் திரிபாகும். ‘குணாலை’ என்பது திருமாலடியார்கள் ஆடும் ஒருவகைக் கூத்து கோணிக்கோணி ஆடுவது என்பது பொருள். கோண ஆடல் = குணாலை என மருவிற்றாகும். ஆலுதல் = ஆடுல் - அது ஆலை என மருவிற்று கோண ஆலல் = குணாலை என ஆக்கம் பெற்றது என்க.

கூகை : தேங்காய் பருப்பு முற்றாமல் வழுவழுப்பாக இளநீராக உள்ள காயை கூகை என்பது கொங்கு வட்டார வழக்கும். இதன் செம்மையான வடிவம் கூழ்+காய்-கூழ்க்காய்-கூக்காய்-கூகை என மருவியுள்ளது.

கூடமாட : அவன் கடுமையாக ஒருவனாக நின்று வேலை செய்கிறான் நீ கொஞ்சம் கூடமாட இருந்து ஒத்தாசை பண்ணக்கூடாதா என்றாற் போலவரும். கூட என்பது உடன் என்னும் பொருளிலும் மாட என்பது பக்கம் என்னும் பொருளிலும் அமைந்துள்ளதொரு வழக்குத்தொடர். உடன் என்பது வழக்கில் கூட என வரும். அவன்கூட நீயும் போ என்பது வழக்கு. மாடு என்பது பக்கம் என்னும் பொருளது கால்மாடு தலைமாடு எனல் காண்க. உடனாகவும் பக்கமாகவும் இருந்து உதவி செய்தல் கூடமாட இருந்து செய்தலாகும்.

கூத்து கும்மாளம் : கூத்து = குதித்தாடுதல். கும்மாளம் = கொம்மி கொட்டிப் பாடுதல். கொம்மி = கும்மி. ஆளம் = பாடல். அளத்தல் பேசுதலையும் ஆளம் பாடுதலையும் உணர்த்தும். உள்ளாளம் என்பது ஒரு பாடல் வகை.

கூமுட்டை : ஒரு வேலையைச் செய்யத் தெரியாத பயனற்றவனைக் குறித்து வரும் வசை வழக்குச்சொல் இது. கூழ்முட்டை என்பதன் மரூஉ. கூழ்முட்டை என்பது அழுகிப்போன கெட்டுப்போன முட்டையைக் குறிக்கும். அதாவது வெள்ளைக்கருவும் மஞ்சட் கருவும் நீத்துக்குழம்பாகக் கூழாகிவிடுதல்.

கூர் : நீண்டு முனை குறுகிய நிலையும் தேய்த்து முனையை நுண்மையாக்கிய நிலையும் கூர் எனப்படும். ஈட்டி, வேல் கூராக அமைந்தன. வாள் கூரியது என வரும் பெயர்ச்சொல். இதன் பண்புப்பெயர் கூர்மை. நுணுகிய நிலையும் கூர்மை எனப்படும் அறிவுக்கூர்மை என்ப. மிகுதல் என்னும் பொருளில் உரிச்சொல்லாகும் கூர் என்னும்போது வாயிதழ் குவிந்து முன்வரும் அதனான் குவிந்து முன்வரும் முனையுடையவை கூரியவை எனப்பட்டன. கூர்மையாக நீண்டு வளர்தலின் புல்வகைக்குக் கூரம் என்பது பெயர். கூரத்தினால் வேய்தல் கூரை. கூர் என்பது குர் எனக் குறுகும்

கூரையால் வேயப்பட்டது. சிறு குடிலுக்குக் குரம்பை என்பது பெயர். கூர்தல் தகரங்கெட்டு நகரம் பெற்று வருமிடத்து நீண்டு வளர்ந்த மயிருக்காகி அது கூர்தல் எனப்பட்டது. கூர்தல் கூந்தல் என ஆக்கம் பெற்றது.

கூலி : உழைப்பிற்காகப் பெறும் ஊதியம். பண்டு பணியாளர்கட்கு நாள் ஊதியமாகவும், கிழமை, திங்கள், ஆண்டு ஊதியமாகவும் வழங்குமிடத்து நெல், சோளம், வரகு முதலிய தானியங்களாகவே வழங்கினர். இன்றும உழவர்கட்கு நெல்லாகவோ பிறதானியமாகவோதான் வழங்கப்படுகிறது. தானியம் என்னும் வடசொற்குரிய தமிழ்ச்சொல் கூலம் - கூலமாக அளிக்கப்படும் ஊதியம் கூலி எனப்பட்டது. கூலம் என்னும் சொல் குரல் என்பதனின்றும் ஆக்கம் பெற்றதாகும். குரல் = தானியங்களின் கதிர்களுக்குரிய பெயர். அது வரல் – வால் என ஆக்கம் பெற்றதுபோல குரல் – கூல் என்றாகிப்பின் இனிமை உணர்த்தும் அம்விகுதியொடு கூடிக் கூலம் என ஆக்கமுற்றது.

கெஞ்சல் : மிக நெருங்கி அடுத்தடுத்து இரங்கி வேண்டுதல் என்னும் பொருள்பட வரும் வழக்குச்சொல். இதன் செம்மையான வடிவம் கெழுமுஞ்செயல் கெழுமுதல்=நெருங்குதல் - கெழுமிச் செய்யும் செயல் - கெழுமுஞ்செயல் - கெழுஞ்செயல் கெஞ்சல் என மருவியுள்ளது.

கேள்விமுறை : பொறுப்பேற்று ஒரு சிக்கலை, பொல்லாங்கைத் தீர்க்க வேண்டிய நிலையில் எவரும் அதனைச் செய்ய முன்வராதவிடத்து இப்படி நடக்கிறதே இதற்குக் கேள்விமுறையில்லையா என்று பேசுவது உலக வழக்கு. களத்தில் குவித்து வைத்திருந்தது நெற்குவியல். சரிந்து கிடக்கிறது குறைகிறது. இதற்கொன்றும் கேள்வி முறையில்லையா என்பது போல வழங்கும் தொடர். ஈண்டுக்கேள்வி என்பதற்கு விசாரணை முறை என்பது சட்ட அடிப்படையில் வழக்கை ஆராய்ந்து தீர்ப்புக்கூறுதல். இனி இக்குறையைச் செய்தவர் யார் என்று கேட்பதற்கும் உரிய நீதியாளரிடமும் முறையிடுதற்கும் யாருமில்லை என்பதும் பொருளாகும்.

கைகண்டது : பட்டாங்கு நிகழ்ந்த துய்த்த ஒன்றைப்பற்றி வற்புறுத்திக் கூறுமிடத்து வழங்கும் சொல். கை என்பது முன்னொட்டு அது துய்ப்பறிவினை உணர்த்தி வரும். செரிமானத்திற்குச் சுக்குகை கண்ட மருந்து என்றாற்போல வரும். இது கையாண்டது என்பதன் திரிபாகும். மேற்கொண்டு அநுபவப்பட்டது என்பது பொருள். கையென்னும் உறுப்புத்தாமே எழுந்து கண்களுக்குப் புலனாவன ஆதலின் நேரே கண்டது என்பதனைக் கை என்றனர்.

கைநீளம் : பகை உணர்வோடு இருவர் பேசிக்கொண்டிருக்கும்போதே ஒருவர் மற்றொருவரைத் தாக்கிவிடும்போது அவனுக்குக் கொஞ்சம் கைநீளம்

என்பது வழக்கு. அளவோடு இருப்பின் அடக்கமிருக்கும் அளவுக்கு மேல் நீண்டால் அசைக்கும்போதே ஒருவர்மேற் பட்டுவிடும். ஈண்டு நீளம் என்பது புடைத்தலைக்குறித்து நின்றது. (வாய் நீளம் காண்க)

கைவரிசை : ஒரு செயலைப் புரிவதிலோ பிறரை யேசுவதிலோ பிறரறியாமல் ஒன்றைச் செய்வதிலோ பகைவரை அவர் எதிர்பாராவகையில் வெல்வதிலோ திறமைசாலியாக இருப்பதைக் குறிக்கும் வழக்குச்சொல். இந்தக் காரியத்தைச் செய்யப்பலர் முனைந்து தோற்றுவிட்டனர். நீ உன் கைவரிசையைக் காட்டு என்பது போலவும். உன் கை வரிசையை என்னிடம் காட்டாதே நான் ஒன்றும் ஏமாந்தவனில்லை என்றோ எவ்வளவோ பாதுகாப்பு செய்தும். எதிரிகளை வெல்லும் குறும்போர்ப் பயிற்சிகளுள். மற்போர். குத்துச்சண்டை. குச்சி விளையாட்டு முதலியவை எதிரியைத் தாக்கும் முறைகளையும் எதிரிகள் தாக்குமிடத்துத் தற்காத்துக்கொள்ளும் முறைகளையும் இதற்கு இது என வரிசையாகக் கற்றுக்கொடுப்பார்கள். அது முதல் வரிசை இரண்டாவது வரிசை என எண்ணாற் பெயர் பெறும் அவ்வரிசைகள் கைவரப்பெற்ற போது அவற்றைக் கைவரிசை என்பர். அதனை உவமமாகக் கொண்டு ஏனைய செய்கைகளில் வெற்றிபெறச் சூழும் திறமையையும் கைவரிசை என வழங்கினார்.

கொசு : (1) இது கொதுகு என்பதன் திரிபு. கொதுகு - கொசுகு - கொசு என மருவியுள்ளது. ஈ இனத்தைச் சேர்ந்த சிறகுடைய சிறிய வடிவினது கண்களைச் சுற்றி வட்டமிடும் கூட்டமாக மொய்க்கும் குத்தாது மொய்க்கும் கொத்தாகக் கூடிக் கயிற்றிலோ பிறவற்றிலோ தொங்கும். கொத்தாக மொய்ப்பது என்னும் கருத்தில் கொதுகு எனப்பட்டது. "கொதுகுகளுங்கண்ணை நோன்பிகள்" என்பது சம்பந்தர் தேவாரத்தில் வரும் ஓர் அடி.

(2) தூம்புடைய நீண்ட கூர்மையான மூக்கினை உடையது. அதனாற் ஊசியாற் குத்துவதுபோலக் குத்திக்குருதியை உறிஞ்சும் ரீங்காரமாகப்பறக்கும். ரீங்காரம் - கோஷம் கோஷமிட்டுப் பறத்தலின் கோஷ என்பது கோஷ் எனவும் பின் கொஷு - கொசு எனவும் திரிந்தது. குத்தும்போது சுவீர் எனத் தைத்தலின் இதற்குச் சுள்ளான் என்பதும் ஒருபெயர்.

கொஞ்ச நஞ்சம் : ஒருபொருள் பற்றிய இணைத்தொடர். மிகக்குறைவானது கொஞ்சம் என்பது குறைந்தம் (குறைந்த + அம். அம்=அளவு) குறுந்தொம் - கொஞ்சம் என மருவியது. நைந்தம் (நைந்த + அம் = அம்ளவு) நந்தம். நஞ்சம் என மருவியது. நைந்து குறைந்த அளவு என்பது கருத்து. நைந்தது - நந்தம் என வரும். இதற்கு ஈடானவை மீதி - மிச்சம். எச்ச சொச்சனம் என்பன.

கொஞ்சம் : குறைந்த அளவினது என்பது பொருள். குறைந்த சிறியவற்றைக் குஞ்சு (கோழிக்குஞ்சு) என்பது வழக்கு. குறுஞ்சூல் என்பதன் சுருக்கமே குஞ்சு

அது அளவென்னும் பொருள் தரும். அம்விகுதியொடு கூடிக் குஞ்சம் என உருப்பெற்றுக் கொஞ்சம் என மருவியது. கொஞ்சநஞ்சம் என்பதில் வரும் கொஞ்சம் வேறு இது வேறு.

கொஞ்சல் : அன்பு மேலீட்டால் குழந்தையைப் பெற்றோரும் காதலர் தம்முள்ளும் புரியும் செயல். முற்றுப்பெறாத இன்பம். இதன் சரியான வடிவம் குறும் செயல் குறுஞ்செயல் என்பது மருவிக் கொஞ்சல் என நின்றது.

கொட்டாச்சி : தேங்காயை உடைத்துப் பருப்பைத் துருவிய பின் ஓடாக இருக்கும் உறுப்பைக் கொட்டாச்சி என்றும் சிலர் கொட்டாங்கச்சி என்றும் வழங்குவர். இது கூடாக ஆயது குடையப்பட்டது என்னும் பொருளில் கூடாய்ச்சி கொட்டாச்சி என மருவியது. இனிக் குடையப்பட்ட சில் என்பதன் மரூஉ எனினும் ஒக்கும். ஓட்டாஞ்சில் என்பது வழக்கு. இதற்கு சிரட்டை என்பது ஒரு பெயர்.

கொட்டாயி : கொட்டகை என்பதன் சிதைவு. கீற்று முதலியவற்றால் வேயப்பட்ட மேற்கூரை இருபுறமும் சாய்வாக நடுவுயர்ந்து இருப்பது கொட்டகையாக அமைக்கப்பட்டது என்பது பொருள். சமனாக வேயப்பட்ட மேற்கூரைபந்தர் எனப்படும். இருபக்கம் சாயவ்ாக இருப்பது கொட்டகை. கூடுகை கொட்டகை.

கொட்டை பரப்புதல் : இஃதோரிலக்கண மரபு பற்றிய வழக்கு. பூசலை வெற்றி காணுதல் என்னும் பொருளில் வருதல். உழிஞைப் போரில் வென்ற மன்னன் பகைவர் கோட்டையையும் அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கி. வெள்வரகு குடைவேல் ஆமணக்கு வித்துக்களைத் தூவிப் பரப்புவான் ஆமணக்கிற்குக் கொட்டை என்பது ஒரு பெயர் அதனைப் பரப்புதல் கொட்டை பரப்புதல் எனப்படும்..

கொப்பத்து வெல்லம் : கரும்புச்சாற்றைக் காய்ச்சி செய்யப்படும் வெல்லம் இருவகையாக உருப்படுத்தல் பெறும். ஒன்று அச்சில் வார்த்தெடுக்கும் அச்சுவெல்லம். மற்றது கைகளில் பொத்தி உருண்டையாகச் செய்யப்படும் உருண்டை வெல்லம். உருண்டை வெல்லத்தைக் கொப்பத்து வெல்லம் என்பது கொங்கு வட்டார வழக்கு. அது கையால் பொத்திப் பொத்திச் செய்யப்படுதலின் கைப்பொத்து என்பது கொப்பத்து எனத் திரிந்து கொப்பத்து வெல்லம் என மருவியுள்ளது.

கொப்பரை : நீர்வற்றி ஓட்டினின்று கழன்ற தேங்காய் கொப்பரைத் தேங்காய் எனப்படும். கோப்பு + உரை = கொப்பரை என ஆக்கம் பெற்றது. ஓட்டுடன் கோத்திருந்த நிலை சரிந்து பிரிந்த நிலையை உணர்த்தும். கோப்பு + பரிதல் - என்பதன் திரிபெனினும் ஒக்கும். கோப்புப்பிரி - கோப்பிரி - கொப்பரை என ஆக்கம் பெற்றது.

கொப்புள் : இது கோப்பு + ஊழ் = கோப்புழ் - கொப்புள் எனத் திரிந்து ஆக்கம் பெற்றதாகும். தாய் வயிற்றுடன் தொடர்புடைய கொடி அற்ற நிலையில் அமைந்த உந்தி என்பது கருத்து.

கொன்னக்கோல் : நாவைச் சுழற்றிக் குரல்வளையினின்றும் ஒலி உண்டாக்கித் தாளமிடுதல். முழவு, கடம், கஞ்சிரா, மோர்கிங் முதலிய தாளவாச்சியங்களுக்குச் சமமாக வாயால் தாளமிடுதல் கொன்னக்கோல் என வழங்குகின்றது. இச்சொல்லின் செம்மையான வடிவம் கனைக்குரல் தொண்டையைக் கனைத்து எழுப்புங்குரல் என்பது பொருள் கனைக்குரல் கன்னக்குரல் கொன்னைக்கோல் எனத்திரிந்தது.

கோட்டம் : கோயில் - இறைவழிபாட்டில்லம் என்னும் பொருள் தரும். இச்சொல் வளைவாக வட்டமாகக் கட்டப்பெற்ற இடம் என்பது பொருள். கோடு=வளைவு. வளைத்துக்கட்டப் பெற்றமதில் கோட்டை. கோஷ்டம் என்பது பிழை. சொல்லினிமையும் வடமொழிப்பற்றும் காரணமாக வேட்டியை வேஷ்டி என்றும் முட்டியை முஷ்டி என்றும் நோய், வறுமை முதலியவற்றால் கட்டுண்ட நிலையைக் குறிக்கும் கட்டம் என்பதனைக் கஷ்டம் என்றும் குட்டம் என்பதைக் குஷ்டம் என்றும் தவறாக வழங்குதல்போல இதனையும் கோஷ்டம் என வழங்குவர். அது பிழை வழக்காகும்.

கோட்டி : கூடியிருக்கும் குழுவைக் குறித்து வரும் சொல் கூட்டமாகக் குழு முதல் கோட்டி. கூட்டு + இ = கோட்டி என வரும். அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல் என்பது திருக்குறள் அடியார் கூட்டத்தைப் பக்த கோடிகள் என்று வழங்குவது கோட்டிகள் என்பதன் இடைக்குறை. கோஷ்டி என்னும் வடசொற்குக் கோஷமிடும் குழு என்பது பொருள். பஜனைக் கோஷ்டி என்பது வழக்கு.

கோரிக்கை : வேண்டிக்கோடல் என்னும் பொருளில் வழங்கும் அயல்மொழிச்சொல். எனினும் தமிழாக ஏற்பதற்குரிய உரியடியை உடையது. குரல் - ஒலி - மொழி - குரலால் வேண்டிக் கொள்ளற்குரியது கோரல். அது கோருதல் எனல் தகும். குரல் - கோரல் - கோர்தல் - கோருதல், கோருகை, கோரிக்கை எனவரும். அமர்தல் அமரிக்கை என வருதல் காண்க.

கோழை : அறிவிருந்தும் மனவலிமையின்மையால் பகைவரையஞ்சும் தன்மை கோழை எனப்படும். திண்மையின்றி நைந்து போவது குழைதல், கூழாதல் எனப்படும். இளமைத்தன்மை. குழைதல் - அதன்வழியமைந்த பெயர் குழவி, குழந்தை திண்மையற்றது கோழ் (கொழுப்பு) திண்மையற்ற இளமைத்தன்மை கொழை குழை - கோழை என ஆக்கம் பெற்றது.

சக்கையோடு போடுதல் : ஒரு செயலைச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் செய்யுமிடத்து வழங்கும் தொடர். சக்கை என்பது ஒரு பொருளின் நீர்ப்பசை

நீங்கிய கோதுக்குப் பெயர். சக்கை என்பது கசக்கு என்பதன் முதற்குறையாக ஆக்கம் பெற்றதாகும். கசக்குதல்=ஒரு பொருளினிடத்துக் கலந்திருக்கும் நீர்ப்பசையைக் கழியச் செய்தல் கசியச்செய்தல் துணியின் அழுக்கைப் போக்கத் துணியைக் கசக்கு என்பர். பழச்சாற்றைப்பிழியுமிடத்துக் கசக்கிப் பிழிந்தான் என்பர். கசக்கியபின் எஞ்சியிருப்பது சக்கு. அது ஐகாரம் பெற்றுச் சக்கை என நின்றது. கரும்பின் சாறு நீங்கிய கோது சக்கை எனப்படும். கரும்பை மென்று சாற்றினை உண்ணுமிடத்துச் சிறிதும் பசைநில்லாமல் முற்றாக மென்று உறிஞ்சுதலின் அதனைச் சக்கைபோடுதல் என்ப. சக்கைபோடுதலைப்போல இச்செயலைச் செய்து போட்டான் என்பது சக்கை போடுபோட்டான் என அமைந்தது. உற்சாகப்படுத்துமிடத்து போடு சக்கை, அடி சக்கை எனக்கூறுதல் வழக்கு. இதன் அடிசக்கை என்பது அடுசக்கை என்பதன் திரிபு. அடுசக்கை என்பது இயந்திரத்திலிட்டுப் பிழிவதைக் குறிக்கும்.

சச்சரவு : ஒருவருக்கொருவர் வாய் வார்த்தைகளால் பூசலிட்டுக் கொள்வதைச் சச்சரவு என்பர். இது சச் + அரவு என்பது சச்சரவு என ஒரு சொல்லாக அமைந்தது. ச் என்பது நாவைக் குறிக்கும் குறிப்பசை எழுத்து. அரவம் = ஒலி அது அரவு எனவரும். சச்+அரவு=வாயால் (நாவால்) எழுப்பும் ஆரவாரம் (சண்டை) என்பது பொருள்.

சட்டை : உடம்பின்மேல் அணியப்படும் அங்கி, குப்பாயம், கவயம் முதலியவற்றைக் குறிக்கும் பெயர். உடம்பிற்குச் சடம் என்பது ஒரு பெயர். சட்டகம் என்றால் உடம்பு என்பது பொருள். சட்டகத்தின்மேல் அணிவது என்னும் பொருளில் சடத்தில் அணிகை, சடக்கை - சட்டை என ஆக்கம் பெற்றது. பாம்பின் உரிதோலுக்குச் சட்டை என்பது பெயர்.

சட்டை பண்ணுதல் : ஒரு செயலைச் செய்யவேண்டிய கடமையுள்ளவர். அதைப்பற்றிப் பராமுக இருக்கும் நிலையை உணர்த்தி வரும் ஒரு தொடர். அவர் இதையெல்லாம் சட்டை பண்ணுவதில்லை. நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீ சட்டைபண்ணாமல் போறியே என்றாற்போல வரும் சட்டை என்பது கண்ணோடுதல், கவனித்தல் என்னும் பொருளில் வரும் ஒரு வடசொல் திரிபு. இதன் செம்மையான வடிவம் சட்சை என்பதாகும். சட்சம் என்பதற்குக் கண் என்பது பொருள் சட்சு = கண். நல்ல தமிழில் கூறும்போது அவர் இதையெல்லாம் கண்டு கொள்வதில்லை என்பர். சட்டைபண்ணுதல், சட்டை செய்தல் என்றும் கண்ணோட்டமின்மை இது என்ன சட்டை கெட்டதனமா இருக்கு என்பர். இதற்கு எதிர்மறை முன்னொட்டுக் கொடுத்து அவன் மிகவும் அசட்டையாக இருக்கிறான் என்றாற் போலக் கூறுவர். (அசட்சு - அசட்டை)

சண்டப்பிரசண்டம் : விரைவு வேகம் கடுமை என்னும் பொருள் தரும். சண்டம் என்பது மிக விரைவை. மிக்க கடுமையை உணர்த்துமிடத்து 'ப்ர' என்னும் முன்னொட்டொடுடன் கூடிச் சண்டப்பிரசண்டம் என அமைந்தது.

சண்டியர் : கொடுமை செய்பவர், சண்டை புரிபவர் என்னும் கருத்தில் வழங்கும் சொல். அடிதடி புரிபவர் என்னும் பொருளிலும் வழங்கும் சண்டி என்னும் வடசொற்குக் கொடுமை செய்பவர் என்பது பொருள். அது அர்விகுதி பெற்றுச் சண்டியர் என வழங்குகிறது.

சந்தடி சாக்கு : இது ஒரு காரியம் நிகழுமிடத்து அதையே காரணமாகக் கொண்டு அதன் அடிப்படையில் தனக்கு வேண்டிய வேறொரு செயலையும் நிறைவேற்றிக் கொள்ளுதலைச் சந்தடிசாக்கு என்பர். பாகப்பிரிவினை அண்ணன் தம்பி இருவரும் ஒரு பொருளை இருவரும் வேண்டுமென்கின்றனர். அது பசுமாடு. பஞ்சாயத்துச் செய்பவர் பசுவை விற்று அப்பணத்தை இருவரும் பகிர்ந்து கொள்ளலாம் என்கிறார். எப்பொழுது விற்பது என்ற சிக்கல், பஞ்சாயத்துப் பேசுபவர் ஒரு விலையைக் கூறிப் பாதிப்பணத்தை யார் தருகிறரோ அவர் பசுவை எடுத்துக் கொள்ளலாம் என்கிறார். இருவரிடத்திலும் பணமில்லை. அப்படியானால் பணத்தை நான் தருகிறேன் பசு எனதாகட்டும் பணத்தைப் பிரித்துக கொள்ளுங்கள் என்று தீர்ப்புச் சொல்கிறார். அதன் பெறுமானம் 2000. இவர் நிர்ணயம் செய்த விலை 1000. வேறு வழி தெரியாமல் பங்காளிகள் ஒத்துக் கொள்கின்றனர். சந்தடிசாக்கில் குறைந்தவிலையில் பஞ்சாயத்துச் செய்தவர் பசுவை அடைகிறார். இது ஒரு சந்தடிசாக்கு சந்து செய்தல். இருவரின் மாறுபாட்டை தணித்தல். அடி = அடிப்படை சாக்கு = காரணம். சந்து வடசொல். திருமண வேளையில் மாப்பிள்ளை பெற்றோர் வரதட்சிணை இவ்வளவு தந்தால் தான் மகனைத் தாலிகட்டச் சொல்வேன் என்று பிடிவாதமாகப் பேசுகிறார். பெண்ணைப் பெற்றோரிடம் அவ்வளவு தொகையில்லை. அவர் எவ்வளவோ பணிந்து கேட்டும் மாப்பிள்ளை பெற்றோர் கேட்கவில்லை. உறவினர் ஒருவர் வந்து சமாதானம் பேசுகிறார். மாப்பிள்ளை வீட்டார் மறுக்கின்றனர். இவர் உடனே பெண்ணைப் பெற்றோரிடத்தில் உங்கள் பெண்ணைக் கேளுங்கள் அவள் விரும்பினால் என் மகனை தாலி கட்டச்சொல்கிறேன் என்கிறார். பெண்ணும், பெண்ணைப் பெற்றோரும் வேறு வழியின்றி உடன்படுகின்றனர். இதுவும் சந்தடி சாக்கில் காரியம் சாதித்துக் கொள்வதாகும். இவ்வாறே பிறவாறும் சந்து செய்விப்பவர் சாதித்துக் கொள்ளுதல் சந்தடி சாக்காகும்.

மற்று இத்தொடர் சந்தையிடி சாக்கு என்றும் பொருள் தரும் சந்தை = கூட்டம். கூட்டத்தில் ஒருவன் வேண்டுமென்றே ஒரு இளம் பெண்ணின் மேல் மோதுகிறான். அவள் கிளந்து கடிந்து கொள்கிறாள். அவன் நான் வேண்டுமென்று இடிக்கவில்லை, கூட்ட நெரிசல் என்னைத் தள்ளிவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் என்கிறான் மற்றவர்களும் ஒத்துக்கொள்கின்றனர். இது சந்தையிடிசாக்கு. பிறவும் இவ்வாறு அமையும்.

சப்பைக்கட்டு : ஒரு செயலில் பேச்சில் குறைபாடு நேரும்போது உரியவர் சினந்து பேசுமிடத்து மற்றொருவர் அதற்கு அமைதி கூறுமிடத்து நீ என்ன

அதற்கு சப்பைக்கட்டுக் கட்டுகிறாயா என்பர். குற்றத்தைக் குறையைத் தாங்கிப் பேசுதல் என்பது பொருள். சப்பைக் கட்டு என்பது ஒருவருக்குக் கைகால் எலும்பு முறிவு ஏற்பட்டபோது மருந்து வைத்து கட்டுமிடத்து எலும்புகள் இணைப்பு விட்டுப் போகாமல் ஒரு மூங்கில் சப்பையை வைத்துக்கட்டுவர். அது உவமமாக இத்தொடர் அமைந்ததாகும்.

சம்பளம் : நாணயச் செலாவணி வழக்கத்திற்கு வராத பண்டைக் காலத்தில் ஒருவர் அரசு முதலாய துறைகளிலோ பிற நிறுவனம், நிலையங்களிலோ பணிபுரியின் அவருக்குத் தரப்படும் ஊதியம் சம்பளம் என வழங்கப்பெற்று இன்றைக்கு அதுவே வழக்காக வழங்கி வருகிறது. அக்காலத்தில் உழைப்பிற்கு ஈடாக ஊதியமாக நெல் முதலாய கூலங்கள் அளவிடப்பட்டு வழங்கப்பெற்றன. இன்றைக்கும் உழவர்களுக்குக் களத்தில் நெல்லை அளந்து கூலியாகத் தரப்பெறுவதைக் காணலாம். நெல்லுக்குரிய பெயர்களுள் சம்பா என்பதும் ஒரு பெயர். சம்பாவே ஊதியமாக அளந்து தரப்பட்டமையின் சம்பா + அளம் (அளம்=அளவு) சம்பா அளம் சம்பளம் என ஆக்கம் பெற்றது. அளம் என்பதற்கு ஒரு சாரார் உப்பு என்று பொருக்கொண்டு நெல்லும் உப்பும் ஊதியமாகத் தரப்பெற்றது என்பார். இன்றைக்கும் அவர் என்ன உனக்குப் படியளக்கிறாரா? என்பது வழக்காகலின் அளம் என்பதற்கு அளவு எனப்பொருள் கோடலே நேரிது. (கூலி காண்க)

சம்பா : நெல்லிற்குரிய பெயர்களுள் ஒன்று. சண்பை என்பது தடித்த புல்லுக்குப் பெயர். சண்பை - சம்பை எனவும் வழங்கும். புல்லின்கண் விளைவது என்னும் பொருளில் நெல்லுக்குச்சம்பா என்று பெயர். நெற்கதிர் தொகுதியாக நிறைந்து விளைதலின் சாலி என்று பெயர். சாலுதல் - நிறைதல் - மிகுதல் = நெற்பயிர் பசுமையாக சூல்கொண்டு முற்றி வளர்தலின் சூலாலாகியது சொல். சொல் என்பது நெல்லின் பெயர். நெல் என்பதற்கு முற்றியது என்பது பொருள். இதனடியாக ஆக்கம் பெறுவன. நெற்றி - நெற்று, நேற்று முதலியவை சொல் என்பதனாக்கம் சோறு. சொல்+து=சோறு.

சம்பார்த்தியம் : சம்பாவை ஊதியப்பொருளாகப் பெறும் செயல் சம்பார்த்தியம். அர்த்தம் என்னும் வடசொற்கு பொருள் (செல்வம்) என்பது பொருள். அர்த்தமாக அமைவது அர்த்தியம். சம்பா + அர்த்தியம் = சம்பார்த்தியம் (சாமர்த்தியம் காண்க)

சம்மணம் : தொடைகள் மணையில் விரிய அவற்றொடு கால்களை மடக்கி அமைந்திருத்தலை சம்மணம் இட்டு அமர்தல் என்ப. சம்மணங்கூட்டி அமர்தலை வழுவாகச் சம்மணங்கொட்டி உட்கார் என்பது வழக்கு. மணை என்பதற்கு இருக்கை என்பது பொருள். சமமணையாதல் - சம்மணம் என ஆக்கம் பெற்றது.

சரடு விடுதல் : பொய்யும் கற்பனையுமாகப் பேசுதல். கோள் சொல்லுதலும் இதன் கண் அடங்கும். சரடு = கயிறு. கயிறுதிரித்தல் காண்க

சரமாரி : தொண்டர்கள் தலைவரைச் சூழ்ந்துகொண்டு சரமாரியாகக் கேள்வி கேட்டனர் என்றாற்போல வரும். இஃதொரு உவமத்தொடர். வடசொல்லும் தமிழ்ச்சொல்லும் கலந்த தொடர். சரம்=அம்பு மாரி=மழை. அம்புமழை வினாக்கள் கேட்பவர் உள்ளத்தில் சென்று தைக்குமாறு எழுப்பப்படும் நிலையை உணர்த்தும். கேள்விக் கணையால் துளைத்துவிட்டனர் என்பது இதனை ஒட்டிய வழக்காகும். சரம் தமிழ்ச் சொல்லெனவும் தகும். சரிதல் செல்லுதல் தொடர்ந்து நீண்டு செல்லுதலின் அம்பு சரம் எனப்பட்டது எனினுமாம்.

சலங்கை : ஜல் ஜல் என்னும் ஒலி எழுப்பும். பரலை உள்ளீடாகக் கொண்ட மணிகளின் கொத்து. இதனை நாட்டியமாடுபவர் கால்களில் கட்டிக்கொண்டு ஆடுவர். இது சதங்கை என்றும் வழங்கும். சப்தத்தை அங்கமாகக் கொண்டது. (ஜதி) சதியை உண்டாக்குவது என்பது பொருள்.

சவட்டுதல் : கொல்லுதல் என்னும் பொருள் தரும் இச்சொல், சாவ+அட்டல் என்பவற்றின் மருவாகும். சவமாக அடுதல் என்பவற்றின் திரிபு எனினுமாம். சவம் தமிழ்ச்சொல். சாவு+அம்=சாவம் சவம் என வரும்.

சவுக்கங்கட்டிப் பேசுதல் : இதுஒரு நாட்டுப்புற வழக்குத்தொடர். கிராமப்புறப் பஞ்சாயத்துக் கூட்டத்தில் தலைமை தாங்குபவர் முழங்கால்களை மடக்கி நிமிர்த்தி மேலாடையால் சுற்றிக்கொள்வர். அதற்குச் சவுக்கங்கட்டுதல் என்று பெயர். அது நடுவருக்குரிய அடையாளம். மேலாடை சதுரமாக உள்ளமையின் அதற்குச் சவுக்கம் என்பது பெயர்.

சவுண்டி : இஃதொரு வசைச்சொல். "அவன் கிடக்கிறான் சவுண்டிப்பயல்" என்பர். சாவு+உண்டி=சவுண்டி. அஃதாவது பிணத்தைச் சுமந்து கூலி பெற்று உண்பவன் என்பது பொருள். சவ உண்டி சவுண்டி எனத் திரிந்தது எனலுமாம்.

சன்னம் : மெல்லியது என்னும் பொருள்தரும் சொல். தெலுங்கு, கன்னடச் சொல். இது சின்னம் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபு சின்னவன்=சிறியவன்.

சாக்குப்போக்கு : ஒன்றைச் சாக்காகக் கூறித் தப்பித்துக்கொள்ளும் நிலை. போக்கு = போதல் – செல்லுதல் = தப்பித்துபோதல். இனி போக்கு என்பதற்குக் குற்றம் என்பதும் பொருளாகும். அம்முறையில் சாக்குப்போக்கு என்பதற்கு பொய்க்காரணமும் குறைவிடையும் என்பது பொருளாகும்.

சாட்டுதல் : குற்றம் சாட்டினான் என்பது வழக்கு. இது சாற்றினான் என்பதன் திரிபு. சாற்றுதல் சான்றாகக்கூறல். சான்றமையைக்கூறுதல். ஒருவர் பால்

ஏற்றிக் கூறல் எனின் சார்த்துதல் என்பதன் திரிபாகும். இவனைக் கேட்டால் அவனைச் சாட்டுகிறான் என்று வரும். இனிச்சாட்டுதல் கையொப்பம் என்னும் பொருளில் வருமிடத்துச் சாற்றுதல் என்பதன் திரிபாகும்.

சாட்டை : தோல், கயிறு முதலியவற்றில் சராடாகத் திரிந்தல். விலங்குகளையும் தண்டனை பெற்ற குற்றவாளிகளையும் ஒறுக்கும் கருவி. சாடுதல்=ஒறுத்தல்-சாடுதலைச் செய்வது சாட்டை என அமைந்தது-இனிச் சரடு என்பது சாடு எனத்திரிந்து பின் சாட்டை என ஆக்கம் பெற்றதெனினும் பொருந்தும்.

சாப்பு : வீட்டின் முன்போ பின்போ தனியாக ஒன்றினின்றும் சரிவாக அமைக்கப்படும் கூரையைக் குறித்து வழங்கும் சொல். வீட்டிற்குள் வெய்யில், மழைச்சாரல் வராமல் தடுக்க ஒரு சாப்புப் போடு விடு என்பது வழக்கு. இது சாய்ப்பு என்பதன் திரிபாகும். தாளவகையுள் சாப்புத்தாளம் என்பது ஒரு பிரிவு. ஒரு தாளத்தின் அட்சர எண்ணிக்கையை குறைத்து இடும்தாளம் சாப்புத்தாளம் எனப்படும். சாப்புக்கடை என்னும் வழக்கில் சாப் என்பது ஷாப் என்னும் இந்துஸ்தானிச் சொல்லின் சிதைவாகும்

சாமர்த்தியம் : ஒருசாரர் சம்பாத்தியத்தைச் சாமர்த்தியம் என்ப. "சிங்கப்பூர் சென்று சாமர்த்தியம் பண்ணிப் பெரிய பணக்காரர் ஆகிவிட்டார்" என்றாற் போலவரும். இது சமர் அத்தியம் என்பவற்றின் மரூஉ போர் மறவர்கள் பெறும் ஊதியத்திற்குச் சாமர்த்தியம் என்பது பெயர். சமர்+அத்தியம் அர்த்தம் என்பது அத்தம் என வரும். "அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே" என்பது பட்டினத்தார் பாடலடி. சமர்+அத்தம்+இயம் என்பவை இணைந்து சாமர்த்தியம் என ஆக்கம் பெற்றது. சமரில் வெற்றியை பெறுபவர் சமர்த்தர் எனப்படுவர் அவ்வாறே ஒரு செயலைத் திறமையாகச் செய்து வெற்றி பெறுதலும் சாமர்த்தியம் எனப்படும். திறமையானவர் என்பதைக் குறிக்க அவர் பெரிய சமர்த்தர் - சாமர்த்தியக்காரர் என்பது வழக்கு. இனிச் சம்பார்த்தியம் என்பதும் சாமர்த்தியம் எனத்திரியும் அந்நிலையில் அது ஊதியம் என்னும் பொருள் தரும்.

சால் : நீர் முதலியவற்றை நிரப்பும் பெரிய கலம் சால் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்தபெயர் சாலுதல்=நிறைதல், மிகுதல் அது பெரிதாக உள்ள அளவையைக் குறித்து ஆகுபெயர் முறையில் கலத்தை உணர்த்தியது.

சிச்சன் : இச்சொல் மாணாக்கன் என்னும் பொருளில் வருமிடத்துச் சிஷ்யன் என்னும் வடசொல்லின் திரிபாகும். பணியாளன் என்னும் பொருளில் வருமிடத்துச் சித்தன் என்பதன் திரிபாகும். சித்தன் எசமானன் சித்தமறிந்து பணியாற்றுபவன் சித்தன் "யான்கண்டனையர் என் இளைஞரும்" என்பது

புறநானூற்றுச் செய்யுளடி ஆசானிடத்துச் கிட்சை பெறுவதால் கிச்சன் என அமைந்தது எனினும் ஒக்கும்.

சிதைவு : முழுமையான பொருளிற் குறைவுபட்டது. குற்றம் என்னும் பொருளில் வழங்கும் சொல். ஒரு பொருளின் ஒரு பகுதியைக் குறைத்தற்கு செதுக்குதல் என்பது பெயர். செதுக்கப்பட்ட பொருளைச் செதில் என்ப. செதில் - சிதில் எனத்திரியும். சிதிலம் என்பது வழக்கு. சிதில் தன்மையானது சிதைவு. சிதை என்னும் சொல்வேறு இதுவேறு அது செத்தவரை இடும் இடம் என்னும் பொருளுடையது.

சிநேகம் (சினேகம்) : நட்பு, தொடர்பு என்னும் பொருள் தரும். இச்சொல் நேயம் என்னும் தமிழ்ச்சொல் வடமொழியில் சிறப்புப் பொருள் தரும் ஸ் என்னும் முன்னொட்டொடு கூடிச் ஸ்நேகம் என அமைந்து சிநேகம் என அமைந்ததாகும். நேயம் செய்தல் நேசித்தல் நேசி என்னும் சொல் முன்பின்னாக மாறிச் சிநே என்றும் அம் என்னும் சொல்லாக்க விகுதிபெற்றுச் சிநேகம் என்றும் அமைந்தது.

சிப்பம் : கட்டு, மூட்டை என்னும் பொருளில் வழங்கும் சொல். இது கயிற்றால் கட்டப்பெறாமல் மூங்கிற் பிளாச்சி, நாணல் தட்டைப்பிளவு இவற்றால் கட்டப்பெற்ற மூட்டைக்குரிய சொல்லாகும். சிம்பு கொண்டு கட்டப்பட்டது சிப்பம் சிம்பு என்பது வழக்கிற் சிலம்பு என வருவி வரும் அம்முறையில் சிறிய மூங்கிற்கோல் சிலம்பம் எனப்பட்டது.

சிரிப்பு-சிரித்தல் : ஒலியெழுப்பி நகைத்தலைச் சிரித்தல் என்ப. இது சிலிர்த்தல் என்பதன் சிதைவாகும். சிலிர்த்தல் - உதறல். உடம்பு சிலிர்க்கிறது என்பது வழக்கு. ரகரத்திற்கு லகரம் போலியாக வந்தது.

சிலுசிலுப்பு : சினந்தும் வெறுத்தும் ஒருவரை அச்சுறுத்தும் முறையில் பேசும் பேச்சு சிலுசிலுப்பு எனப்படும். இது சிலிர்ப்பு - சிலுசிலுப்பு என்பதன் திரிபாகும். இது சிலுப்பு எனத்தனித்து வரும். இந்தச் சிலுசிலுப்பெல்லாம் ஏங்கிட்ட வைச்சுக்காதே என்றும் அவள் என்னைக் கண்டு சிலுப்புகிறாள் என்றும் வரும்.

சிவிகை : பல்லக்கு என்னும் பொருளில் வழங்கும் இச்சொல். தொழிலாகு பெயரான் அமைந்ததாகும். மூங்கில், மரம் முதலியவற்றை அளவிட்டுச் செதுக்கிச் சீவிக் கயிற்றால் கட்டப்பட்டது என்பது பொருள். விசித்தல் = கட்டுதல் - விசி என்பது கை என்னும் தொழிற்பெயர் கூட விசிகை என உருப்பெற்று விசாகத்திற்குரிய திங்கள் பொருளில் வைகாசி என அமைந்த பின் வைகாசி என எழுத்து நிலைமாற்றம் பெற்றது போல விசிகை என்பது சிவிகை என எழுத்து நிலைமாறி ஆக்கம் பெற்றதாகும்.

சிறகு - சிறை : பறவைகளின் இருபக்கம் அமைந்த உறுப்பு. அவை பறவைகளை மேல் எழுப்பி பறத்தற்குதவும் உறுப்பாகும். சிறகு என்பதில் சிற என்னும் பகுதி சிறத்தல் - உயர்தல் மேல் எழுதல் என்னும் பொருளில் அமைந்து சிறக்கச் செய்தல் என்பது சிறக்கு - சிறகு என விகுதியளவாக நின்றது. மேல் எழுந்து பறத்தற்குரிய உறுபபு என்பது பொருள். சிறகு பறவைகளின் இருபக்கங்களிலும் அமைந்திருத்தலால் சிறகு = பக்கம் என்னும் பொருளில் ஆளப் பெற்றதாகும். இவ்விகுதி மாறி ஐகார விகுதி பெற்றுச் சிறை எனவும் அமைந்தது. சிறை பறவையின் உடம்பை இருபக்கமாக அமைந்து தம்முள் அடக்கிக் கொண்டிருத்தலின் அகப்படுத்தல் என்னும் பொருளில் சிறை என காராக்கிருகம் சிறை எனப்பட்டது. பறவைகளின் உடம்பைச் செறித்திருத்தலாற் சிறை எனப்பட்டது என்பது வெள்ளை விளக்கமாகும். அவ்வாறே சிறுமை செய்யப்படுமிடம் சிறை என்பதும் வெள்ளை விளக்கமாகும். (இறகு காண்க)

சின்னப்படுதல் : முறைகேடாக ஒருவர் நடந்து கொள்ளும்போது பொறுப்புடைய ஒருவர் அவரைப் பார்த்து இப்படி நடந்து கொண்டால் சின்னப்பட்டுப் போவாய் என்கிறார் இது வழக்கு. சின்னப்படுதலாவது சிறுமைப்படுதல் அஃதாவது மற்றவர்களால் தாழ்த்தப்பட்டுப் போதல் இகழப்படுதல் இது சின்னப்படுவாய் என அமைந்தது.

சீப்படுதல் : இது முறைகேடாக நடந்து கொள்பவரைக் குறித்து வரும் வழக்குச்சொல். சீ என்பது நாயை வெருட்டும் குறிப்புச் சொல் அதுபோல நீயும் மற்றவர்களால் சீசீ என இகழப்படுவாய் என்பது பொருள். சீப்படுதல் = சீச்சீச்சி என இகழப்படுதல்.

சீமை : இது ஒரு நாட்டின் எல்லைப்பகுதியைக் குறிக்கும் வடசொல்லின் திரிபாகும். அது ஆகுபெயரால் எல்லைக்கு அப்பாலுள்ள நாட்டைக் குறித்து அமைந்த பின் நாடு என்னும் பொருளிலும் வழங்கப்படுகிறது. அக்கரைச்சீமை என்பது வழக்கு.

சீவனத்தி : ஜீவனாம்சம் என்னும் பொருளில் வழங்கும் கொங்கு வட்டார வழக்கு. இது சீவன அர்த்தி = சீவனார்த்தி என்பதன் திரிபு. சீவனம் உயிர் வாழ்க்கை. அர்த்தம் = பொருள் அது அர்த்தி - அத்தி என மருவியது. சீவன + அத்தி = சீவனாத்தி. விலக்கப்பட்ட மனைவிக்கு அவள் கணவன் அளிக்கும் பொருள் ஜீவனாம்சம்.

சுட்டி : துருதுருவெனச் செயல்படும், விளையாடும், பயிலும் சிறுவன் சிறுமியைக் குறித்து வரும் வழக்குச்சொல். யார் இந்தச் சுட்டிப் பயல் குட்டி ரொம்ப சுடடி என்றாற் போல வரும். சுடுதல் தன்மையுடைய நெருப்பு ஒளிவிட்டுத் திகழுமிடத்துச் சுடர் எனப்படும். சுடரும் தன்மையுடைமையை (சுடு+இ)ச் சுட்டி என ஆக்கந் செய்துள்ளனர். (சூட்டிகை காண்க)

சுண்டுவிடுதல் : சுட்டு விரலைப் பெருவிரலில் உன்றிப் புறத் திரித்தல் ஒரு பொருளை விரையச் செலுத்துதல் சுண்டி விடுதல் எனப்படும். ஈண்டுச்சுண்டு என்பது சுருண்டு என்பதன் குறையாகும். விரல் சுருண்டு நிமிர்தல் சுண்டுதல் எனப்படும்.

சுண்டுதல் : (1) பால் சுண்டி விட்டது. குளத்தில் நீர் சுண்டி விட்டது என்பன வழக்கு. சுண்டுதல் - சூடு காரணமாக நீர் வற்றல். இது சூடு என்பதன் முதனிலையாகிய சுள் என்பது துவ்விகுதி பெற்றது. சுள்+து=சுட்டு என்றாகிப் பின் டகரம் ணகரமாக மெலிந்தது. (2) சுண்டுதல் என்பன சுருங்குதல் என்னும் பொருளிலும் வரும். பாலைச்சுண்டக் காய்ச்சினான் அவன்முகம் சுண்டிவிட்டது என்றாற்போல வரும். இம்முறையில் சுண்டு என்பது சிறியது என்னும் பொருளிலும் வரும். சுண்டு விரல் எனவரும் முகத்தளவைகளின் மிகச் சிறியதற்குச் சுண்டு என்று பெயர். சுண்டெலி சிறிய எலி.

சும்மா : இஃதோர் குறிப்பிடைச்சொல் சும்மை என்பதற்கு ஒலி ஆரவாரம் என்பது பொருள். இச்சொல் பல்வேறு பொருள்களில் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பப் பொருள் தரும் இது. பொய், அடிக்கடி, வீண், அடக்கம், வாளாவிருத்தல், பொழுதுபோக்கு முதலிய பொருள்களில் வரும். அடங்கியிருத்தல் என்னும் பொருளில் தாயுமானவர் சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது என்று பாடியுள்ளார்.

சும்மாடு : தலையில் ஒரு பாரத்தை ஏந்துமிடத்துத் துணி வைக்கோல் புரி முதலியவற்றைச் சுருட்டி வைத்துக்கொண்டு அதன்மேல் பாரத்தை ஏற்பர் இதனைச் சும்மாடு என்பர். இதன் செம்மையான வடிவம் சுமை அடை சுமையைத் தாங்க அடையாக இருப்பது என்பது பொருள்.

சூட்டிகை : சுறுசுறுப்பு, துடிப்பு, செயல்திறம் உள்ள நிலையைச் சுட்டிவரும் சொல். பையன் ரொம்பச் சூட்டிகையானவன் என்றாற் போல வழங்கும் சுடரும் தன்மை சூட்டிகை என ஆக்கம் பெற்றது. சுடர் சூடு கை தொழிற்பெயர் விகுதி சூடு + கை = சூட்டுகை - சூட்டிகை என ஆக்கம் பெற்றது. (சுட்டி காண்க)

சூல் : மகளிர் பெண் விலங்குகளின் வயிற்றுப்புடைப்பை நோக்கி இவள் சூலுற்றிருக்கிறாள் என்பர். சூலுற்ற மகளைச் சூலி என்றும் வழங்குவர். கருமுற்றி வயிறு மேடாக அமைதல் சூல் எனப்படும். சூல் என்னும் சொல் சுவல் என்னும் நிரையசை நேரசையாகிய மாற்றம். பகல் - பால் - உயர் ஊர். துகள் தூள் என்று ஆக்கமுறுதல் போலச் சுவல் என்பது சூல் என ஆக்கம் பெற்றது. சுவல் என்பதற்கு மேடு (மேட்டுநிலம்) என்பது பொருள். கரு முதிர்ந்த வயிறு மேடாக இருத்தல் நோக்கி இச்சொல் ஆக்கம் பெற்றது.

சூளை : 1. பெரிய அளவில் களிமண் பாண்டங்களைச் சுடும் அடுப்பிற்குச் சூளை என்பது பெயர். சுள் = நெருப்பு அது நீண்டு உடைமைப் பொருள்

விகுதியாகிய ஐகாரம் பெற்றுச் சூள் + ஐ = சூளை என ஆக்கம் பெற்றது. 2.வரைவில் மகளிராய விலை மாதர்க்குச் சூளை என்பது ஒரு பெயர். ஆடவரைப் பொய்யாகக் காதல் மொழிகளைக் கூறி மயக்குபவர் தம்மொழியைச் சத்தியமானது எனச்சூளிட்டுக் கூறுவர். சூள் = உறுதிமொழி அம்முறையில் விலைமாதர் சூளை எனப்பட்டனர். 3.மாளிகையைச் சுற்றி அமைக்கப்படும் மதிலுக்குச் சூளை என்பது பெயர். ஆது சூ முதல் என்பதன் அடியாகப் பிறந்த சூழை என்பதன் திரிபாக அமைந்ததாகும்.

செமத்தி : ஒருவனால் நன்றாக அடிபட்டவனைப் பார்த்து இவன் செமத்தியா வாங்கிக்கட்டிக் கொண்டான். அவனை இவன் செமத்திட்டான் என்றாற் போல வரும் செம்மையாகப் புடைத்தலைச் செமத்திட்டான் என்பர். இதன் செம்மையான வடிவம் செம்மையாக மொத்திவிட்டான் என்பதாகும். செம்மை+மொத்து=செமத்தி என மருவியமைந்தது மொத்துதலை அடித்தல் என்றும் புடைத்தல் என்றும் கூறுவர்.

செய்தி : தமதும் பிறரதுமாகிய கருத்துக்களையும் பிறநிகழ்வுகளையும் மொழியால் உணர்த்துமிடத்து அதைச்செய்தி என்பர். நிகழ்வுகளை வெளிப்படுத்தும் இதழ்களைச் செய்தித்தாள் என்பர். அவன் என்ன செய்தி சொன்னான் அவனுக்குச் செய்தி சொல்லி அனுப்பு என்றாற் போல வழங்கும். இது ஷேதி என்னும் உருதுச் சொல்லின் திரிபாகும். இந்தியில் சமாச்சார் என்பர். அதனைச் சமாச்சாரம் என்று தமிழாக்கி வழங்குவர். தகவல் என்னும் உருதுச்சொல் தாக்கல் எனத்திரிந்து சில வட்டாரங்களில் வழங்குகின்றது. செய்தி என்னும் தமிழ்ச் சொல்லுக்கு செயல் - செய்கை, வினை என்பது பொருள் செய்பகுதி தி தொழிற் பெயர் விகுதி. செய்தி என்பதற்கு ஈடான தமிழ்ச்சொல் ஓலை என்பதாகும். மொழியை ஒலிப்பதனால் அதற்கு ஓலை என்று பெயர். ஒல் - ஒலி - கருதி அதற்கு ஈடாகத் திருமுகம் என்னும் சொல்லை வழங்கினர். செய்தி என்பது சமாச்சாரம் என்னும் பொருளில் பல்லாண்டுகளாக வழங்கி நிலை பெற்றுவிட்டமையின் செயல்களை நிகழ்வுகளைத் தருவது என்னும் பொருளில் ஆகுபெயராக கொள்ளல் வேண்டும்.

செருமல் : சினத்தை உள்ளடக்கிய துயரத்தால் கண்டத்தினின்றும் மூக்கு வழியா எழுப்பும் தொடர்ந்த சிற்றொலி செருமல் எனப்படும். செருதல் போரிடுதல் ஈண்டு உள்ளப் போராட்டத்தால் எழும் ஒலி செரும்+ஒல்=செருமல் என்று ஆக்கம் பெற்றது. (பொருமல்-இருமல் காண்க)

செல்லம் : மற்றவரிடம் மிகையாகச் செலுத்தும் பரிவு உரிமையைச் செல்வம் என்பர். அவன் ஒரு செல்லப்பிள்ளை, சிறுமி தாயிடம் செல்லங் கொஞ்சுகிறாள். என்ன இருந்தாலும் நீ உன் பிள்ளைகளிடத்தில் இவ்வளவு செல்லங்கூடாது கொஞ்சம் கண்டிப்புக் காட்டவேண்டும். குழந்தைகளுக்கு அதிகமாகச் செல்லங்கொடுக்காதே என்றாற் போல வரும் வழக்குச் சொல். இது

செல்+அம்=செல்லம் என்றமைந்தது செல் என்பது உரிமை செலுத்துதலைக் குறிக்கும். அம்-பண்புப்பெயர்விகுதி செல்வாக்கு என்பதில் செல்-செலுத்துதல் என்னும் பொருள் தருதல் போலச் செல்லம் என்பதிலும் செல்-செலுத்துதல் என்னும் பொருள் தரும்.

செல்வம் : அடைவதற்கு உரியது என்பது இதன்பொருள். பெறுதற்குரியது பேறு செலவு என்பது தன்பால் வந்தடைதற்குரியது என்னும் பொருளினதாதலைச் "செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு" என்னும் குறளால் அறிக. வழக்கில் கடனாகப் பெற்ற பொருளை மீண்டும் கொடுக்குங்கால் கணக்கில் செல்லுவையுங்கள் என்பர். உன்வாலாட்டமெல்லாம் என்னிடத்திற் செல்லாது என்றாற் போல வருதலையும் காணலாம். அதனான் அடைய வேண்டுவது என்னும் பொருளிற்றான் பொருட்செல்வம், கல்விச் செல்வம், மக்கட்செல்வம் எனச்சான்றோர் வழங்கினர். ஓரிடத்தில் நில்லாமல் சென்று கொண்டே இருத்தலின் செல்வம் எனப்பட்டது என்பது பிழையான விளக்கம். அது பொருட்செல்வத்திற்கு ஒருவாறு ஒக்குமாயினும் கல்விச்செல்வம், மக்கட்செல்வம், கேள்விச்செல்வம் முதலாய பிறவற்றிற்குப் பொருந்தாமையின் அவ்விளக்கம் பிழையாதலை அறியலாம்.

செலாவணி : பொருள் பரிமாற்றத்தைக் குறித்து வழங்கும் சொல். கொள்முதல் செய்த பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன. செலாவணி ஆகவில்லை என்றும் இந்தச் சரக்குச் செலவணியாகும் என்றும் வழங்கும் அந்நியச்செலாவணி என்னுமிடத்து நாணயம் என்னும் பொருளில் வழங்குகிறது. இச்சொல் செலவு ஆம் வண்ணம் என்பவற்றின் சுருங்கிய ஆக்கமாகும். வண்ணம்-வண்ணி - வணி அணி என மருவிச் செல் + ஆ + அணி என அமைந்ததாகும்.

செவலெ : உடம்பு சிறிது நோயுற்றுள்ளவரிடம் உடம்பு நலமா என்று கேட்குழிடத்து அவர் உடம்பு செவலெ என்று கூறுவது நாட்டுப்புற வழக்கு. இச்சொல் செவ்வை இல்லை என்பதன் மரூவாகும். செவ்வை - செம்மை=நலம் - நலமில்லை என்பது பொருள் (தெவ்லெ காண்க)

செவிடு : செவிப்புலன் ஒலியைக் கேட்கும் தன்மை நீங்கிய நிலையைச் செவிடு என்பர். இது செவுள்+தூ என்பவற்றின் மரூஉவாகும். செவுள் என்பது காதினுள் அமைந்த ஒலி உணரும் உறுப்பு தூ - நீங்குதல் - தூவுதல் = நீக்குதல். செவுள் என்பது செவி + உள் - செவுள் என்பவற்றின் ஆக்கம். செவி+உள்+தூ-செவிள்து=செவிடு என ஆக்கம் பெற்றது. செவிட்டுத் தன்மையை உணர்த்தும் பிறிதொரு சொல் காதறை என்பதாகும். காதற்ற நிலை என்பது பொருள் - காது ஈணடு ஆகுபெயராய் செவுளை உணர்த்தி நின்றது.

சேக்கை : அமரும் இடத்தைக் குறிக்குஞ்சொல் ஆசனம் என்னும் வடசொல்லுக்கு ஈடான தமிழ்ச்சொல். சேர்+கை=சேர்க்கை - சேக்கை என ஆக்கம் பெற்றதாகும். உடம்பினைச் சேர்த்து அமருமிடம் என்பது பொருள்.

சேதம் : இழப்பு அழிவு என்னும் பொருள் தரும் இச்சொல் செதுக்குதல் என்னும் தொழிலடிப்படையில் சேதித்தல் என்றாயது செது என்னும் பகுதி பண்புப்பெயர் விகுதி அம்பெற்று முதல் நீண்டு சேதம் என ஆக்கம் பெற்றதாகும்.

சேதாரம் : துகளாகச் சிதறுதல் என்னும் பொருளில் வழங்கும் சொல் சிதறுதல் என்பதன் விகாரமாய் சேதாரம் சிதர்+அம் = சேதாரம் என ஆக்கம் பெற்றதாகும்.

சேமித்தல் : வீணாகாமல் பொருளைச் சேகரித்து வைத்தல் என்னும் பொருள் தரும் இச்சொல் பொருளைச் சேர்த்தல் பாதுகாப்பாதலின் சேமித்தல் எனப்பட்டது. சேமம் = (ஏமம்) பாதுகாப்பு பாதுகாப்புச் செய்தல் சேமித்தல் எனப்பட்டது.

சொள்ளு (ஜொள்ளு) : குழந்தைகளின் வாயினின்றும் ஒழுகும் எச்சில் நீர் ஜொள்ளு எனப்படும். சொள் என்னும் உரிச்சொல் குற்றம் குறை என்னும் பொருள் தரும் சொள்ளை என்பதன் பகுதியாகும். கொள்ளை என்பது சொள்ளு என வழங்குகிறது. அகவை நிரம்பியவர் ஒரு பொருளின் மேல் மிக்க வேட்கை கொள்ளுமிடத்தும் வாயில் நீர் ஊறும் அம்முறையில் அது சொள்ளு எனப்படும். இதனை ஜொள்ளு என வழங்குகின்றனர். அது பிழையாகும். இதனைக் காமவேட்கையை வெளிப்படுத்தும் குறியீட்டுச் சொல்லாகச் சிலர் ஆளுகின்றனர்.

சோப்பளாங்கி : கிளர்ச்சியும் முயற்சியுமின்றிச் சோம்பித் திரிபவரைக் குறித்து வழங்கும் எள்ளற்சொல். "அவன் கிடக்கிறான் சோப்பளாங்கிப் பயல் உருப்படியா ஒரு காரியமும் செய்யமாட்டான்" என்றாற்போல வழங்கும் இதன் செம்மையான வடிவம் சோம்பல் + அங்கி = சோம்பலங்கி என்பதாகும். சோம்பிய உடம்பினையுடையவன் என்பது பொருள்.

சோம்பல் : கிளர்ச்சியில்லாத நிலையை உணர்த்தும் சொல். இது சோம்பர் என்றும் வழங்கும். இது சோகம் + பூத்தல் என்னும் இரு சொற்களால் உருவான ஒரு சொல். சோகம் - சோம் என்றும் பூத்தல் பல் என்றும் மருவிச் சோம்பல் என ஆக்கம் பெற்றதாகும். இதனடியாகப் பிறந்தது சோம்பேறி - அது சோம்பேரி எனத் திரிந்தும் வழங்கும்.

தட்டுப்பாடு : தட்டல் = தடுத்தல் - தடையுறல் ஒரு பொருளை வேண்டுங்கால் அது கிட்டாத நிலையை உணர்த்து. தட்டு = கிட்டாத நிலை - பாடு தொழிற்பெயர் விகுதி. இது முட்டுப்பாடு எனவும் வழங்கும்.

தடவை : முறை அளவு என்னும் பொருளில் வழங்கும் சொல். "உனக்கு பலதடவை கூறிவிட்டேன் நீ கேட்கவில்லை" என்றாற்போல வரும். இது அளவு என்னும் பொருள் தரும் தடி (தடி = கோல் = நீட்டலளவை) என்னும் சொல் தடவை என வை விகுதி பெற்று வந்தது. அளந்து தடுக்கப்படுதலான் வயலுக்குத் தடி என்பது ஒரு பெயர்.

தடித்தல் : உடன் பருமனாதல், உப்பல் என்னும் பொருளில் வழங்கும் சொல். அவன் ஒரு தடிப்பயல், உடம்பு தடித்துப் போய்விட்டது எனவரும். தடி = தசை ஆடுமாடுகளின் தசை உணவுக்காகத் தடியப்படுதலின் (தடிதல் = வெட்டுதல்) தடி என்பது தொழிலாகு பெயராய்த் தசையை உணர்த்தி நின்றது. தசை என்பது முன்பின்னாக மாறிச்சதை என வழங்கும். தசைமிகுதல் - தடித்தல் உடம்பு தடிச்சுப்போச்சு என்றால் வீங்கிவிட்டது என்பது பொருள். இனி தட என்னும் உரிச்சொற்குப் பெருமை என்பது பொருள். பெருமை பெருத்தல். அம்முறையில் உடல் பருத்திருத்தலைச் சுட்டி தட + இ = தடி என வந்தது. எனினுமாம் "தடித்த ஓர் மகனைத் தந்தையீண்டடித்தால் தாயுடன் அணைப்பார்" என்பது திருவருட்பா பாடலடி. தடிமாடு என வைதல் வழக்கு.

தண்டனை : குற்றம் புரிந்தவரைப் பல கோணங்களில் ஒருத்தல் தண்டனை எனப்படும். நூறு ரூபா அபாரதமாகத் தண்டனை விதிக்கப்பட்டது. இவனுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை. இவனுக்குப் பத்துக் கசையடி தண்டனை தூக்குத் தண்டனை எனவரும். இது முதற்கண் தண்டு (தடி - கோல்) கொண்டு ஒறுத்தற்குரியதாக அமைந்து பின்னர் தண்டு என்பது அரசன் செங்கோலுக்காகி. அரசனால் விதிக்கப்பெறும் ஒறுத்தலுக்கு ஆயிற்று தண்டு + ஆணை = அரசன் ஆணை என்பது பொருள். தண்டு ஆணை என்பது ஒரு சொல்லாய்த் தண்டனை என ஆக்கம் பெற்றது. தண்டித்தல் = ஒறுத்தல். தண்டச்சோறுபோடுகிறேன் என்னுமிடத்து அவனிடம் முற்பிறவியிற்பட்ட கடன் காரணமாகத் தண்டம் கொடுக்கிறேன் என்பது கருத்து.

தப்பிலி : நாணயமற்றவன் - ஒழுக்க கேடானவன், தவறு செய்பவன் என்னும் பொருளில் வழங்கும் இச்சொல்லின் சரியான வடிவம் தப்புளி என்பதாகும். தப்பு = தவறு, பிழை - உளி = உள்ளவன் தப்பிலி என்றால் தப்பில்லாதவன் என்று பொருள்படும். தப்புளி என்பது வழக்கில் தப்பிலி எனத்திரிந்துவிட்டது.

தபு – தப்பு – தப்புதல் – தப்பித்தல் : தபு என்னும் முதனிலை வினை கெடுதல், அழிவு துன்பம் தீமை என்னும் பொருள்தரும் இச்சொல் வழக்கில் தப்பு என்றே வரும். தப்பு என்பதற்குப் பெரும்பான்மையும் தவறு. பிழை. குற்றம், குறை என்னும் பொருளில்வரும் தபு தொழிற் பெயர் விகுதி ஏற்குமிடத்து தபுத்தல் என்று வரும். தப்பு என்பது ஏவல் வினைப்பொருளில் வருமிடத்து – அழிவினின்று நீங்கி விடு என்னும் பொருளில் தப்புதல் என்று

வரும் இது பிறவினை விகுதி ஏற்றுத்தப்பித்தல் என வருமிடத்து பிற பொருள்கள் செய்யும் அழிவினின்று உய்ந்துவிடு - நீங்கிவிடு என வரும். அந்தக் காட்டில் புலி நடமாட்டம் இருப்பது தெரியாமல் இவன் காட்டிற்குச் சென்றுவிட்டான் உறுமல் சத்தங்கேட்டு ஓடி வந்துவிட்டான் ஏதோ நல்லகாலம் இவன் தப்பித்துக்கொண்டான் என்றும் அந்த மருத்துவர் நன்கு பார்த்து கொண்டமையால் சாவினின்றும் தப்பித்துவிட்டான் என்றாற் போலவரும். தபு என்பது தன் வினையில் ஒரு பொருளும் பிறவினையில் ஒரு பொருளும் தரும். நான் செய்தது தப்பிதம் என்னை மன்னித்துவிடு என்னுமிடத்து குற்றம் - தீமை என்னும் பொருளிலும் நேற்று திருடர்கள் கையில் சிக்காமல் தப்பிவிட்டேன் என்னுமிடத்த உய்ந்தேன் என்னும் பொருளிலும் வரும்.

தரம் : பல பொருளொடு சொல். முறைமை தடவை என்னும் பொருளில் எத்தனை தரம் கூறினாலும் அவன் திருந்த மாட்டான் என்றாற் போல வரும். இதுதரங்கம் என்னும் சொல்லின் (தரங்கம் = நீரலை) முதனிலையாகிய தரம் என்பதன் ஆக்கம். தரங்கம் போல அலை அலையாகக் கூறுவது என்பது பொருள். செம்மை, உயர்வு என்னும் பொருளில் தரமான பொருள் முதல் தரமான இலக்கியம் என்றாற் போல வரும் தரம் - தரை என்னும் சொல் அம் விகுதி (தர் + அம்) தரம் என அமைந்தது. தரை என்பதற்கு நிலை (நிலம்+ஐ) என்பது பொருள். தரம் = நிலைமை, அமைப்பு என்னும் பொருள் தரும்.

தலைப்புரட்டை, தலைப்புரட்டை : பொய்யும் பயனில் சொல்லும் பேசுபவன் என்னும் பொருளில் வழங்கும் தொடர். இது தலைப்புரட்டன் என்பதன் திரிபாகும். தலையாய புரட்டன், தலை கீழாகப் புரட்டுபவன் என்பது பொருள். முழுப்புரட்டன் என்பது கருத்து.

தவம் : மேம்படுதல், உயர்தல், துன்பம் பொறுத்தல் (நோன்பு) என்னும் பொருளில் வரும். தவ என்னும் உரிச்சொல் மிகுதி என்னும் பொருள் தரும். மிகுதல் = உயர்தல் தவ்+அம்=தவம் தவ் என்னும் குறிப்போசை மேல் எழுதல் (துன்பத்தினின்றும்) தாவிச் செல்லல். தவ் + அல் = தவல் = குறை குற்றம் உலகப்பற்று யான் எனது என்னும் பற்று நீங்கி உயர்ந்தோர் உலகம் புகச்செய்வது தவம். இதன் அடிச்சொல் தவ் என்பதாகும். உயர்வு நோக்கிப் புரியும் செயல் தவம் எனப்பட்டது.

தவித்தல் : தவம் என்பதனடியாகப் பிறந்த சொல் இது. ஒன்றைப் பெற ஒன்றினின்று விடுபட முயலும் பதற்றமான நிலைக்குத் தவித்தல் என்று பெயர். இது தவிப்பு என்றும் வரும். தவி = தவத்தை உடையது. (தவ்+இ=தவி) என்பது பொருள்.

தழை : மரம் செடி கொடிகளின் இலைகள் வளமாகப் பெருகிய நிலையில் உள்ள நிலை தழைத்தல். அதனடியாகத் தழை என்பது இலை தளிர்

முதலியவற்றைக் குறிக்கும் பெயர். இது இளவளார் முதலியவற்றைத் தழுவிக் கிளைத்தலான் தழுவியுள்ள இலை தளிர்கள் தழை எனப்பட்டன. தழைத்தல் = மிகுதல் - செழுமையுற்றுச் செழித்தல். தழை என்பது நீண்டு கண்டலுக்கும் தென்னைக்கும்.பெயராக அமைந்தது தாழை = தாழைச் செடி. தென்னை மரம்.

தளிர் : கிளை வளார்களின் பிதுக்கமாக முளைத்து வெளிப்படுதலின் தழைக்குத் தளிர் என்பது பெயர். மரக்கிளைகள் தம்முள்ளிலிருந்து தள்ளப்படுதலால் தளிர் எனப்பட்டது. இர் - சொல்லாக்க விகுதி (துளிர் காண்க)

தறுதலை : பிறர் வழி காட்டலை வேண்டாமல் தன்னறிவு போகும் போக்கில் வீணாகத் திரிபவனை தறுதலை என்பது வழக்கு. அவன் ஒரு தறுதலை சொன்னதைக் கேட்காமல் திரிகிறான் என்றாற்போல வரும். இதன் செம்மையான வடிவம் தறி+தலை=தலையற்றது. அதாவது முண்டம் என்பது பொருள். தறுத்லை என்பதற்கு ஒத்த பிறிதொரு சொல் தடிமுண்டம். (தலைதடியப்பட்ட உடல்) என்பதாகும். அறிவமைந்து நெறிகாட்டும் தலையற்ற பின் முண்டம் தன் போக்கில் துள்ளி விழுதலின் அறிவு நெறியுணராமல் திரிபவரைத் தறிதலை என்றனர். அது தறுதலை எனத்திரிந்து வழங்குகிறது.

தனிசு : வட்டியொடு செலுத்த வேண்டிய கடன் என்னும் பொருளில் வழங்கும் ஓர் இலக்கிய வழக்குச் சொல். வட்டி என்பது ஒருவர் கடனுக்கு (முதலுக்கு) மேல் மிகுதியாக - எச்சமாகச் செலுத்தும் பொருள் வட்டி. வட்டி என்பதற்குரிய தமிழ்ச்சொல் எச்சம். பெற்றதனத்திற்கு எச்சமாகத் தரும் பொருள் தன் எச்சம். இது தனெச்சு தனிசு என மருவி ஆக்கம் பெற்ற சொல்லாகும்.

தாட்டிகம் : வளமான உடம்பைத் தாட்டிகம் என்பது வழக்கு தடிமன் என்பது மூலம். தட என்னும் உரிச்சொல் இகம் என்னும் தொழிற் பண்புணர்த்தும் விகுதியொடு கூடி உட்பிணைப்பாகத் தாட்டிகம் என ஆக்கம் பெற்றதாகும். அவர் மிகவும் தாட்டிகமானவர் என்பது வழக்கு.

தார் : பிடரினின்றும் தோள்களின் இருபுறமாகத் தொங்குமாறு தரிக்கும் மாலை தார் எனப்படும். தொங்கவிடுதலால் தொங்கல் என்றும் பெயர். நால்வகைப் படைகளையும் சூழ அமைந்த காலாட்படை தார்ப்படை எனப்படும். படைகளைச் சூழ்ந்து அமைதலால் தார்ப்படைக்குக் கொடிப்படை என்றும் பெயர். கொடியைத் தாங்கிச் செல்லும் படைக்குத் தூசிப்படை என்பது பெயர். தூசி என்பது துவசம் என்னும் வடசொல்லின் சிதைவாகும். முன்னதாகத் தூசியை எழுப்பிச் செல்லும் படை எனில் வெள்ளை விளக்கமாகும்.

தாராளம் : தடையில்லாத நிலையைக் குறித்து வழங்கும் உலக வழக்குச் சொல். தார் என்னும் மாலை இருபக்கமும் முடியப்படாமல் தோளினின்று நேரே

தடையின்றித் தொங்குதல் போலத் தடையின்மையைக் குறித்து வரும் தார் என்பது அளவு என்னும் பொருள் அளம் என்பதனொடு இணைந்து தாராளம் என நின்றது. அளம் என்பது நிலைமையை உணர்த்தும் பெரியவங்க தாராளமாக உள்ளே வரலாம். அவன் மிகத் தாராளமாகச் செலவு செய்கிறான். அவனுக்குத் தாராளமான மனசு என்றாற் போலவரும். (ஏராளம் காண்க)

தாவாங்கட்டை : வாயிதழின் கீழ் அமைந்திருக்கும் பகுதியைக் குறித்துவரும் வழக்குச் சொல். இதன் செம்மையான வடிவம் தாள் வாய் + அம் + கட்டி - தாள்வாயில் அமைந்த அழகிய கட்டி என்பது பொருள். அத்தொடர் சிதைந்து தாவாங்கட்டை, தாவாங்கொட்டை என வழங்குகின்றது. தாள்வாய + அசைந்து செயல்படும் வாய்ப்பகுதி.

தாழக்கோல் : வாயிற்கதவு முதலிய புதவங்களை இணைத்துத் தழுவச் செய்யும் கருவி. தழுவச் செய்தலின் தாழ் எனப்பட்டது. தாழ் அ கோல் = தாழக்கோல். இது தாழ்ப்பாழ் என்றும் வழங்கும். கதவுகளைத் தழுவச்செய்யும் பழு. தாழ்ப்பழு - பழு = பழுமரம். அது பாழ் எனத் திரிந்தது. இனித் தாள்ப்பாழ் எனவும் வழங்கும். அச்சொற்கு இரு கதவுகளை தளைக்கும் பழுமரம் என்பது பொருள். தாள் - தாளிடல் - கதவைத் தாளிட்டார் என வழங்கும்.

தாள் : கால்களின் அடிப்பகுதி உறுப்புத்தாள். உடம்பைத் தள்ளிச் செல்லுதலின் தள் -- தாள் என ஆக்கம் பெற்றது. கால் என்பது கலித்தலைச் செய்வது என்னும் பொருளுடையதேயாகும். கலித்தல் = தாவிச்செல்லுதல். தாள் உடம்பைத் தள்ளி இயக்குதலின் இயக்கும் முயற்சிக்கும் தாள் என்று பெயரமைந்தது அது தாளாண்மை என ஆக்கம் பெற்றது.

தாறுமாறு : எதைக்கேட்டாலும் தாறுமாறாப் பதில் சொல்றான். எல்லாம் தாறுமாறா நடக்குது என்றாற் போல வழங்கும் இணைச்சொல். தாறு என்பது குறுக்கு நிலையைக் குறிக்கும். கால்களுக்கு இடையே உடையை இட்டுச் சுற்றிக் கட்டுதலைத் தாறு பாய்ச்சிக் கட்டுதல் என்பர். இது தற்றல் என்பதன் ஆக்கம் மடிதற்றுத்தான் முந்துறும் என்பது திருக்குறள். மாறு எதிர்நிலை, மாறுபாடு, குறுக்கு மறுக்கு என்பது இப்பொருளில் அமைந்த பிறிதோர் இணைச்சொல்.

திக்குமுக்காடல் : ஆசிரியர் அடுத்தடுத்துக் கேட்ட கேள்விகளுக்கு விடை கூற இயலாமல் மாணவன் திக்குமுக்காடிப் போய்விட்டான் என்றாற் போல வழங்கும் வழக்குத்தொடர். திக்கு - திக்குதல். தொடர்ந்து பேச முடியாமல் இடையிடையே தடைப்படுதலைத் திக்குதல் என்பர். முக்கு = முக்குதல் மனத்தின் பாரத்தால் மூச்சுத்திணறுதல். திக்கியும் முக்கியும் பேசுதலைத் திக்குமுக்காடல் என்பர்.

திட்டவட்டம் : வரையறுத்த முடிவு என்னும் பொருளில் வழங்கும் இணைச்சொல். தலைவர் இதை இப்படிச் செய்ய வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார் என்றாற்போல வழங்கும். பலவற்றை ஆராய்ந்து தேர்ந்து கொள்ளும் நிலை திட்டம் எனப்படும். ஐந்தாண்டுத் திட்டம், பாடத்திட்டம், திட்டச்செலவு என்றாற் போலவரும். பல கூறுகளை ஒருங்கு திரட்டிப் பயனுள்ளவற்றைத் தொகுத்தல் திட்டம். இது திரட்டல் என்பதன் மருவாய் அமைந்த சொல். திரட்டு. இதன் முதனிலை தொழிற்பெயர் விகுதியாக அல் என்பது சேரின் திரட்டல் என்றும், பண்புப்பெயர் விகுதியாகிய அம்சேரின் திரட்டம் என்றும் அமையும். திரட்டு என்பது ரகரம் கெட்டுத் திட்டு என்று மருவி அம்மொடு கூடித்திட்டம் என அமைந்தது. வட்டம் வளைத்து ஓர் எல்லைக்குள் அடக்குதல் திரட்டியவற்றை வரையறுத்தல் வட்டப்படுத்தல். தொகுத்துவரையறுத்தல் என்பது கருத்து.

திட்டுதல் : வைதல் வசை கூறுதல் என்னும் பொருளில் வழங்கும் வழக்குச்சொல். ஒருவர் மனம் உளைய வாய்ச்சொற்களால் சுடுதல் நாவினற் சுடுதல் என்பார் வள்ளுவர். இச்சொல் தெறல் என்னும் பகுதி இரட்டித்த தெற்றல் என்னும் சொல்லின் திரிபு. தெறல் = சுடுதல் வருத்துதல். தெற்றல் பிறர் மனம் வருந்தச் செய்தல். அது திட்டல் என மருவியது.

திண்ணை : வீட்டு முற்றத்தில் அமைந்த மேடை. கல்லாலும் மண்ணாலும் செறித்து வலிவாகச் செய்யப்பட்டது என்பது பொருள். திண்மை = செறிவு. திணித்தல், செறித்தல் திண்மையாகச் செய்யப்பட்டது திண்ணை.

திணறுதல் : இந்த வேலையைச் செய்யத் திணறிப்போய் விட்டான் என்றாற்போல வரும். திணறுதல் ஈண்டு மூச்சு மூட்டுதல். மூச்சுத்திணறல் என்பது வழக்கு. மூச்சுக்காற்று இயல்பாக வெளிப்படாமல் செறிந்து தேங்கிவருதல் திணறுதல் எனப்படும்.

திமில் : காளைமாட்டின் கழுத்தின் பின்புறம் அமைந்துள்ள மேடு. ஒட்டகத்தின் முதுகில் அமைந்துள்ள மேடு முதலியவை திமில் எனப்படும். திமிர்தல் = புடைத்தல் (திமிர் = செருக்கு = ஆணவம் புடைத்தல்) திமிர் என்பதன் ரகரம் லகரப்போலியாய் அமைந்த சொல் 'திம்' என்னும் ஓசைக்குறிப்பு மேல் எழுதலை உணர்த்தும் கூட்டம் திமுதிமு என்று கூடிவிட்டது என்பது வழக்கு. இச்சொல்லாக்க விகுதி திமிருதல் கட்டினின்று வலிந்து வெளிப்படுதல்.

திராணி : இதைச் செய்யத் திராணியில்லை உனக்கு என்றாற்போல வரும் திறமை, வலிமை என்னும் பொருளில் அமைந்த இச்சொல். திறம்+ஆண்மை+இ= (திற + ஆண்+இ) என்பவற்றின் திரிபாகும். இனி ஸ்திர ஆண் + இ = என்பவற்றின் திரிபாக அமைந்த வடசொல் என்று கொள்ளலுமாம்.

திருக்குசு : திருக்கு+செய்=திருக்குசு எனச் சிதைந்த சொல். திருக்கு + வஞ்சனை, காவு, தந்திரம் என்னும் பொருள்படும். இதனை டிரிக்ஸ் என்னும் ஆங்கிலச் சொல்லின் திரிபாகக் கருதுவாருமுளர்.

திருட்டு : களவிற்குரிய பெயர்களுள் ஒன்று. பிறர்பொருளை அவர் அறியாமல் வெளவிக் கொள்ளல். இதன் முதனிலை திரட்டல் திரள்+து=திருட்டு. கொள்ளுதல் கொள்ளையானாற் போலத் திரட்டுதல் திருட்டு என ஆக்கம் பெற்றது. வழிச்செல்வோரின் பொருளைப் பறித்தல் வழிப்பறி. இனித் திருவேட்டை (திரு + வேட்டை) திருவேட்டு - திருட்டு எனத் திரிந்து ஆக்கம் பெற்றது எனினும் ஒக்கும்.

திருந்துதல் : தவறாகப் பிழையாகச் செல்லும் செலவினின்றும் வினையினின்றும் திரும்புதல். திரும்புதல் என்பதற்குரிய செஞ்சொல். திருமுதல் திருமுதலின் பகுதி திரும் அது தல் விகுதியொடு கூடித் திருந்தல் என்றாயிற்று. இதன் பிறவினைதிருத்தல் தவறான வழியினின்றும் மீட்டுநேர் வழியிற் செலவிடுதல் திருத்தல் எனப்படும். திரும்+தல் = திருந்தல் என அமைந்தது.

திருமுறை : திருஞானசம்பந்தர் முதலாகச் சேக்கிழார் ஈறாய அருட்புலவோர் அருளிய தேவார திருவாசகம் முதலிய நூல்களுக்குச் சான்றோரிட்ட பெயர் திருமுறை என்பது. அருள் நூல்கள் என்பது பொருள். முறி என்பது எழுதப்பெற்ற ஓலைகளுக்குரிய பெயர் திரு தெய்வத்தன்மையைக் குறிக்கும் அடைமொழி முறிகளாலாகியது முறை எனப்பட்டது. முறை என்பது நூல்களைக் குறித்த பெயர். திருமுறை எனின் அருள் நூல்கள் என்பது பொருள். ஒன்று முதல் பன்னிரண்டு வரை வரிசைப்படுத்தப் பெற்றவை. அஃதாவது முறைப்படுத்தப்பட்டவை அதனால் திருமுறைகள் எனப்பெற்றன என்பதும். திருவாகிய இறையை நோக்கி முறையீடு செய்யப்பெற்றவை அதனான் திருமுறை எனப்பெற்றன என்பதும் வெள்ளை விளக்கமாகும். முறை என்பதற்கு நூல் என்பதே பொருளாகும்.

திரை : திரைதல் = சுருண்டு அமைதல். கடல் அலைகள் சுருண்டு எழுந்து கரையில்படர்தலால் திரை எனப்பட்டன. உடம்பின் தோல் சுருங்கி மடங்குதலால் திரை எனப்பட்டது. நாடகமேடை எழினிகள் சுருண்டு எழுதலும் சுருள் நீங்கி விரிதலும் செய்தலான் திரை எனப்பட்டது.

தில்லுமுல்லு : ஆசை காட்டியும் அச்சுறுத்தியும் காரியங் கொள்ளும் பேச்சும், செயலும் குறித்துவரும் இணைச்சொல். இதன் செம்மையான வடிவம் தில்மல்லு - தில் என்னும் இடைச்சொல் அவா ஆசை விழைவு என்னும் பொருள் தரும். அது ஈறு திரிந்து தில்ல என வரும். மல், மல்லாடுதல், வலிமை காட்டுதல் அது அச்சுறுத்தல் என்னும் கருத்துப்பட அமைந்தது. இது பெரும்பாலும் பொய்புரட்டு, ஏமாற்றல் என்னும் பொருளில் வழங்கும்.

திவலை : நீர்த்துளி மழைத்துளிகளை உணர்த்தும் இலக்கிய வழக்குச் சொல். இது தூவல் என்பதன் திரிபாக்கமாக அமைந்த சொல் தூவல் (மழை தூவுகிறது) என்பது வினைப்பெயராதலின் அதனைப் பொருட்பெயர் ஆக்குதற் பொருட்டு திவல் எனத் திரித்து வினை முதற்பொருள் விகுதியாகஐகாரத்தைச் சேர்த்துத் திவலை என ஆக்கம் செய்யப்பட்டது.

தீர்மானம் : தீர்தல் = முடிவுறுதல். மானம் = அளவு - முற்றமுடிந்த அளவு என்பது பொருள் முடிந்த முடிபாக அமைவது தீர்மானமாகும். இதனை வடசொல் என மயங்குவாரும் உளர். மன் = நிலை - நிலை = அளவு அம் சொல்லாக்க விகுதி - இதன் பெறுமானம் என்ன? என்பது வழக்கு.

துக்குணி : மிகச்சிறிய அளவு என்று பொருள்படும் வழக்குச் சொல். அவன் மாம்பழத்தை நறுக்கி எனக்குத்துக்குணியோண்டு கொடுத்தான் என்றாற் போல வரும். இது துக்காணி என்பதன் திரிபுதுக்காணி கடைசி எல்லை அளவாகிய நாணயக்காசு அவகிட்ட துட்டுதுக்காணி ஒன்றுமில்லை என்பது வழக்குநாலு துக்காணி கொண்டது துட்டு = துட்டு என்பது துண்டு என்பதன் திரிபு. பழைய பைசாக்காசுக் குத்துக்காணி என்பது ஒரு பெயர்.

துச்சம் : இலேசு, அற்பம், எளிதானது, மதிப்பற்றது என்னும் பொருளில் வழங்கும் வழக்குச் சொல். உழவு வேலை என்றால் அதை இவன் மிகத் துச்சமா நினைக்கிறார்கள் என்றாற் போல வரும். இது தூசு என்பதன் திரிபாகிய துச்சு என்னும் முதனிலை அம் என்னும் பண்பு விகுதி பெற்றுத் துச்சம் என்று ஆக்கப் பெற்றதாகும். தூசு என்பது பஞ்சிற்குப் பெயர் ஊதினாற் பறப்பது தூசு தூ + உஸ் என்னும் குறிப்போசையால் அமைந்த பெயர் தூசு தூசு தூசி என்றும் வரும். தூசு + அம் = துச்சம்.

துஞ்சல் : இது கண்ணுறங்கல், சாதல் என்னும் பொருளில் வரும் செயலறுதல் என்பது கருத்து. துன் + செயல் = துஞ்சல் என ஆக்கம் பெற்றது. துன் என்னும் பகுதி துனி = வெறுப்பு. துன்பம் = இடுக்கண் - துன்னல் = நெருங்கல் துனைதல் = விரைதல் என விகுதி வகையால் பல்வேறு பொருளில் வரும் துன்னுதல் நெருங்குதல் உறக்கம் கண்ணின் இமைகள் நெருங்குதலினால் நடைபெறும். கண்ணிமை மூடல் துன்+செயல் ஆகும் மீண்டும் இமைதிறவாத நிலை யேசாதல். கண்ணிமை நெருங்கிய நிலையே துஞ்சல் என ஆக்கம் பெற்றது என்க.

துடுக்கு : சுறுசுறுப்பு என்னும் பொருள் தரும். துடிப்பு - என்பது பண்புணர்த்தும் இவ்விகுதி பெறுமிடத்துத் துடிக்கு என உருப்பெற்றுத் துடுக்கு என ஆக்கம் பெற்றது. இது குறும்பு கடுமை என்னும் பொருளில் வழங்குகிறது.

துப்பட்டி : வலிய கெட்டியான மேற்பார்வைத் துகில் இது. தூ + படாம் என்பவற்றின் மரூஉ. தூ = வலிமை படாம் = சீரை. தூப்படாம் - துப்படம், துப்பட்டி என மருவியது. வலிய மேலாடையைத் துப்பட்டா என்பது வழக்கு.

துப்பு : (1) வாயினின்றும் நீர் முதலியவற்றை வெளிப்படுதல் இது தூ + பூ என்பவற்றின் ஆக்கம் தூ = வெளிப்படுத்தல் பூ உதட்டைக் குறிக்கும் குறிப்பெழுத்து தூ + பூ = துப்பு என அமைந்தது. (2) தடையம் என்னும் பொருளில் வரும் துப்பு என்பது துருப்பு என்னும் ஆங்கிலச் சொல்லின் திரிபு நேற்று நடந்த திருட்டுப் பற்றிய துப்புக் கிடைத்துள்ளது. துப்பாராய்தல் என்றாற் போலவரும். (3) துப்பு உணவு என்னும் பொருளில் வரும் அது துய்ப்பு (=உண்ணும் உணவு) என்பதன் திரிபு (4) துப்பு என்பது வலிமை என்னும் பொருளில் வரும். அது துடிப்பு என்பதன் திரிபாகும்.

துப்புரவு : குப்பை கூளம் தூசு மாசுகளை நீக்கும் செயல் குறித்து வரும். வீட்டைத் துப்புரவு செய்ய வேண்டும். துப்புரவுத் தொழிலாளர் என்பன வழக்கு. குப்பை முதலியவை ஒன்றினின்றும் கழிந்த கழிவுகளாதலின் அப்பொருளால் துப்பப்பட்டது நீக்கப்பட்டது என்னும் பொருளில் குப்பை முதலியவை துப்பு (துப்பிய பொருள்) எனப்பட்டன அரவு தொழிற்பெயர் விகுதி.

துயரம் : வருத்தம் சோர்வு மெலிவு என்னும் பொருள் தரும் பண்புச் சொல். இது தொய்வு என்பதன் முதனிலையாகிய தொய் என்பது துய் என ஆக்கம் பெற்று நிறைவுப் பொருள் தரும் அர் விகுதியுடன் பண்புப்பெயர் விகுதியாக அம் சேர்ந்து துய் + அர் + அம் = துயரம் என அமைந்தது அம்விகுதி குன்றித்துயர் எனவும் வரும்.

துயில் : உறக்கம் என்னும பொருள் தரும் சொல் பொறிகள் துய்த்தல் இல்லாதநிலை என்பது பொருள். துய் + இல் துய்ப்பு = அனுபவித்தல். உறக்கத்தில் பொறிகள் செயல்படாமையான உறக்கம் துயில் எனப்பட்டது.

துருசு : விரைவு சுருசுருப்பு என்னும் பொருளில் வழங்கும் வழக்குச் சொல் பையன் ரொம்பத் துருசு. அவன் வேலை செய்வதில் ரொம்பத் துருசு என வழங்கும் துரு துரு என்னும் இரட்டைக் கிளவி உடற்கிளர்ச்சியை உணர்த்தும் சொல் திருடன் துருதுருவென விழிக்கிறான் என்பது வழக்கு. இது திரிந்து திரு திரு என வழங்குகிறது. இரட்டைக் கிளவியை ஒரு சொல்லாகக் கூறுமிடத்து சு என்னும் சொல்லாக்க விகுதி கொடுத்துத் துருசு என்றனர். சுருசுருப்பு உள்ளக் கிளர்ச்சியையும் துருதுருப்பு உடற்கிளர்ச்சியையும் குறிக்கும். குழந்தை துருதுருவென இருக்கிறது என்பர்.

துளிர் : மரஞ்செடி கொடிகளில் இலைகள் முளையாகத் துள்ளி வெளிப்படுதலின் இலைதழையின் தொடக்கம் துளிர். (துளிர்த்தல்)

எனப்பட்டது. பையன் ரொம்பவும் துளுத்து (துளிர்த்துப) போய் விட்டான் என்பது வழக்கு.

துன்பம் : பிறிதொன்றன் செயலால் வருந்தும் நிலை துனபம் எனப்படும். இது துன் என்னும் பகுதியுடன் பண்பு விகுதியாகிய புகரம் பெற்றுத் துன்பு என்றும் மேலும் அம்விகுதி பெற்றும் துன்பம் என ஆக்கம் பெற்றது. துன் என்னும் உரியடி நெருங்குதல் என்னும் பொருளுடையது. பிறர் உடம்பாலுக் கருவிகளாலும் நெருக்குமிடத்து எய்தும் மனவலி உடல்வலி துன்பம் எனப்பட்டது. தைக்கு ஊசி துன்னூசி எனப்படும். வெறுப்பால் எய்தும் வருத்தம் துனி எனப்படும்.

தூசு : பஞ்சு முதலிய துகளுக்குத் தூசு என்பது பெயர். உஸ் என்று காற்றுத் தூவினால் பறப்பது தூ+உஸ் =தூசு காற்றில் பறக்குமியல்பு பற்றிப் பஞ்சிற்குத் தூசு என்று பெயர். அது ஆகு பெயர் முறையில் பஞ்சினால் ஆக்கம் பெற்ற ஆடையைக் குறிக்கும்.

தூண்டல் : ஊக்குதல், செலுத்துதல் மேலெழுப்புதல் முதலிய பொருள் தரும். இச்சொல் தூ+உண்டல் என்பவற்றின் ஆக்கமாகும். தூவுதல் - செலுத்துதல் வெளிப்படுத்தல் உண்டல் = அடைதல். இது துணைவிணையாக மேற்கொள்ளல் என்னும் பொருளில் வரும். கட்டுண்டான் நொறுக்குண்டான் என்பன காண்க. தூ+உண்=தூண் + தூ=தூண்டு அல் தொழிற்பெயர் விகுதி. தூ+உண்டு+அல்=தூண்டல் என அமைந்தது. தூண்டுதலைச் செய்யுங் கருவிக்குத் தூண்டில் என்பது பெயர். நீருள்ளிருந்து மீனை மேலெழுப்புதலின் தூண்டில் எனப்பட்டது. தூண்டல் – தொழிற்பெயர் – தூண்டில் = கருவிப்பெயர்.

தூது : சேய்மையில் உள்ள ஒருவருக்கு ஒன்றைத் தெரிவிக்க ஒன்றைச் செலுத்துதல் தூது. இது உயர்திணைப் பெயராகுமிடத்துப்பால் விகுதி கூடித் தூதன், தூதர் எனவரும். இச்சொல் தூ+தூ=தூது என்பவற்றின் ஆக்கமாகும். தூவுதல் செலுத்துதல் விருப்பம் நோக்கி இரட்டித்து இறுதி குறுகி நின்றது.

தூம்பு : நீரைச் சொரியும் குழற்கருவி. இது தூ + அம் + பு என்பதன் ஆக்கம். தூ = தூவுதல். அம் = நீர்பு விகுதி தூஅம்பு=தூம்பு - தூம்பாகிய உறுப்பினையுடையது தும்பி - தூம்பாக உள்ளகை தும்பிக்கை.

தூய்மை : தூவுதல் - நீக்குதல். தூவுதலைச் செய்தது தூ + இ = தூய் அது மை என்னும் பண்பு விகுதியொடு கூடித் தூய்மை என அமைந்தது. உள்ளும் புறமும் இயற்கையாகவும் செயற்கையாகவும் படிந்த தூசினை நீக்கிய நிலைமை தூய்மை. குற்றமற்றது என்பது கருத்து.

தூர் : ஒன்றைத் துருவுவதால் வெளிப்படும் துகள் தூர். துருவுதல் குடைதல் நிலத்தைக் குடைந்து அமைக்கப்படுவதால் கிணற்றுக்குத் துர என்பது ஒரு

பெயர். குடைவதனால் வெளிப்படும் மண் சேறு அழுக்கு முதலியவை தூர்./ குடையப்பட்ட அல்லது துருவப்பட்ட இடத்தில் மீண்டும் மண் முதலிய துகள் நிறைந்தால் தூர்ந்தவிட்டது என்ப. கிணறு தூர்ந்துவிட்டது, குளம் தூர்ந்துவிட்டது என்பது வழக்கு. கிணறு முதலியவற்றின் தூர் நீருக்குள் கிடத்தலால் அடிப்பகுதி என்பதும் பொருள். அம்முறையில் செடிகளின் அடிப்பகுதியாய் மண்ணொடு கலந்திருக்கும் வேர் தூர் எனப்பட்டது. தேங்காய்த் துருவல் என்னுமிடத்து துருவல் தொழிலாகு பெயராய் துருவப்பட்ட பூப்பொருளை உணர்த்தும். துருவல் குடைந்து உள்ளிருக்கும் பொருளை வெளிப்படுத்தலின் துருவித் துருவிக் கேள்வி கேட்டார் என்பது வழக்கு. அதனான் மண் மரம் முதலியவற்றைக் குடையும் கருவி துரப்பணம் எனப்பட்டது.

தூறல் : தன்வினை ஒன்றினின்றும் வெளிப்படுதல் என்பது பொருள். இதன் பிறவினை தூற்றம், கார்மேகம் தன்னிலிருந்து வெளிப்படுதலின் மழை நீர் ஒழுக்கம் தூறல் எனப்பட்டது. தும்பும் தூசும் வெளியேறச் செய்வதால் தூற்றல் என்ப ஒருவரின் குறையை எடுத்துப் பலவாக வெளிப்படுத்தலும் தூற்றல் எனப்படும். துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் என்னை கொல் ஏதிலார் மாட்டு என்பது திருக்குறள்.

தெக்கணாமுட்டி : திறமையில்லாதவர், செயற்படாமல் முடங்கிக் கிடப்பவரைக் குறித்து வழங்கும் ஏளனச் சொல். இதன் செம்மையான வடிவம் தாக்க ஒணா முட்டி = தாக்கொணாமுட்டி. தாக்குதல் பகைவரைப் புடைத்தல். முட்டி குத்துவதற்காக மடக்கிய கை முட்டி - முஷ்டி எனப்பிழைபட வழங்கும் வலிமையிருந்தும் முட்டியை மடக்கிய பின்னர் எதிரியைத் தாக்காமல் வாளாவிருக்கும் கோழைத் தனத்தைச் சுட்டித் தாக்கொணாமுட்டி எனப்பட்டது. கையாலாகாதவன் என்பது வழக்கு. (நெட்டாமுட்டி காண்க)

தெகிடுதெத்தும் : அலைக்கழித்தல் ஏமாற்றல், வஞ்சித்தல் என்னும் பொருளில் வழங்கும் தொகைச் சொல் தெகிடு = சூது தெத்தம் = தெத்துதல் = கடப்பாடாகச் செய்தல். இந்தப் பாவத்தை அவன் தெத்தியாகணும் என்பது வழக்கு.

தெவிட்டல் : இனிப்புப் பலகாரம் அதிகமாகத் தின்றதனால் தெவிட்டிவிட்டது தெவிட்டுதல். உண்ணும் விருப்பத்தைக் கெடுத்தல், உணவை வெறுத்தல். இச்சொல் தெவ் + ஊட்டல் என்பதன் மரூஉ. தெவ்வூட்டல் தெவுட்டல் தெவிட்டல் என அமைந்தது. தெவ் = பகை. உணவு பகைத்தன்மை எய்துவது ஊட்டல். ஊட்டு = உணவு அல் தொழிற்பெயர் விகுதி. தெவிட்டுதல் என்பதற்குத் தின்னுதல் என்பதனைப் பொதுமுறையாற் கொள்வர்.

தேசம் : உயிரினங்களும் பிற பொருள்களும் தங்கியிருக்கும் இடம் தங்குதல் - தேங்குதல் எனத்திரியும். நீர்த்தேக்கம் - எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன என்பன வழக்கு. இச்சொல்லின் முதனிலையாகிய தே என்பது இடம் எனப்பொருள் தரும் அம்விகுதியொடு கூடித் தேயம் என்றாகி யகரசகரப் போலி வகையால் தேயம் - தேசம் என்று ஆக்கம் பெற்றது. செய்யுள் வழக்கில் தேஎம் என அளபெடுத்து அகரம் கெட்டுவரும். வடமொழியிலும் இச்சொல் இடம் என்னும் பொருளிலேயே பயின்று வருகிறது. அதனான் இதனை வடசொல் என மயங்குவாரும் உளர்.

தேர் : தெருவில் திரியும் ஊர்தி என்பது பொருள். வரிதல் வார் எனப்பட்டது போலத் திரிதல் - தேர் என அமைந்தது. வடமொழியில் ரதம் என்பர். திரிதலால் தேர் எனப்படும் என்பதை கானல் நீரைப் பேய்த்தேர் என்று வழங்குவதால் அறிக.

தேள் : கொடுக்கினால் ஊறு செய்யும் ஒரு சிற்றுயிர் இதன்மூலச்சொல் தெறல் என்பது நிரையசைச் சொல்லாகிய தெறல் என்பது நீண்டு தேல் என உருப்பெற்று லகரம் சுள்ளாப்பை உணர்த்தாவாதலின் லகரம் ளகரமாகத் திரிக்கப்பெற்றுத் தேள் என ஆக்கம் பெற்றது. கொட்டினால் உடம்பைத் தெள்ளச் செய்யுமாதலின் தேள் எனப்பட்டது. இதன் இனமாகிய பெரிய தேளுக்கு நண்டுத் தெறுக்கால் என்பது பெயர்தெறும் கால்களை உடையது தெறுக்கால். எனவே தெறல் இதன் முதனிலை என்பது போதரும் நண்டுக்குரியவை போலக் கால்களும் வாயும் அமைந்தமையால் நண்டு வாய்காலி என்பதும் பெரிய தேளுக்குப் பெயர் அது வழக்கில் நட்டுவாக்கலி எனத்திரிந்து வழங்குகிறது.

அந்த வீட்டில் ஒரு ஆளையும் காணும் தேளையும் காணும் என்க. ஏதோ ஆளெ தேள வைச்சுக் காரியத்தை முடி என்றும் வரும் வழக்கில் தேள் என்பது சோறு கீரு தாருங்கள் தெருவிலெ கிருவில திரிவான் என்றுவரும் குறுக்கீட்டுச் சொல் போல இணை உணர்த்திவரும் சொற்பொருளற்ற சொல்.

தொக்கு : இளப்பம், மதிப்பற்ற நிலையைக் குறித்து வரும் வழக்குச் சொல். எல்லோரும் பயன்படுத்திக் கொள்ளவும், உதாசினம் பண்ணவும், ஆளாகிக் கிடக்கும் நிலை பற்றி வரும். இந்த வீட்டில் (அலுவலகத்தில்) சின்னான் என்றால் எல்லோருக்கும் தொக்கு. ஆளாளுக்கு அதிகாரம் பண்ணுவார்கள் என்றாற்போல வரும். இஃதொர் உவம அடியாகப் பிறந்தவழக்கு. தொக்கு என்பது ஊறுகாயைப் போலச் செய்யப்படும் ஒருவகைத் துணையுணவு. மாங்காய்த்தொக்கு ஆவக்காய் தொக்கு என வரும். தொக்கு என்னும் இவ்வுணவு - சோறு, தோசை, ரொட்டி முதலிய எல்லாவற்றிற்கும் துணையாக அமையும். அதுபோல எல்லோருடைய அதிகாரத்திற்கும் ஆளானவரைக் குறித்து இவ்வழக்கு அமைந்தது துகைக்கப்பட்டது என்பது தொக்கு என ஆக்கம் பெற்றது.

தொங்குனி : வஞ்சனையாகக் கெடுதல் நினைப்பவரைக் குறித்து வழங்கும் கொங்கு நாட்டு வழக்குச்சொல். இது தோங்கு + உன்னி என்பவற்றின் திரிபு தோம். குற்றம். வஞ்சனை உன்னுதல் = நினைதல் தோம் என்பது தோங்கு எனக்குகரம் பெற்று உன்னி என்பதனொடு கூடித்தோங்குன்னி என உருப்பெற்றுத் தொங்குனி என மருவி வழங்குகின்றது.

தொட்டில் : உள்குடைவாகத் தோண்டுதலைத் - தொடுதல் என்ப. "நிலந்தொட்டுப் புகார்" என்பது பாடலடி. நாற்புறமும் சுவர் போலத் தடுப்பமையப் பள்ளமாக இருக்கும் கலம் தொட்டி எனப்படும். நீர்த்தொட்டி கழுநீர்த்தொட்டி என்பது வழக்கு. இல் இருக்கும் இடம். தொடு-தொட்டு+இல்= தொட்டில். பெரும்பாலும் குழந்தைகளை அமர்த்தி அசைக்கும் இருக்கைக்கே இது வழங்கப்படும். குழந்தையைத் தொட்டிலிட்டுத் தூங்கச் செய் என்பது வழக்கு. அது மரம் முதலியவற்றால் செய்யப்படும். அதுபோல துணியை இருபுறமும் முடிந்து தொங்கவிட்டு நடுவே பள்ளம் செய்த துணியும் தொட்டில் எனப்படுகிறது. தொட்டிலில் தொங்குவது தூங்குவது என மருவியது.

தொத்தல் : தொத்தல் மாடு அவன் ஒரு தொத்தல் பயல் என்றாற்போல வரும் மெலிவு தளர்ச்சி என்னும் பொருள்படும். இது தொய்+தோல் என்பவற்றின் மரூஉவாகும். தொய்தல்=தளர்தல் (தோல்)சுருங்கல் தோல் = உடம்பின் மேற்பகுதியாகிய தோல். தோல் தொய்ந்து சுருங்கி வற்றலானது என்பது பொருள்.

தொந்தரவு : இது தோம்+தரவு - என்பவற்றின் ஆக்கம். தோம் = துன்பம். ஊறு தரவு = தருதல். தோம் தொம் எனத்திரிந்து தொந்தரவு என அமைந்தது. இது தொந்தரை எனச் சிதைந்தும் வழங்கும். இனி நீக்க இயலாது அமைந்த தொந்தம் காரணமாகப்படுத் துன்பம் என்பது அரவு என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்றுத் தொந்தரவு என அமைந்தது. எனினும் பொருந்தும் தொந்தம் = உறவு.

தொப்புள் : வயிற்றின் நடுவமைந்துள்ள உறுப்பு. இது உட்குழிந்திருத்தலின் தொப்புள் என வழங்கப்படும். தொப்பு என்பது வயிற்றைக் குறிக்கும் தோல்பை என்பதன் திரிபாகிய தொப்பை என்பதன் திரிபு தொப்பை+உள்=தொப்புள் என அமைந்தது.

தொப்பை : வயிற்றைக் குறிக்கும் தோல்+பை=தோற்பை என்பது திரிந்து தொப்பை என நின்றது.

தொம்பை : மூங்கில் பட்டைகளால் கூடாகச் செய்யப்பட்ட கூடையைத் தொம்பை என்பர். தூம்பு - மூங்கில் பிளப்பால் செய்யப்பட்டது. தூம்பு+பை=

தொம்பை. இது மற்ற பனைமட்டை அகணியாலும் ஓலைகளாலும் செய்யப்பட்ட கூடைகட்கும பெயராயிற்று. தொம்பையைப் பயன்படுத்தும் நாடோடிகள் தொம்பர் எனப்படுகின்றனர். மூங்கில் கழிகளைக் கொண்டு பல்வேறு திறனான விளையாட்டுக்களைச் செய்வதாலும் தொம்பன் எனப்பெயர் பெற்றனர் எனலாம்.

தொழுவாடு : வீட்டு வேலை. கழனி வேலை புரிந்து கூலி பெறும் தொழில் புரிவோரைக் குறித்து வழங்கும் சொல். தொழுவு = தொழில் - ஆடுதல் மேற்கொள்ளல். தொழில் புரிவோர் என்பது பொருள். அடிக்கடி ஒரு பணியை வேண்டியோ பிறபொருளை வேண்டியோ நயந்து வேண்டுபவரை நோக்கி இது இவருக்குத் தொழுவாடாப் போச்சு என்பது வழக்கு.

நக்கல் : பரிகசித்தல் இளப்பமாகப் பேசுதல் என்னும் பொருளில் வழங்கும் சொல். "அவனை ஏண்டா வீணா நக்கல் பண்றெ" இந்த நக்கல் பேச்செல்லாம் ஏங்கிட்ட வேண்டாம் என்றாற் போல வரும். இது நகுதல் (எள்ளிச்சிரித்தல்) என்பதன் பிறவினை நகை புரிதல் என்பது கருத்து நகுதலின் நக். அது நகு. நகை, நகைப்பு, நக்கல் எனவரும். அல் தொழிற்பெயர் விகுதி. நாவால் வழித்தலும் நக்கல் எனவரும். அதன் முதனிலை நக்கு என்பது சிரித்தலை உணர்த்தும் பகுதி நகு என்பதாகும்.

நக்குணி : (1) நக்கி உண்பவன் விருந்துண்டு கழித்த இலையில் உள்ள உணவை ஏழ்மை காரணமாக நக்குபவன் என்பது கருத்து. (2) மிகச்சிறிய பொருள் ந என்னும் முன்னொட்டு இன்மை, எதிர்மறை முதலிய பொருள் தரும். அது ஈண்டுச் சிறுமையை உணர்த்தி நின்றது. குணி = பொருள். சிறிய பொருள் என்பது கருத்து.

நகை நட்டு : பொதுவாக பொன் முதலிய உலோகங்களால் செய்து அணியும் அணிகலன் நகை எனப்படும். நகைத்தல் = சிரித்தல். அது ஈண்டு பளபளவென ஒளி வீசுதலைக் குறித்து நின்றது. இச்சொல் தனியேயும் நட்டு என்பதனோடு சேர்ந்தும் வரும். நட்டு என்பதற்கு நாட்டப்படும் அணி என்பது கருத்து. தலையிலும் கழுத்திலும் தோளிலும் அணியப்படும் நகைகள் அப்படியே மாலை போல அணியப்பெறும். கையிலும் காலிலும் விரல்களிலும் அணியப்படுபவை. செருகி இருக்கமாக அணியவையாதலின் இவை நாட்டப் பெறுவனவாம். நாட்டப்பெறும் அணிகலன் நட்டு எனப்பட்டது. சார்த்தப்படுவன நகை. பூட்டி நாட்டப்படுவன நட்டு.

நச்சுப்பிச்சு : சுற்றம் பணியாளர் முதலானோரால் விளையும் துனபம் இடையூறு பற்றி வழங்கும் இணைச்சொல். இது நைத்தல். புய்த்தல் என்பவற்றின் மரூஉவாகும். பிக்கல் புடுங்கல் காண்க. திருவிழாவுக்கு அழைத்துப் போகச்சொல்லி குழந்தைகள் பிய்க்கிறார்கள் என்பது வழக்கு. பிய்த்தல் - புய்த்தல் என்பதன் திரிபு.

நடவடிக்கை : ஒரு செயலைச் செய்யத் தொடங்கி நடைமுறைப்படுத்துவதைக் குறித்து வழங்குந் தொகைச்சொல். இனி சட்டப்படி குற்றவாளிகள் மீது நடவடிக்கைக எடுக்கப்படும் என்றாற்போல வழங்கும் இதன் செம்மையான வடிவம் நடைவு அடுக்கை. நடப்பு = நிகழ்வு. அடுத்தல் = மேற்கொள்ளல். நடைவடுக்கை என்பது நடவடிக்கை என மருவியது. அடுத்தல் = தொடங்குதல்.

நடையைக்கட்டு : புறப்படு, செல் என்னும் பொருளில் வழங்கும் தொகைச்சொல். சரிவேலை முடிந்தது இனி நீ நடையைக் கட்டு என்பது வழக்கு. இதன் செம்மையான வடிவம் நடையைக் கூட்டு என்பதாகும். நடத்தலைச் செய் என்பது பொருள். கட்டு எனின் நடக்காதே முடங்கியிரு எனப் பொருள் தரும். கூட்டு என்பது திரிந்து கட்டு என ஆகிவிட்டது.

நண்டு : அலவன் பெயர்களுள் ஒன்று. இதன் இலக்கிய வடிவம் ஞெண்டு. நண்டு என்பதற்குச் சேற்றில் (சேற்றுவளை) திரிவது, இருப்பது என்பது பொருள். நள்+து=நண்டு=நள்=சேறு. அதனான் நண்டுக்கு நளிர் என்பதும் ஒரு பெயர். ஞெண்டு என்பது எண்டு என்பதன் திரிபு. எண்=எட்டு - எட்டுக் கால்களை உடைமையின் எண்டு - ஞெண்டு எனப்பட்டது.

நந்தன் (நந்தனார்) : நந்து - நத்தை (நொள்ளை) நத்தையின் ஓரினம் சங்கு - சங்கு திருமாலின் கையிலிருப்பதால் திருமாலுக்கு நந்தன் என்பது பெயர். இனி வயற்புறங்களில் வாழும் பாறைச்சாதியாரும் நந்தர் எனப்படுவர். அது நந்தினை உண்பவர் என்னும் காரணத்தால் அமைந்ததாகும்.

நந்திப்போதல் : அவன் மிகவும் நந்திப் போய்விட்டான். அவன் குடும்பம் நந்திப்போய்விட்டது என்றாற்போல வரும். இதன் செம்மையான வடிவம் நைந்து போதல் - நைதல் = நலிதல், மெலிதல், வறுமையுறல் என்னும் பொருளில் வரும்.

நப்பாசை : நயப்பு + ஆசை என்பவற்றின் திரிபு நயத்தல் = விரும்பல். ஆசை அடைய வேண்டும் என்னும் எழுச்சி.

நமுட்டுச்சிரிப்பு : இதழைத் திறவாமல் இருபுறமாகச் சிறிது விரிக்கும் நகைப்பு. நமுடு = இதழ் நாவை மூடியிருக்கும் உறுப்பாதலின் உதடுகளுக்கு நமுடு என்று பெயர். நா + மூடு = நமுடு. குழந்தைகள் உதடு கடித்தலை நமுடு கடித்தல் என்ப. பொய்யாகச் செய்யும் முறுவல் நமுட்டுச் சிரிப்பு எனப்படும்.

நயம் – நயன்: நயத்தல் - விரும்புதல், வேட்கை கொள்ளுதல், அவாவுறுதல் இனிமை என்னும் பொருளில் வரும். இது நய + அம் = நயம் எனப் பண்பு

குறித்து வரும். விலை நயமாக உள்ளது எனின் விரும்பி வாங்கும் நிலையில் உள்ளது என்பது பொருள். நய என்பது அன் விகுதி பெற்று வருமிடத்து நீதி சட்டம் அறம் என்னும் பொருள் தரும். இரண்டும் வேறு வேறு சொற்கள் மகரனகப் போலியன்று. நயம் குணப்பண்பையும் நயன் தொழிற்பண்பையும் உணர்த்தும்.

நரகல் : மனிதரின் வயிற்றுக் கழிவை உணர்த்தி வரும் நாட்டுப்புறச்சொல். இதன் செம்மையான வடிவம் நர+கழி=நரகழி என்பதாகும். நரகழி நரர் = மக்கள் கழி + மலம். நரர்கழி என்பது நரகழி - நரகல் எனச் சிதைந்துவிட்டது.

நறுக்குத் தெறித்தாற் போல : சுருக்கமாக சரியான அளவோடு தகவு பெறப்பேசும் பேச்சு, நிகழ்த்துச் செயல் ஆகியவை பற்றி வழங்கும் ஒரு தொடர். இதன் செம்மையான வடிவம் நறுக்கித் தறித்தாற் போல என்பதாகும். நறுக்குதல் வெட்டுதல் - தறித்தல் துண்டு செய்தல். தச்சர் ஒரு மரக்கட்டையைத் தான் செய்யும் ஒரு பொருளுக்கு ஏற்ப அளவிட்டு அறுத்துத் துண்டு செய்து கொள்வர். அதுபோல மிகையின்றிப் பேசும் பேச்சு செயல்களைச் சுட்டி வந்ததாகும்.

நறுவுசு : முழுமை நறுவுசா என்னிடம் பணமில்லை என்னுமிடத்து முற்றாக முழுமையாக என்னும் பொருளிலும் தூய்மை. வீட்டை மிக நறவிசாகவைத்திருக்கிறான் என்னுமிடத்துத் தூய்மையாக என்னும் பொருளிலும் வழங்கும். இச்சொல் - நறு + வேசு என்பவற்றின் ஆக்கமாகும். நறு + வேசு. நன்றுவேசு அடைந்திருத்தல் = சுத்தம். (வேசறவு காண்க)

நனவோடை : இக்கால எழுத்தாளர்கள் மிகுதியும் கையாளும் ஒரு தொகைச்சொல் எண்ண ஓட்டம் என்பது கருத்தும். நனவு என்பது நினைவு என்பதன் திரிபு ஓட்டம், ஓடை என அமைந்தது. ஓடுதலைச் செய்வது ஓடை நீரோடும் சிறுகால்வாய் ஓடை எனப்படும். எண்ணத்தில் நிகழ்வது நினைவோடை அது நனவோடை என அமைந்தது.

நனைதல் : நீரால் ஈரமாதல். இச்சொல் ந்+அணை என்பதன் ஆக்கமாகும். ந் நீரைக்குறிக்கும் குறிப்பொலி. நா, நீர், நெய் என்பவற்றிற்கும் அடிப்படை ஒலி ந் ஆகும். ஈரத்தை அணைதல் நனைதல் என வந்தது. ஒரு சொல்லாக்கங் கருதி ணகரம் னகரமாகத் திரிக்கப்பட்டது.

நாசம் : அழிவு கேடு சிதைவு என்னும் பொருளில் வரும். இது நசித்தல் என்பதன் முதனிலையாகிய நசி என்பது அம் விகுதி பெற்று உட்பிணைப்பு முறையில் முதல் நீண்டு நசி - நாச + அம் = நாசம் என ஆக்கம் பெற்றது. நசி என்பது நை+இ=நயி-நசி என அமைந்ததாகும். இதனை வடசொல் என்றே கருதுவாருமுளர்.

நாதாங்கி : கதவுகளை இணைக்கும் இரும்புத் தாழ்ப்பாள். ஒருவகை தலைப்பகுதி நாவு போல கொக்கியாக அமைந்திருக்கும். அத்தாழ்ப்பாளுக்கு நாதாங்கி என்பது நாட்டு வழக்கு நாதாங்கியைப் போடு என்பர். இது நாதாங்கியைத் துளையில் பூட்டு என்பதன் திரிபாகும்.

நாமஞ்சாத்துதல் : ஒருவர் ஒருவரிடம் கடனாகவோ பிறவாறாகவோ பெற்ற பொருளைத் தராமல் மழுப்பி விடுதலைக் குறித்து வழாங்குத் தொடர். கொடுத்தவர் அதனை இழந்துவிட்டதாக நினைத்து மறக்கச் செய்தல். ஒருவர் உயிருடன் இல்லை மடிந்து விட்டார், பிணமாகிவிட்டார் என்பதை உணர்த்த இறந்தவர் நெற்றியில் நாமந் தீட்டுதல் ஒருசாரார் மரபு. அம்முறையில் கொடுத்த பொருள் மடிந்துவிட்டது என்பதை உணர்த்த நாமஞ்சாத்துதல் என்னும் வழக்கால் உணர்த்துவர். இது ராமம் போட்டுவிட்டார் என்றும் வழங்கும்.

நாயனம் : நாதசுரம் என வழங்கப்பெறும் பெருவங்கியத்தின் பழைய பெயர் நாயனம். நாயனம் என்பது நாகசின்னம் என்பதன் மரூஉவாகும். தலைப்பகுதி நாகம் படம் எடுத்தாற் போலக் குவிந்து இருத்தாலலும் வாய் வைத்து ஊதும் பகுதி பாம்பின் வால் போல இருத்தலானும் நாகத்தின் அடையாளம் நாகத்தின் சின்னம் என ஆக்கம் பெற்று நாயனம் என மருவியது. நாதசுரம் என்பதும் நாகஸ்வரம் என்பதன் திரிபேயாகும். வங்கியம் என்பது வடசொல்லின் திரிபாகும். வம்ஸம என்பது மூங்கிலின் பெயர். வம்சம் என்பது வழக்கில் வங்கிசம் எனத் திரிந்து வழங்கும். மூங்கில் குழல் போல நாதசுரம் அமைந்திருப்பதனால் வங்கு + துளை. துளையிட்ட இசைக்கருவி என்பது பொதுப்பெயர்.

நாயனார் : கயத்தற்குரியவர் என்பது பொருள். நயம் = விருப்பம், நயத்தல் விரும்புதல் நயத்தற்குரியவன் என்பது பொருள். நயம் = விருப்பம், நயத்தல் என அமைந்தது. இதன் வழி நாயன், நாய்கன், நாயகி, அமைந்தன நாதன் என்னும் வடசொல் வேறு நாயன் என்னும் தமிழ்ச்சொல் வேறு.

நிலம்நீச்சு : "அவருக்கு நிலம் நீச்சு ஒன்னுமில்லை ரொம்ப ஏழை" என்றாற் போல வழங்கும் ஒரு தொடர். இதன் கண் நிலம் என்பது நன்செய் புன்செய்யாகிய விளை நிலங்களையுணர்த்தும். நீச்சு என்பது வயல், கொல்லைகளுக்கு நீர்ப்பாய்ச்சுதற்கு அமைந்த குளம், கிணறு முதலிய நீர் நிலைகளை உணர்த்தும். நீச்சு = நீத்தம் நீர் அது ஆகு பெயராய் நீர் நிலைகளை உணர்த்தும்.

நிழல் : கதிர், மதி, எரிதழல் இவற்றின் ஒளியைத் தடுத்து நிற்கும் பொருளின் புறத்தும் அடியிலும் அப்பொருளின் சாயலாகப் பரவியிருக்கும் மெல்லிருள் நிழல் எனப்படும். வடமொழியில் சாயா என்பர். அது சாய்கை என்னும்

தமிழ்ச்சொல்லின் திரிபாகும். இச்சொல் ஒளியற்ற - ஒளி நீங்கிய நிலையைக் குறிக்கும் ஒளிவிடும் பொருள் அழல் (நெருப்பு) அழல் நீங்கிய நிலை சாயா. அழல் + நீ என்பவை முன்பின்னாக மாறி நீ + அழல் = நீழல் என்று உருப்பெற்று நிழல் என ஆக்கம் பெற்றது.

நீக்குப்போக்கு : ஒரு காரியத்தை நன்கு நிறைவேற்ற நீக்குப்போக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றாற்போல வழங்கும் ஓர் இணைச்சொல் நீக்கு = நீக்க வேண்டியவற்றை நீக்கல். போக்கு = காலந்தாழ்க்க வேண்டியவற்றைக் காலந்தாழ்த்தல். போதல் = நீடல் அது கால நீட்டிப்பை உணர்த்தி நின்றது.

நீலிக்கண்ணீர் : வஞ்சகமாகக் கேடு சூழல் பிறர் இரக்கங் கொள்ளுமாறு விடுங் கண்ணீர் நீலி என்னும் பெண் ஒருத்தியின் கண்ணீர் நீலிக் கண்ணீர் எனப்படும். தன் கணவனால் கொலையுண்ட ஒருத்தி அகால மரணத்தால் பேயாகிக் கொலை செய்துவிட்டு வேற்றூருக்கு ஓடிப்போன கணவனைப் பழிவாங்கத் தேடித்திரியும் போது பழையனூர் என்னுமிடத்தில் ஒருமாலைப் போதில் அவனைக்கண்டு பழைய உருவத்தோடு அவனை நெருங்கினாள். அவன் அஞ்சி ஊருக்குள் சென்றபோது அங்கு சென்று அவ்வூர் வேளாளர்களை அழைத்துத் தன் கணவன் தன்னை விட்டுவிட்டு ஓடிவிட்டான். இங்கு அவனைகண்டு வீட்டிற்கு அழைத்துப்போக எண்ணி மன்றாடுகின்றேன். அவனை என்னுடன் அனுப்பிவைக்க ஆவன செய்யுங்கள் என்று கண்ணீர் விட்டுக் *கதறி அழுதாள். அக்கணவன்* இவள் பெண்ணல்லள் பேய் என்னைப் பழிவாங்கப் பொய்யாகக் கண்ணீர் விடுகிறாள் என்னைக் கொல்வதற்கே இப்படி வஞ்சனை செய்கிறாள் என்றான். அவர்கள் உன் உயிருக்கு நாங்கள் பிணைபடுகிறோம். நீ அவளுடன் இங்கே தங்கியிருந்து நாளை புறப்படலாம் என்று கூறி ஒரு வீட்டில் இருக்கச் செய்தனர். இரவு பேய் மகள் அவனைக் கொன்றுவிட்டுப் போய்விட்டாள். வஞ்சனையாக அவள் விட்ட கண்ணீர் நீலிக்கண்ணீர் எனப்பட்டது.

நுளம்பு : மாட்டு ஈ விலங்குகளை மொய்த்துக் கடிக்கும் ஒருவகை ஈ. இது மூக்கால் குத்துமிடத்து அம்பு நுழைவது போல இருக்கும். இச்சொல் நுழை+அம்பு=நுழம்பு என்று உருவாகி நுளம்பு என ஆக்கம் பெற்றது சிறுபான்மை. இப்பெயர் *சுள்ளான் என்னும்* பெரிய கொசுவைக் குறித்தும் வழங்கும்.

நெட்டாமுட்டி : கையாலாகாதவன் தெக்கணாமுட்டி என்பது போல வலியிருந்தும் செயல்படாதவனைக் குறித்து வழங்குந் தொகைச் சொல். இதன் செம்மையான வடிவம் நீட்டாமுட்டி கைவிரல்களை மடக்கிக் குவித்தமைக்கு முட்டி என்று பெயர். முடக்கிய கை என்பது பொருள் மடக்கி முட்டியாக்குதலின் நோக்கம் பகைவரைப் புடைத்தல். அங்ஙனம் புடைக்கும்பொழுது கைநீளும், கை

நீளவில்லையானால் முட்டியாக மடக்கியதனால் பயனில்லை. செயல்படாதவன் என்ற கருத்தில் நீட்டாமுட்டி என உருப்பெற்ற இச்சொல் நட்டாமுட்டி என்றும் நெட்டாமுட்டி என்றும் வழங்குகிறது.

நெட்டி முறித்தல் : விரல்களின் நரம்புத் தளர்ச்சியாக இருக்கும்போது விரலை நெட்டி முறித்தல் வழக்கு. இதன் சரியான வடிவம் நீட்டி முறித்தல். முதற்கண் விரல்களைச் சமனாக நீட்டி வைத்துப்பின் மடக்குதல் - பின்நீட்டி முறித்தல் என்பது நெட்டிமுறித்தலை எனத்திரிந்தது. இதனை நெட்டி எடு என்றும் வழங்குவர். ஆண்டு நெட்டி என்பது ஆகுபெயராய் ஒலியைக் குறிக்கும்.

நெடுஞ்சாங்கிடை : அவர் காலில் நெடுஞ்சாங்கிடையாக விழுந்து வணங்கினான் என்பது வழக்கு. இது நெடும் + சா+ கிடை என்பவற்றின் மரூஉ. நெடும் - உடம்பை நீட்டல். சாம் = இறந்தசவம் போலுதல் - கிடை = கிடத்தல் பிணம்போல உடம்பைக் கைகுவித்து நீட்டி கிடத்தல் என்பது பொருள்.

நெளிவு சுளிவு : சூழ்நிலை தன் வலி மாற்றான் வலி முதலியவற்றை நன்கு எண்ணி அதற்கேற்ப விட்டுக்கொடுத்தும் அகப்படுத்தியும் காரியம் சாதித்துக்கொள்வதை நெளிவு சுளிவு என்பர். நெளிய வேண்டிய போது நெளிந்து சுளிக்க வேண்டியபோது சுளித்து நடந்து கொள்ளுதல் என்பது கருத்து. நெளிதல் விட்டுக்கொடுத்தலையும் சுளிதல் வளைத்துக் கொடுத்தலையும் உணர்த்தும் சுளி = வட்டம்.

நைச்சியம் : ஒருவரின் தயவைப்பெற அவர் மகிழுமாறு பேசுதலை நைச்சியம் என்ப. இது நயச்செயல் என்பதன் திரிபு. அம்பெற்று (நயம் செய்அம்) முதல் திரிந்து நைச்சியம் என மருவியது.

நைதல் : ஈரத்தால் மெலிதல் தொய்வுறுதல் வலியிழத்தலைக் குறித்து வரும் சொல். துணி நைந்து போய்விட்டது. அவன்மனம் நைந்துவிட்டான் என்றாற் போலவரும். ந் நீரையும் ஐ சுருக்கத்தையும் உணர்த்தும் குறிப்பொலிகள் தொழிற்பெயர் விகுதி தல் என்பதனொடு கூடி நைதல் என அமைந்தது.

நொண்டி : கை, கால் ஆகிய உறுப்புக்கள் செம்மையாக, அளவாக இல்லாமல் முடங்கியும் மெலிந்தும் ஊனமுற்றிருத்தலை நொண்டி என்பர். இதன் முதனிலைச்சொல் நொள் என்பதாகும். நொள் = வளைவு - வளைந்து சரிந்திருத்தலால் நத்தைக்கு நொள்ளை என்று பெயர். குற்றப்பட்ட பொருளை நொள்ளை என்பது வழக்கு. நொள்+த்+இ=நொண்டி த் எழுத்துப்பேறு ளகரம் ணகரமாகத் திரிந்தமையின் தகரம் டகரமாகத் திரிந்தது.

நோப்பாளம் : வருந்துதல், பிணங்குதல் என்னும் பொருளில் வழங்கும் சொல். இது நோப்பு + ஆளம் என்னும் சொற்களின் புணர்ப்பு. நோப்பு என்பது

நோ+பு என்பதன் ஆக்கம். நோ=துன்பம் வலி என்னும் பொருள் தரும். வினை முதனிலை அது பு என்னும தொழிற்பெயர் விகுதிபெற்று நோப்பு என நின்றது. (உகரவிகுதி பெறின் நோவு என வரும்) ஆளம் = ஆளுதல், மேற்கொள்ளுதல் என்னும் பொருளினது. மனநலிவை மேற்கொள்ளல் என்பது கருத்து.

நோய்நொடி : ஒருவர் ஒருவரை வாழ்த்தும்போது நோய் நொடியில்லாமல் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துதல் நாட்டு வழக்கு. இதன்கண் நோய் என்பது. உடம்பு உள்ளம் பற்றிய பிணிகளையும் நொடி என்பது செல்வக் கேட்டையும் வறுமையையும் உணர்த்தும். அவன் குடும்பம் நொடித்துவிட்டது என்பது வழக்கு. நொடுத்தல் = குன்றுதல் - குறையை உடையது நொட்டை அவர் எதைச் சொன்னாலும் நொட்டை என்பார். அது நொட்டை இது நொள்ளை என்று பேசிக் கொண்டு என்னிடம் வராதே" என்றாற் போல வழங்குவர்.

பக்கி : பிள்ளைகள் தீனி தீனி என்று பக்கியாப் பறக்குதுங்க என்றாற் போல வழங்கும். இவன் ஒரு பக்கி எனவும் வழங்கும. இது பக்ஷி என்னும் வடசொல்லின் தமிழாக்கம். க்ஷரம் இருககரமாகத் தமிழில் ஆக்கம் பெறும் என்பது விதி வழக்கில் 'ட்சி' எனவும் ஆக்கம் பெறும். பக்ஷி=பக்கி-பட்சி எனவரும். கோழி புறா முதலியவற்றின் குஞ்சுகள் தீனியை உண்ண விழையும்போது நடந்துகொண்டே இறக்கைகளை விரைந்து அடித்துக்கொள்ளும்.

பகட்டு : பகட்டுக்காரன் ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக கொண்டு திரிதல் பிறர் வியக்குமாறு பொருட்செலவு செய்தல். தற்பெருமை பேசுதல் பகட்டுதல் எனப்படும். பகல் = ஒளி = பகல் + து பகற்று - பகட்டு எனத் திரிந்தமைந்தது. பகட்டுக்காரன் என்பதற்கு வெளிச்சம் போடுபவன் என்பது இழிவாக வழங்கும் சொல்.

பசப்பல் : வஞ்சகமாக நடித்தல் பேசுதல் குறித்துவரும் சொல். என்னிடத்தில் இந்த பசப்பல் எல்லாம் வேண்டாம் என்றும் அவள் ஒரு பசப்பி என்றும் வழங்கும். இஃது உவமம் வாயிலாக அமைந்த வழக்கு. பாசியின் செயல் பசப்பல் - நீரில் பாசி தளதளவெனச் செழிப்பாக மண்டிக்கிடக்கும் நிலத்தில் வேர்கொள்ளாமல் வேராகிய அடிப்படையின்றி வளர்ந்து கிடக்கும கொட்டைப்பாசி போல உள்ளத்தில் நிலைபெறாமல் பேச்சளவில் அன்பையும் ஆர்வத்தையும் மெய்பாடு தோன்றக் காட்டித் தந்திரமாக நடித்தல் பசப்புதல் எனப்பட்டது. "நீர்க்கொள்பாசி போல் வேர்க்கொள்ளாதே" என்பது வழக்கு.

பசி : உண்ணாதநிலையில் வயிற்றினிடமாக எழும் உணர்வுக்குப் பசி என்று பெயர். இதனை வயிற்றுத்தீ என்பர். உணவு தங்குமிடத்தை இரைப்பை என்பர். உணவை இட இட இரைப்பை விரியும். உணவு பெறாதவிடத்துச்

சுருங்கும். சுருங்குதல் = மெலிதல்.தேய்தல் என்னும் கருத்துடையது. தீய்க்கும் உணர்வே பசி எனப்படுகிறது. பசி என்பதன் வேர்ச்சொல் பை - பைதல் - துன்பம் பைங்கண் - இடுங்கிய கண். ஆதலின் பை என்பதன் பொருள் துன்பம் என்பது தெளிவு. வயிற்றுக்குத் தொப்பை என்பது ஒரு பெயர். அது தோல் + பை = தோற்பை - தொப்பை எனவரும். பை போலிவகையால் பய் எனவரும். சீ என்னும் ஓரெழுத்தொரு மொழியின் பெயர் சீத்தல். கோழிகுப்பையைச் சீய்க்கிறது என்பது வழக்கு. சீத்தல் - சுரண்டுதல் என்னும் பொருளிலும் வரும். எனவே பய்+சீ=பசி என நின்றது. வயிறாகிய பையைச் சுரண்டும் உணர்வு பசி என்று ஆக்கம் பெற்றது. இரைப்பையை அரித்தல் என்பது பொருள்.

பட்டினி : உண்ணாது கிடத்தலை உணர்த்தும் சொல் பட்டினி. இது படும் + இன்னல் என்பவற்றின் ஒரு சொல்லாக்கமாகும். படு + இன்னல் - பட்டின்னல் என உருவாய்ப் பட்டினி என ஆக்கம் பெற்றது. படுதல் = அனுபவித்தல் - இன்னல் = துன்பம் இன்னற்படுதல் என்பது முன்பின்னாகத் தொக்குப் பட்டினி என அமைந்தது. இன்னல் என்பதற்கு இன் + அல் - இன்பமல்லாதது (துன்பம்) என்பது பொருள். பசி நோயின் துன்பம் பட்டினி எனப்பட்டது. பட்டினியைப் பொறுத்துக்கொள்ளும் வலிமைக்கு நோன்பு என்பது பெயர். நோன்=வலிமை. நோன் என்பதிலிருந்து ஆக்கம் பெற்றவை நோன்றல் - நோற்றல் என்க.

பட்டு : புழுவின் நூல் அந்நூலாலான உடைக்குப் பெயராக வழங்கும் சொல். பட்டு பீதாம்பரம் என்பன இணைந்து வரும். பட்டு நூல் பளபளவென ஒளியுடன் இருக்கு. ஒளிக்குப் பகல் என்பது ஒரு பெயர். பகல் = வெளிச்சம் = ஒளி. பகல் அடைவுடையது. பகட்டு = அது பட்டு என மருவி யாக்கம் பெற்றது. பீதாம்பரம் = பொன்னாடை. சரிகை பொன்னால் செய்யப்பெற்ற ஆடைபீதம் = பொன்.

படி ஓலை : ஒரு ஏட்டில் எழுதியுள்ள செய்திகளை ஒருவர் பிறிதொரு ஏட்டில் எழுதிக் கொள்ளும்போது அவ்வோலைப் படிவோலை எனப்படும். படி எடுக்கப்பட்டது என்பது வழக்கு. படி என்பது படிவம் என்பதன் கடைக்குறை படியச்செய்தல் படிவு. அம் = விகுதி படிவு + அம் = படிவம் படியோலை, படியெடுக்கப்பட்டது எனல் வழுவாகும். படிவோலை படிவெடுக்கப்பட்டது எனலே செம்மையானவை.

படுவா : வசையாக வழங்கும் ஒரு வழக்குச்சொல். வாடா படுவா எங்கே போனே என்றாற் போலவரும். இதன் செம்மையான வடிவம். படுவாய் என்பது படுவாய் என்பதற்கு சாவாய் அழிவாய் என்பது பொருள்.

பண்ணாடி : தலைவன் முதலாளி எசமான் என்னும் பொருளில் வழங்கும் கொங்குநாட்டு வழக்குச்சொல். சிறுபான்மை - தந்தை, கணவன் என்னும் பொருளிலும் வழங்கும். இது பண்ணை + ஆண்டி என்னும் இருசொற்களின்

பிணைப்பு. பண்ணை = நிலபுலம். ஆண்டி = ஆள்பவன் (உரியவன், தலைவன்) பண்ணையாண்டி - பண்ணாண்டி - பண்ணாடி என மருவியது. பண்ணைக்குரியவன் ஒருவகையில் தலைவனாதலின் குடும்பத்தலைவன் என்ற முறையில் தந்தையையும் தனக்குத்தலைவன் என்ற முறையில் கணவனையும் உணர்த்தி வருகிறது.

பாக்கி : ஒரு பொருளின் கூறுகளுள் சில நீங்க எஞ்சியது பாக்கி. பொருளின் பாகமா உள்ள பகுதி என்பது கருத்து (மீதி காண்க).

பாக்கி சாக்கி : பாக்கியும் அதனைச் சார்ந்த பொருளும் என்பது பொருள். சார்ப்பு சார்ச்சி எனத் திரிந்து பின் பாக்கி என்பதற்கு ஏற்பச் சாக்கி என மருவியது. விலை கொடுத்துப் பெறும் பொருளுடன் விற்பவர் பரிசாகத் தரும் பொருள் சாக்கி எனப்படும்.

பாகற்காய், பாவக்காய் : கொடியில் விளையும் கசப்புச் சுவையுடையது ஒரு வகைக்காய். இதன் பெயரமைப்புச் சுவையானது. பாகற்காய் என்பது பொதுப்பெயர். பாகு + அல் + காய் - பாகு = இன்சுவை. இனசுவை அற்றகாய் பாகற்காய். சிறப்புப்பெயர் பாவக்காய். இது சிறியஅளவில் உருண்டையாக உள்ள காய்களையும் பெரிய அளவில் நீண்டு திரண்டிருக்கும் காய்களையும் குறித்துப் பொதுவாக வழங்கப்படுகிறது. சிறிய காய்களை பாவக்காய் என்பதன் செம்மையான வடிவம் பார்வைக்காய். பார்வை - கண்விழி - விழியைப்போல உருண்டு இருபுறமும் சிறிது நீண்டுள்ளமையின் பார்வைக்காய் எனப்பட்டது. நீண்டு திரண்டுள்ளது பாவைக்காய் எனப்பட்டது. என்ன பாவமோ இரண்டும் பாவக்காய் என்றே வழங்கப்படுகின்றன.

பாச்சா : இந்த பாச்சாவெல்லாம் என்கிட்ட வைச்சுக்காதே. அவன் பாச்சாபலிக்கலை என்றாற்போல வரும். இச்சொல்லின் செம்மையான வடிவம் - பாய்ச்சல் என்பதாகும்.

பாசாங்கு : ஒருவர் ஒருவரைக் குற்றஞ்சாற்றுமிடத்து குற்றம் புரிந்தவர் நோவுற்றது போலவும், அஞ்சுவது போலவும் நடித்தலும் பேசுதலும் பாசாங்கு எனப்படும். பசப்புதலை உடம்பில் மெய்ப்பாடு தோன்ற நடித்தல். இது பசப்புதற்குரிய சொல்லாகிய பாசி உடம்பு என்றும் பொருள் தரும். அங்கம் என்பதனோடு கூடி மருவிய சொல்லாகும். பாச + அங்கி = பாசாங்கி - பாசாங்கு என அமைந்தது.

பாடாவதி : பயன்படாதது தாழ்வானது என்னும் பொருளில் வழங்கும். இது பாடு + ஆ + ஓதி என்பவற்றின் திரிபாகும். பாடாவொதி பாடவதி என அமைந்தது. பாடு - பெருமை - பயன். ஆ எதிர்மறை ஓதி = ஓதியமரம். ஓதி பெருத்தாலும் உத்தரத்திற்கு ஆகாது என்பது பழமொழி. கட்டுமானத்திற்குப்

பயன்படாத ஒதியமரம் போன்ற பொருளையும் மக்களையும் குறித்து வழங்கும் சொல்.

பாதை : மக்கள் மாக்கள் ஊர்திகள் முதலியவை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல நிலத்திலும் நீரிலும் வானிலும் உதவும் அமைப்பிற்கு வழி, ஆறு நெறி, தெரு சாலை, பாதை எனப்பல சொற்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒரு காரணம் பற்றி அமைந்ததாகும். அவற்றுள் பாதை என்பது புல்வெளி காடுகளாகளில் மக்கள் ஒரு ஒழுங்குமுறையாக செல்லுமிடத்து அவர்கள் பாதங்கள் மிதிப்பதனால் சுவடாக ஏற்படும். நெறி பாதை எனப்படும். பாதங்களால் அமைந்தது பாதை. அவற்றுள் மிகக்குறுகிய பாதையை ஒற்றையடிப்பாதை என்பர். பாதம் பதிதலாற் பாதை எனப்பட்டது.

பார் : பூமி என்னும் பொருளில் பெயராகவும் பார்த்தல் என்னும் பொருளில் வினையாகவும் வரும் சொல். அகன்று பரந்திருப்பது. அகன்று பரவுவது என்பது பொருள். இதனடியாக பரம், பரப்பு, பரவை, பருமன், பருக்கை முதலிய சொற்கள் ஆக்கம் பெறும்.

பிக்கல், பிடுங்கல் : அவனுக்கு ஏதும் பிக்கல் பிடுங்கல் இல்லை கவலையின்றி வாழ்கின்றான் என்பது வழக்கு. இதன்கண் பிக்கல் - என்பது புய்க்கல் (புய்த்தல்) என்பதன் திரிபு. மரம் செடி கொடிகளிலிருந்து பூ காய் பழங்களைப் பறித்தல் புய்த்தல் எனப்படும். பிடுங்கல், வலிமையாகப் பதிந்திருப்பதை வலிந்து பற்றல் - செடியை வேரோடு பிடுங்கினான் என்று வரும். ஆய், கொய் என்பவற்றைப் போல புய் என்பது ஒரு குறிப்புரிச்சொல். பிடுங்கல் என்பது பிடு என்பதனடியாகப் பிறந்தது. பிடுதல் வேறுபடுத்துதல் இரண்டாக்கல் பிரித்தல் என்னும் பொருளுடைய வினயுரிச்சொல்.

பிசுபிசுத்தல் : பிசுத்தல் = சுருங்குதல், குறைதல் மழை பிசுபிசுத்தது. அவன் வியாபாரம் பிசுபிசுத்துப் போய்விட்டது என வழங்கும். குறைவு எச்சம் என்னும் பொருள்தரும். பிசிர் என்பது இதனடியாகப் பிறந்ததாகும்.

பிசுவுனி : கருமி உலோபி எனப்பொருள் தரும் வழக்குச்சொல். பிசுனத்தன்மை உடையவர் பிசுனி. அது பிசுவுனி எனத்திரிந்தது.

பித்தலாட்டம் : ஏமாற்றுபவர், மாற்றிப் பேசுபவர் பொய்ப்பவர் என்னும் பொருளில் வழங்குஞ்சொல். பித்தல் - பேசு. பித்துக்கொண்டவர் ஒரு நிலையில் பேசவோ செயலாற்றவோ இயலாது பேசுவது போல பேசுதல். ஆடுதல் = உரையாடல் = பேசல்.

பித்துக்குளி : பைத்தியம் பிடித்தவரைக் குறித்து வழங்கும் சொல். பித்து = அறிவுத்திரிபு - மயக்கம். இது பித்துக்கொள்ளி (கொள்ளி = கொண்டது) என்பதன் திரிபு.

பிதற்றல் : பித்தம் காரணமாக அறிவு திரிந்து மயங்கிப் பேசுதல். பித்தால் அரற்றல் = பிதற்றல் என மருவியது.

பில்லன் : அவன் ஒரு பில்லப்பயல் என்பது வழக்கு. பில்லிப்பயல் புல்லப்பயல் என்றும்வ ழங்கும். இது புல்லன் என்பதன் திரிபு புன்மை = இழிவு புல்லியன் என்பது இலக்கிய வழக்கு. புல்லியன் என்பது பில்லன் எனத்திரிந்தது.

பிலாக்கணம் : இறந்தவர் பிணத்தைச் சுற்றி ஒப்பாரி வைத்தல் போல் மகளிர் அழுது புலம்பி ஆரவாரித்தலைப் பிலாக்கணம் வைத்தல் என்பது வழக்கு. இச்சொல்லின் செம்மையான வடிவம் பிணக்கானம் என்பதாகும். பிணத்தைச் சுற்றிச் சூழ்ந்து பாடும் (கானம்) பாட்டு என்பது பொருள். பரலாபனம் என்பதன் திரிபென்பது சிலர் கருத்து. அது பொருந்துமாறில்லை பிரலாபனம் என்பது ஒருவர் மிக்க சோகத்தால் புலம்புவதைக் குறிக்கும்.

பிழை – பிழைத்தல் : பிழை என்னும் சொல் படுத்துச் சொல்லுமிடத்துப் பெயராகவும் எடுத்துச் சொல்லுமிடத்து தப்பிவிடு உய்ந்துவிடு என வினைப் பொருளிலும் வரும். பெயராக வருமிடத்து பிழைசெய், பிழை செய்யேன் எனத் துணைவினையோடும் வரும். மருத்துவர் சொன்ன பத்தியத்தை தவறாமல் கடைப்பிடித்ததனால் இந்த நோயினின்றும் பிழைத்துக்கொண்டேன். அவன் பேசியது வஞ்சனையானது என்று உணர்ந்து கொண்டதனால் கடன்படாமல் பிழைத்துக்கொண்டேன் என்றாற்போல வரும். இனி பிழைத்தல் பிழைப்பு என்றும் வரும். ஊரில் பிழைப்பதற்கு வழியில்லை. பட்டணத்திற்குச் சென்று பிழைக்கிறான் இது என்ன பிழைப்பு அவலப்பிழைப்பாக இருக்கிறது. இந்தா இதை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து பிழைத்துக்கொள் என்றாற்போல வழங்கும். பிழைப்பு என்பதற்கு வாழ்க்கையில் நேரும் வறுமைத்துன்பம், அறியாமை முதலியவற்றால் வரும் இடுக்கண்களினின்று உய்ந்துவிடுதல் என்பது பொருளாகும்.

தப்புதல் பிழைத்தல் இரண்டும் இணைந்து அவன் தப்பிப் பிழைத்தான் என்றும் வரும். எனவே தப்புதல், பிழைத்தல் என்னும் சொற்கள் முன்பின் வரும் சொற்களின் தொடர்பால் குற்றம் புரிதல் என்னும் பொருளிலும் உய்தல், விடுபடுதல் நீங்கல் என்னும் பொருளிலும் வரும்.

பினாத்தல் : அவன் முன் பின் சம்பந்தமில்லாமல் கேட்டால் பினாத்துகிறான் என்பது வழக்கு. பின்னம் படப்பேசுதல் என்பது கருத்து. பின்னம் = சிதைவு (சின்ன பின்னம் காண்க) ஆற்றல் - பேசுதல். பின்ன ஆற்றல் என்பவை பினாற்றல் பினாத்தல் எனத் திரிந்து அமைந்த சொல். இது பினத்தல் எனவும் வழங்கும்.

புருடா : எங்கிட்ட இந்த புருடாவெல்லாம் வேண்டாம் வேற ஆளைப்பாரு என்றாற்போல வழங்கும். பொய் கூறுதல் என்பது பொருள் இது தெலுங்குச்சொல்.

பூசிமெழுகுதல் : ஒருவர் குற்றத்தை வேறு வேறு காரணங் கூறி மறைத்துப் பேசுதலைக் குறித்து வழங்கும் தொடர் சிதிலமான சுவர் தரைவெடிப்பு முதலியவற்றை மறைக்கச் சுண்ணாம்புக் கலவை முதலியவை கொண்டு மறைத்தலைப் பூசுதல் என்ப. மண்தரையின் கீறல்களை மறைக்கச் சாணம் சேற்றுக் குழம்பு முதலியவைகளைக் கொண்டு மறைத்தலை மெழுகுதல் என்ப. பெரிய குற்றத்தை மறைத்தல் பூசுதல் சிறிய குற்றத்தை மறைத்தல் மெழுகுதல். இரு முறையாகவும் செய்தல் பூசி மெழுகுதல் எனப்படும்.

பெராக்குப் பார்த்தல் : பொறுப்பின்றி குறிக்கோளின்றி ஒன்றில் கவனம் செலுத்தாமல் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருத்தலைப் பெராக்குப் பார்த்தல் என்ப. தெருவில் போகும்போது வண்டி வாகனங்களைப் பார்த்து ஒதுங்கிப்போ பெராக்குப் பார்த்துக்கொண்டு போகாதே என்றாற் போல வழங்கும் தொடர் இது. பரக்கப் பார்த்தல் - பரவலாகப் பார்த்தல் என்பதன் திரிபு.

பெருச்சாளி : எலி இனத்துள் உருவத்தால் பெரிய உடம்பையுடைய இனம் பெரியதைப் பெரிசு எனல் வழக்கு. பெரிதுஎலி என்பது பெருங்சாளி எனச்சிதைந்து அமைந்தது. (சுண்டெலி காண்க)

பேந்தப் பேந்த விழித்தல் : அச்சத்தால் அடிக்கடி இமைகள் அசைய செய்வதறியாமல் விழிக்கும் நிலையைக் குறித்து வரும் தொடர். இதன் செம்மையான வடிவம் பயந்து பயந்து விழித்தல் என்பதாகும். பயந்து என்பது பேந்து எனத் திரிந்தது.

பேர்வழி : குறிப்பிட்டுப் பெயர் கூறி உணர்த்த இயலாத நிலையில் ஒரு ஆடவனையோ, பெண் மகளையோ சுட்டி உணர்த்தும் சொல் ஆள். வேலைக்கு ஆள் கிடைக்கல. அங்கே ஒரு ஆள் காவல் காக்கிறான். ஆளுக்கு ஆள் நாட்டாமை பேசுகிறார்கள் என்றாற் போல வரும். பெயர் வழுவிய நிலை என்பதன் மரூஉ பேர்வழி. பெயர் - பேர் வழுவிய நிலை - வழி. பேர்வழி என மருவியது. இது சில இடங்களில் அசைச்சொல் போலவும், அவனை அழைத்துக்கேட்க எனக்கொன்றும தெரியாது என்கிறான் பேர்வழி என்றாற்போல வரும்.

பொக்கி : வளமில்லாத ஒருவரைக் குறித்து வரும் ஏளனச் சொல். இது பொருக்கி என்பதன் சிதைவாகும். பொருக்கு = உள்ளீடில்லா அரிசி முதலிய தானியம் வழக்கில் பொக்கு என்பர். பொக்காக இருப்பவன் பொக்கி என அமைந்தது. பொருக்கு என்பது புரை + கு = புரைக்கு - பொருக்கு என ஆக்கம் பெற்றதாகும். புரை உள்ளீடாத கூடு புரை கூடு புரைக்கு - பொருக்கு என ஆக்கம் பெற்றதாகும்.

பொட்டை : கண்ணில்லாதவரைக் குறித்து வழங்கும் சொல். கண்ணில்லாதவனைக் குருடு என்றும் கூறுவர். குருடு வேறு பொட்டை வேறு (குருடு காண்க). பொட்டை என்பது வெள்விழி கருவிகளின்றி இரண்டு இமைகளும் இணைந்து கண் குழியாக இருக்கும் நிலையாகும். இமையோடு இமை பூட்டுக் கொண்டுள்ள நிலை. இது பூட்டை (இமைகள் பூட்டிக் கொண்ட நிலை) என்பது திரிந்த பொட்டை என அமைந்ததாகும். குருடு பொட்டை இரண்டற்கும் பொதுவான சொல் கண்ணிலி அந்தகன் என்பது வடசொல்.

பொடணி : பிடரியைக் குறித்து வழங்கும் சொல். பிடர் என்பது கழுத்தின் பின்புறமாகத் தடித்திருக்கும் பகுதி. அது புடைத்துக் கழுத்தை அணைந்திருத்தலின் புடையணை என்று உருவாகி வழக்கில் புடணி - பொடணி எனச்சிதைந்து வழங்குகிறது.

பொம்மை : களிமண்,மரம், கல், மெழுகு முதலியவற்றுள் இருதிணைப் பொருள்களின் வடிவங்களை உருவாக்கிய பொருள் பொம்மை எனப்படும். ஒரு பொருளை ஒப்ப அதுபோலச் செய்யப்படுதல் ஒத்தலுக்கு பொருவுதல் என்பது பொருள். ஒன்றைப் போல வேடமிட்டுக் கொள்வோர் பொருநர் எனப்படுவார். ஒன்றன் வடிவத்தை மெய்யினை ஒப்ப அமைத்தல் பொருவுமெய் (ஒப்புவடிவம்) எனப்படும். அது பெருமகன் - பெம்மான் என மருவுவதைப் போலப் பொருமெய் - பொர்மெய் பொம்மெய் - பொம்மை என மருவி ஆக்கம் பெற்றதாகும்.

பொலிதல் (பொலிகாளை) : பசுவைத்தழுவி அணையும் காளை பொலிகாளை எனப்படும். பொலிதல் என்பது புல்லுதல் என்பதன் திரிபு. புல்லும் காளை - பொலிகாளை. பொலிவுக்கு விளக்கம் என்பது பொருள். அச்சொல் வேறு திரிபாகிய இச்சொல் வேறாகும்.

போக்கடா : அடாதபோக்குடையவன் போக்கு = நடை = ஒழுக்கம் அடுதல் = பொருந்துதல். அடாதல் - பொருந்தாதல் - போக்கு அடாதவன் போக்கடா என அமைந்தது. இது புரட்டன் என்னும் பொருளில் வழங்குகிறது.

போக்கத்தவன் : போக்கற்றவன். போக்கு என்பது புகுதலை உணர்த்தி நின்றது. சென்று தங்குதற்குரிய குடும்ப வாழ்வோ, உறவினர் மனைகளோ யாதுமில்லாத நாடோடி புக்குத்தங்குதற்குரிய இடமில்லாதவன் என்பது பொருள். போக்கிடமத்தவன் என விரிந்தும் வரும்.

போக்கிரி : போக்கு = (குற்றம் - பொல்லாங்கு) + உரி = போக்குரி - போக்கிரி என ஈறுதிரிந்த சொல். குற்றத்தைச் செய்தலை உரிமையாகக் கொண்டவன் என்பது பொருள். இனிப் போக்கிரி என்பதும் பொருளால் ஒக்கும். இரி - இருத்தற்குரியது. குற்றத்தை இருப்பாக உடையவன் போக்கிரி. போக்கிரி போக்கிலி வேறு இது வேறு - போக்கு இலி = போக்கத்தவன்.

போடுதல் : போடுதல் என்பதற்கு ஒன்றை மேலிருந்து கீழிடுதல் என்பது பொருள். இது புகஇடுதல் - போடுதல் என மருவியதாகும். மற்றுப்புக இடுதல் என்பது புகட்டுதல் என்றும் வரும். கன்றுக்கு இரண்டுகொட்டான் கஞ்சிபோடு என்பது வழக்கு. இது புகட்டு என்பதன் மருவாகும்.

போத்துராசா : வளமான உடம்பிருந்தும் நன்கு செயல்படாதவன், சோம்பற்படுபவனைக் குறித்து வழங்கும் சொல். போத்து = மரக்கிளையிலிருந்து வெட்டி நடப்படும் தடி. வித்திலிருந்து வேர் விட்டு வளராமல் மரக்கிளையை வெட்டி நட்டு வளர்த்தலின் அது உவமமாயிற்று. போத்து பருத்திருப்பினும் உடன்பயன் தராது. வேர்விட்டு வளர்ந்து தளிர்த்து முதிர்ந்த பின்னர்த்தான் பயன் தரும். அதுபோன்ற நிலையினன் என்பதைச் சுட்டப் போத்துராசா என்பர். இதன்கண் ராசா என்பது ஆள் என்னும் பொருளில் அமைந்தது.

போதல் – போகுதல் : இவற்றிற்கு ஒன்று ஓரிடத்தினின்று பிறிதோரிடத்திற்குச் செல்லுதல் என்பது பொருள். இவை தமக்குரிய நேர்பொருளிலும் துணைவினையாகப் புகுதல் என்னும் பொருளிலும் வரும். மாடு புல் மேயப்போகிறது. மாணவன் பள்ளிக்குப்போகிறான் என்றாற்போல வருவன நேர்பொருள். வானம் இருண்டிருக்கிறது மழைவரப் போகிறது. விரைவில் பாடத்தை எழுது ஆசிரியர் வரப்போகிறார் என்றாற் போலவன புகுதல் என்பதன் திரிபாக வந்தன. இவை எச்சமாகவும் வரும். போய் வேலையைப்பார் நேர்பொருள் எங்கிட்ட போய் இப்படி நீ பேசுவது தவறு, போயும் போயும் உன்கிட்ட வந்து சொன்னது தப்பு என்றாற்போல வருவன புக்கு என்னும் பொருள் தரும்.

போர் : ஒன்றோடொன்று பகைத்து நெருங்குதல், பொருந்துதல் என்பது பொருள் இதற்குரிய வடசொல் சண்டை ஒருவரோடு ஒருவர் நெருங்கி மலைதலின் சண்டை போர் - பொருதல் வினைப்பெயர். இதன் முதனிலைச்சொல் பொருவு - இனி வைக்கோற் போர், நெற்போர் என குவியலைக் குறித்து வருமிடத்துப் போர் என்பது வினைச்சொல் ஒன்றன் மேல் ஒன்று பொருத்துதலின் போர் எனப்பட்டது. இது தொழிற்பெயராகுமிடத்துப் போர்வு எனவரும். இனி ஒன்றால் ஒன்றை மூடுதலுக்குப் போர்த்தல் என்பது வழக்கு. குளிர் மிகுதி காரணமாகத் துப்பட்டியை எடுத்துப் போர்த்துக் கொண்டான் எனவரும். இதற்குரிய பெயர் போர்வை. வினை போர்த்து - தொழிற்பெயர் போர்த்தல்.

மக்கள் : ‘மக்’ என்னும் குறையுரிச்சொற்கு உவப்பு. இனிமை அது சொல்லாக்க விகுதி பெறுமிடத்து ஒருமையில் அகரம் பெற்று மக என்றும் பன்மையில் கள்பெற்று மக்கள் என்றும் வரும். மக்+எழு(ச்சி) = மகிழ் என ஆக்கம் பெறும். கள்ளுக்கு மகிழ் என்பது ஒரு பெயர். கணவனுக்கு மகிழ்நன் என்பது ஒரு பெயர்.

இனிமையையும் உவப்பையும் தருதலின் மக்கள் குழவி மக எனப்பட்டது. ஆண்பாலாயின் அன்னும் பெண்பாலாயின் அள்ளும் சேர்ந்து மகன் மகள் என்று வரும் பன்மையாயின் ஆர்விகுதி கூடி மகார் என வரும்.

மக்கு : படிக்காத மக்குப்பயல், அவனுக்குச் சொன்னால் புரியாது. மக்குப்பயல் என்றாற் போல வரும் வழக்கில் மக்கு என்பது மண் + கோள் விகுதியளவாகக் 'கு' என திரிந்து மண் + கு = மட்கு என உருப்பெற்று மக்கு எனத் திரிந்ததாகும். மக்கி மண்ணாப் போச்சி என்பது வழக்குத்தொடர்.

மகிழ் : கள்ளுக்குரிய பெயர்களுள் ஒன்று மக்+இழுது+மகிழ்து என உருப்பெற்று மகிழ் என ஆக்கம் பெற்றது. இழுது - பால் தேன் நெய் போன்று நெகிழ்வுப் பொருள் தரும். சொற்கள் பால் போலும் திண்மையாக இன்பமயக்கந்தருதலின் (மக் + இழ்) மகிழ் எனப்பட்டது. இழுது மயக்கமில்லாத பேரானந்தத்தை தருமிடத்து முன்னும் பின்னும் அம் என்னும் இடைச்சொல் சேர்ந்து அம் + இழ்து + அம் = அமிழ்தம் என ஆக்கம் பெறும். அமிர்தம் வேறு அமிழ்தம் வேறு. அமிர்தம் என்பதற்கு இறப்பை மறப்பது. சாவா மருந்து என்பது பொருள். அமிழ்தம் என்பது உயர்ந்த இன்பத்தை தருவது என்பது பொருள். "வானின்றுலகம் வழங்கி வருதலாற்றானமிழ் தம் என்றுணரற்பாற்று" என்பார் வள்ளுவர்.

மங்கலம் : சிறப்பு, அழகு மாண்பு விளங்குதல் என்னும் பொருள்தரும். இச்சொல் மண் + கலம் = என்பவற்றின் நிறைமொழியாகும். மண் = மணத்தல், நீரால் நனைதல் விளைவு தருதல் என்பன பொருளாகும். கலம் = அணிகலன் - மேற்கொள்ளப் பெறும் அழகு என்பது பொருள். மண அணிக்கு மங்கலவணி என்று பெயர். திருமணம், பிறந்த நாள், சிறப்பு நாட்களுக்கு மங்கலம் என்று பெயர். மண்ணால் செய்த கலமாயின் மட்கலம் என்று வரும். ஊர்ப்பெயரைக் குறித்து வருமிடத்து மங்கலம் என்பது மண் + களம் = மங்களம் என்பதன் திரிபாகும். மண்ணாகிய இடம் மங்களம். 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்பார் வள்ளுவர். மாண்பைக் குறிக்குமண் என்பதனடியாகப் பிறந்தது மங்கை என்னும் பெயர். மணத்தையும் களிப்பையும் தருவது என்னும் பொருளில் வழங்கும் சொல் மங்களம். மங்களம் ஒரு பெண்பாற் பெயர்.

மங்குதல் : மங்குதல் = ஒளிகுன்றல் என்னும் பொருளில் வரும் இச்சொல் மயங்குதல் என்னும் சொல்லின் திரிபாகும். இருளும் ஒளியும் மயங்குதல் மங்குதல் எனப்படும்.

மச்சம் : உடம்பில் கருப்பாகப் புள்ளியாக அமைந்துள்ள வடுவிற்கு மச்சம் என்று பெயர். இச்சொல் மை + எச்சம் = மச்சம் என்பதன் ஆக்கமாகும். மை - கருமையையும் எச்சங்குறையையும் உணர்த்தும்.

மட்டு : கள், அளவு, எல்லை என்னும் பொருளில் வழங்கும் சொல். (1) கள்ளை உணர்த்துமிடத்து மடுத்தற்குரியது (உண்ணற்குரியது) என்பது மடுத்தல் என்னும் தொழில் பற்றியமைந்தது. மடு என்னும் முதனிலை பெயராதற் பொருட்டு ஒற்றிரட்டித்து மட்டு என நின்றது. (2) மடுத்தல் = உள் வாங்குதல் உள்ளடங்குதல். ஆதலின் அடங்கும் நிலை மட்டு எனப்பட்டது. என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு உடன்பாடே என்னுமிடத்தில் எண்ணளவைப் பொருளிலும் ஊர்செல்லும் மட்டும் வாய் திறவாதே என்னுமிடத்து அளவை எல்லைப் பொருளிலும் அமைந்து பொருள் தரும் எட்டினமட்டும் ஈட்டி பாயும் என்னுமிடத்து அளவு என்னும் பொருள் தரும். வெள்ளம் மட்டுப்பட்டுவிட்டது. எனின் ஓர் எல்லையில் அடங்கி விட்டது என்பது பொருள். மடங்கு என்பது இதனடியாகப் பிறந்த சொல்லாகும். சோற்றுணவிற்கு மடை என்பது பெயர். மடுத்தற்குரியது மடை. மடைப்பள்ளி - உணவு சமைக்குமிடம்.

மடல் : தென்னை, பனை, தாழை முதலிய மரங்களின் ஓலைகளுக்கு மடல் என்பது பெயர். ஓலைகள் மடங்கி நீண்டிருத்தலின் மடங்கல் என உருப்பெற்று மடல் என ஆக்கம் பெற்றது. இருபுறமும் நீண்டு உட்குழிவாக இருத்தலின் திருநீற்றுக்கலம் திருநீற்று மடல் எனப்பட்டது.

மடை : நீர் முதலியவற்றை அகப்படுத்தி மடுத்திருத்தலின் தேங்கிய நீர் நிலை மடு எனப்பட்டது. அது ஐகாரவிகுதி பெற்று மடை என அமைந்தது.

மண்டபம் : மக்கள் முதலிய உயிரினங்கள் உட்செறிந்து தங்குதற்குரிய மண் முதலியவற்றால் அமைக்கப்பட்ட இடம். மண்டுதல் உட்செறித்தல் (மண்டு காண்க).

மண்டு : மண்ணின் தன்மைத்து என்பது பொருள். மண் + து = மண்டு. மண்ணின் தன்மை நீர் முதலியவற்றை உள்வாங்கி அடக்குதல். அடியில் தங்கியிருப்பதற்கு மண்டி என்று பெயர். உடம்பை வளைத்து உள்வாங்குதலை மண்டியிடல் என்பர். புல் மண்டிக்கிடக்கிறது என்ப. பசியால் உணவை வாரி உண்ணுதலைச் சோற்றை மண்டுகிறான் என்ப. அறிவுக்குறையுடையானை மண்டு என்பது அவர் அறிவு மண்ணாக (களிமண்) உள்ளது என்பதாகும். மணலில் வாழும் தவளைக்கு மண்டுகம் என்பது பெயர். மண் + தலம் = மண்டலம்.

மண்டை : பொருள்களை உள்ளடக்கிக் கொள்ளும், கலம் (பாத்திரம்) முதலியவை மண்டை எனப்படும். மூளையாகிய சோற்றை உட்கொண்டிப்பதால் தலையின் மேற்பகுதி மண்டை எனப்பட்டது.

மந்தம் : ஒக்கமும் தாழ்வும் இல்லாமல் இடைப்பட்ட நிலையைக் குறிக்கும் காரியம் மந்தமாக நடைபெறுகிறது. விலைவாசி மந்தம். அவன் காது

கொஞ்சம் மந்தம் எனவரும். இது மத்திமம் என்னும் சொல்லின் மரூஉவாகும். சிறு மலைகளுக்கு மந்து என்று பெயர். இது மந்தரம் என்றும் வரும். வானம் மப்பும் மந்தாரமுமாக உள்ளது என்னுமிடத்துமைப்பும் மந்ததரமாகவும் உள்ளது என்பதன் திரிபாகும். தரம் = தன்மை.

மல் : 'ம' என்னும் ஒலி மென்மையைக் குறிக்கும் அல் எதிர்மறையைக் குறிக்கும். ம் + அல் = மல். வலிமையையும் வளத்தையும் மிகுதியையும் குறித்துவரும். "மல்லல் வளம்" என்பது தொல்காப்பிய உரியியல் நூற்பா. இதனடியாக – மலை மலி (புகழ்) மலிவு முதலிய சொற்கள் ஆக்கம் பெறும். உடம்பின் உறுதியான உறுப்பு நெஞ்சு. அதனால் உரன் என்பது அதற்கு ஒரு பெயர் நெஞ்சுக்கு (மல் + ஆகம்) மல்லாகம் என்பது பெயர். மார்பு மேல் தெரியுமாறு கிடத்தலை மல்லாக்கக்கிடத்தல் என்பர். வலிந்து பிடித்தலை மல்லுக் கட்டுதல் என்பர். மல்குதல் = பெருகுதல்.

மலங்க மலங்க விழித்தல் : *அச்சத்தால் கண்ணிமைகளைக் கூட்டி* விழித்தலை மலங்கமலங்க விழித்தல் என்பர். இதன் செம்மையான வடிவம் மழுங்க மழுங்க விழித்தல் என்பதாகும். மழுங்கல் – தேய்தல், தெளிவின்மை பற்றிவரும் நேற்றுத்தானே புதுப்பேனா வாங்கித் தந்தேன் அதை எங்கே போட்டாய் என்றால் பையன் மலங்க மலங்க விழிக்கிறான் என்றாற் போலவரும்.

மலடு : மகவு கன்று முதலியவற்றை ஈனுதலில்லாத மகளிரை உயிரினங்களைக் குறித்துவரும் சொல். மல் = வளம், அடுதல் = கொன்றழித்தல் இல்லாமற்செய்தல் மகவாகிய வளம் இல்லாத நிலை மலடு எனப்பட்டது.

மலிவு : குறைவு. தேய்வு என்னும் பொருளில் சிதைந்து வழங்கும் சொல். கரும்பு விலை மலிந்துவிட்டது. இந்தக் கடையில் பண்டங்களை விலை மலிவாக வாங்கலாம் என்றாற் போலவரும். மலிவு என்பது மெலிவு என்பதன் திரிபாகும். மிகுதி என்னும் பொருளில் வரும் மலிவு என்பது வேறு மெலிவின் சிதைவாகிய இச்சொல்வேறு.

மழுப்பல் : எதைக்கேட்டாலும் தெளிவாகக் கூறாமல் மழுப்புறான் என்பது வழக்கு. மழு என்னும் கருவி கூர்மையின்றி மொட்டையாக அம்மிக்குழவி போல இருக்கும். மழு என்னும் சொல்வினை யாகுமிடத்து மழுப்பு எனவரும். மழுப்பல் தொழிற்பெயர். இதனடியாகப் பிறந்த சொல் மழித்தல். கூர்மையின்றி மொட்டையாகப் பேசுதலை மழுப்பல் என்றனர்.

மறுக்கா : மறுபடி. அடுத்து என்னும் பொருளில் வழங்கும் நாட்டுப்புற வழக்குச்சொல். இது மறுகால் என்பதன் சிதைவு. அடுத்த அடி என்பது பொருள்.

மன்னித்தல் : குற்றங்களைப் பொறுத்து மறந்துவிடும் நிலை மன்னித்தல் எனப்படும். குறையைப் பொறுத்தருள வேண்டுதலை மன்னிப்புக் கேட்டல் என்பர். இச்சொல் மன்+நீத்தல் என்பவற்றான் உருப்பெற்றதாகும். மன் = மனம் நீத்தல் = எண்ணிக் கொண்டிருந்த குறையை நீக்கிவிடுதல். மன்+நீப்பு=மன்னிப்பு என ஆக்கம் பெற்றது.

மாங்காமடையன் : இது ஒரு வழக்குதொடர். அதிக முட்டாள் என்னும் பொருளில் வழங்கும் சொல். குறைவில்லாத மடமைத் தன்மையுடையவன் என்பது பொருள். இதன் செம்மையான வடிவம் மங்காமடையன். மங்குதல்=குறைதல்.

மாசு : குற்றம், கறை என்னும் பொருளில் வழங்கப்படும் சொல். இது மா+சூழ் = சூழ்ந்திருப்பது. மாசூழ் என உருப்பெற்று மாசூ என அமைந்து மாசு என ஆக்கம் பெற்றதாகும்.

மாட்டுப் பெண் : ஒரு குடியில் பிறந்து மற்றொரு குடிக்கு மருமகளாக மணம்பெற்று வந்துள்ள பெண்ணைக் குறித்து வழங்கும் பெயர். திவ்வியப்பிரபந்த ஈட்டுரையாசிரியர் மணாட்டுப்பெண் என்பார். மணங்கூடுதல் பெண்பாற்குப் பொதுவாதலின் மருமகள் என்னும் சிறப்புப்பொருளைத் தாராது. இதன் செம்மையான வடிவம் மாற்றுப் பெண். என் குடும்பத்திற்கு என் பெண்ணிற்கு மாற்றாக (ஈடாக) வந்த மகள் என்பது கருத்து. பிற குடியிலிருந்து வந்து தன் குடியில் மருவியதால் மருமகள் என்பது காரணப்பெயர். என்மகனை மருவுதற்குரியவள் என்பது மறைபொருள்.

மாப்பிள்ளை : ஒருவர் குடிக்கு மருமகனாக வந்தவருக்குரிய சிறப்புப் பெயர். தன்னுடைய மகன் பிள்ளை. தன் மகளை மணந்தவன் மாப்பிள்ளை. மா = சிறப்பு பிள்ளை = மகன்.

மாராக்கு (மாராப்பு) : மகளிர் மார்பை மறைப்பதற்கு அணியும் மேலாடை. மார்பு + ஆக்கை - மார்பாக்கை, மாராக்கை - மராக்கு என மருவியது. ஆக்கை - நூல் அது ஆகுபெயராய் நூலாடையை உணர்த்திற்று மார்பை மறைப்பதற்குரிய ஆக்கம் மாராக்கம். மாராக்கு என அமைந்ததெனினும் பொருந்தும். இது மாராப்பு என்றும் வழங்கும். மாராப்பு என்பதற்கு மார்பை அப்பியிருக்கும் ஆடை என்பது பொருள். (மேலாக்கு காண்க)

மிஞ்சுதல் : எடுத்துக்கொள்ளப்பட்ட அளவிற்கு மேலாக மிக்கிருக்கும் பொருள் நிலை மிஞ்சுதல் எனப்படும். இதன் பண்புப் பெயர் மிச்சம் மிஞ்சுதல். பகரவகரப் போலி வகையான் விஞ்சுதல் என்றும் வரும். மீ+மேல் - மிகுதி. எச்சம் மிகுதியாக அமைந்த பொருள்.

மீதம், மீதல், மீதி : அளவு மேலாக அமைந்து குறிப்பிட்ட அளவு போக எஞ்சியுள்ளது மீதம். அதன் வினைச்சொல் மீதல் = அளவின் மிக்கிருத்தல் மீ + தல் – தல் தொழிற்பெயர் விகுதி. இது தி என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்று மீதி என்றும் வரும். அளவின் மிஞ்சியது மீதம்.

முக்கல் : மூச்சுத்திணறல் – உடம்பு வலி முதலியவை காரணமாக மூக்கால் எழுப்பப்படும் ஒலி முக்கல் எனப்படும். இது மூக்கு + ஒல் என்பவை முக்கல் என ஆக்கம் பெற்றதாகும். ஒல் = ஒலி. இது முக்குதல் என்றும் வரும் முக்கல் என்பதே செஞ்சொல்.

முக்கிக் குளித்தல் : இது முக்குளித்தல் எனவும் வழங்கும். இதன் அடிப்படை வடிவம் மூக்கு + உள் – அழுந்துதல் என்பதாகும். மூக்குள் என உருப்பெற்று மூக்குளித்தல் என ஆக்கம் பெற்றதாகும்.

முகவெட்டு : அளவோடமைந்து அழகாக இருக்கும் முகவடிவை முகவெட்டு என்பர். அவன் நல்ல அழகன் முகவெட்டான ஆசாமி எனல் வழக்கு. இதன் செம்மையான வடிவம் முகவட்டம் என்பதாகும். வட்டம் – வடிவம் அது முகவெட்டு என உருப்பெற்று முகவெட்டு எனத்திரிந்தது.

முகாந்தரம் : மூலகாரணம் அடிப்படைக்காரணம் என்னும் பொருள் தரும் வடசொல். முக + அந்தரம் = முகாந்தரம். முகம் = முதன்மைத் தோற்றம் என்னும் கருத்தில் மூலம் அடிப்படையை உணர்த்தும் அந்தரம் = நிலை.

முச்சலிக்கை : உடன்படிக்கைப் பத்திரம் ஜாமின்பத்திரம் குறித்து வரும் இது இந்திமொழிச்சொல். இது முச்சலிக்கா என்றும் வரும்.

முச்சி : தலைமயிர்க்கொண்டையைக் குறித்து வழங்கும் சொல். முடிச்சு என்பதன் திரிபு.

முட்டாக்கு : தலையை (உடம்பாக) உடையால் மூடிக்கொள்ளும் ஆடை முட்டாக்கு எனப்படும். மூடு + ஆக்கை என்பவற்றின் மரூவாக அமைந்த சொல் மூடு + ஆக்கை = முட்டாக்கை – முட்டாக்கு. இச்சொல் விசிகை சிவிகை என்றும் வைசாகி – வைகாசி என்றும் திரிந்தமைபோல முட்டாக்கு = முககாடு எனத்திரிந்து பயின்றுவிட்டது.

முட்டை : பறவைகளின் சினைக்குரிய பெயர். ஆமை முதலியனவும் முட்டையிடும் இச்சொல் மொட்டு என்பதனடியாகப் பிறந்ததாகும். இதழ்விரியாத நிலையில் உள்ள பூவுக்கு மொட்டு என்பது பெயர். மயிர் நீங்கிய தலைக்கு மொட்டை என்று பெயர். மரம் இலை தழைகள் உதிர்ந்து நிற்கும் நிலையை மொட்டை மரம் என்பர். பறவை முதலியவற்றின் சினை மொழு மொழு என

மொட்டையாக உள்ளமையால் மொட்டை என்று உருப்பெற்று மொட்டைத்தன்மை அதற்கு இயற்கையாகவே அமைந்திருத்தலின் அதனை மட்டுமே குறிக்கும் வண்ணம். முட்டை எனக் குறியீடு செய்தனர். பிசிர் இன்றிக்குவிந்த குவியலை முட்டு என்பது வழக்கு. அதனான் பிசிரில்லாத பறவைகளின் சினையை முட்டை என்றனர்.

முடம் : வளராத நிலை முழுமை பெறாதநிலை என்னும் பொருள் முடு என்பதனடியாகப் பிறந்தசொல் முட்டு. முட்டுப்பாடு = மேற்செல்ல இயலாத நிலை - மூலை முடுக்கு என்பதனுள் மூடுக்கு என்பதும் அப்பொருளுடையதே. முட்டாள் - அறிவு வளராத நிலை முடை = தட்டுப்பாடு. அம்முறையில் கை கால் முதலிய உறுப்புக்கள் வளராமலோ குறைந்தோ, இலைாமலோ வளைந்தோ இருக்கின்ற நிலை முடம் எனப்பட்டது. முடு + அம் = முடம் - அம் சொல்லாக்க விகுதி. அறிவுக் குறையை உணர்ந்துமிடத்து முதல் நீண்டு மூடம் என வரும். மூத்தல் என்பது மேல் வளரமாட்டாத நிலையைக் குறிப்பதேயாகும்.

முத்தம் : ஒருவர் தமது பேரன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்த வாயிலும் இதழ்களைக்குவித்து ஒருவர் நெற்றியிலும் உச்சியிலும் கன்னத்திலும் ஒற்றுதலை முத்தமிடுதல் என்ப. இச்சொல் மு + ஒத்தல் - என்பவற்றின் மரூஉவாகும். மு என்பது வாயிதழைக் குறிக்கும் குறிப்பெழுதததுச்சொல். மு என்னுமிடத்து வாயிதழ் குவிந்து முன் நீளும். ஒற்றல் = தோய்த்தல். ஒற்றல் - ஒத்துதல் எனத்திரியும் ஒத்தடங்கொடுத்தல் என்பது மரபு - மு + ஒத்தல் = முத்தல். இது வினைப்பெயர் பண்புப்பெயர் முத்தம். இது ஒரு பெயரளவாக நின்று முத்துமிட்டார், முத்தங்கொடுத்தார் என்று வழங்கும் முத்தம் - முத்தி என்றும் வழங்கும் - வீடு பேறாகிய முத்தி என்பது வேறு அது முக்தி என்பதன் திரிபாகும்.

முத்துக்குளித்தல் : முத்தெடுப்பதற்காக நீரிற்குளித்தல் என்னும் கருத்தில் வழங்கும் இத்தொடரில் குளித்தல் என்பது கொள்ளுதல் என்பதன் திரிபாகும். கொள்ளுதல் கொளி - குளி எனத்திரிந்தது. நீரில் மூழ்குதல் என்னும் பொருளில் வரும். குளித்தல் என்பது குளம் - என்னும் அடிப்படையில் அமைந்ததாகும்.

முதிரம் : மேகம் என்னும் பொருள் தரும் இச்சொல். நீரான் முற்றியது என்னும் பொருளில் அமைந்ததாகும். முதிர் + அம். முதிர்தல்= நிறைதல் அம் = நீர். மேகம் சூழும் தன்மைகருதி குமணனுடைய மலை முதிரமலை எனப்பட்டது.

முறி : நறுக்கப்பெற்ற ஓலையைக் குறிக்கும் பெயர். ஆகுபெயரால் எழுத்தாணியால் எழுதப்பெற்ற ஓலையைக் குறித்தமைந்தது. நறுக்கப்பெறாத நிலையில் ஓலை மடல் என்று பெயர் பெறும். இதன் அடிச்சொல் முறு. அது இகரம் பெற்று முறி எனவும் ஐகாரம் பெற்று முறை

எனவும் வரும். முறி என்பது தனி ஓலையையும் முறை என்பது அடுக்கப் பெற்ற ஓலைகளையும் குறிக்கும். முறி எனின் ஆவணத்தையும் முறை என்பது நூலையும் குறித்து அமைந்தன. (திருமுறை காண்க)

முறியடித்தல் : தோற்றோடச் செய்தல். முறிய அடுத்தல் என்பதன் மரூஉ. முறிய அடுத்தல் = முறியடித்தல் என அமைந்தது.

முறுவல் : நகைத்தல், சிரித்தல் என்னும் பொருள் தரும் இலக்கியச்சொல். ஒலிதோன்ற நகைத்தல் முறுவல் எனப்படும். ஒலி குறைந்த சிரிப்பு புன்முறுவல் எனப்படும். மூ + உறு = ஒல் என்பவற்றின் ஆக்கம் மு என்னும் எழுத்தொலி. வாயின் இதழ்களைக் குறிக்கும் குறிப்பெழுத்து. உறு(தல்) பொருந்தியிருத்தல் ஒல் = ஒலி. இதழிற் பொருந்திய ஒலி என்பது கருத்து. மு+உறு+ஒல் = முறுவொல் – முறுவல் என அமைந்தது.

முன்னம் : உளக்குறிப்பு - அடையாளம் என்னும் பொருளில் வழங்கும் இலக்கியச்சொல். இது மு + ன் + அம் என்பவற்றின் ஆக்கமாக உருப்பெற்ற சொல். மு + இதழ் ன் இனிமைக்குறிப்புணர்த்தும் குறிப்பெழுத்து. அம் = பண்புணர்த்தும் விகுதி. இதழசைவின் வாயிலாக உணரும் குறிப்பு என்பது பொருள். இது எண்ணம் கருத்து என்னும் பொருளிலும் ஆளப்படுகின்றது.

முனவல் : ஒலி பெரிதாகி வெளிப்படாமல் நுணுக்கமாக இதழசைவினால் வெளிப்படும் ஒலி முனவல் எனப்படும். மு + ன் என்பவை உகரத்தையும் அகரத்தையும் பெற்று முனு என்றும் முனவென்றும் அமைந்த ஒலிக்குறிப்புணர்த்தும் ஒலி என்பதனொடு முன + ஒல் = முனவல் என்றும் முனு என்பது இரட்டித்து முனு முனுத்தல் என்றும வரும். மு என்பது வாயிதழைக்குறித்தலை முத்தம் என்னும் சொல்லாலும் அறியலாம். மு +ஒத்து + அம் = முத்தம் இதழ்கள் இன்போடு ஒத்துதல் (ஒற்றுதல்) முத்தம் எனப்படும். முன என்பது அம் விகுதிபெற்று முனம் என அமைந்து ஒலிப்புறா நிலையை உணர்த்த மோனம் என்று வரும். "ஞானம் என்பது மோனவரம்பு" என்பது ஔவை வாக்கு. மோனம் தத்தித இலக்கணப்படி மௌனம் என வரும். மௌனம் பேச்சு வெளிப்படா நிலை.

மூக்கணாங்கயிறு : மாடுகளின் மூக்கில் துளைத்து முடியப்படும் கயிறு. இது மூக்கு அணவும் கயிறு என்பவற்றின் மரூஉவாகும்.

மூளி : வளர்ந்து முழுமைபெறாத - குறைந்த. வடுப்பட்ட நிலையை உணர்த்தும் சொல். மூளாதல் - முழுமையாதல் முள் என்பது மேல் எழுதல் - நீளுதல் என்னும் பொருள் தரும். மூள் என்பது நிறைதல் என்னும் பொருள் தரும். மூள் + இல் = மூளில் - மூளி உறுப்புக் குறையுடையாரை மூளி எனல் வழக்கும் - பாத்திரம் மூளியாகிவிட்டது என்பது வழக்கு.

மூளை : அறிவு மூளுதற்குரிய உறுப்பு. அறிவு தோன்றுதல் முளைத்தல் இதன் முதனிலை முளை. அது தோன்றி விரிதலின் முதல் நீண்டு மூளை என அமைந்தது.

மெலுக்கு : புற உடம்பை அழகு செய்துகொள்ளும் நிலை பற்றி வழங்கும சொல். அவன் ரொம்ப மெலுக்காத்திரிவான் என்றாற் போல வரும். இது மேல் + ஒக்கு (மெலுக்கு) என்பவற்றின் ஆக்கம். ஒக்கு - ஒக்கப்படுத்தல் = அலங்காரம் செய்து கொள்ளல்.

மென்னி : குரல்வளைத் தொண்டையைக் குறித்து வரும் வழக்குச் சொல். நீ இப்படி இனி மேல் செய்தால் மென்னியைத் திருகிவிடுவேன் என்றாற்போல வரும். இது உடம்பில் தலைக்கு அடியில் மென்மையாக அமைந்திருத்தலால் மென்நிலை = மென்னி என ஆக்கம் பெற்றது.

மெனக்கிடுதல் : இந்தக் காரியத்தை முடிக்க மிகவும் மெனக்கிடுறான். மெனக்கெட்டு இதனைச் செய்தேன் என்றாற்போன்ற வழக்கில் இச்சொல். மேனிக்கேடு என்பதன் திரிபாகும். மேனிக்கேடு = மெய் வருத்தம் மெனக்கெட்டு உங்களைப் பார்க்க வந்திருக்கிறான் இதற்காகவா மெனக்கெட்டு வந்திருக்கிறாய் என்றாற் போன்ற வழக்கில் இச்சொல் - வினைக்கெட்டு என்பதன் திரிபாகும். நிகழ்த்த வேண்டிய செயலைவிட்டு என்பது பொருள். இச்சொல் வேலைமெனக்கெட்டுக் கூத்துப் பார்க்கப் போகிறான் என வேலை என்ற அடையொடும் வரும். வேலை என்பது மேலை என்பதன் திரிபாகும். மேலை வினை கெட்டு என்பது வேலை மெனக்கெட்டு எனத்திரிந்து வழங்குகின்றது. மேல் செய்யவேண்டிய வினையைச் செய்யாமல் கெடுத்துப் பயனில்லாத செயலை மேற்கொண்டு என்பது கருத்து.

மேக்கரித்தல் : கட்டுப்படாமல் உரக்கப் பேசுதல் ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்டால் அவன் பேக்கரிக்கிறான் என்றாற் போல வரும். இது மேம்பட ஆரித்தல். மேலாக ஆரித்தல் என்பவற்றின் திரிபாகும். மேலாக - உயர்வாக ஆரித்தல் = பேசுதல். மேலாக ஆரித்தல் - மேக்கரித்தல் எனத் திரிந்தது.

மேய்தல் : மாடு புல் மேய்கிறது என்றாற்போல வரும். இது மேலாக ஆய்தல் என்னும் தொடரின் சுருக்கம். மேலாக மேன்போக்காக. ஆய்தல் = கொய்தல். உண்ணுதற்கு வளமாகத் தழைத்திருக்கும் புல்லையே காலினங்கள் பற்றி உண்ணுதலின் மேல் + ஆய்தல் = மேய்தல் என ஆக்கம் பெற்றது. கூட்டத்தில் அவன் கண்ணால் மேய்கிறான். அவன் புத்தகத்தைக் கொடுத்தால் மேய்ந்து தள்ளி விடுவான் என்றாற்போலப் பிறவற்றைத் தேடும் செயலும் மேய்தல் எனப்படும்.

மேலாக்கு : மகளிர் உடம்பின் மேல் சுற்றி மறைத்துக்கொள்ள உடுக்கும் ஆடை. ஆக்கை = ஆடை அது ஆக்கு எனத்திரிந்தது. உடம்பின் மேல் அணியப்படும் கலன் மேல்கலை = மேகலை என அமைந்தது.

மேனாமினுக்கி : ஆடவர் நோக்கத்தைத் தன்பால் இழுக்குமாறு ஆடை அணிகளை அணிந்து மிளிரும் பெண்டிரை மேனாமினுக்கி என்பது வழக்கு. இது மீனாகமினுக்கி என்பதன் திரிபு. மீன் = விண்மீன் மினுக்குதல். மின்னல் போல் விட்டு விட்டு ஒளிர்தல் விண்மீன் விட்டு விட்டு ஒளிர்தலின் அதுபோல மினுக்குபவள் என்பது பொருள் ஆக என்பது ஈண்டு உவம உருபாக நின்றது.

மையம் : நடுப்பகுதி எனப் பொருள் தரும் சொல். பொது என்னும் பொருளிலும் அமையும். முதலுக்கும் இறுதிக்கும் இடையே பொதுப் படநிற்றலின் பொது என்னும் பொருளும் அமைந்தது. நடுவிடம் என்னும் பொருளில் இது மதியமம் என்னும் வடசொல்லின் திரிபாகும். மத்யமம் - மத்தியம் - மையம் என மருவியது.

மொக்கை : கூர் மழுங்கிய நிலையை உணர்த்தும் சொல். இது மொழுக்கை என்பதன் திரிபாகும். மொழுக்கல் = மழுங்குதல்.

மொகரை : முகம் என்னும் பொருளில் அமைந்து வழங்கும் நாட்டுப்புற வழக்குச்சொல். இதன் செம்மையான வடிவம் முகவரை வரைவு = அளவு. முக அமைப்பு என்பது கருத்து. இது மொவரை என்றும் வழங்கும். கட்டை என்பதனொடு இணைந்து மொகரைக் கட்டை எனவும் வழங்கும். கட்டை என்பதும் கட்டு (கட்டுமானம்) என்பது வரை - அளவு என்னும் பொருளுடையதேயாகும். இது வசவுச் சொல்லாக வழங்குமிடத்து மூக்கரை என்பதன் திரிபாகும். முககரை - மூக்கரை - முகரை என மருவும்.

மொத்தம் : பருமன், கூடுதல், தொகுப்பு என்னும் பொருளில் வரும் வழக்குச் சொல். பருமன் ஆள் ரொம்ப மொத்தமாகிவிட்டான் என வரும் இது முதிர்வு. முதித்தல் என்னும் அடிப்படையில் முத்து என்பது திரிந்தது. உம் விகுதி பெற்று மொத்தம் என அமையும் கூடுதல் ஆகக் கூடுதல் தொகை எவ்வளவு - எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாக வாங்கு என்றாற் போல வருமிடத்து முற்றுதல் என்னும் அடிப்படையில் முத்தல் - மொத்தம் எனவும் முதிர்தல் என்னும் அடிப்படையில் முழுமை. தொகுப்பு என்பன மொத்தம் எனவும் அமையும்.

மொத்தல் : மோதுதல் - மோதல் என்பதன் திரிபு.

மொய் : திருமணம் - கோயில் திருவிழா முதலிய நிகழ்ச்சிகளில் உறவினர் நண்பர் அடியவர் அளிக்கும் அன்பளிப்பு - காணிக்கைகளுக்கு மொய்ப்பணம்

மொய் எழுதுதல் என்பன வழக்கு. மொய் என்பதற்கு நெருக்கம் என்பது பொருள். நெருக்கம் உறவையும், நண்பையும் குறித்தலின் உறவினரும் நண்பரும் அளிக்கும் அன்பளிப்பு மொய் எனப்பட்டது.

மோசம் : நம்பிக்கை, துரோகம், ஏமாற்றல், தாழ்வு முதலிய பொருளில் வரும் சொல். அவனை நம்பி மோசம் போனேன். அவன் ஒரு மோசடியான ஆள். சாப்பாடு ரொம்ப மோசம் என்றாற்போல வரும். இச்சொல் மோசு+அம் - என்பவற்றின் மரூஉவாகும். மோசு = விருப்பம், அவா என்னும் பொருள் தரும் சொல். அவம் = வீண் கேடு என்னும் பொருள் தரும். மோசவம் என்பது வகரங்கெட்டு மோசம் என அமைந்தது.

மோசு : விருப்பம் செய்யும் நிலையை உணர்த்தும் சொல். விரும்பத்தக்கவர் என்னும் பொருளில் மோசி என வரும். எணிச்சேரி முடமோசியார் என்பது சங்கப்புலவர் ஒருவரின் பெயர். இது மொய் + சு = என்பவற்றின் திரிபாகும். மொய்சு - மோசு என வரும். மொய் என்பதன் பொருள் மேல் விளக்கப்பட்டது.

மோடி : செருக்கு, பிணக்கு, ஆடம்பரம் என்னும் பொருளில் வழங்கும் சொல். இது தெலுங்குச்சொல், கன்னடத்திலும் இதுவே. இது மேடு என்னும் தமிழ்ச்சொல். தெலுங்கில் மோடு எனத் திரிந்து, இகரவிகுதி பெற்று மோடி எனத் திரிந்ததாகும். மேடு = உயர்வு பெருமை மேட்டிமை என்னும் பொருளுடையதாகும்.

மோழை : அறிவுக்கூர்மையில்லாதவரைக் குறித்து வரும் ஏளனச் சொல். காரியஞ் செய்யத் தெரியாத மோழை இவன் என்றாற் போல வரும். இது மொழு - மொழுப்பு என்னும் உரிச்சொல் நீண்டு ஐகார விகுதி பெற்றதாகும். கூர்மையில்லாத மொட்டையான தலைப்பகுதி மொழுப்பு எனப்படும். மொழு மொழுவெனத் தலையைச் சிரைத்துக் கொண்டான் என்பது வழக்கு. கொம்பு தீய்க்கப் பெற்ற மாட்டினை மோழை மாடு என்பர். வழக்கில் ழகரம் ளகரமாகத் திரிந்து மோளை எனவரும். மூத்தது மோளை இளையது காளை என்பது ஒரு வழக்குத் தொடர். மோழை மாடு - மொள்ளைமாடு எனத் திரிந்தும் வரும்.

வக்கணை: நயமாக, அழகாக, சாதுர்யமாகப் பேசுதலை அவன் நல்லா வக்கணையாப் பேசுவான் எனல் வழக்கு. இச்சொல் வாக்கு + அணி - வக்கணி வக்கணை எனத்திரிந்து அமைந்ததாகும். அணி நயம் பொருந்தப் பேசுதல் என்பது பொருள். அணைவாகப் பேசுதல் எனினுமாம்.

வக்கு : அவன் கிடக்கிறான் வக்கத்தபயல் என்றும், இதைச் செய்ய உனக்கு வக்கில்லை என்றாற் போல வரும் வழக்குச் சொல். திறமை என்னும் பொருளில் அமைந்துள்ளது. இதன் சரியான வடிவம் வற்கு-வல்கு வலிமைக்குறை - வலிமை - வல்லமை, திறமை, ஆற்றல் என்னும் பொருளில்

புன்மை - புற்கு என்று திரியும் வலிமையோடு செல்வ வலிமையையும் குறித்து வரும். ஒரு நகைநட்டு வாங்க வக்கில்லை அவ வாய் நீளத்தைப் பாரு என்றும், அவன்கிட்ட ஒன்றுமில்லை வக்கத்தவன் என்றும் வரும்.

வசை : திட்டுதல், வைதல், பழித்தல் என்னும் பொருளில் வழங்கும் சொல். குற்றம் என்னும் பொருளிலும் வரும். இது வைதல் என்பதன் முதனிலையாகியவை என்பதனோடு செய் என்னும் வினையடி கூடி வை+செய்=வசை என ஆக்கம் பெற்றதாகும். செய்-செய்வு என்றும் வை+செய்வு=வசவு என்றும் திரியும். வசை ஒருவரைக் குறை கூறி இகழ்தலால் - குற்றம் என்னும் பொருளில் வருகின்றது.

வஞ்சம் : ஒருவர் அறிவை மயக்கித் தன் கருத்திற்கு ஏற்ப மாற்றுதலும், தான் விரும்பிய செயலைச் செய்து கொள்ளுதலும் வஞ்சித்தல் எனப்படும். வஞ்சி(த்தல்) ஒன்றை புகழ்ந்தோ, பொருள் முதலியன கொடுத்தோ தன்வயப்படுத்தல் வயஞ்செய்தல். அது யதரம் கெட்டு வயஞ்செய் = வஞ்சி எனத் திரிந்து ஆக்கம் பெற்றதாகும். வஞ்ச நினைவு என்பது வஞ்சனை என மருவும். வஞ்சகம் - கானம் கானகம் எனக் ககரம் இடையே பெறுதல் போல் வஞ்சகம் என்று வரும் அகத்தே வஞ்சத்தையுடையது என்பது விரிபொருள். இனிப் பெண்மகளைக் குறிக்கும் வஞ்சி என்னும் சொல்வேது நொசிவும் (வளைதல்) உடைமையால் பெண்மகள் வஞ்சி எனப்பட்டாள். குறமகள் - குறவஞ்சி எனப்படுவாள். பிரம்புக்கு வஞ்சி என்னும் பெயர் வளைந்தொசியும் புல் என்னும் காரணத்தான் அமைந்ததாகும். வணர்தல் வளைதல் வணர்தலின் முதனிலை வண் - அது செயல் என்பதன் முதனிலையாகிய செய் என்பதனொடு வண்+செய் என அமைந்து வஞ்சி எனத்திரிந்து ஆக்கம் பெற்றது. வணர்குழல்=நெளிந்த கூந்தல்.

வண்டவாளம் : நிலைமை தன்மை தகுதி என்னும் பொருளில் வரும். இவன் வண்டவாளம் தெரியாதா பஞ்சாயத்துப் பேச வந்துவிட்டான் என்றாற்போல வரும். இது தெலுங்குச்சொல், கன்னடச் சொல்லுமாம்.

வம்பு : பல பொருளொரு சொல். இதற்குப் புதுமை, நிலையின்மை, இகல் எனப்பல பொருள் உண்டு. வம்பப் பரத்தை என்னுமிடத்து புதியபரத்தை என்பது பொருள். இதற்குரிய வம்பு என்பது வரும்+புதுமை என்னும் இருசொற் புணர்ச்சியின் மரூஉ வாகும். வரும் வம் + புதுமை--வம்+பு= வம்பு. வம்புநிலையின்மை என்பது தொல்காப்பிய உரியியல் நூற்பா - புதுமை நிலைத் திருப்பதன்மையான் நிலையின்மைப் பொருளில் அமைந்தது வம்பமாரி எனவரும். இகல் மாறுபாடு எனப்பொருள் தருமிடத்து வன்+பு-வன். வலிமை வலிந்து சண்டைக்கு முந்தலின் இகல் வம்பு எனப்பட்டது. இவன் எதைத் தொட்டாலும் வம்பு பண்றான் என்பது வழக்கு. உலக வழக்கில் தும்பு என்பதனொடு கூடி அவன் எந்த வம்புதும்பும் செய்யமாட்டான் என வரும்.

இதன் கண் தும்பு என்பது துன்பு என்பதன் திரிபாகும். வம்பளக்கிறான் என்பதற்கு (அளத்தல் = பேசுதல்) வம்பாகப் பேசுகிறான் என்பது பொருள். வம்பிழுக்கிறான் என்றால் சண்டைக்கு அழைக்கிறான் என்பது பொருள்.

வலித்தல் : வலி என்னும் சொல் பெயர்ப்பொருளில் வன்மை-பலம் என்ற பொருள் தரும். ஊழிற்பெருவலியாவுள் மாவலி (வலம், வலி என்பன வடமொழியாம் பொழுது பலி - பலம் எனத் திரியும்) எனவரும். நோவு என்னும் பொருளில் தலைவலி, கால்வலி எனவரும். வினைப்பொருளில் இழுத்தல் என்று பொருள்தரும். படகு வலிக்கிறான் (நீரைத் தன் பக்கம் இழுத்தலால் படகு முன் பக்கம் செல்லும்) எனவும், கிணற்றில் நீர்வலிக்கிறான் எனவும் வரும். என்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான் என்பது திருவாசகம் பெயருக்கு வல்பகுதி வினைக்குவலபகுதி. வலத்தல் செய்தலால் நூற் பின்னல் வலை எனப்பட்டது. வலத்தாற் பெறுவது வலம். வலம் = வெற்றி. வலம் பொருந்திய பக்கம் வலப்பக்கம். அதற்குத் துணையாக ஈடாக இருப்பது இடப்பக்கம். வலது சாரி, இடதுசாரி என்பவை இப்பொருளில் அமைந்தனவாகும். வலத்தால் கைப் பற்றிய ஊர் வல்லம் எனப்படும்.

வலை : நூல் அல்லது கயிற்றை வலித்து வன்மை பெறப் பின்னுவதால் மீன் பிடிக்கும் கருவி வலை எனப்பட்டது. அதுபோன்ற அமைப்புடைமை யான் சிலந்திக்கூடு சிலந்திவலை எனப்பட்டது. தன்பக்கம் பொருளை இழுப்பதற்குரிய கருவியாதலின் திருடனை வலைவீசிப்பிடித்தனர் என்றும என்னை அவன் கட்சிக்கு இழுக்க வலை வீசுகிறான் என்பது போல வரும்.

வாகை : வெற்றி என்னும் பொருள்தரும் இலக்கணக் குறியீட்டுச் சொல். வெற்றியைக் காட்டும் அடையாளமாக வாகை மரப்பூவைச் சூடுதல் மரபு. இதன் செஞ்சொல் வாய்கை. (வாய்க்கப்பெறுதல்) வெற்றி வாய்த்தல் என்பதுபொருள். கை தொழிற்பெயர் விகுதி. இனி பண்டைக்காலப் போர் ஒருவரோடு ஒருவர் கைகளால் மொத்தியும் இடித்தும் புரிவதாகலின் கையின் வெற்றி என்பதும் பொருளாகும். வாகு (பாகு) என்பதற்குக் கை என்பது பொருள். உடம்பின் இருபுறமாக வகைப்பட்டு நிற்றலின் கைக்கு வாகு என்பது பெயர். இது வடமொழியில் பாகு (ஆஜானுபாகு) எனத்திரிந்தது.

வாச்சாப்பு : வாய்ச்சாபம் என்பது பொருள். சாபம் சாப்பு எனத் திரிந்தது. சாய்ப்பு-சாவம்-சாபம் - சாவச்சொல்லுதல் சாவம்.

வாசி : வெவ்வேறு அடிப்படையில் வேறு வேறு பொருளில் வழங்கும் ஒரு சொல். இதற்கு மூச்சுக்காற்று, வேறுபாடு, குற்றம் உறையுமிடம் என்பவை பொருளாகும்.

(1) மூச்சுக்காற்று ஸ்வாஸ். மூச்சொலிக்குறிப்பு உயிர்ப்புக் காற்று உள்ளே இழுத்துப்பின் வெளிவிடுவதாகலின் (ஸ்வாஸம்) சுவாசம் என்பது

பெயர். மூச்சுக் குழாயில் ஒரு பக்கம் இழுத்து மறுபக்கம் விட்டுவிடாமல் நிறுத்திச்செய்யும் மூச்சுப் பயிற்சியை வாசிப்பழக்கம் என்பர். ஸ் என்றால் வெளிவிடுவது வஸ் என்றால் உள்ளிழுப்பது . சுவாசம் இச்சொல் முதல் குறைந்து இகர விகுதி பெற்று வாசி என அமைந்தது.

(2) வேறுபாடு தெலுங்குச்சொல் முச்சை ஒரு பக்கம் இழுத்து மறுபக்கம் விடுவது. வேறுபடுத்துவது ஆகலின் வேறுபாடு என்னும் பொருள் அமைந்தது. திருவாய்மொழி ஈட்டுரையில் இப்பொருளில் வருவதைக் காணலாம்.

(3) குற்றம் என்னும் பொருளில் வருமிடத்து இச்சொல் வசை என்பதன் திரிபாகும். வாசிதீரவே காசு நல்குவீர் என்பது தேவாரப் பாடல்.

(4) வாழுமிடம் உறைவிடம் என்னும் பொருளில் வருமிடத்து இச்சொல் வாழ்ச்சி என்பதன் மரூவாகும். வாழ்ச்சி வாழ்சி - வாசி எனவரும். வாசி முதல் குறைந்து வசித்தல் என்பதன் முதல் நிலை வினையாகவரும். வசிக்குமிடம் உறையுமிடம் தங்கியிருக்கும் இடம் என்பது பொருள். நூலைப்படித்தலை வாசித்தல் என்ப. இது வாய் செய் என்பவற்றின் மரூஉவாகும். வாய் செய் வாய்சி, வாசி எனவரும். வசனித்தல் என்பதனடியாகப் பிறந்ததெனின் வசனம் வாசகம் என்னும் வடசொற்களும் வாயின செயல் என்பதனடியாகப் பிறந்தவையேயாம்.

வாட்டசாட்டம் : உங்கதலைவர் நல்ல வாட்டசாட்டமானவர். மாப்பிள்ளை நல்லாவாட்ட சாட்டமாக இருக்கார் என்றாற் போல வருவன வழக்கு. இத்தொடரின் அடிப்படை வடிவம் வட்டம் சட்டம். வட்டம் என்பது முழு வடிவத்தையும் சட்டம் என்பது உறுப்புக்களின் ஒழுங்கையும் குறிக்கும். வட்டம் என்பது வடிவு+அம்=வடிவம் என்பதன் திரிபாகி வாட்டம் என நின்றது. எது கை நோக்கிச் சட்டம் என்பதும் சாட்டம் என நீண்டது. இதற்கு இணையாக வழங்கும் தொடர் அங்கபங்கம். ஆள் ரொம்ப அங்க பங்கமா இருக்கிறான் என்பது வழக்கு. பங்கம் பங்கு என்பது அம்பெற்றுப் பங்கம் என நின்றது. பங்கு=கூறு அங்கம் உறுப்பு கூறுபட அமைந்த உறுப்புகளையுடைய ஆள் என்பது பொருள். அங்கம் என்பதற்கு ஏற்பப் பங்கு பங்கம் எனத் திரிந்தது.

வாட்டி : தரம். முறை. தடவை என்னும் பொருள் தரும் உருதுச்சொல்.

வாய்த்துடுக்கு : பிறர்நோகுமாறு பேசுபவரை அவருக்கு ரொம்ப வாய்த்துடுக்கு என்பது வழக்கு. இதன் செம்மையான வடிவம் வாய்த்துடிப்பு. துடிப்பு துடிக்கு - துடுக்கு எனத்திரிந்தமைந்தாகும்.

வாய்நீளம் : பிறர் நோகுமாறு வசை பேசுபவரை அவருக்கு ரொம்பவும் வாய்நீளம் என்பது வழக்கு. வாய் ஆகு பெயர். அது சொற்களை உணர்த்தி நின்றது. நீளம் - அளவினின்றும் மிகையானது என்பது பொருள். (கைந்நீளம் காண்க)

வார் : (1) வருதல் என்னும் முதனிலையாகிய வரு என்பதன் நீட்டம். நீர்வார் கண்ணேம் என வரும். (2) வளர் என்னும் நிரையசை நீண்டு வார் என வரும். "வார்நெடுங்கூந்தல்" எனவரும். (3) வரிதல் (கட்டுதல்) என்பது இகரங்குன்றி வார் எனவரும். "வார்கழல்" எனவரும். வார் என்பது பிறவினையாக வருமிடத்து பெய்தல் என்னும் பொருளில் வரும் கன்றுக்கு நீர் வார்த்தான் எனவரும். வார் என்பது வினைமுதல் விகுதியாக இகரத்தைப் பெறுமிடத்து வருதலைச் செய்வது என்னும் பொருளில் வரும். "வாரிபெருக்கிவளம் படுத்து" எனவரும். கூட்டத்திற்குப் பெருவாரியாக மக்கள் வந்தனர் எனவரும். வளர் என்பது வார் என நீண்டு லகரமாய் விலங்குகளின் பின் தொங்கும் உறுப்பை உணர்த்தும் நரிவால். நாய் வால் எனவரும்.

வார்த்தை : (வடசொல்?) வாய் + ஆர்த்தல் - வார்த்தை எனவரும். தமிழ் திரிசொல். வாயால் வார்க்கப்படுவது எனினுமாம்.

வாளாவிருத்தல் : வாயினின்றும் ஒலியெழுப்பாமல் (பேசாமல்) இருத்தல் என்னும் பொருள்படவரும் இலக்கியச்சொல். வாள் என்னும் இசை உரிச்சொற்குச் சொல்லுதல் என்பது பொருள். நீ ஏன் வாள் வாள் என்று கத்துகிறாய் என்பது வழக்கு. நாய்வாள் வாள் என்பறு குரைக்கிறது என்பது வழக்கு. இத்தொடரின் அமைப்பு வாள்+ஆ+இருத்தல். வாள் = பேசுதல் ஆ எதிர்மறை இருத்தல் = அமைதல். இச்சொல் எதிர்மறையாகவன்றி உடன்பாட்டில் வருவதில்லை. இது உரிச்சொல் ஆதலின் என்க.

வாளி : (1) நீர் முதலிய பொருள்களை நிரப்பும் மேல் கைப்பிடியை உடைய வாய் விரிந்த பாத்திரம். குவளைபோலவும் அமைந்திருக்கும். வள்ளம் உட்குழிவுடைய பாத்திரம். நீர் முக்கும் பாத்திரம். வள் என்பது வாள் என நீண்டு இகர விகுதி பெற்று வாளி என அமைந்தது. (2) வாள் போன்ற கூர்மையுடையமரம். செதுக்குங்கருவியும் வாளி எனப்படும்.

விசை : இயந்திரங்களை இயங்கச்செய்யும் கருவிக்கு விசை என்று பெயர். விசுத்தல் மேல எழுதல். மேலெழுந்து நிற்றலால் வானத்திற்கு விசும்பு என்பது ஒரு பெயர். ஒன்றை விரைவாகச் செல்லச் செலுத்தும் கருவி விசை எனப்பட்டது. நாட்டுப்புற வழக்கில் சினம் என்பதைக் குறித்து வழங்கும் உள்ளத்தைக் கொதித்து எழச்செய்தலால் சினத்திற்கு விசை என்பது பெயராயிற்று.

விடலை : காளைப்பருவத்து ஆடவரையும் குமரிப்பருவத்துப் பெண்டிரையும் குறித்து வழங்கும் சொல். இப்பருவம் காம வேட்கைக்குரியதாகலின் இன்பத்தை விரும்பி மனம் அலையும் பருவம் என்னும் பொருளில் வேட்டு+அலை= என்பவை வேட்டலை, விடலை என ஆக்கம் பெற்றது.

விடியாமூஞ்சி : ஈதொரு வசவுச் சொற்றொடர். விடிதல் என்பது இருள் நீங்கிய ஒளி புலர்தலைக் குறிக்கும். சொல் விடியாநிலை இருள்நிலை, ஒளி குன்றிய நிலை. களையிழந்தமுகம், அமங்கலநிலையினது ஆதலின் ஒருகாரியம் அமங்கலமாக முடியுமிடத்து அக்காரியத்தை மேற்கொண்டவரை விடியா மூஞ்சி எனல் வழக்காகும். அவளா அவதொட்டது விடியாதே என்பதும் இவ்வழக்கினதேயாம்.

விண்ணப்பம் : தனக்கு மேலிருப்பவரிடத்து ஒன்றை வேண்டிக்கொள்ளும் முறையீடு விண்ணப்பம் எனப்படும். இச்சொல் விண்+நயப்பு+அம் என்பவற்றின் புணர்மொழித் திரிபாகும். விண்=மேலிடம். மேல் கீழ் என்பவை ஆகுபெயராய் மேலவரையும் கீழவரையும் குறிக்கும். நயப்பு = விருப்பம். வேட்கை,வேண்டல். அம் சொல்லாக்க விகுதி. விண்நயப்பட என்பது விண்ணப்பம் என மருவி ஆக்கம் பெற்றதாகும்.

விதம் : வகை கூறுபாடு என்னும் பொருளில் வழங்கும் சொல். உலகம் பலவிதம் அங்கே விதவிதமான பொருள்கள் கிடைக்கும். எவ்விதத்திலும் இதற்கு மாற்றமில்லை என்றாற்போல வழங்கும். இது விகிர்தம் என்னும் வடசொல்லின் திரிபாக ஆக்கம் பெற்ற வழக்குச்சொல். விகிர்தம் -- விகிதம் -- விதம் என அமைந்தது. இச்சொல் வீதம் என நீண்டு கூறு என்னும் பொருளில் வரும். பத்து சதவீதம் தள்ளுபடி உண்டு.

விபூதி : சைவ சமயச் சின்னமாகிய திருநீற்றைக் குறித்து வழங்கும் சொல். இது வி + பூழ்தி என்பவற்றின் புணர்மொழி. வி = மேன்மை, சிறப்பு என்னும் பொருள்தரும் முன்னொட்டு இடைச்சொல். மேலான நாயகன் விநாயகன் பூழ்தி என்பது புழுதி என்பதன் நீட்டமாகும். பொழுது - போழ்து என்பது போல் புழுதி என்பது வெப்பத்தால் புழுங்ககப்பட்டதுகளைக் குறிக்கும். (கோமயம்) சாணத்தைப் புழுக்கியநீறு பூழ்தி அது ழகரம் கெட்டு போழ்து - போது என வருதல் போலப் பூதி என நின்றது வி+பூதி = விபூதி என அமைந்தது இறையருட் செல்வம் என்னும் பொருள்தரும். விபூதி என்னும் வடசொல் வேறு இத்தமிழ்ச்சொல் வேறு.

விரட்டு : விரைவுபடச் செலுத்தலை விரட்டுதல் என்பர். மாட்டை விரட்டினான் அவன் அவனை ஓட ஓட விரட்டுகிறான் என்றாற்போல வரும். இச்சொல்லின் செம்மை வடிவம் விரைவு + ஊட்டு என்பனவாகும். விரைவூட்டு =

(விரைவாகச்செலுத்து) என்பது விரட்டு என மருவியது. இலை - எலை என வருதல் போல் விரட்டு – வெரட்டு என வழங்கும்.

வில் – விலை : ஒருவர் தரும் பொருளுக்கு ஈடாக வணிகர் ஒரு பொருளைக் கொடுப்பது விற்றல் எனப்படுகிறது. கொடுத்தல் என்பதற்கு இணையான பொருளையுடையது விற்றல். கொடு என்பதற்கு வளைவு என்பது பொருள். கொடுங்கோல் - வளைந்தகோல். ஒருவர் ஏந்த கொடுப்பவர் தன்கையை வளைத்து வழங்குதல் கொடுத்தல். வழங்கும்போது கைவளையும். அதுபோலக் கையை வளைத்தலின் வில் எனப்பட்டது. வில் என்பது வளைந்த போர்க்கருவி. வில்லை=வட்டமாக வளைத்துச் செய்யப்படுவது இது உவம அடிப்படையில் அமைந்த சொல். விற்றற்குரிய மதிப்பு விலை. வில்+தல்=விற்றல் - கொடைக்கு. வள்ளன்மை என்பது ஒரு பெயர். வள் = வளைவு.

வில்லாதி வில்லன் : ஒரு செயலைத் திறமையாகவும் பிறர் வியக்குமாறும் புரிபவனைச் சுட்டி வரும் உலக வழக்குத்தொடர். இது உவம அடிப்படையில் வில்லர்களுள் தலைவன் என்ற வகையில் அமைந்தது - வில்லுக்கு அருச்சுனன் என்பது பழமொழி. அவன் வில் வித்தையாளர்களுக்கெல்லாம் தலைவன் என்பது வழக்கு.

விழுக்காடு : தள்ளப்படுதல் என்னும் பொருளுடைய இச்சொல் தள்ளுபடி என வழக்கில் அமைந்ததாகும். ஒரு பொருளின் மதிப்பை நூறு என்ற அளவில் நிறுத்திப் பயனற்றவை நீங்க எஞ்சிய எண்ணிக்கை குறித்து வருமிடத்து இந்தச் சிப்பிகளுள் பத்துவிழுக்காடு முத்துச்சிப்பிகள் இருக்கும் எனவும், நூற்று மதிப்பில் கழித்துக் கொள்ளுங்கூறுகளும் விழுக்காடு எனப்படும். இந்தக்கடையில் உள்ள விற்பனைப் பொருளின் விலையில் பத்து விழுக்காடு தள்ளுபடி செய்து தரப்படும் எனவும் வரும்.

வீம்பு : கர்வம், பிடிவாதம் என்னும் பொருளில் வழங்கும் இச்சொல். கரும்புல் என்பது ஈறுகெட்டுக் கரும்பு என அமைந்தமை போல வீண்புரை என்பவை திரிந்து ஈறுகெட்டு வீம்பு என அமைந்தது. வீண் = பயனின்மை - புரை = உயர்வு வீண்புரை - வீம்புரை - வீம்பு என்றமைந்தது.

வெக்கை : வெப்பம், சூடு என்னும் பொருளில் வழங்குஞ்சொல் வேகை என்பதன் திரிபு வேதல் = சூடாதல். வே பகுதி அது வெக்கை எனத்திரிந்தது. வெம்புகை என்பதன் மரூஉ எனினும் ஒக்கும்.

வெங்கன் : பழுக்காமல் வெப்பத்தால் வாடிய காய்க்கு வெம்பல் என்பது பெயர். வளத்தால் முற்றாமல் வளமுடையவனை போலத் தெரிபவனைச் சுட்டும் வகைச்சொல்.

வெஞ்சனம் : உணவுக்குத் துணையாய தொடுகறியைக் குறித்து வழங்கும் சொல். இது வியஞ்சனா என்னும் வடசொல்லின் திரிபாகும்.

வெட்ட வெளி : உள்ளிடம் என்பதற்குரிய எதிர்மறைச்சொல் வெளியிடம் வெளியிடம் மரஞ்செடிகள் கட்டிடங்கள் பிறபிற பொருள் அமைந்ததாகவும் யாது மற்றதாகவும் இருக்கலாம். யாதும் மின்றி பாலைவனம் போல் வெறுமையாக இருக்குமிடம். வெட்டவெளி எனப்படும். இதன் செம்மையான வடிவம் வெற்று வெளி என்பதாகும். வெறுமை = யாதுமின்மை.

வெட்ட வெளிச்சம் : மறைக்கப்பட்டிருந்த ஒன்று எல்லோரும் காணுமளவில் வெளிபட்ட நிலையை உணர்த்தும் ஒரு வழக்கு. இது வரையார் திருடன் என்பது தெரியாதிருந்தது. தலைவர் வந்து பேசியபின் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது என்பது வழக்கு. இது விட்ட வெளிச்சம் என்பதன் சிதைவு. மறைக்கப்பட்டிருந்த விளக்கொளி மறைப்பு நீங்கியபின் மறைப்பு விடுபட்ட பின் விளங்கித் தோன்றுதல் போலப் புலப்பாடாகும். அந்நிலை மறைப்பை நீக்கிவிட்ட வெளிச்சம். விட்ட வெளிச்சம் – வெட்ட வெளிச்சம் எனத் திரிந்தது.

வெட்டு(தல்) : ஒரு பொருளை இரண்டாகப் பிளத்தல், துணித்தல், வெட்டுதல் எனப்படும். மரத்தின் கிளையை வெட்டினான் என்றாற் போலவரும். இதன் செஞ்சொல் விட்டுதல் விள்+து = விட்டு விள்ளுதல் இரண்டாக்குதல் – மற்று விட்டுதல் என்பது விடுத்தல் நீக்குதல் என்னும் பொருளையும் தந்து கவர் பொருள்படுதலின் முனையை மொகனை எனத் திரித்தாங்கு விட்டு என்பது வெட்டு எனத் திரிக்கப்பட்டது.

வெள்ளிடை மலை : உவமமாக நின்று கருத்துணர்த்தும் ஒரு வழக்குத்தொடர். சான்று முதலிய வைகாட்டி விளக்க வேண்டிய நிலைகளின்றிப் பொருளைக் கண்டு கொள்ளும் படியமைந்த உரை வெள்ளிடைமலை எனப்படும். மரஞ்செடி கொடியமைந்த காடுகளுக்கு இடையே அமைந்தமலை. சேய்மையில் உள்ளாருக்குத் தெளிவாகப் புலப்படாது வெற்றுவெளியில் அமைந்திருக்கும் சிறு குன்றும் தெளிவாய் புலப்படும். ஆதலின் தெளிவாகப் புலப்படும் பொருள் வெள்ளிடைமலை எனப்பட்டது. வெளியிடமலை என்பது வெள்ளிடைமலை என ஆக்கம் பெற்றது.

வெற்றிலை : பாக்கு சுண்ணம் முதலியவற்றொடும் தனித்தும் மென்று தின்னப்படும் கொடியில் விளையும் இலை. உறைப்புச் சுவையுடையது. நீர்க்கோவை முதலிய பிணிகளை அகற்றுவது சித்த மருந்துகளுக்கு அனுபானமாகச் சேர்க்கப்படுவது. மங்கலம் அமங்கலம் எல்லா நிகழ்ச்சிகளிலும் வழங்கப்படும் இலை. மனக்கிளர்ச்சியையும், செயலூக்கத்தையும் தந்து வெளிக்கொணரச் செய்யும் குணமுடையது. வெறி = ஊக்கமிகுதி. வெறிதரும் இலை வெற்றிலை என அமைந்தது.

ஊக்கமிகுதியே வெற்றியாதலின், வெற்றிலை என்றே ஆக்கம் செய்யப்பட்டது. இவ்இலைவிளையும் கொடி பூத்துக்காய்த்தலின்றி இலையாக மட்டுமே விளையும். ஆதலின் வெறுமை இலை வெற்றிலை ஆயிற்று என்பர் சிலர். அது பிழை வெற்றிலைக் கொடி பூக்கும், சிறிய பிஞ்சுகள் விட்டுக் காய்க்கும்.

வேசறவு : ஏசினும் யானுன்னை ஏத்தினும் என்பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதி கண்டாய் (திருவாசகம் - 6.50) என்பது திருவாசகத்தில் வரும் தொடர். 39ஆம் பதிகத்தின் பெயர் திருவேசறவு என அமைந்துள்ளது. வேசறுதல் என்பதற்குப் பாசமாகிய உலகப்பற்றறுதல் என்பது பொருள். வேசு வடசொல். வேசு என்பதற்கு பற்றுதல், உற்றிருத்தல், கலந்திருத்தல், புகுதல் என்பன பொருளாகும். அறுதல் = நீங்குதல். வேசு என்பது வேசித்தல் என வினை நிலை எய்தும். இது ஆ பிர என்னும் முன்னொட்டுடன் கூடி ஆவேசித்தல் ஆ = உயிர் -உயிரினங்களில் கலந்து நிற்றல் என்பது பொருள். பிரவேசித்தல் ஒன்றின் அகத்தே சிறப்பாக நுழைதல் என்பது பொருள். உடம்போடு உணர்வையும் பற்றித்தன் வயப்படுத்திக் கொள்ளுதலான் பரத்தைக்கு வேசி என்பதொரு பெயர். மற்று இதனை ஏசுறவு எனப் பிரித்துக் கொள்ளின் பொருள் வேறுபடும். திருவாசக ஆசிரியர் ஏசுறவு எனக் கொண்டிருப்பின் என்பிழைக்கே குழைந்து ஏசறுவேனை என்பது புணரியல் இலக்கணப்பிழையாகும். குழைந்தேசறுவேனை எனப் புணர்தல் வேண்டும். எனவே வேசறவு என்பதே செஞ்சொல் என்பது புலப்படும். இனித் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்துள் ஆலவாய்த் திருப்பதிகத்துள்.

"என்பொனே ஈசாவென்றேன் றேத்தி நான் ஏசற்றென்றும் "(பா-2) எனவும் எஞ்சலில் புகலி தென்றென் றேத்திநான் ஏசற்றென்றும் (பா-6) எனவும் வருதற்கு குற்றமற்று வசவற்று என்பது பொருள். ஏசு = ஏசுதல் பிறராற் குறை கூறப்பெறுதல் என்பதாகும். இனிவே சறுதல் என்பதற்கு துயர் நீங்குதல் சோர்வு நீங்குதல் என்பதும் பொருள். இதற்குரிய வேசு என்பது வேதல் என்னும் சொல்லின் பகுதியாகிய வே என்பதனடியாகப் பிறந்ததாகும். வேதல் + அறுதல் = வேசறல் (வேசாறல் காண்க)

வேசாறல் : வேசு+ஆறல்=வே=வெப்பம் புழுக்கம். வேதலைச் செய்வது வேசு ஆறல் = குளிர்தல் குறைந்து இல்லையாதல் வழக்கில் இச்சொல் பேசாறு எனத்திரியும். ஊருக்குப் போய் வந்ததில் பெரும் பேசாறாப் போச்சு. இப்பொழுது என்னால் ஒன்றும் செய்ய இயலாது ஒரே பேசாறாயிருக்கு என்பன வழக்கு. இதற்குக் களைப்பு, சோர்வு என்பது பொருள். வே சாறல் என்பது வழக்கு. பேஜார் என்னும் உருதுச்சொல் வேறு இது வேறு.

வேட்டை : வேடு (வேடர்) என்பதனடியாகப் பிறந்த சொல். உயிரினங்களின் உடம்புகளினின்று உயிரை நீக்கல் என்னும் பொருளில் அமைந்தது. நீக்குதல் விடச்செய்தல். இது வீட்டல் என்று ஆக்கம் பெறும். வீட்டல் என்பதன்

பெயராக்கம் வேடு (விடு--வேடு) ஆக்கம் பெற்றது. அது அன், அர் என்னும் விகுதி பெற்று வேடன் என்றும் இரட்டித்து வேட்டுவன் என்றும் வரும். வேட்டுவன் புரியும் தொழில் வேட்டை.

வேய்தல் : வீடு முதலியவற்றின் மேல் ஓடு, ஓலைக்கீற்று, நாணற்புல் முதலியவற்றைப் பரப்புதல். இது அகலம் (அகலப்படுத்தல்) என்னும் பொருளுடையவியல் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்ததாகும். வியல் செய்தல் வேய்தல் என ஆக்கம் பெற்றது. வியல் என்பது அகன்றபாப்பை உணர்த்தும். கடலுக்குப் பெயராகுமிடத்து வியல் - வேல் என நீண்டு ஐகாரம் பெற்று வேலை எனவரும்.

வேர் : மூலம், அடி என்னும் பொருள் தரும். சொல் மரம் செடிகளின் அடி. இது நிலம், நீர் இவற்றின் உட்பகுதியில் அமைந்திருக்கும். ஆழ்ந்து பரந்து கிளையிட்டு விரிதல் - வேர். விரி என்னும் வினைபெயர்ப் பொருட்டாய் வேர் என ஆக்கம் பெற்றது.

வேலி : (1) விளைபயிர், வீடு முதலியவற்றிற்கு அரணாகவும், காப்பாகவும் கோலிக் கட்டப்படும் தடுப்பு. மூங்கில்கள் வேலமுள், முதலியவற்றால் கட்டப்பெறும் உலோக கால மக்கள் மாப்பொந்துகளிலும், குகைகளிலும், சிறுகுடிசைகளிலும் வாழ்ந்தகாலத்தில் வாயிற்பகுதிகளில் சிறு விலங்குகள் உட்புகுந்துவிடாமல் தடுப்பதற்கு அமைக்கும் காப்பு. அக்கால மக்கள் கூர்மையான மூங்கில் கம்புகளையே வேட்டையாடுதற்கும் பகைவரொடு போரிடற்கும் கருவியாகக் கொண்டிருந்தமையால் பகையை வெல்லுதற்குரிய கருவி வேல் (வெல்--வேல்) எனப்பட்டது. அம் மூங்கில் வேல்களையே நெருக்கமாக நட்டு அரண்செய்து கொண்டமையால் அத்தடுப்பு வேலி எனப்பட்டது. வேல்களால் அமைக்கப்பட்டது வேலி. (2) நில அளவைக்கு அமைந்த வேலி என்பது வியல் என்பதன் நோசை நீட்டமாகிய வேல் என்பது இகரவிகுதி பெற்று வேலி என அமைந்ததாகும். வியல்+இ=வேல்+இ=வேலி. 20மா. 1 வேலி வியல் = பரப்பு — நிலப்பரப்பு வியல் = அகலம்.

வேலைவெட்டி : பையன் ஏதாவது வேலைவெட்டி செய்கிறானா? ஒரு வேலையுமில்லை வெட்டியுமில்லை சும்மா திரியிறான் என்பது வழக்கு. இதன்கண் வேலை என்பது அரசு அலுவலையும், வெட்டி என்பது பயிர்த்தொழிலையும் குறிக்கும். மிகப்பழங்காலத்து ஆடவர் சிலர் மன்னருக்குப் போர்த்துணையாக படைப்பயிற்சி பெற்று அமர்ந்து ஊதியம் பெறுவர். பலர் நன்செய் புன்செய் நிலங்களைப் பண்படுத்திப் பயிர்த்தொழில் செய்வர். முன்னதற்கு வேலை என்றும், பின்னதற்கு வெட்டி என்றும் பொதுவாகப் பெயர் அமைந்தன. வேல் முதலிய படைகளைக் கொண்டு புரியும் பணி வேலை. மண்வெட்டி கலப்பை முதலியவற்றைக் கொண்டு புரியும் வினை. நிலத்தைக் கொத்தி வெட்டிப் பண்படுத்தலின் பயிர்த்தொழில் வெட்டி எனப்பட்டது.

வேவு பார்த்தல் : உளவு பார்த்தல், துப்பறிதல், ஒற்றாய்தல் என்னும் பொருளிலும் வழங்கும் தொடர். இது பழஞ்சொல், இலக்கியச்சொல். ஒற்றாய்தலுக்குரிய பெயர் வேய் வெட்சித் திணைத்துறைகளுள் ஒன்று. பகைப்புலத்தாரின் ஆனிரைகள் எங்கெங்கு பாதுகாக்கப்பட்டுள்ளது என்று ஆராய்தல் வேய். இது தொழிற் பெயர்விகுதி உகரம் பெற்று வேய்வு என அமைந்து உலக வழக்கில் வேவு எனத்திரிந்தது வேய்வு - வேவு இடைக்குறை.

வைதல் : ஏசுதல் என்னும் பொருள்தரும். சொல் 'வை' என்னும் உரிச்சொற்குக் கூர்மை என்பது பொருள். கூரிய சொற்களால் வருந்தச் செய்தல் என்னும் கருத்தில் வை. ஏசலை உணர்த்தி நின்று வை (=கூர்மை) ஆகுபெயரால் கூரிய சொற்களை உணர்த்தி நின்றது.

வையகம் : நிலவுலகத்தின் பெயர்களுள் ஒன்று இயங்குதிணை நிலைத்திணை (சரம் + அசரம் = சராசரம்) ஆகிய பொருள்களைத் தன்னிடத்தே கொண்டிருத்தலால் வை + அகம் = வையகம் எனப்பட்டது. வைத்தல் = வைத்திருப்பது. இது ககரம் தொக்கு வையம் எனவும் வழங்கும்.

அயல்மொழிச் சொற்கள்

அக்கரை (அக்கறை) : கவனம், ஆர்வம் என்னும் பொருள்களில் வழங்கிவரும் இச்சொல் கன்னட மொழிச் சொல்லாகும. இதனை அக்கறை என்றும் எழுதுவர். அவருக்கு இதில் அக்கரையில்லை - அவன் ரொம்ப அக்கரையோடு பாடம் படிக்கிறான்.

அக்கு : உரிமை, கேளிர் என்னும் பொருளில் வழங்கும். இச்சொல் ஹக்யூ என்னும் உருதுச் சொல்லின் திரிபாகும். அவனுக்கு ஒன்றும் அக்கு தொக்கில்லை அவன் எப்படி வேண்டுமானாலும் திரியலாம் என்றாற் போல வரும். இது சொந்தபந்தமில்லி என்னும் கருத்திலும் வரும். இது வக்கு எனத் திரிந்தும் வரும். அவன்கிடக்கிறான் வக்கத்த பயல் என்றாற் போல வரும்.

அக்குசு : பொறுப்பு, ஈடுபாடு, அக்கரை என்னும் பொருளில் வழங்கும் சொல். இது உருதுச்சொல்லின் திரிபாகும். இதைச் செய்யனும் என்று எனக்கொன்றும் அக்குசு இல்லை - ரொம்ப வந்து விசாரிக்கிறான் என்றாற் போல வரும்.

அசல் : மூலமானது சிறப்பானது உண்மையானது என்னும் பொருளில் வழங்கப்படும். இச்சொல் அரபுமொழிச் சொல்லாகும். இது அசல், இது நகல் எனவும் அதைவிடஇது அசலாகவுள்ளது - இதற்கான அசல் விலை என்ன என்றாற் போலவரும்.

அத்தர் : பூக்களைக் கொண்டு செய்யப்படும் மணப்பொருள். இது உருதுமொழிச் சொல்லாகும். இதனைப் பூச்சாறை எனத் தமிழிற் கூறலாம்.

அத்து : எல்லை, வரம்பு, மதிப்பு என்னும் பொருளில் வழங்கும் சொல். இது அரபுமொழிச் சொல்லாகும். அத்துகெட்டு அலைகிறான். அத்துமீறிப் பேசுகிறான் என்றாற் போலவரும்.

அந்தஸ்து : தகுதி - நிலைப்பாடு என்னும் பொருளில் வழங்கும். இது பாரசீக மொழிச் சொல்லாகும். அவரவர் அந்தஸ்திற்கு ஏற்ப நன்கொடை வழங்கினர். அவர் அந்தஸ்த்தைப் பார்த்து நடந்துகொள் என்றாற் போலவரும்.

அப்பட்டம் : கலப்பில்லாதது, வெளிப்படையானது என்னும் பொருள்படவரும். இது தெலுங்குமொழிச் சொல்லாகும். அவன் கூறுவது அப்பட்டமான பொய் என்றாற் போலவரும்.

அபாண்டம்: வீண்பழி, பெரும்பழி என்னும் பொருளில் வழங்கும். இச்சொல் மராத்தி மொழிச் சொல்லாகும். அவன்மேல் இப்படி அபாண்டமாகக் குற்றஞ்சொல்வது தகாது என்றாற் போலவரும்.

அம்பாரம் : குவியல், குவிப்பு என்னும் பொருளில் வழங்கும். இச்சொல் பாரசீக மொழிச் சொல்லாகும். களத்தில் நெல் அம்பாரம் அம்பாரமாகக் கொட்டிக்கிடக்கிறது என்றாற் போல வரும்.

அம்பாரி : யானை, குதிரை, ஒட்டகம் இவற்றின் மேல் அலங்காரமாக அமைக்கப்படும். இருக்கையைக் குறித்துவரும் உருதுமொழிச் சொல்லாகும். மன்னர் யானை மேல் அம்பாரியில் ஊர்கோலம் வருகிறார் என்றாற் போலவரும். இதனைத் தமிழில் மீயிருக்கை, உயரிருக்கை என்று கூறலாம்.

அமுல் : நடைமுறைப்படல், செயற்படல் என்னும் பொருளில் வரும். இச்சொல் அரபுச் சொல்லாகும். இச்சட்டம் நாளைமுதல் அமுலுக்கு வருகிறது என்றாற் போலவரும். பயன்நடப்பு எனத் தமிழிற் கூறலாம்.

அரக்கு : மெழுகு, மண் முதலியவற்றால் செய்யப்படும் கெட்டிமெழுகு. இது போர்ச்சுக்கீசிய மொழிச்சொல். தமிழில் மண் மெழுகு எனக் கூறலாம்.

அரகஜா : மணக்குழம்பு - மணங்கூட்டியமை என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானி சொல்.

அலக் : விலகி நிற்குந்தனிமை என்னும் பொருளில் வழங்கப்படும் சொல். இது உருதுச்சொல். தனி எனத் தமிழிற் கூறலாம்.

அலமாரி (அல்மைறா) : சுவரில் அமைந்திருக்கும் பெட்டகம். இருபுறமாகத் திறக்கப்படும். உயர்நெடும் பெட்டகம் ஆகியவற்றைக் குறித்து வழங்கும் சொல். இது போர்ச்சுக்கீசிய மொழிச் சொல்லாகும். பீரோ எனப்படும் பெட்டியை மட்டும் நிலைப் பேழை எனப் பெரும்பாலும் வழங்கிவருகின்றனர். இவற்றை சுவர் மாடப் பேழை எனவும் நிலை நெடும் பேழை எனவும் கொள்ளலாம்.

அலாதி : சிறப்புத்தனியானது என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் அரபுமொழிச் சொல்லாகும். இதனை வேறு தனி எனக் கூறலாம்.

அனாமத் : பிரிந்து நிற்கும் தனி என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் உருதுமொழிச் சொல்லாகும். இதனை ஒரு தனி எனக் கூறலாம்.

ஆசாமி : ஒரு ஆள், மனிதன் என்று பொருள்தரும். இது உருது மொழிச்சொல்.

ஆபத்து : நேரும் இடர், பேரிடர் என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் அரபுமொழிச் சொல்லாகும். இதனை எதிரிடர், நேரிடர் என வழங்கலாம்.

ஆயா : முதிர்செவிலியரைக் குறித்து வழங்கும் சொல். இது போர்ச்சுக்கீசிய மொழிச் சொல்லாகும். ஆய்+ஆ=தாயை ஒப்பானவள் என்னும் கருத்தில் தமிழ்ச்சொல்லாக ஆக்கஞ்செய்து அப்படியே வழங்கலாம்.

ஆஸ்தி : செல்வம், சொத்து, உடைமை என்னும் பொருளில் வழங்கும் தெலுங்குமொழிச் சொல். இதனை உடைமை என்னும் பொருளில் ஏற்கலாம்.

ஆஸ்பத்திரி : மருத்துவமனை என்னும் பொருளில் வழங்கும் போர்ச்சுக்கீசியச் சொல்.

ஆஜர் : நேர்வருகை என்னும் பொருளில் வழங்கும் உருது அரபுமொழிச்சொல் வருகை என்பது இதற்குரிய தமிழ்ச்சொல்லாகும்.

இசுலாம் : அமைதி - சமாதானம் என்னும் பொருள்தரும் அரபு மொழிச்சொல்.

இலாகா : துறை, பிரிவு என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

இனாம் : நன்கொடை என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல். வழக்கில் இலவசம் என்னும் பொருளிலும் வழங்கும்.

உக்கிராணம் : சரக்கறை - பண்டக அறை என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் மராத்திமொழிச்சொல்லாகும்.

உண்டியல் : சிறுபணப்பெட்டி - பணக்குடுவை என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் இந்துஸ்தானிச் சொல்லின் திரிபாகும்.

உப்பசம் : வீக்கம், மேடுதட்டல் என்னும் பொருள்தரும். இது தெலுங்குமொழிச் சொல்லாகும். உதிப்பு என்பது நேரான தமிழ்ச் சொல்லாகும்.

உருமால் : தலைப்பாகை என்று பொருள்தரும் இது உருதுச்சொல். உடம்பில் மாலை போல அணியும் (அங்கவஸ்திரம்) உடை என்று பொருளில் உருமாலை எனத் தமிழாகக் கொள்வோம்.

உஷார் : கவனம், விழிப்புணர்வு என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் உருது மொழிச் சொல்லாகும்.

ஊதா : செந்நிற நீலத்தை உணர்த்தும் உருதுமொழிச் சொல்லாகும்.

எகத்தாளம் : இளக்காரம், பரிகாசம் குறிப்பாக இகழ்தல் என்னும் பொருள்தரும் இச்சொல் கன்னட மொழிச் சொல்லாகும். ஏளனம் என்பது இதற்குரிய தமிழ்ச் சொல்லாகும். வழக்கில் நையாண்டி செய்தல் என்பர்.

ஏராளம் : மிகுதி என்னும் பொருளில் வழங்கும் தெலுங்கு மொழிச் சொல். ஏர் = எழுச்சி. அளம் = அளவு - எழுச்சி உயர்வுக் கருத்துடையதாகலின் பேரளவு என்னும் பொருளில்தமிழ்ச் சொல்லாகக் கொள்ளலுமாம்.

ஏலம் : விலை உறழ் விற்பனை போட்டிமூலம் விற்பனை என்னும் பொருளில் வழங்கும் இது போர்க்கீசிய மொழிச் சொல்லாகும். ஏலம் போடுதல் ஏலத்தில் எடுத்தல் என்றாற் போல வழங்கும். ஏற்போர் இடும் விலையளவு என்னும் பொருளில் ஏல் + அம் என ஆக்கஞ் செய்து தமிழ்ச் சொல்லாக ஏற்கலாம்.

ஐவேசு : உடைமை, சொத்து, செல்வம் என்னும் பொருளில் வழங்கும் இது அரபுமொழிச்சொல்.

ஒட்டாரம் : பிடிவாதம், அடம்பிடித்தல் என்னும் பொருளில் வழங்கும் இது தெலுங்குச் சொல்லாகும். விடாப்பிடி என்பது இதற்குரிய தமிழ்ச் சொல்லாகும்.

கக்கூசு : கழிவறை - கழிப்பிடம் என்னும் பொருள் தரும் டச்சு மொழிச்சொல்.

கச்சா : முதிர்வுறாத மூலம் பொருள். செம்மையுறாத மூலப்பொருள் என்றும் பொருள்தரும் உருதுச்சொல்.

கச்சிதம் : ஒழுங்கு நேர்த்தி, பொருத்தம் என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல்.

கச்சேரி : அரசு அலுவலகம், நீதிமன்றம் என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி மொழிச்சொல். மன்பணிமனை, அறமன்றம் என்பன நேரான தமிழ்ச்சொற்கள்.

கசர் : எச்சம், மீதி, பகுதி எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

கசரத் : உடற்பயிற்சி என்னும் பொருள்தரும் இது உருதுச்சொல்.

கசாப்பு : புலால் துணுக்கு, மாமிசம் என்னும் பொருள்தரும் இது உருதுச்சொல்.

கஜம் : இருமுழ நீட்டளவு எனப்பொருள்தரும் உருதுச்சொல். நிறை முழம் எனத்தமிழிற் கூறலாம். கோல் என்பது பழையவழக்கு.

கடுதாசி : தாள், எனப்பொருள்தரும் போர்ச்சுக்கீசியச்சொல். அரபு மொழியிலும் இப்பொருளில் அமைந்துள்ளது.

கதர் : கையால் நூற்ற நூல் என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

கந்தோர் : அலுவலகம், தொழிலகம் என்றுபொருள்தரும் இது உருதுசசொல்.

கப்சா : பொய் என்னும் பொருள்தரும் உருதுச்சொல்

கம்மான் : வளைவு (ஆர்ச்சு) என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

கம்மி : குறைவு (மலிவு) என்னும் பொருள்தரும் பாரசீகச்சொல்.

கரம் : சூடான என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல்.

கறார் : கண்டிப்பு உறுதி என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

கல்லா : வணிகர்கையாளும் பணப்பெட்டி என்று பொருள்தரும் இது பாரசீகமொழிச் சொல்லாகும்.

கலாட்டா : கலகம், பூசல் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல். உருதுமொழியினும் இப்பொருளினதாகும். கல்லல் + ஆள்தல் என்னும் தமிழ்ச்சொற்களின் ஆக்கமாக கொண்டு தமிழ்ச்சொல்லாக வழங்கலாம்.

கலாய் : மேற் பூச்சு (உலோக மேற்பூச்சு) என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

கலால் : கள் – மது எனப்பொருள்தரும் இது உருதுச்சொல்லாகும்.

கவாத்து : படை வீரர்கள் பயிலும் உடற்பயிற்சியைக் குறிக்கும் இது உருதுமொழிச் சொல்லாகும்.

காக்கி : பாசிநிறம் வெளிர்பச்சைநிறம் என்னும் பொருள் தரும் உருது மொழிச்சொல்.

காகிதம் : தாள் (கடுதாசி) என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல்.

காஜி : அறமன்ற நடுவர் என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல். இது காஜியார் என வழங்கப்படுகிறது. நீதிபதி என்பது பொருள்.

காடி : வண்டி எனப் பொருள் தரும் உருதுமொழிச்சொல். அகழி பள்ளம் (காடி வெட்டுதல்) எனவும் பொருள்படும்.

காண்டு : சினம் என்று பொருள் தரும் தெலுங்குச் சொல்

காதி : முரடாக நெய்யப்பெற்ற துணி என்னும் பொருள்தரும் உருதுசசொல். இது கதர் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

காபந்து : பொறுப்பான பாதுகாவல் பாதுகாப்பு என்னும் பொருள்தரும் பாரசீகமொழிச்சொல். நாட்டு வழக்கில் காவந்து என வழங்கும்.

காபரா – (காப்ரா) : குழப்பம், அச்சம், நடுக்கம், விதிர்விதிர்ப்பு என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

காயம் : நிலையான, நிலைப்படுத்தப்பட்ட நிரந்தரம் எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல். மராத்திமொழியில் புண் என்னும் பொருளில் வழங்கும். அவருக்கு அரசுப்பணி காயமாகிவிட்டது எனவும், உடம்பை அரிவாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டான் என்றாற் போல வழங்கும்.

காயலா : நோய், சுரம், காய்ச்சல், வெப்பநோய் என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல். இது காய்தல் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபாகும்.

கார்பார் : (காருபாரு–கார்வார்) பணி மேலாளர், அலுவகை மேலாளர் என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி மொழிச்சொல். நாட்டுவழக்கின் காருவாரு என வழங்கும்.

காலி : வெற்றிடம், ஒழிவு, நீக்கம் என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

காவாலி : பொறுப்பிலி என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்

கித்தான் : சணற்கயிற்றான் மூட்டப்பெற்றபை, துணிகளைக் குறித்து வழங்கும். இச்சொல் உருதுமொழிச் சொல்லாகும். இந்துஸ்தானியிலும் இச்சொல் இப்பொருளில் அமைந்துள்ளது. சாக்கு எனப்பொதுவாக வழங்கப்படுகிறது.

கிராக்கி : மிகுவிலை எனப்பொருள் தரும் இந்துஸ்தானி சொல். ஒருவர் தன்னை மிக்கோனாக நினைக்குமிடத்து மற்றவர் அவனைக் கிராக்கிப் பண்ணுகிறான் என்பதும் வழக்காகும்.

கிராதி : வளியடைப்பு - தட்டி எனப்பொருள் தரும் போர்ச்சுக்கீசிய மொழிச்சொல்.

கிஸ்தி : பணமளிப்பு - நிலவரி என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல்.

குட்டு : ரகசியம் கமுக்கம் மந்தணம் என்னும் பொருளில் வழங்கும் இது கன்னடச்சொல்லாகும். அவன் மூடிமறைத்துக் கொண்டிருந்தான் கடைசியில் குட்டு வெளியாகிவிட்டது என்றாற் போலவரும். இது கூடம் என்னும் வடசொல்லின் திரியாகும்.

குண்டா : அடியார் எனப்பொருள் தரும் இந்துஸ்தானிச் சொல். தடியர், முரடர் எனப்பொருள்தரும். குணடர் என்னும் தமிழ்ச்சொல் வேறு இவ் இந்துஸ்தானி சொல் வேறு.

குஜிலி : கடைத்தெரு, அங்காடிக்கூடம் எனப்பொருள்தரும் உருதுமொழிச்சொல். வழக்கில் குசிலி, குச்சிலி என வழங்கும்.

குஷால் : உவகை மனக்களிப்பு எனப்பொருள்தரும் உருதுச்சொல்

குஷி : மகிழ்ச்சி (சந்தோஷம்) எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

குமாஸ்தா : உதவி எழுத்தர், பணியாள் எனப்பொருள்தரும் பாரசீகமொழிச்சொல்.

குரிச்சி : (குருசு) நாற்காலி, முக்காலி எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

குல்லா : (தொப்பி) தலைப்பாகை எனப்பொருள் தரும் உருதுச்சொல்.

குலாம் : அடிமை என்னும் பொருளிலும் உருதுவிலும் அரபியிலும் அமைந்து வழங்குஞ்சொல். இதனைக் குலாமர் எனத் தமிழில் வழங்குவர்.

குறுமா : மசால் கூட்டுக்குழம்பு என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

கூஜா : பால், நீர் முதலியவற்றை நிரப்பி வைக்கும் மண் முதலியவற்றால் செய்யப்பெற்ற ஒருவகைப் பாத்திரம். இது உருது மொழிச்சொல்.

கெட்டி : உறுதி, வலுவானது என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல்.

கெண்டி : மூக்குவைத்த நீர்நிரப்பும் சிறுபாத்திரம் இது மராத்தி மொழிச்சொல்.

கைது : (செய்தல்) சிறைப்படுத்தல் என்று பொருள்தரும் அரபு மொழிச்சொல். கைது செய்யப்பெற்ற குற்றவாளி கைதி எனப்படுவர்.

கொசுறு : விலைக்கு உரிய பொருளுக்கு மேல் சிறிது ஒட்டித்தருதல். இது உருதுமொழிச்சொல்.

கொப்பரை : நீர்வற்றிக் கூடான தேங்காயப் பருப்பு இது உருதுச்சொல்.

கொறடா : போர்ச்சுக்கீசிய மொழியில் தகையர், தகவாளர் என்னும் பொருளிலும் ஆட்சிக்குழு உறுப்பினரைத் திரட்டுபவர் என்னும் பொருளிலும் அமைந்த சொல்.

கோசரம் : அதற்காக, அதன் பொருட்டு என்னும் பொருளில் கன்னடத்திலும் இணை பதில் என்னும் பொருளில் தெலுங்கிலும் வழங்கும் சொல். இச்சொல் தமிழில் ஓசரம் எனத் திரிந்து இவர் யாருக்கொசரம் தூது வந்து பேசுகிறார். அவருக்கு வருமானமில்லை. அதுக்கொசரம் பட்டினி போடலாமா என்றாற் போலவரும்.

கோஷா : உடம்பையும், சிறப்பாக முகத்தையும் உடையால் மறைத்துக்கொள்ளுதல் என்னும் பொருளில் அமைந்த உருதுச்சொல்.

கோட்டா : பகடி, நகையாட்டு, பரிகாசம் என்னும் பொருளில் வழங்கும் உருதுச்சொல். அவனை இவன் ரொம்பவும் கோட்டா பண்ணுகிறான் என்றாற் போலவரும்.

கோதா : போர்க்களம், என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

கோந்து : பசை என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

கோவளம் : கடற்கரையென்னும் பொருள்தரும் மராத்தி மொழிச்சொல்.

சக்கி முக்கி : தீயெழுப்பும் நிலை. தீக்கொள்ளி என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சங்கடம் : தொந்தரவு, இடுக்கண், சிறுதொல்லை என்னும் பொருள்தரும் வடசொல். இது தர்மம் என்னும் சொல்லோடு கூடித் தர்மசங்கடம் எனவும் வழங்கும். போர்த்துக்கீசியமொழியில் இரட்டைத் தோணி என்னும் பொருள தரும்.

சட்டிணி : உணவுக்குத்துணையாகச் செய்யப்படும் துவையல் வகை. தேங்காய் சட்டிணி, கொத்துமல்லிச்சட்டினி என்றாற் போலவரும் இந்திமொழிச்சொல்.

சதாய்த்தல் : பகடி செய்தல் எனப்பொருள்தரும் உருதுச்சொல். இது சடாய்த்தல் எனவும் வழங்கும்.

சந்தடி : இரைச்சல் சிற்றாரவாரம் என்னும் பொருளில் வழங்கும் தெலுங்குச்சொல். சந்தம் + அடுத்தல் என்பவற்றின் மரூஉ.

சந்தா : தவணையாகப் பெறும் பணம் என்னும் பொருளில் வழங்கும் பாரசீகச் சொல்.

சப்பாத்து : செருப்பு என்னும் பொருளில் போர்த்துக்கீசியச் சொல்லாகும்.

சப்பாத்தி : (சப்பாத்து) உணவுப் பண்டம் என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சம்சாயி (சமுசாயி) : கடன் என்று பொருள்தரும் இந்திமொழிச் சொல்

சமாளித்தல் : நிறைவேற்றல் ஊறு நேராமல் பாதுகாத்துக்கொள்ளல், பொறுமையைக் கடைப்பிடித்தல் என்னும் பொருளில் வழங்கும் இது கன்னடமொழிச்சொல்.

சர்க்கார் : அரசு அரசாங்கம் என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சர்தார் : மேலாளர், மேலதிகாரி என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சர்பத் : இன்சுவை நீர் இனிப்பூட்டப் பெற்ற நீர் என்பது பொருள். இது உருதுச்சொல்.

சரக்கு : வணிகத்திற்குரிய பல்வகைப் பொருளையும் குறித்து வழங்கும் தெலுங்குமொழிச்சொல். இயற்கையாகவும், செயற்கையாகவும் விளைந்த பொருள்யாவும் சரக்கு எனப்படும். சிறுபான்மை கருத்துப்பொருள் பற்றியும் வரும்.

சரகம் : நிலப்பரப்பில் ஒரு குறுகிய வட்டாரத்தைக் குறிக்கும் அரபுச் சொல்.

சரத்து (ஷரத்–ஷரா) : நிபந்தனை எழுத்துரை – வாசகம் என்னும் பொருள்தரும் அரபுமொழிச் சொல்.

சல்லிசு : மலிவு என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

சவடால் : வீம்பு, திமிர் என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சவாரி : ஓடுதல், ஓட்டுதல், சுற்றுசெலவு எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

சவால் : அறை கூவல் என்னும் பொருளில் வழங்கும் அரபுமொழிச் சொல்.

சன்னது – சன்னத்து : உரிமை ஆவணம் என்னும் பொருள்தரும் அரபுச்சொல். விருது, பதக்கம் என்னும் பொருளிலும் இச்சொல் ஆளப்படுகிறது.

சன்னல் : காலதர், சாரளம் என்னும் பொருள்தரும் போர்த்துக்கீசியச் சொல்.

சாக்கு : சணற்பை, கோணிப்பை என்னும் பொருளிலும் வழங்கும் டச்சுமொழிச் சொல்லாகும். சரக்கைக் கொண்டிருத்தல் சாக்கு எனின் தெலுங்குச்சொல்லாகும். சரக்குப்பை – சாக்குப்பை எனவரும்.

சாக்ணா : களியர் கள்ளொடு துணையாக உண்ணும் பண்டம் எனப்பொருள்தரும் இது உருதுமொழிச் சொல்லாகும்.

சாதா : சிறப்பில்லாதது இயல்பானது என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சாம்பார் : துவரை முதலாய பருப்புக்களைக் கொண்டு சமைக்கும் குழம்பு. இது மராத்தி மொழிச்சொல்.

சாம்பிராணி : நறும்புகைத்தூள் இது மலாய் மொழிச்சொல்.

சாமான் : பண்டம், பாத்திரம் என்னும் பொருளில் வழங்கும் இது பாரசீக மொழிச்சொல்லாகும்.

சாயா : தேநீர் என்னும் பொருளில் வழங்கும் இது இந்திமொழிச்சொல்.

சால்சாப்பு : (சால்ஜவாப்) போலிக்காரணங்களைக் கற்பித்துக்கூறும் விடை என்னும் பொருளில் வழங்கும் இது அரபுமொழிச்சொல்.

சால்வை : போர்வை மேலாடை என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சாவடி : தங்குமிடம், சிறுகட்டிடம், சிறுவீடு என்னும் பொருளில் வழங்கும் மராத்திமொழிச்சொல். இது சத்திரம் சாவடி என இணைந்தும் வரும்.

சாவி : (1) திறவுகோல் என்னும் பொருளில் வழங்கும் போர்த்துக்கீசியச் சொல். (2) தானியங்களின் பதர் என்னும் பொருளில் இது பாரசீகச் சொல்லாகும்.

சிக்குதல் : அகப்படுதல், மாட்டிக்கொள்ளுதல் என்னும் பொருள்தரும் இது தெலுங்குச்சொல்.

சிட்டா : வணிகர் முதலானோர்க்குரிய குறிப்பேடு. இது இந்திமொழிச்சொல். வழக்கில் சிட்டை என வழங்கும். சிறுகணக்கு நூல் எனத் தமிழாகவும் கொள்ளலாம். சிற்றை - சிட்டை என வரும்.

சிப்பாய் : படைவீரன் என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல்.

சிப்பந்தி : பணியாளர், உதவியாளர் என்னும் பொருளில வழங்கும் பாரசீகச் சொல்.

சிபார்சு : (சிபாரிசு) பரிந்துரை என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல்.

சிலாவணி (செலவாணி) : நாணயம் எனப் பொருள்தரும் இந்திமொழிச்சொல்.

சீட்டு : கையொப்ப முறி (ரசீது) என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

சீண்டல் (சீண்டுதல்) : தொந்தரவு செய்தல், உசுப்புதல் என்னும் பொருளில் வழங்கும் இது தெலுங்குச் சொல்லாகும்.

சீமந்து : சிமெண்ட் எனத்திரிந்து வழங்கும் இது போர்த்துக்கீசியச் சொல்லாகும். பசுஞ்சுண்ணம் எனல் தமிழ்.

சீல் : முத்திரை - காப்பு முத்திரை என்னும் பொருளில் வழங்கும் இது இந்திமொழிச் சொல்லாகும்.

சுங்கம் : வரி என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்லாகும்.

சுதாரித்தல் : சமாளித்தல், ஊஷாராதல் என்னும் பொருள்தரும் போர்த்துக்கீசியச் சொல்லாகும். சமாளித்தல் காண்க.

சுமார் : நடுத்தரம், பழுதில்லாத நிலை ஏறத்தாழ என்னும் பொருள்தரும் பாரசீகச்சொல்.

செலான் : பணம் செலுத்துச் சீட்டு என்னும் பொருளில் வழங்கும் இச்சொல் இந்துஸ்தானி சொல்லாகும்.

சொகுசு : நேர்த்தி, மினுமினுத்தல், அழகு என்னும் பொருளில் வழங்கும் தெலுங்கு மொழிச் சொல்லாகும்.

சொந்தம் : தன்னுடைமை தன்னுரிமை என்னும் பொருளிலும் உறவு என்னும் பொருளிலும் வழங்கும் இச்சொல் தெலுங்குச்சொல்லாகும்.

சோக்ரா : பணிசெய்யும் சிறுவனைக் குறிக்கும். இந்தி உருதுசசொல்.

சோதா : சோம்பேறி என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானி சொல்.

சோலி : வேலை, பணி, அலுவல் என்னும் பொருள்தரும் தெலுங்குச் சொல்.

ஜல்சா : மகிழ்வோடு களித்தல் சரசமாடுதல் என்னும் பொருளில் வழங்கும் அரபு மொழிச்சொல்.

டக்கர் : மோதுதல் என்னும் பொருளில் இந்திச்சொல் குழப்பம் செய்தல் என்னும் பொருளில் உருதுச்சொல்.

ஜிகாத் : சமயக்காப்புப் போர் புனிதப் போர் என்னும் பொருளில் அரபுச்சொல்லாகும்.

டகல்பாச்சி : ஏமாற்றுதல் என்னும் பொருளில் வழங்கும் பாரசீகச்சொல்.

டப்பா, டப்பி : சிறுபெட்டி, கொள்கலன், பெட்டி என்னும பொருள்தரும் இந்திமொழிச்சொல்.

டபேதார் : அலுவலக உதவியாளர் என்னும் பொருள்படும் பாரசீகச் சொல்.

டாபர் : தரகுபெற்றுப் பெண்டிரைக் கூட்டுவிப்பர் என்னும் பொருள்தரும் பாரசீகமொழிச்சொல்.

டால் : ஒளி என்னும் பொருள்தரும் கன்னடச்சொல்

டிக்காணா : தங்குமிடம் என்னும் பொருள்தரும் பாரசீகச் சொல்

டீக்கு : மிடுக்கு என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானி சொல்

டீகொடுத்தல் : மோதுதல் என்னும் பொருள்தரும் கன்னடச்சொல்.

டேரா : துணி வீடு, துணிக்கொட்டகை கூடாரம் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

டேவணி : பொறுப்புறுதிப்பணம் முன்தொகை என்னும் பொருள்தரும் இந்திமொழிச் சொல்.

டோக்கர் (கொடுத்தல்) : ஏமாற்றுதல் என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

டோலி : தூக்குப்படுக்கை பெரிய துணித்தொட்டி என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

தக்காவி : உழவர்களுக்கு அரசுதரும் முன்கடன் இது இந்திமொழிச் சொல்.

தகறார் (தகராறு) : கலகம் சச்சரவு என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

தஸ்தாவேசு : ஆவணம் என்னும் பொருள்தரும் பாரசீகச் சொல்.

தண்டா : சிறுபூசல், உட்பகை சிக்கல் என்னும் பொருள்தரும் உருதுச்சொல் இது தப்பு என்னும் தமிழ்ச்சொல்லோடு இணைந்து தப்பு தண்டா எனவும் வழங்கும்.

தண்டோரா : பறை கொட்டியும் முரசறைந்தும் செய்திகளை விளம்பரப்படுத்தலாகிய பறைசாற்றல் தண்டோரா எனப்படும் இது இந்துஸ்தானிசொல்.

தணிக்கை : கணக்குவரவு செலவுகளைச் சரிபார்தல் தணிக்கை செய்தல் எனப்படும். தணிக்கை அரபுமொழிச்சொல்.

தத்தாரி : பொறுப்பாக அலுவல் மேற்கொள்ளாமல் சோம்பி ஊர்சுற்றுபவரைக் குறித்துவழங்கும் சொல். இது பாரசீகமொழிச் சொல்லாகும். அவன் கிடக்கிறான் தத்தாரிப்பயல் என்றாற் போல வழங்கும்.

தபா : முறை - தடவை தவணை என்னும் பொருள்தரும் அரபுமொழிச் சொல்லாகும்.

தபால் : அஞ்சல் எனப்பொருள்தரும் உருதுச்சொல்

தம்: மூச்சை அடக்குதல் குறித்து வழங்கும் இது பாரசீக மொழிச்சொல்லாகும்.

தம்பிடி : கடைசி மதிப்புள்ள நாணயம் இது இந்துஸ்தானிசொல். இதற்கு ஈடாக தமிழில் வழங்கும் சொல் சல்லி. இந்தியில் பைசாவாகும். பாரசீகத்தில் தம்பிடி என்றே வழங்கும்.

தமாஷ் : கேளிக்கை நகையாட்டு என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

தமுக்கு : வாரால் வரிந்துகட்டப்பெற்ற குழிப்பறை - வார்ப்பறை முழக்கத்தைக் குறிக்கும் இச்சொல் உருதுமொழிச் சொல்லாகும்.

தயார் : ஆயத்தம் செவ்வி என்னும் பொருள்தரும் பாரசீகச் சொல்.

தர்க்காஸ்த்து (துர்க்காஸ்) : பண்படுத்தப் பெறாதத் தரிசுநிலம். இது இந்துஸ்தானிச்சொல்

தர்ஜமா : மொழிபெயர்த்தல் மொழிபெயர்ப்பு என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

தர்ணா : மறியல் போராட்டம் என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

தரப்பு : பக்கம் சார்பு என்னும் பொருள்தரும் உருதுச்சொல். இது தாவ் தரவு எனவும் வரும்.

தராசு : துலாக்கோல் என்னும் பொருள்தரும் பாரசீகமொழிச்சொல்.

தவா (தாவா) : குற்றஞ்சார்த்தல் எனப்பொருள்தரும் அரபுச்சொல்.

தவில் (மேளவாத்தியம்) : பதலை முழவு எனப்பொருள்தரும் அரபுச்சொல்.

தாக்கல் : செய்தி முதலியவற்றை அனுப்புதல் என்னும் பொருள்தரும் அரபு மொழிச்சொல். இனி தகவல் என்னும் சொல் நீண்டுதாக்கல் என்றும் வழங்கும்.

தாக்கீது : குறிப்பாணை என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

தாஜா : ஊக்கமூட்டுதல், வசப்படுத்தல் என்னும் பொருளில் வழங்கும் உருதுச்சொல். அவன் அவனை தாஜா செய்து காரியத்தைச் சாதித்துவிட்டான் என்றாற் போல் வரும்.

தாராளம் : மிகுதி தடையின்மை என்னும் பொருளில் வழங்கும் தெலுங்குமொழிச்சொல்.

தாலுக்கா : நாட்டு எல்லையின் ஒரு பகுதியைக் குறிக்கும் சிறுவட்டம் (சிலவட்டங்களைக் கொண்டது மாவட்டம். பல மாவட்டங்களைக் கொண்டது மகாணம்) இது அரபுமொழிச் சொல்.

திவால் : நொடித்துப்போதல் என்னும் பொருளில் வரும் உருதுமொழிச் சொல். நிலை கீழாதல் வெறுமையாகிப் போதல் என்னும் பொருளில் இந்துஸ்தானி சொல் கம்பெனி திவாலாகிவிட்டது. வங்கி திவாலாகிவிட்டது என்றாற் போல வரும்.

திவான் : அரசாங்கத் தலைமையமைச்சன். இது உருதுமொழிச்சொல்.

தினுசு : வகை (ரகம்) என்று பொருள்படும் உருதுச்சொல்.

துக்கடா : சிறிதான துண்டு இது இந்துஸ்தானிசொல். இது துண்டு துக்கடா என இணைந்தும் வரும்.

துக்கு : கீழ்மை, தாழ்வு, பயனின்மை என்று பொருள்தரும் தெலுங்குச் சொல். வழக்கில் தொக்கு என வழங்குகிறது.

துட்டு : பைசா, பணம் என்னும் பொருளில் அமைந்த டச்சுமொழிச்சொல்.

துப்பட்டா : தலைக்கட்டு, மேலாடை என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானிச்சொல்.

துருசு : விரைவு சுறுசுறுப்பு என்று பொருள்படும் தெலுங்குச் சொல்.

துருப்பு : போர்ப்படை. இது போர்த்துக்கீசியச் சொல்.

தொந்தரவு : தொல்லை - இடையூறு என்னும் பொருளில் வழங்கும் தெலுங்குச் சொல்.

நக்கல் : பகடி – ஏகடியம். எள்ளல் என்னும் பொருள்தரும் அரபுச்சொல்.

நகாசு : பொன்வெள்ளி அணிகலன்களில் செய்யப்படும் நுண்ணிய சித்திரத்தொழில் என்று பொருள்படும் உருதுமொழிச்சொல்.

நகல் : மூலப்படியினின்றும எழுதிக்கொள்ளப்படும் படிஓலை என்று பொருள்படும்.

நங்கூரம் : கப்பலை நிலை கொள்ளச் செய்யும் ஒரு கருவி. இது போர்த்துக்கீசியச் சொல்.

நபர் : ஆள் (மனிதர்) என்னும் பொருள்தரும் அரபுச்சொல்.

நமூனா : ஓலைப்படிவம். இது பாரசீகச் சொல். அரபுமொழிச் சொல்லும் இதுவேயாம்.

நமுத்தல் : ஈரப்பதமாக இருத்தல் என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல்.

நவாப் : அரசுப் பொறுபபாளுநர் என்னும் பொருள்தரும் உருதுச்சொல். இந்துஸ்தானியில் ஆளுநர் என்று பொருள்படும்.

நாசுக் : நாகரிகத்தன்மை என்று பொருள்தரும் இந்துஸ்தானிச்சொல். உருதுமொழியில் செயற்கை அழகு என்று பொருள்தரும்.

நாஸ்தா : சிற்றுண்டி எனப்பொருள்தரும் பாரசீகச்சொல்.

நாடா : நூலால் பின்னப்பெற்ற பட்டைத்துணி. இது இந்துஸ்தானி சொல்.

நிகா : எச்சரிக்கை, குறிப்பு நிதானம் என்று பொருள்தரும் உருதுச்சொல்.

நிஜாம் : அரசன். மன்னன் என்று பொருள்தரும் இந்துஸ்தானிசொல்.

நிம்மதி : கவலையின்மை, மனநிறைவு அமைதி என்று பொருள்தரும் தெலுங்குச்சொல்.

நிரக்கு : நேர்மை என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

பக்கா : சரியானது, முழுமையானது, முற்றிலும் என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானிச்சொல். பக்காப்பேர்வழி, பக்காப்படி என்றாற் போல வழங்கும்.

பக்ஷிஸ் : நன்கொடை, அன்பளிப்பு, இனாம் என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானிச்சொல்.

பங்கா : பெருவிசிறி என்னும் பொருளில் வழங்கும் உருதுச்சொல்.

பங்காரு : நன்பொன் - தங்கம் என்னும் பொருளில் வழங்கும் தெலுங்குச்சொல்.

பஜார் : கடைத்தெரு என்னும் பொருளில் வழங்கும் பாரசீகச் சொல்.

பட்டா : நிலஉரிமை ஆவணம் என்னும் பொருள்தரும் இந்துஸ்தானிசொல்.

பட்டியல் : நிரல், அட்டவணை எனப்பொருள்தரும் இந்துஸ்தானிசொல்.

பட்டுவாடா : முறையாக வழங்குதல் என்னும் பொருள்படும் இந்துஸ்தானிசொல்.

பண்டிகை : திருநாள், திருவிழா, விழா எனப் பொருள்படும் தெலுங்குசொல்.

பத்தர் : பொற்கொல்லர், தட்டார் என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல்.

பந்தோபஸ்த் : காவல், காப்பு,நிறைகாவல், காபந்து என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல். வழக்கில் பந்தமஸ்த்து என வழங்கும்.

பதில் : மறுமொழி, விடை எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

பயில்வான் : மற்போராளன் என்று பொருள்தரும் உருதுச்சொல்.

பர்த்தி : இணை, ஒப்ப, பதிலி மாற்று எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

பர்பராட் : சிறப்பமைதி, பகட்டு, பெருமகிழ்வு என்று பொருள்படும் உருதுச்சொல்.

பர்வா : குற்றம், தாழ்வு எனப்பொருள்தரும் உருதுச்சொல். வழக்கில் பரவாயில்லை = பர்வாநகி என வழங்கும்.

பராபரி : மேல்வாரியாக, ஒருவாறு, ஒருங்கு என்னும் பொருள்தரும் கன்னடச்சொல். அவன் ஏதோ ஒருவகையில் சொத்துச் சேர்த்துள்ளான் என்று பராபரியாகக் கேள்விப்பட்டேன் என்றாற்போல வழங்கும்.

பராரி : ஓடிப்போனவன், ஊர்சுற்றித்திரிபவன் என்னும் பொருளில் வழங்கும் வசைச்சொல். இது உருது மொழிச்சொல்.

பலே : நன்று மிகநன்று என்னும் பொருள்படும் உருதுச்சொல்.

பவனி : உலாவரல். ஊர்கோலம் என்னும் பொருள்தரும் தெலுங்குச் சொல்.

பவுசு : செருக்கு கௌரவம்.முகக்களை, முகம் என்னும் பொருளில் வழங்கும் இது தெலுங்குச் சொல்லாகும்.

பளு : கனமான எடையுடையது. பெருஞ்சுமை என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல்.

பஜாரி : பரத்தை எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

பாக்கி : நிலுவை என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல். எஞ்சியபாகம் மீதி என்னும் பொருளில் இது தமிழ்ச்சொல்லாகும்.

பாசி : மீன் எனப்பொருள்படும் உருதுச்சொல். பாசிக் குத்தகை என்பது வழக்கு.

பாட்சா : அரசன் என்று பொருள்தரும் இந்துஸ்தானிசொல்.

பாணி : பாங்கு முறைமை என்று பொருள்தரும் உருதுமொழிச்சொல். அவர் கிட்டப்பா பாணியில் பாடுவார். வாணிகத்தில் அவர்பாணியே வேறு என்றாற்போல வழங்கும்.

பாத் : சோறு என்னும் பொருளில் வழங்கும் இந்துஸ்தானி சொல்.

பாபத்து : இனம், வகை, பிரிவு என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

பாரா : காவல், மெய்க்காவல் என்னும் பொருள்தரும் பாரசீகச்சொல்.

பாலம் : இணைப்பு - கடப்பு, மேடை என்னும் பொருள்தரும் இச்சொல் இந்துஸ்தானி மொழிச்சொல்லாகும். ஆறு சாலை முதலியவற்றின் மேலாக அமைக்கப்படும் பாலம் என்ற சொல்லுக்கு மேற்கடப்பு என்பது தக்கதமிழ்ச் சொல்லாகும்.

பாவட்டா : கொடிசிறுதோரணம் என்னும் பொருள்தரும். இது உருதுமொழிச்சொல்லாகும்.

பிக்காரி : மிகவும் ஏழை வறியவர் என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

பிகு : செருக்கு, பெருமிதம் என்னும் பொருள்தரும் தெலுங்குமொழிச்சொல்.

பிசாத்து : நொய்து, அற்பமானது இலேசு என்னும் பொருள்தரும் இது உருதுச்சொல்.

பிசுநாரி : (பிகனன்) கஞ்சன். உலோபி என்னும் பொருள்தரும் தெலுங்குச் சொல்.

பிசுவுதல் : லோபம் செய்தல், கருமித்தனம் செய்தல் என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல். பிசுக்கு என்பது இதனடியாக அமைந்த சொல்லாகும். பிசுவும் செயலுடையவன் பிசுவுனி.

பிர்க்கா : குறுவட்டம் (குறுகிய நிலப்பரப்பு) என்று பொருள்தரும் அரபுச்சொல்.

பிராது : வழக்குப்பற்றிய முறையீடு என்று பொருள்படும் பாரசீகமொழிச்சொல்.

பினாமி : இரவலாகக் கொள்ளப்பட்டவர். பின் உரிமையாளர் என்னும் பொருளில் வழங்கும் பாரசீக மொழிச்சொல்.

பீங்கான் : வெண்களிமண்ணாற் செய்தபொருள், பாத்திரம் இது பாரசீகச் சொல்.

பீடி : புகையிலை சருகுத்தூள் கொண்ட இலைச்சுருட்டு. இது உருதுமொழிச்சொல்.

பீரங்கி : பெரியதுப்பாக்கி. இது போர்த்துக்கீசிய மொழிச்சொல்.

புகார் : குற்றஞ்சாற்றும் முறையீடு என்னும பொருள்படும் இந்துஸ்தானி சொல்.

புருடா : பொய், புளுகு என்னும் பொருள்தரும் தெலுங்குச்சொல்.

பூரா : எல்லாமும், முழுமையும் என்று பொருள்தரும் பாரசீகமொழிச்சொல்.

பே : இல்லை எனப்பொருள்தரும் உருதுச்சொல்.

பேக்கு : மடையன், விவேகமில்லாதவன் என்னும் பொருள்படும் உருதுச்சொல்.

பேஜார் : சோர்வு, களைப்பு என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

பேஷ் : நன்று சிறப்பு என்னும் பொருள்படும் உருதுச்சொல்.

பேஷ்கார் : முகவர், மேலாளர் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

பேட்டா : (1) பயணம், உணவு முதலியவற்றிற்குத் தரும்படிப் பணம் என்று பொருளில் உருதுச்சொல். (2) தலைக்கட்டு (முண்டாசு) என்னும் பொருளில் இந்துஸ்தானி சொல்லாகும்.

பேட்டி : நேர்காணல் என்று பொருள்தரும் உருதுச்சொல்

பேட்டை : புறநகர்ப்பகுதி என்னும் பொருள்தரும் மராத்தி மொழிச்சொல்.

பேமானி : நாணிலி விவரம் அறியாதவன் என்று பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

பைசல் : முடிவு, தீர்வு என்று பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

பைசா : காசு, பணம் என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

பொக்கிஷம் : பொருளறை, பணப்பெட்டி, செல்வப்பேழை எனப்பொருள்தரும் தெலுங்குச்சொல்.

பொட்டலம் : சிறுகட்டு, கப்பம், பொக்கணம் எனப்பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

போகி : பல்லக்கு, சிவிகை சுமப்பவர் என்னும் பொருள்தரும் மராத்திமொழிச்சொல்.

போதை : கள் முதலியவற்றால் எழும் மயக்கம் தடுமாற்றம் இது உருதுமொழிச்சொல்.

போனி : முதல் ரொக்க விற்பனை என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

போஷாக்கு : வளமாகப் பேணப்பட்ட நிலை, வளர்ப்புச்செழுமை நற்பாதுகாப்பு என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

மக்கர் : முரண்டுபிடித்தல் தடைப்படுத்தல் என்னும் பொருள்தரும் உருதுச் சொல்.

மகசூல் : நிலத்தின் விளைச்சல் குறித்துவரும் இந்துஸ்தானி சொல்.

மகமை : அறப்பணிக்காகப் பெறும் நிதி என்னும் பொருள்தரும் உருதுச்சொல்.

மகால் : மாளிகை பெருங்கூடம் என்று பொருள்தரும் அரபுமொழிச் சொல்.

மசோதா : முன்வரைவுத்திட்டம் என்னும் பொருள்தரும் அரபுமொழிச் சொல்.

மஜா : களிப்பு சுகித்தல் என்னும் பொருள்தரும் பாரசீக மொழிச்சொல்.

மஸ்தான் : இறையருள் மயக்கமுடையவர் என்று பொருள்படும் உருதுச்சொல்.

மஸ்தூர் : தொழிலாளி, பாட்டாளி எனப்பொருள்படும் இந்துஸதானிசொல்.

மடங்கு : அளவு என்னும பொருள்படும் தெலுங்குமொழிச்சொல்.

மத்தாப்பு : நெருப்புப் பொரிப்பூ என்னும் பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

மலக்கு : தேவன் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

மாகாணம் : மாநிலம் ராஜ்யப்பிரிவு எனப் பொருள்தரும் அரபுமொழிச் சொல்.

மாப்பு : மன்னித்தல், பொறுத்தாற்றல் என்னும் பொருள்படும் அரபுமொழிச்சொல்.

மாமூல் : கையூட்டு, லஞ்சம் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

மாலுமி : கப்பலோட்டி எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

மிட்டா : நிலம்பொருள் உரிமையாளர் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

மிராசு : நிலக்கிழார் - மரபுச்சொத்துரிமையாளர் எனப் பொருள்தரும். இது உருதுச்சொல்.

முகாசா : பணிக்குமானியமாக வழங்கிய நிலம், ஊர் இது இந்துஸ்தானி சொல்.

முகாம் : பாசறை – தங்குமிடம் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

முச்சலிக்கா : உடன்படிக்கை என்று பொருள் தரும் துருக்கிமொழிச் சொல்.

முசாபரிபங்களா : ஊர்ச்செலவினர், பயணிகள் தங்கும் விடுதி என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

முஸ்தீபு : ஆய்த்தம் என்னும் முன்னேற்பாடு என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

முரபா : இனிப்பாகச் செய்யப்பட்ட குழைவுக்கட்டி (இஞ்சி முரப்பா) இது அரபுச்சொல்.

முலாம் : உலோக மேற்பூச்சு (கலாய்) என்னும் பொருள்தரும் அரபுச்சொல்.

முன்சீப் : கிராமத் தலைமையலுவலர், உரிமையியல் நீதிமன்றத் தலைவர் என்று பொருள்படும் இந்துஸ்தானி மொழிச்சொல்.

மேசை : காலமைந்த முன்மேடைப்பலகை எனப்பொருள்தரும் போர்த்துக்கீசிய மொழிச்சொல்.

மேஸ்திரி : (1) மேற்பார்வையாளர் எனப்பொருள்தரும் போர்ச்சுக்கீசியச்சொல் (2) தலைமைக் கொல்லன், கொத்தன் என்றும் பொருள்தரும் பாரசீகச் சொல்.

மைதா : கிழங்குமாவு எனப்பொருள்தரும் அரபு, உருதுமொழிச்சொல்.

மைதானம் : திடல், வெளிநிலம் என்றும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

மைனா : நாகணவய்ப் பறவை என்று பொருள்தரும் உருதுச்சொல்

மோட்டா : முரடானது என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

மௌசு : மிகுவிருப்பம், விளம்பரமானது என்று பொருள்தரும் உருதுச்சொல்.

ரகம் : வகை, விதம் என்று பொருள்தரும் பாரசீகச் சொல்.

ரசீது : கையொப்பமுறிஓலை பற்றுச்சீட்டு எனப்பொருள்படும் பாரசீகச்சொல்.

ரஜா : விடுமுறை எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ரஸ்தா : சாலை, தெரு எனப்பொருள்தரும் பாரசீகச்சொல்.

ரத்து : நீக்கம் (பைசல்) எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ரயத் : உழவுத் தொழிலாளி எனப்பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

ரயத்வாரி : பயிர்த்தொழில்செய்யும் குடியானவர்க்கு விதிக்கப்படும் வருவாய்த் தீர்வை எனப்பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

ராஜி : பகைநீங்கி நட்பாதல், ஒத்துப்போதல் என்னும் பொருள்படும் இந்துஸ்தானி சொல்.

ராஜிநாமா : பணிவிலகல் செய்தல் என்று பொருள்தரும் பாரசீகச்சொல்.

ராட்டினம் : சுழலும் குடை, நூல் நூற்கும் கருவி எனப்பொருள்படும் உருதுமொழிச்சொல். இது ராட்டை எனவும் வழங்கும்.

ரிக்ஷா : சப்பானிய மொழிச்சொல். மிதியிழுவை வண்டி என்பது பொருள்.

ருசு : சான்றுடன் வெளிப்படுத்தல், எண்பித்தல் எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ரேக் : பூவிதழ் என்று பொருள்படும் உருதுமொழிச்சொல்.

ரொக்கம் : பணம் என்று பொருள்படும் அரபுமொழிச்சொல்.

ரோந்து : காவலாகச் சுற்றிவருதல் என்று பொருள்தரும் பாரசீகச் சொல்.

ரோஜா : ரோசாமலர் - முளரிமலர் என்று பொருள்தரும் இலத்தீன் மொழிச்சொல்.

லத்தி : குறுந்தடி எனப்பொருள்படும் இந்துஸ்தானி சொல்.

லாடம் : விலங்குகளின் குளம்பிற்குக்கட்டும் காப்பணி. இது உருதுச்சொல்.

லாயக்கு : தகுதி பொருத்தம் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

லாயம் : குதிரைத் தொழுவம் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

லாலா : பண்டவிற்பனையாளன் எனப்பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

லாவணி : மாறுநிலைப்பாட்டு, உரை எதிர்ப்பாட்டு எனப்பொருள்தரும் இது மராத்திச்சொல்.

லுங்கி : மூட்டப்பெற்ற இடைஆடை எனப்பொருள்படும் பாரசீகச்சொல்.

லூட்டி : கொட்டமடித்தல், தொந்தரவு செய்தல் என்னும் பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

லேவாதேவி : கடன் கொடுத்து வாங்கும் வரவு செலவு எனப்பொருள்தரும் இந்துஸ்தானிசொல்.

லோட்டா: நீர் அருந்தப் பயன்படுத்தும் ஒருவகைக் குவளை எனப்பொருள்தரும் உருதுமொழிச்சொல்.

வக்காலத்து : அதிகார ஆவணம் எனப்பொருள்தரும் அரபுச்சொல்.

வகையறா : முதலியன, முதலானோர் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

வசூல் : தண்டல் என்னும் பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

வஜா : வரிக்குறைப்பு நேர்செய்தல் தள்ளுபடி செய்தல் என்னும் பொருள்தரும் அரபுச்சொல்.

வராண்டா : வீட்டுமுற்றம் ஆளோடி எனப்பொருள்தரும் போர்த்துக்கீசியச் சொல்.

வாரிசு : பின்னுரிமை, மரபுரிவை, பிறங்கடை எனப்பொருள்தரும் அரபுச்சொல்.

வாடகை : குடிக்கூலி பிறர்க்குரிய தொன்றைப் பயன்படுத்தற்குரிய கூலி என்று பொருள்படும் தெலுங்குச்சொல்.

வாடிக்கை : வழக்கம் என்று பொருள்தரும் தெலுங்குச்சொல்

வாபஸ் : மீளப்பெறுதல் என்று பொருள்படும் பாரசீகமொழிச்சொல்.

வாய்தா : தவணைபெறல் என்று பொருள்தரும்அரபுமொழிச்சொல்

விக்கிரயம் : விற்பனைசெய்தல் என்று பொருள்தரும் தெலுங்குச்சொல்.

வில்லங்கம் : கலக்கம், சிக்கல் என்று பொருள்தரும் மராத்தி மொழிச்சொல்.

வேடிக்கை : பொழுதுபோக்குக் காட்சி, விளையாட்டு என்று பொருள்தரும் தெலுங்கு மொழிச்சொல்.

ஜகா (ஜாகை) : இடம் உறையுமிடம் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

ஜகாத் : இலவசம், இனம், ஈகை எனப்பொருள்தரும் அரபுச்சொல்.

ஜதை : இணை (ஜோடி) என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

ஜபர்தஸ்த் : மிடுக்கு, பகட்டார்வம் எனப்பொருள்படும் அரபுச்சொல்.

ஜம்பம் : வீண்செருக்கு ஆடம்பரம் என்று பொருள்படும் மராத்திமொழிச்சொல்.

ஜமா : கூட்டம், குழு எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ஜமாய் : உவப்போடு செயலாற்று திறமாகச் செயலாற்று என்று பொருள்தரும் உருதுச்சொல்.

ஜரிகை : பொன்னிழை நூல் எனப்பொருள்படும் பாரசீக மொழிச்சொல்.

ஜரூர் : விரைவு பரபரப்பு என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ஜல்தி (சடுதி) : விரைவு சீக்கிரம் என்ப்பொருள்தரும் உருதுச்சொல்.

ஜவ்வாது : மணப்பொருள் (வாசனைப்பொருள்) எனப்பொருள் தரும் உருதுச்சொல்.

ஜவாப் : மறுமொழி - பதில், விடை எனப்பொருள்படும் அரபுமொழிச்சொல்.

ஜவாப்தாரி : பொறுப்பாளி எனப்பொருள்தரும் உருதுச்சொல். பராசீகமொழியிலும் இதுவே பொருளாகும்.

ஜவுளி : ஆடை, உடை, துணியணி என்னும் பொருள்தரும் கன்னட மொழிச்சொல்.

ஜாகீர் : முற்றூட்டு, மானியம் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

ஜாஸ்தீ : மிகுதி, அதிகம் எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ஜாடி : நீர் முதலிய பொருள்களை நிரப்பிவைக்கும் பாத்திரம். இது போர்த்துக்கீசிய மொழிச்சொல்.

ஜாப்தா : பட்டியல், நிரற்குறிப்பு என்னும் பொருள்தரும் அரபுச்சொல்.

ஜாபிதா : பட்டியல் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

ஜாமீன் : பிணையம் என்று பொருள்தரும் அரபுமொழிச்சொல்

ஜாரி : சேர்ப்பித்தல், ஒப்படைத்தல் எனப்பொருள்தரும் அரபுமொழிச்சொல்.

ஜிம்கானா : விளையாடுமிடம் என்று பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

ஜில்லா : மாவட்டம் எனப்பொருள்படும் அரபுமொழிச்சொல்.

ஜேப்படி : பையினின்று பொறுக்குதல் (ஜேபி = பை) இது அரபுமொழிச்சொல்.

ஜோடனை : அலங்காரம், ஒப்பனை எனப்பொருள்தரும் இந்துஸ்தானி சொல்.

ஜோர் : நேர்த்தி, பகட்டு என்று பொருள்தரும் பாரசீகச்சொல்.

ஸ்கூல் : பள்ளிக்கூடம் எனப் பொருள்படும் போர்த்துக்கீசியச்சொல்.

ஷரா : நிபந்தனைக்குறிப்பு என்னும் பொருளில் அரபுச்சொல் கட்டுவாசகம் என்னும் பொருளில் உருதுச்சொல்.

ஷராப் : பொன்வணிகக்கடை, பணம் அளிப்பவர் என்னும் பொருளில் வழங்கும் அரபுமொழிச்சொல். கருவூலம் என்னும் பொருளில் உருதுச்சொல் ஆகும்.

ஷா : அரசன் மன்னன் எனப்பொருள் அரபுச்சொல்.

ஷோக்கு : பகட்டு எனப்பொருள்படும் உருதுச்சொல்.

ஹுசூர் : மாவட்டம் எனப்பொருள்படும் அரபுமொழிச்சொல்.

❑❑❑

பேச்சு வெளிப்பாடு பற்றியதோரிலக்கண நோக்கு

உலக மக்கள் தம் அறிவாற்றலான் இயற்கைப் பொருள்களினின்று படைத்துக் கொண்ட செயற்கைப் பொருள்களுள் சிறந்தது தலையாயது அழியாதது தம் குரலோசையான் படைத்துக் கொண்ட அருவுருமாகிய சொல். அதன் தொழிற்பாடு பேசுதல். மக்கள் பெற்றுள்ள நலங்களுள தலையாயது நாநலம். அதன் பேராற்றலைத் திருவள்ளுவர் கூறுமிடத்து ஆக்கம் தருவதும் சோர்ந்தால் கேடு புரிவதும் சொல்லே. ஆதலின் சோர்வின்றிச் சொல்லுதல் வல்லானை எவரும் வெல்வது அரிது. நிரந்தினிது சொல்லின் ஞாலம் விரைந்து தொழில் கேட்கும் என்கிறார். மெய்யறிவாளர், தெய்வம் என்பது ஒளி. அதன் செயலே ஒலி என்பர்.

இருவகை ஊழ் ஏதுவாகப் பிறந்து எழுந்து தவழ்ந்து நடந்து விளையாடி, கற்று, பிறரொடு கலந்து, மகிழ்ந்து, உற்று, உறழ்ந்து, உயர்ந்து, தாழ்ந்து, முதிர்ந்து, தளர்ந்து மறையும் மக்கள், மகவாகத் தோன்றி மழலை பேசுவது முதல் கிழமாகிக் குழறிப் பேசி மறையும் வரை அவர்* தம் வாழ்க்கையில் தம் புத்தியில் பதிந்து சிந்தையில் உருவாகும் எண்ணங்களை வாயாலும் (பேச்சு மொழி) கையாலும் (எழுத்து மொழி) பிறர்க்குப் புனைாகும் வண்ணம் உரைக்கும் சொற்கள் எவ்வெவ்வுணர்வுகளால் வெளிப்பட்டுக் கேட்போரை அடைகின்றன எனத் தம் அறிவாலும், அனுபவத்தாலும் ஊன்றி நோக்கிப் பேச்சுப் பேசுதல் என்னும் தொழிலைச் சுட்டி ஏறத்தாழ அறுபது பெயர்க்குறியீடுகளைச் சான்றோர் வரைந்துள்ளனர்.

அக்குறியீட்டுப் பெயர்கள் ஒவ்வொன்றும் பேசுவோரது உள்ளத்துணர்வையும், நோக்கையும், பேசும் முறையையும் கேட்போர் தொடர்பையும் தகுதிகளையும் தெற்றெனப் புலப்படுத்துவதை யாவரும் தேர்ந்து தெளியலாம். அங்ஙனம் தெளிதற்கு வாய்ப்பாக அவற்றின் மொழியாக்க மரபினை ஓரளவு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒருவர் தம் கருத்தைச் சொற்களால் வெளிப்படுத்தத் தூண்டும் உணர்வுகளை பற்றி ஆராய்ந்து காணின் அவை

அவா	விருப்பு	உய்வு	இழப்பு
வேட்கை	வெறுப்பு	உடன்பாடு	ஆற்றாமை
ஆளுமை	அருவருப்பு	ஐயம்	மடப்பம்
அன்பு	அச்சம்	அறியாமை	எதிர்ப்பு
அருள்	சினம்	புரியாமை	மறுப்பு
காதல்	கடமை	இரக்கம்	வஞ்சனை
காமம்	காப்பு	ஏக்கம்	பகை

முதலியனவாக அமையும்.

மற்று, கேட்பாரின்றிப் பேச்சு நிகழாது. ஆதலின் ஒருவர் தம் பேச்சை வெளிப்படுத்தற்குச் சார்பு கேட்போராவார். பேசுவோர் கேட்போர் இயைபு பல நிலைகளில் அமையும் குடும்பமாயின் பெற்றோர், மனைவி, மக்கள் சுற்றம் கேட்போராக அமைவர். கல்வி, கலை, பயிற்சி நிலையங்களாயின் ஆசிரியர், மாணவர், அலுவலர், பெற்றோர் கேட்போராக அமைவர். அலுவலகங்களாயின், மேலதிகாரிகள், துணையதிகாரிகள் அலுவலர், பணியாளர் தொடர்புடைய பொதுமக்கள் என அமைவர். நீதிமன்றம், அற மன்றங்களாயின், நடுவர் வழக்கறிஞர் வழக்காடுவோர் சான்றாளர், அலுவலர், பணியாளர் காவலர் என அமைவர். கலை, காட்சி, கூத்து முதலிய பலதுறைகளைச் சார்ந்த அரங்குகளாயின் மேடையிலிருந்து நிகழ்த்துவோர் மன்றத்தில் அமர்ந்து காண்போர் என்னும் முறையில் அமைவர். வணிகநிலையங்களாயின், விற்பனையாளர், கொள்வோர் என அமைவர். வாணிகம் அரசாங்கம் முதலிய விளம்பரங்களாயின் அறிவிப்போர், செவிமடுப்போர் என்னும் நிலையில் அமைவர். விழாக்கள், மேடைப்பேச்சு முதலிய நிகழ்வுகளில் ஒருவருக்கொருவர், பேசுவோர் கேட்போராக அமைவர். இராணுவத்துறைகளாயின் படைத்தலைவர், போர் வீரர்கள், துணை அலுவலர் என்ற நிலையிலும் சிறைக்கூடம் முதலியவையாயின் அதிகாரிகள், அலுவலர் காவலர் தண்டனையாளர் என்னும் நிலையில் அமைவர். மேற்கூறப்பெற்ற எல்லா நிலைகளிலும் நண்பர்கள், பேசுவோரும் கேட்போருமாக அமைவர்.

பொதுவாக, சுருக்கமாக நோக்கின் பேசுவோர், கேட்போர் என்னும் இருசாரரும் பதவி, பணம், கல்வி, ஆன்மீகம் என்னும் அடிப்படையில் உயர்ந்தார், ஒத்தார், தாழ்ந்தார் என வகைப்படுவர். பிறிதொரு வகையில் கேளிர் பகைவர் நொதுமலர் என வகைப்படுவர்.

மேற்கூறப்பெற்ற இரு மூன்று வகையினரும் பேசுங்கால் பேசப்படும் களங்களுக்கேற்பச் சொல்லாட்சிகளும் மொழிநடையும் அமையும். அக்களங்களைச் சுருக்கமாகக் காணின், அவை வீடு, கல்விக் கூடம், தொழிற் கூடம், அலுவலகங்கள், நீதி மன்றம், சட்டமன்றம் பல்வகை அரங்குகள் மேடைகள் வணிக மையங்கள் பூங்கா கடற்கரை பயண ஊர்திகள் திருவிழாக்களங்கள், சூதாடு கழகங்கள் முதலியனவாக அமையும்.

மேற்கூறப்பெற்ற மக்கள் கூறப் பெற்ற இடங்களில் தம் கருத்துக்களைப் பேசுங்கால் அவ்வவர் தகுதிகளுக்கேற்பவும், கருத்துக்களின் வன்மை மென்மைகளுக்கேற்பவும் மேற்கூறப்பெற்ற உணர்வுகளினடிப்படையில் பின்வரும் சூழ்நிலைகளில் வெளிப்படும். அவை:

வேண்டல்	மறுத்தல்	வெறுத்தல்	கிளர்ந்தெழச் செய்தல்
ஏவல்	எதிர்த்தல்	இரங்குதல்	மருட்டல்

ஆணையிடல்	இகழ்தல்	ஊக்குதல்	தெருட்டல்
வற்புறுத்தல்	எள்ளல்	அறிவுறுத்தல்	கெஞ்சுதல்
கண்டித்தல்	தூற்றல்	தெரிவித்தல்	கொஞ்சுதல்
போற்றல்	சினத்தல்	அஞ்சுதல்	ஆற்றுதல்

முதலியனவாகும்.

இம்முறையில் கருத்துக்களை வெளிப்படுத்துங்கால் வெளிப்படுத்துவோர் கல்வி அறிவாற்றல்களுக்கேற்ப அவை வெளிப்படையாகவும், பல்வேறு குறிப்பாகவும் அமையும். கேட்போர் அவற்றைத் தம் கல்வி அறிவாற்றல் அனுபவத்திற்கேற்ப உணர்வர். அங்ஙனம் பேசப்படும் கருத்துக்கள் யாவும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகையில் அடங்கும். பேசுதலின் நோக்கம் நலம் தீங்கு என்னும் இருவகையுள் அடங்கும். அடங்கிப் பயன் விளைவித்தலாகும்.

இனி, நாவால் கருத்துக்களை வெளிப்படுத்தல் என்னும் பொருளில் பல்வேறு கோணங்களில் பெயர்க்குறியீடுகள் அமைந்துள்ளன. அவை வருமாறு

அகவல்	கட்டுரை	தெரிவித்தல்	
அரற்றல்	கடாவல்	தெருட்டல்	
அளாவல்	கரைத்தல்	தெளித்தல்	
அறிவுறுத்தல்	கரைதல்	நுவல்தல்	மிழற்றல்
அறைதல்	கழறல்		
ஆணையிடல்	கிளத்தல்	நொடித்தல்	முழங்கல்
ஆரித்தல்	கிளர்த்தல்	பகர்தல்	முனவல்
இகழ்தல்	குயிறல்	பலுக்கல்	மொழிதல்
இசைத்தல்	கூறுதல்	பறைதல்	வன்னித்தல்
இயம்பல்	கெஞ்சல்	பன்னல்	வாதித்தல்
உதிர்த்தல்	கொஞ்சல்	பாராட்டல்	விவரித்தல்
உரைத்தல்	கொழித்தல்		விளம்பல்
உளறுதல்		புகழ்தல்	வைதல்
என்றல்	சாற்றல்	புகறல்	
ஏசல்	செப்பல்	பேசல்	
ஏத்தல்	சொல்லல்	பேத்தல்	
ஓதல்	தூற்றல்	மலர்தல்	

முதலியனவாகும்.

இவற்றுள் சொல்லுதல், நவிலுதல், நுவலுதல், பேசுதல் என்பவை ஒலியை நாவால் வெளிப்படுத்தல் என்னும் பொதுப் பொருளினவாகும். மற்றையவை உணர்வையும், பேசும் முறையையும் பற்றி

அமைந்தனவாகும். இனி இவற்றின் பொருளமைதியைச் சுருக்கமாகக் காண்போம்.

1. அகவல் :

படர்க்கையோரை முன்னிலைப் படுத்தி ஒரு செயலைப் புரிவோம் என அழைக்கும் முறையிற் பேசுவது அகவுதலாகும்.

(எ.டு) வம்மினோ வம்மின் பொன் அம்பலத்தான்
நடனங்கண்டுய்மினே உய்மின் நமரங்காள்! என்றாற் போல
அமையும்.

2. அரற்றல்

பொறுப்பின்றித் தோன்றியவற்றையெல்லாம் தொடர்பின்றிப் பேசுவது அரற்றலாகும். வழக்கில் இஃது அரட்டைப் பேச்சு எனப்படும்.

(எ.டு) பிள்ளை என்ன பிள்ளை தென்னம் பிள்ளை தானே பிள்ளை கள்ளுதரும் பாளையிலே காய் முளைக்கும் பிள்ளை. தொல்லை மற்ற பிள்ளைகளால் தோன்றுமடி பெண்ணே! என்றாற் போல வரும்.

3. அளாவல்

சொற்களை மிகையாகப் பயன்படுத்தாமல் அளவறிந்து பேசுதல் அளாவல் எனப்படும்.

(எ.டு) புறந்தூய்மை நீரான மையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும் என்றாற் போல வரும்.

4. அறிவித்தல்

ஒன்றைத் தெரிந்து கொள்ள விழைவார்க்கு அதனை எடுத்துச் சொல்வது அறிவித்தல் இதனை அறிவுறுத்தல் என்றும் கூறுவர்.

(எ.டு) "யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற" என்றாற் போல வரும்.

5. அறைதல்

ஒன்றை இரு கூறாகப் பகுத்து (அறுத்து) விளங்கக் கூறல்

(எ.டு) அறத்தினூங்காக்கமுமில்லை அதனை மறுத்தலினும் ஊங்கில்லை கேடு என வரும்.

6. ஆணையிடல்

இதனை ஆணைகூறல் என்றும் சொல்லுவர். கட்டளையிடுதல் போலப் பேசுதல். **(எ.டு)** செய்க பொருளை.

7. ஆரித்தல்

ஆரவாரமாகப் பேசுதல். இதனை ஆர்ப்பாட்டம் என்றும் வழங்குவர்.

(எ.டு) ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று எனவும், வெற்றி வெற்றி யெட்டுத் திக்குமெட்டக் கொட்டுமுரசே எனவும் வரும்.

8. இகழ்தல்

ஒருவர் தகாத, பொருந்தாதவற்றைச் செய்யுமிடத்து அவரைத் தாழ்த்திப் பேசுதல்.
(எ.டு) எனைத்துணையராயினும் என்னும் தினைத்துணையும் தேரான் பிறனிப்புகல் என வரும்.

9. இசைத்தல்

சொற்களும் கருத்தும் இன்பளிக்கும் முறையிற் பேசுதல்
(எ.டு) குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்றாற் போல வரும்.

10. இயம்பல்

வாக்கியங்களை இசைத்தல் போலச் செவிக்கும் கருத்திற்கும் இனிமை தோன்றப் பேசுதல்.
(எ.டு) பாலோடு தேன் கலந்தற்றே பணிமொழி பாலெயெறூறிய நீர் என்றாற் போல வரும். செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என வரும்.

11. உதிர்த்தல்

கலகலென விரைந்து பேசுதல்
(எ.டு) அறிவறையோகிய பொறியறு நெஞ்சத் தறமுறை பிழைத்தோய் என்றாற் போல வரும்.

12. உரைத்தல்

சொல்லுங் கருத்தின் உட்பொருள் தெளிவாக விளங்கப் பேசுதல். உருவம் புலப்படப் பேசுதல் (உரு+ஐ) உரை.
(எ.டு) அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் என்றாற் போல வரும்.

13. உளறல்

(உள்+அறுதல்-உளறுதல்) ஒன்றற்கொன்று தொடர்வுபடாமல் விட்டு விட்டுப் பேசுதல்.
(எ.டு) நேத்திக்குப் பேத்திக்குக் கண்ணாலமாம். நாளைக்குக் கூத்து மேளமுமாம். சோத்துக்கில்லேன்னு நாத்துப் பறிக்கப் போனானாம் என்றாற் போல வரும்.

14. என்றல்

'என்' என்பது சொல் என்னும் பொருளை உள்ளடக்கியதொரு சுட்டிடைச் சொல். சொல்லல் எனப் பொருள் தரும்.

(எ.டு) அவள் நில் என்றாள் ஏனென்றால் யார் நீ சொல்லென்றாள் இதனை என் என்று சொல்வேன் என்றாற் போல வரும்.

15. ஏசல்

(ஏ+சொல்)அம்பெய்தாற் போல வருந்துமபடி பேசுதல்.

(எ.டு) புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல் அறங்கூறும் ஆக்கந்தரும் "ஒத்ததறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" என வரும்.

16. ஏத்தல்

ஒன்றை - ஒரவரை உயர்த்திப் பேசுதல்.

(எ.டு) துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்திறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்றாற் போல வரும்.

17. ஓதல்

ஒருவர் ஒருவர் செவிக்கருகே ஒட்டி மந்தணமாகப் பேசுதல். மந்திரம் ஓதுதல் என்பர். இது படித்தல் கற்றல் என்னும் பொருளில் வழங்கப் பெறுகிறது. ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற்" பேதையாரில் என்னுமிடத்து கற்றல் என்னும் பொருளில் அமைந்தது.

(எ.டு) "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்" என்றாற் போல வரும்.

18. கட்டுரை

இது கட்டுரைத்தல் எனவும் படும். கருத்துக்களை நிரலாக அடக்கி யர்கதைப் போல உருத்தோன்றப் பேசுதல். இது பெரும்பாலும் எழுத்து நடைக்கே வழங்கப் பெற்று வருகின்றது. சிலப்பதிகாரம் முதலியவற்றில் உரைபெறு கட்டுரை என அமைந்துள்ளது.

(எ.டு) வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்குங்கல் என்றாற் போல வரும்.

19. கடாவல்

ஒரு கருத்தை ஐயத்தால் வினாவுதல் போன்று ஒன்றை உரைத்தல். இது கடி என்னும் உரியடியாகப் பிறந்த வினாச் சொல்.

(எ.டு.) தன்னுயிர் இன்னாமை தானறிவான் என்கொலோ மன்னுயிர்க்கின்னா செயல் என்றாற் போல வரும்.

20. கதைத்தல்

இதற்குப் பேசுதல் என்பது பாழ்ப்பாண வழக்குப் பொருள். ஒரு கருத்தைக் கற்பனைத் தோன்றப் பேசுதல்.

(எ.டு) "பெண்ணியலா ரெல்லாம் கண்ணிற் பொது உண்ப நண்ணேன் பரத்த நின் மார்பு" என்றாற் போல வரும்.

21. கரைதல்

இது இரு நிலையில் பொருள் தரும். 1. நெஞ்சு நெகிழ்ந்து உருக்கத்தொடு பேசுதல் 2. சான்று காட்டிப் பேசுதல். முன்னதற்குக் 'கரை' பகுதி பின்னதற்குக் 'கரி' பகுதி. கரி=சான்று. சான்று காட்டிப் பேசுதல். கரைந்து பேசுதற்கு எடுத்துக்காட்டு இறைவனிடத்து வேண்டுதல் போல அமையும். பின்னதற்கு "ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி" என்றாற் போல வரும்.

22. கழறல்

ஒன்றைக் கேட்போர் உள்ளத்தில் தைக்குமாறு இடித்துரைத்தலைக் கழறுதல் என்பர்.

(எ.டு) விழித்தகண் வேல் கொண்டெறிய அழித்திமைப்பின் ஓட்டன்றோவன் கணவர்க்கு எனவும் தலையினிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை எனவும் பிறவாறும் வரும்.

23. கிளத்தல்

மரத்திற் கிளை கிளைத்தல் போல படிப்படியாக ஒரு கருத்தைக் கூறுதல் கிளத்தலாகும்.

(எ.டு) அழுக்காறவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றதறம். படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு என வரும்.

24. கிளர்த்தல்

கேட்போர் உள்ளம் குமுறி எழுமாறு பேசுதல் - கிளர்ச்சி உண்டாகப் பேசுதல்.

(எ.டு) உறுவது சீர் தூக்கும் நட்பும் பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர் - விழித்த கண் வேல் கொண்டெறிய அழித்திமைப்பின் ஓட்டனறோவன் சணவர்க்கு என வரும்.

25. குயிலுதல் (குயிற்றல்)

துளைத்தல். தன் கருத்தைக் கேட்போர் உள்ளத்திற் சென்று திணியுமாறு கூறுதல்.

(எ.டு) ஒட்டார் பின் சென்றொருவன்ன வாழ்தலினும் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று. (கெடுதல் = இறத்தல்)

26. கெஞ்சல்

உள்ளத்தில் பதிந்து நயக்குமாறு பேசுதல். கெழுங்செயல் என்பது மருவிக் 'கெஞ்சல்' என அமைந்தது.

27. கொஞ்சல்

அன்புத் ததும்ப அடுக்கிப் பேசுதல். குறுஞ்செயல் என்பது மருவிக் கொஞ்சல் என நின்றது.

(எ.டு) கண்ணே என் கண்மணியே கற்கண்டே வான்தண்ணார் அமுதே தாரகையாய் வந்தவனே! என்றாற் போல வரும்.

28. கொழித்தல்

தனது பெருமையை மறைவாகச் சுட்டிப் பிறர் குறைகளை விரிவாகப் பேசுதல்.

(எ.டு) சேற்றிலே நின்றாலும் செந்தாமரை மணக்கும். ஆற்றிலே புரண்டாலும் வாளை மணக்காது என்றாற் போல வரும்.

29. சாற்றுதல்

நிறைவாகச் சொல்லுதல். சான்று கட்டிச் சொல்லுதல் சாற்றுதலாகும்.

(எ.டு) நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்.

30. செப்பல்

செப்பு = விடை ஒரு வினாவை எண்ணி அதற்கு விடை கூறுதல் போலப் பேசுதல்.

(எ.டு) ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை என்றாற் போல வரும்.

31. சொல்லல் – சொற்றல்

எண்ணியக் கருத்தையோ ஒரு வினவியதற்கு விடையாகவோ இயல்பாகப் பேசுதல்.

(எ.டு) இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்டவரும் என்றாற் போல வரும்.

32. தூண்டல்

ஒருவரை ஒரு செயலில் ஈடுபடுத்த வற்புறுத்தும் முறையில் பேசுவது.

(எ.டு) துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை என்றாற் போல வரும்.

33. தூற்றல்

ஒருவரின் குறைகளை இயலாமையைப் பன்னிப் பன்னிப் பலரிடம் கூறுதல்.

(எ.டு) கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும் திங்களைப் பாம்பு கொண்டற்று - அறைபறையன்னர் கயவர் தாங்கேட்ட மறை பிறர்க்குய்த்துரைக்கலான் – எனவரும்.

34. தெருட்டல் = தெளித்தல்

ஒரு கருத்தைக் கேட்போர் தெளிவாக உணரும்படிப் பேசுதல்.

(எ.டு) இன்பம் விழையான் இடும்பை இயல்பென் பான துன்பம் உறுதல் இலன். மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லார் கீழவல்லவர் என்பன வரும்.

35. நவில்தல்

நாவால் விளக்குதல் என்பது பொருள். சொல்லுதல் என்பது இதன் இயல்பும் பொருள்.

(எ.டு) நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும் என வரும்.

36. நுவல்தல்

ஒரு கருத்தை நூல்நெறிக் கேற்பக் கட்டமைப்பாகப் பேசுதல். நூல் என்பது நுவல் என்பதன் ஆககமாகும்.

(எ.டு) உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங்கடிதல் வடுவன்று வேந்தன் தொழில் என வரும்.

37. நொடித்தல்

ஒன்றை அளவிட்டு வணிக முறையில் பேசுதல். விலை கூறி விற்றலை நொடை என்பர்.

(எ.டு) அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல். சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா நோயும் பசலையும் தந்து என்றாற் போல வரும்.

38. பகர்தல்

ஒரு கருத்தைப் பகுத்துப் பல கோணங்களில் அமைத்துக் கூறுதல். பகுத்து உரைத்தல் பகர்தல்.

(எ.டு) கொடி குவளை கொட்டை நுசுப் புண்கள் மேனி வடிவினளே வஞ்சி மகள் எனவும், பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற்கிவ்வைந்து எனவும் வரும்.

39. பறைதல்

பறையறைந்தாற் போல விளக்கமாகப் பகுத்துப் பேசுதல்.

(எ.டு) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல் என வரும்.

40. பன்னல்

ஒரு கருத்தை பல முறை பல சொற்களால் பேசுதல்.

(எ.டு) கந்தா கடம்பா கதிர்வேலா முக்கண்ணன் மைந்தா மயிலோனே முருகா எனைக் காத்தருள்! என வரும்.

41. பிதற்றல்

பித்தேறினாற் போல முன்பின் தொடர்பின்றிப் பொருத்தமின்றிப் பேசுதல்.

(எ.டு) பாரதம் பாடிய கம்பரே சொல்றார் அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் என்று நான் பாடியிருந்தா அப்பனை முன் வைச்சிப் பாடியிருப்பேன் எல்லாந் தலைகீழாகவே உலகம் நடக்குதில்ல என்றாற் போல வரும். இதனைப் பேத்தல் என்றும் கூறுவர்.

42. புகழ்தல்

அளவோடு பெருமைப்படுத்திப் பேசுதல் சிறுபான்மை எல்லையின்றிப் பாராட்டிப் பேசுதல். புலவோர் பாடியுள்ள இறை வாழ்த்துக்கள் மன்னனைப் பாடுதல் யாவும் அளவையோடு அமையும். கர்ணனுக்குப் பின் கொடையில்லை என்றது தவறு. நம்ம காத்த முத்துப்பிள்ளை வள்ளல் கர்ணனுக்கு ஒருபடி மேலான கொடையாளி என்றாற் போல்வன எல்லையற்ற புகழ்ச்சியாகும்.

43. புகறல் – புகல்தல்

விருப்பத்தோடு பேசுதல். மகிழ்ந்து பேசுதல்.

(எ.டு) பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வாலெயிறூறிய நீர் எனவும் நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல் அஞ்சுதும் வேபாக்கறிந்து எனவும் வரும்.

44. புனைதல்

கற்பனையும். அணி நயமும் அமையச் சிறப்பித்துப் பேசுதல்.

45. பேசல்

சொல்லுதல் நவிலுதல் என்பன போலப் பொதுவாகக் கருத்தை வெளிப்படுத்தல். சொற்பொழிவு செய்தலையும் பேசுதல் என்பது மரபு.

(எ.டு) கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல் என்பார் வள்ளுவர். செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல் ஆன்ற பெரியாரகத்து என்பார் அவர்.

46. மலர்தல்

இதனைத் திருவாய் மலர்தல் என்ப. அளவறிந்து பேசுதல் மகிழ்வுண்டாகப் பேசுதல் மலர்தலாகும்.

(எ.டு) செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்.

47. மழுப்பல்

தன் கருத்தை வெளிப்படையாகக் கூறாமல் மறைத்தும் மாற்றியும் பேசுதல். நேற்று வருவதாகச் சொன்னாயே வரவில்லையே என ஒருவன் வினவும்போது மற்றவன் புறப்பட்டேன் எதிர்பாராத விருந்து ஒன்று வந்துவிட்டது சொல்லியனுப்ப ஆளில்லை என்றாற் போலவரும்.

48. மிழற்றல்

யாழ் நரம்பை மீட்டுவது போல இனிமையாகப் பேசுதல்
(எ.டு) மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழிமதி என்றாற் போலவரும்.

49. முழங்கல்

முரசுபோல வீறு தோன்றப் பேசுதல்.
(எ.டு) என்னை முன் நில்லன் மின் தெவ்விர் பலரென்னை முன்னின்று கன்னின்றவர் என்றாற் போல வரும்.

50. முறையிடல்

ஒருவர் தமக்கு நேர்ந்த குறைகளைப் பிறரால் நேர்ந்த இடையூறுகளை தீர்க்கத்தக்காரிடம் எடுத்துக் கூறல். (முறைமை = நீதி. ஒழுங்கு)

51. முனவல்

சொற்கள் தெளிவின்றி நன்கு செவிப்படாமல் தம் வருத்தத்தை ஆற்றாமையை வெளிப்படுத்தல். வலிமையில்லாதவர் வலிமையுடையார் முன் பேசுதல்.
(எ.டு) நோயுற்றவர் பேச்சு தண்டனை பெற்ற பணியாளர் பேச்சு இதன் பாற்படும்.

52. மொழிதல்

கருத்துக்களைக் குறைவின்றி முழுமையாகப் பேசுதல்.
(எ.டு) சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

53. வருணித்தல்

புனைதல் என்பதற்கு நிகரானது. ஒன்றை அழகு விளங்கப் பேசுதல்.
(எ.டு) முறி மேனி முததம் முறுவல் வெறி நாற்றம் வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு என வரும்.

54. வாதித்தல்

ஒரு கருத்தைப் பற்றி இரு திறத்தார் முரண்பட்டு ஒன்றை உறுதி செய்யப் பேசுதல்.

(எ.டு) உண்ணற்கள்ளை உணின்! உண்க! சான்றோரான் எண்ணப்பட வேண்டாதவர் என்றாற் போல வரும்.

55. வாழ்த்தல்

உலகிற்கு நலம் பயக்கும் பொருளையும் தாம் விரும்பும் பொருளையும் மனமுவந்து எந்நாளும் வாழ்க என வாழ்த்துதல்.
(எ.டு) வாழிமழை வள்ளன்மை வாழி சுடர்மதியம். வாழியிறையருளின் மாண்பு என வரும்.

56. விவரித்தல்

ஒரு பொருளை அதன் பகுதிகள் யாவும் விளங்கப் பேசுதல்
(எ.டு) தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும்சேர்வது நாடு என வரும்.

57. விளம்பல்

ஒன்றை விளக்கமாகக் கூறுதல்.
(எ.டு) வெண்மை எனப்படவது யாதெனின் ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு.

58. வினாவுதல்

வினாவுதல் போல வினாவி ஒரு கருத்தைக் கூறுதல்.
(எ.டு) அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் என்றாற் போல வரும்.

59. வைதல்

வெறுப்பாலும் சினத்தாலும் ஒருவரை அவர் புரிந்த கேடு காரணமா அவர் உள்ளந் துன்புறுமாறு வசை கூறுதல். (வை=வசவு)
(எ.டு) சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்பு போல் கொல்லப் பயன்படும் கீழ். அழுக்காறென ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும் என்றாற் போல வரும்.

பேசக் கேட்போர் நிலை

ஒருவர் ஒரு கருத்தை பேசுமிடத்து கேட்போர் அதனை எவ்வாறு நோக்கி உணர்தல் வேண்டும். பேசுபவர் யார் அவர் பேசுவதன் போக்கு யாது பேசுதற்கு அவர் பயன்படுத்தும் சொற்கள் பேசும் நடை முதலியவற்றைத் தேர்ந்து உணர்தல் வேண்டும்.
ஓர் எடுத்துக்காட்டு:

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். - இஃதொருவர் நுவன்றது.

பேசுபவர் யார்? திருவள்ளுவர் இதனைப் பேசுவாரைத் தூண்டிய உணர்வு கருணையும், கடப்பாடும். சொற்கள் செஞ்சொற்கள் நடை செய்யுள் நடை

பேச்சின் வகை விளம்பி அறிவித்தல். நோக்கும் பயனும் நல்விளைவு இடம் கல்விக் கூடம், கற்றோர் அவையம். கேட்போர் முதற்கண் இவற்றை அறிந்து கொள்ளல் வேண்டும். பின்னர் அப்பேச்சினை வகுத்துணர்தல் வேண்டும். அம்முறைமை வருமாறு.

வாய்மை என்பது மக்களின் முக்கரணச் செயற் பண்புகளுள் நடுவண் நிற்பது. அது வாயான் நிகழும் செயற்பண்பினைச் சுட்டி நிற்பது. அதன் செயலாவது கண்டு கேட்டு உணர்ந்தவற்றைக் கரவாமற் பிறழாமல் சொற்களால் மொழிவதாகும். ஏனைய இரண்டனுள் உண்மை என்பது உள்ளத்தின் செயற்பண்பு அது வெளிப்படையாகப் புலனாகாது. மெய்ம்மை என்பது உடம்பின் செயற்பண்பு புறப்பொறிகட்குப் புலனாவது நிலை பேறில்லாதது வாய்மை என்னும் நாவின் செயற்பண்பு செவி வழியாக மனத்திற்குப் புலனாவது நிலை வேறுபாடு உடையது. ஆதலின் அவ்வுயர்வு கருதி என்படுவது எனச் சிறப்பிக்கப் பெற்றது என (எனல்) என்பது மெய்யுணர்வாளராய சான்றோர் சொல் என்பது பட நின்றது.

'யாதெனின்'? என்றது கேட்போரின் அவாவொடு கூடிய வினாவை உணர்த்தி நின்றது. 'யாதொன்றும்' என்பது முக்கரணங்களுக்குரிய இருதிணைப் பொருள்களைச் சுட்டி நின்றது. ஒன்று என்பது அளவின் சிற்றெல்லையைக் குறித்து நின்றது. உம்மை முழுமை உணர்த்தி நின்றது. 'தீமை' என்றது தனக்கும் பிறர்க்கும் உரிய காரணங்களுக்காகத் தீமை பயப்பனவற்றைச் சுட்டி நின்றது. இலாத என்பது குறிப்பு வினையாலணையும் பெயராய் இரண்டாவதன் உருபு தொக்கு இல்லாதனவற்றை என்னும் பொருள் விளங்க நின்றது. சொலல் என்பது தொழிற்பெயர்ப் பயனிலையாய் வியங்கோட் பொருளை உள்ளடக்கி நின்றது எனச் சொற் பொருளுணர்தல்.

எனவே, ஒருவர் தாம் கண்டு கேட்டறிந்தவற்றை உள்ளவாறே கூறுதல் என்பது நிகழ்ந்தது கூறலாகுமேயன்றி நலமே மொழிதலாகாது. நிகழ்ந்து ஒன்றனது அடிப்படையில் தீங்கு பயவாமல் நலமே பயக்கக் கூறுதலே வாய்மை என்பது என உணர்தல் கருத்துணர்தலாகும். இதற்கு இதுவே கருத்து என்பதைப் பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின், என அவர் அடுத்து வற்புறுத்துரைத்தலான் தெளியலாம் என்பது தெளிவுறுதலாம்.

❑

CPL 591819

பாவலரேறு **ச.பாலசுந்தரம்**

இந்நூலாசிரியர் தஞ்சாவூர் கரந்தையில் விசயாம்பாள் சந்திரசேகரனார்க்கு இரண்டாவது மகனாக 18.01.1924 இல் பிறந்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியிற் பயின்று 1950இல் புலவர் பட்டயம் பெற்று அக்கல்லூரியிலேயே பேராசிரியராகவும் துணைமுதல்வராகவும் பணியாற்றி 1982 இல் பணியினின்று ஓய்வுபெற்றார்.

பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கிய அகராதித் துறையில் பணியாற்றினார். கரந்தைத் தமிழ்ச் சங்கப் பணிகளிலும் நூல் வெளியீடுகளிலும் பங்கேற்றும் தமிழ்ப்பொழில் பதிப்பாசிரியராகவும் அமர்ந்தும் தொண்டாற்றி வருகிறார்.

தஞ்சை தொல்காப்பியர் கழகத்தின் தலைவராக இருந்து பல்லாண்டுகள் தொண்டு புரிந்தார். கரந்தைக் கோவை முதலிய இலக்கியங்களையும் புலவருள்ளம் ஆதிமந்தி முதலிய கவிதை நாடகங்களையும் படைத்துள்ளார். இவை தமிழகப் பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலைப் பாடங்களாக ஏற்கப் பெற்றுள்ளன. பல்வேறு இயல், இசைக் கருத்தரங்கங்களில் பங்கேற்றுக் கட்டுரைகள் அளித்துள்ளார். இலக்கண இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் பல வரைந்துள்ளார். பன்னூறு கவியரங்குகளிற் பங்கேற்றும் தலைமைதாங்கியும் கவிதைப் பணியாற்றியுள்ளார். தமிழிசைப் பாடல்கள் பல படைத்துள்ளார். வானொலியில் பல இலக்கியப் பேச்சுகள் நிகழ்த்தியுள்ளார். நாடகங்களில் நடித்துள்ளார். தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்குப் பல நூல்கள் பதிப்பித்துத் தந்துள்ளார்.

தொல்காப்பியம் மூன்றதிகாரங்கட்கும் அறிவியல் நோக்கில் ஆராய்ச்சிக் காண்டிகையுரை வரைந்து வெளியிட்டுள்ளார். தென்னூல் என்னும் பெயரில் புதிய இலக்கண நூலைப் படைத்துள்ளார். முத்தமிழ்த் தொண்டாற்றிவரும் இவருக்கு இலக்கிய மன்றங்கள் பல பாவலரேறு, கவிஞர்கோ, செஞ்சொற் கவிவலவன், தொல்காப்பியப் பேரறிஞர், தொல்காப்பியச் சுடர், தொல்காப்பியச் செம்மல் முதலிய பட்டங்கள் வழங்கிப் பாராட்டியுள்ளன. தமிழக அரசு பாரதிதாசன் விருதும், மதுரைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல் விருதும் வழங்கிச் சிறப்பித்துள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் விருதளித்துப் பாராட்டியுள்ளது. கவிதைத் தொகுதிகள் பல வெளியிட்டுள்ளார்.

மேலும் இருவகை வழக்கிலும் பயின்று வரும் சொற்களுள் ஏறத்தாழ மூவாயிரம் சொற்களுக்குப் பொருள் விளக்கங்கள் தரும் மொட்டும் மலரும் என்னும் மூன்று தொகுதிகளும், எழுத்து, சொல், பொருள். யாப்பு பற்றிய இலக்கணக் கலைச் சொற்பொருள் விளக்க அகராதிகளும், மொழியாக்க நெறி மரபிலக்கணம், மடைமாறிய தமிழ் இலக்கணநூல்கள், மொழி இலக்கண வரலாற்றுச் சிந்தனைகள் என்னும் நூல்களுடன் புறப்பொருள் இலக்கணக் கலைச்சொல் துறை விளக்க அகராதி, வளர்தமிழ் இலக்கணம், நன்னூல் திறனாய்வுரை, இருபெருங் கவிஞர்கள், அருட்புலவோரும் அரும்பெறற் கவிஞரும், புகழ்பெற்ற தலைவர்கள் என்னும் கவிதைகள் படைத்துள்ளார். வழக்குச்சொல் விளக்க அகராதி, செய்யுள் இலக்கணம் ஆகிய நூல்கள் இப்பொழுது வெளிவருகின்றன.

தமிழ்த்தொண்டர் **கோ.முத்துப்பிள்ளை**

திருவள்ளுவர் ஆப்செட், தஞ்சை. போன் : 242764, செல் : 98242 91204